563

# இஸ்லாமிய சரிதை

நான்காம் பாகம்

பனீஅப்பாஸ்களின் கிலாபத்

29 OCT 1935

— BY —

**SYED IBRAHIM SAHIB** M.A., L.T.,
DEPUTY INSPECTOR OF SCHOOLS,
TINNEVELLY.

1935 [அணா 11

27 N35

17437

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

24 OCT 1935
MADRAS

# இஸ்லாமிய சரிதை

இஃது

டில்லி "ஜாமிஆ மில்லிய்யா"வின்
இஸ்லாமிய சரித்திர போதகாசிரியர்
ஜனாப், மௌலானா, ஹாபிஸ், முஹம்மத் அஸ்லம் ஸாஹிப்
அவர்களால் எழுதப்பெற்ற
"தாரீகுல் உம்மத்" என்னும் உர்தூ நூலின்
மொழிபெயர்ப்பு

## நான்காம் பாகம்

மொழிபெயர்ப்பாசிரியர்:
ஜனாப், ஸையத் இப்ராஹீம் ஸாஹிப் M.A., L.T.,
டெப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்,
திருநெல்வேலி

—

1935

97. N35

792
297

Printed at
SINGARAM PRESS
*Big Bazaar*,
TRICHINOPOLY.

97437

# அட்டவணை


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | ix |
| 1 | பனீஅப்பாஸ்கள் | 1 |
| | ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) | 2 |
| | அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) | 5 |
| | அலீ பின் அப்துல்லாஹ் (ரலி.) | 6 |
| | முஹம்மத் பின் அலீ | 7 |
| 2 | கிலாபத் | 8 |
| | இரகசியக் கூட்டம் | 20 |
| 3 | முந்திய காலம் | 23 |
| | முதற் காரணம் | 26 |
| | இரண்டாவது காரணம் | 27 |
| 4 | இரண்டாவது காலம் | 31 |
| | உண்மை வெளியாதல் | 36 |
| | பனீஉமையாக்களின் முடிவு | 40 |
| 5 | அப்பாஸிய்யாக்களின் கிலாபத் | 42 |
| 6 | இஸ்லாமிய நாடுகள் | 45 |
| | ஜஸீரத்துல் அரப் | ,, |
| | இராக் | 46 |
| | ஜஸீரா கண்டம் | 47 |
| | ஷாம் கண்டம் | 48 |
| | மிஸ்ர் | ,, |
| | மக்ரிப் | 49 |
| | மாவராவுன்னஹர் | 50 |

| | | |
|---|---|---|
| | குராஸான் | 51 |
| | தேலம் கண்டம் | 52 |
| | ரிஹாப் | 53 |
| | மலைப்பிரதேசங்கள் | ,, |
| | கோஜிஸ்தான் | 54 |
| | பாரஸீகம் | ,, |
| | கிர்மான் | ,, |
| | ஸிந்த் | 55 |
| 7 | பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல் | 56 |
| 8 | ஸப்பாஹ் (1) | 63 |
| | உள்நிலைமை | 64 |
| | அதிகாரிகள் | 68 |
| | பிரதிநிதியை நியமித்தல் | 69 |
| | மரணம் | ,, |
| 9 | மன்ஸூர் (2) | 71 |
| | உள்நிலைமை | ,, |
| | அப்துல்லாஹ் பின் அலீ | 72 |
| | அபூமுஸ்லிம் | 75 |
| | முஹம்மத் பின் அப்துல்லாஹ் 'நப்ஸெ ஜகிய்யா' | 80 |
| | இப்ராஹீம் | 95 |
| | அரசியல் ஒழுங்குமுறை | 98 |
| | மந்திரிப் பதவி | 99 |
| | அபூஐயூப் | 100 |
| | ரபீஃ பின் யூனுஸ் ஹாஜிப் | ,, |
| | ஹாஜிப் | 101 |
| | இலிகிதம் | ,, |
| | நீதிமன்றம் | ,, |

| | | |
|---|---|---|
| | போலீஸ் | 102 |
| | சேனை | ,, |
| | மஅன் பின் ஜாயிதா | 103 |
| | அம்ரு பின் அலா | 104 |
| | கிலாபத்தின் தலைநகரம் | ,, |
| | வெளிநிலைமைகள் | 106 |
| | மன்ஸூரின் குணாதிசயங்கள் | 107 |
| | மரணம் | 111 |
| | சந்ததிகள் | ,, |
| 10 | மஹ்தீ (3) | 113 |
| | உள்நிலைமை | ,, |
| | மார்க்கத்தைச் சீர்குலைக்கும் குழப்பம் | 115 |
| | மந்திரிப்பதவி | 116 |
| | அபூஅப்துல்லாஹ் | ,, |
| | யஃகூப் | 119 |
| | இப்னு அபீஸாலிஹ் | 121 |
| | வெளிநிலைமை | ,, |
| | மஹ்தீயின் குணாதிசயங்கள் | 123 |
| | பிரதிநிதியை நியமித்தல் | 125 |
| | மரணம் | ,, |
| 11 | ஹாதீ (4) | 126 |
| | உள்நிலைமை | ,, |
| | ஹுஸைன் பின் அலீ | 127 |
| | ஹாதீயின் குணாதிசயங்கள் | 128 |
| | பிரதிநிதியை நியமித்தல் | 129 |
| | மரணம் | ,, |
| 12 | ஹாரூன் (5) | 130 |
| | உள்நிலைமை | ,, |

| | | |
|---|---|---|
| | பக்தாத் | 131 |
| | அலவிய்யாக்கள் | 133 |
| | முந்திய இத்ரீஸ் | 134 |
| | ஆப்ரிகா | 136 |
| | கவாரிஜ்கள் | 137 |
| | மஷ்ரிக் | 138 |
| | மந்திரிப் பதவி | 141 |
| | பர்மகீகள் | 142 |
| | யஹ்யா பின் காலித் | ,, |
| | பலல் பின் யஹ்யா | 146 |
| | ஜஃபர் பின் யஹ்யா | 147 |
| | மூஸா பின் யஹ்யா | 149 |
| | முஹம்மத் பின் யஹ்யா | 150 |
| | பர்மகீயர்களின் முடிவு | ,, |
| | அப்துல்மலிக் | 155 |
| | வெளிநிலைமை | 157 |
| | மேற்கு ரூம் | 161 |
| | குர்துபா | 162 |
| | ஹாரூனின் குணாதிசயங்கள் | 163 |
| | மரணம் | 165 |
| | சந்ததிகள் | 166 |
| 13 | அமீன் (6) | 167 |
| | உள்நிலைமை | ,, |
| | அமீனின் குணாதிசயங்கள் | 181 |
| 14 | மாமூன் (7) | 183 |
| | இராக்கின் குழப்பம் | 184 |
| | அலவிய்யாக்கள் | 185 |
| | மக்காவின் குழப்பம் | 187 |

| | | |
|---|---|---|
| | யமன் குழப்பம் | 189 |
| | மந்திரிப்பதவி | 198 |
| | அஹ்மத் பின் அபீகாலித் | ,, |
| | இப்னுயூஸுப் | 199 |
| | தாபித் பின் யஹ்யா | 200 |
| | அலவிய்யாக்கள் | 201 |
| | ஜியாதிய்யாக்களின் அரசியல் | 203 |
| | அக்லபிய்யாக்களின் அரசியல் | ,, |
| | இப்ராஹீம் பின் மஹ்தீ | 204 |
| | ஜத் உடைய புரட்சி | 205 |
| | நஸ்ர் பின் ஷபத் | 207 |
| | பாபகெ குர்ரமீ | 210 |
| | சேனை | 214 |
| | தாஹிர் பின் ஹுஸைன் | 215 |
| | அப்துல்லாஹ் பின் தாஹிர் | 217 |
| | கல்வி | 218 |
| | பூமியின் சுற்றளவு | 222 |
| | நக்ஷத்திர விடுதி | 223 |
| | கல்விக் கூட்டங்கள் | 224 |
| | குர்ஆன் சிருஷ்டியின் குழப்பம் | 228 |
| | வருமானம் | 236 |
| | வெளிநிலைமைகள் | 239 |
| | குணாதிசயங்கள் | 241 |
| | மரணம் | 246 |
| | பிரதிநிதியை நியமித்தல் | ,, |
| 15 | முஃதஸிம் (8) | 247 |
| | மந்திரிப்பதவி | ,, |
| | அஹ்மத் பின் அம்மார், இப்னுஜையாத் | 248 |
| | இப்னு அபீதாவூத் | 249 |

| | | |
|---|---|---|
| | அலவிய்யாக்கள் | 252 |
| | சேனை | 254 |
| | தீர்வைகள் | 261 |
| | வெளிநிலைமைகள் | 262 |
| | முஃதஸிமின் குணாதிசயங்கள் | 266 |
| | மரணம் | 267 |
| | பிரதிநிதியை நியமித்தல் | ,, |
| 16 | வாதிக் (9) | 268 |
| | மந்திரிப்பதவி | ,, |
| | சேனை | 269 |
| | வம்சக்குழப்பம் | ,, |
| | பதிவகம் | 273 |
| | வெளிநிலைமைகள் | 275 |
| | மரணம் | 276 |

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# முன்னுரை

எல்லாம்வல்ல இறைவனின் இன்னருளால் அடியேனால் ஏற்கனவே வெளியிடப்பெற்ற "இஸ்லாமிய சரிதை" என்னும் நூலின் மூன்று பகுதிகளையும் தமிழுலகம் நன்காதரித்தது. தற்போது வெளியிடப்பெறும் இந்நான்காம் பகுதியையும் அங்ஙனமே ஆதரிக்குமென நம்புகிறேன். இஃது அப்பாஸிய்யா கிலாபத்தின் துவக்ககாலமான ஹி. 132-ம் ஆண்டுதொடுத்து ஒன்பதாவது அப்பாஸிய்யா கலீபா வாதிக் பில்லாஹ் உடையகாலமான ஹி. 232-ம் ஆண்டுவரைக்குமுள்ள நூறு ஆண்டுகளின் சரிதையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்காலமே பனீ அப்பாஸ்களது முன்னேற்ற காலமாம். இதற்குப்பிறகு அவர்கள் பின்னணியிற் செல்லத்தொடுத்தார்கள். அதன் சரிதை ஐந்தாம்பகுதியில் வெளியிடப்படும். இந்நீண்டகால சரிதையில் முக்கியமானவைகளையெல்லாம் எடுத்தோதுவதுடன் ஆங்காங்கு ஆசிரியரின் அபிப்பிராயத்தையும் தெள்ளியமுறையில் இப்பகுதி எடுத்துக்காண்பிக்கின்றது. அந்த ஒன்பது கலீபாக்களுள் ஹாரூன், மாமூன் இவ்விருவரைத் தவிர்த்து ஏனையோரின் சரிதை பொதுமக்களிடை பரவவில்லை யென்பது மிகையாகாது. அவ்விரு கலீபாக்களின் சரிதையும் ஆங்கில நூற்களினின்றெடுத் தெழுதப்பட்டதாதலின் அஃது சரித்திரமாய்க் கோடற்குக் கிஞ்சிற்றும் தகாததேயாம். ஐரோப்பிய

நூலாசிரியர்கள் பொதுமக்களிடை வழங்கிவரும் பழங்கால பாட்டிக்கதைகளையே மேற்கோட்களாய்க்கொண்டு இஸ்லாமிய சரித்திரத்தை வரைந்துள்ளனர். இஸ்லாமிய சரிதை முஸ்லிம்களது புராதன சொத்தாகும். அதை அன்னியர் மூலம் முஸ்லிம்களுக்குக் காண்பித்தல் பெருங்குற்றமேயன்றோ? தவிர, ஏனையபகுதிகளை போன்று இப்பகுதியும் கலீபாக்களிடம் காணப்பெறும் நன்மை, தீமை இவ்விரண்டையுமே சீரியமுறையில் எடுத்துக்காண்பிக்கின்றது. உண்மைச்சரிதையை யெடுத்தியம்புங்கால் இவ்விரண்டையும் வரையவே வேண்டுமல்லவா? இஃது ஒரு சிலருக்கு மனத்தாங்கலை யளிக்கின்றதுண்மை. கலீபாக்களுள் ஒரு சிலர் எக்காரணத்தாலோ நல்லவரெனப் பொதுமக்களிடையே பெயர்பெற்றிருக்கின்றனர்; ஒருசிலர் கெட்டபெயரும் பெற்றிருக்கின்றனர். அவர்களுள் முன்னவரின் தீமைகளையும், பின்னவரின் நன்மைகளையும் எடுத்துக் காண்பிக்குங்கால் பொதுமக்கள் மனத்தாங்கலடைகின்றனர். தீர்க்கதரிசிகளையும், தேவர்களையும் தவிர்த்து ஏனையோர் யாவரும் நன்மை, தீமை இருகுணங்களுமே யுடையோரென்பதையவர்கள் கருதிப் பார்ப்பதில்லை.

நமது முந்திய வெளியீடுகளைக் கவனித்தோரிற் சிலர் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை வைத்துக்கொண்டு "அவ்விஷயத்தைக் காணோமே?" யெனக்கேட்கின்றனர். இஃது அரசியல் விஷயங்களைமட்டும் எடுத்தோதும் நூலென்பதையன்னர் அறிந்துகொள்ள வேண்டுகிறேன். அத்துடன் இது சம்பந்தப்பட்ட ஏனைய முக்கிய விஷயங்களையும் இஃது சுருக்கமாக எடுத்துக் காண்பிக்கின்றதென்பதையும் மறுக்க முடியாது. தவிர, அப்பாஸிய்யா கிலாபத்தின் காலத்தில் பரவிவந்த கல்வி அக்கிலாபத்தின் வன்மை, பலவீனம்

இவைகளுக்கேற்ப மிகுந்தும், குறைந்தும் வந்ததெனக் கோடற்கில்லை. ஸல்ஜூகியர்களின் காலத்தில் அக்கிலாபத் மிகவும் பலங்குன்றிப் போயிருந்தது. ஆனால் அக்காலத் திலும் கல்வி அதிதீவிரமாகவே பரவிவந்திருக்கின்றது. எனவே கலாசரித்திரத்திற்கென ஒரு தனிப்பட்டநூல் தேவைப்படுகின்றதாதலின் அதுவும் இந்நூலில் விவரமாகக் கூறப்படவில்லை. அதையெல்லாம் பொதுப்படையான சரிதையிற் குறிப்பிடல் தக்கதல்லவென்பதும் ஆசிரியரின் கருத்து.

“ஆசை வெட்கமறியாது” என்னும் முதுமொழிக் கிணங்க உன்னதப்பூங்காவிற்குள் வதங்கிப்போன மணமற்ற பூவொன்றைக்கொண்டு சென்றவனேபோன்று, மேதாவி களான ஆசிரியர்களைத் தன்னகத்தேகொண்ட இவ்வுலகில் இப்புத்தகத்தை மொழிபெயர்க்கும் பணியை யான் மேற் கொண்டுள்ளேன். இப்பணியை மேற்கொண்டது எத் தகைய ஆற்றலுமிராத என்னைப் பொருத்தமாட்டு ஒரு வகையில் அதிகப்பிரசங்கித்தனமாகக் காணப்பெறினும், பேராற்றலடையப் பெற்றும் வெறுமனேயிருக்கும் மஹானு பாவர்களுக்குத் தூண்டுகோலாயிருப்பதற்காகவேயாம். அப் பெரியார்கள் தமதறிவை யுலகமாக்களுக்கெடுத்துக்கூற முன்வரின் உலகம் இவ்வந்தகாரத்துள் மூழ்கியிருக்க வழி யில்லையன்றோ? இம்மொழிபெயர்ப்பு அநேகவிடங்களில் மூலநூலின் தாத்பரியத்தை யப்படியே எடுத்துக்காட்டாத முறையில் அமைந்திருக்கலாமென்பதையும், அநேக தவறு களிருக்கலாமென்பதையும், முன்பின் மாறியிருக்கலாமென் பதையும் என்னால் மறுக்கமுடியாது. யான் அடிக்கடி பிரயாணத்திற் செல்லவேண்டியோனாதலின் அச்சியந்திர சாலைக்குச்சென்று பிழைதிருத்தமுடியாது போய்விட்ட

மையால் அச்சுப்பிழைகளும் மலிந்திருக்கலாம். இம் மொழிபெயர்ப்பு அடியேனது சக்திக்கு மிகமிக மேம்பட்ட தொரு காரியமே. அநேகதடவைகளில் "நம்மாலிஃது முடியாதகாரியமே" யென நின்றும் போய்விட்டேன். பிறகும் மேதாவிகளின் ஆதரவை நம்பியே இதனைப் பூர்த்தி செய்துள்ளேன். குற்றங்களை விடுத்துக் குணத்தைக் கொள்ளும் பெரியார்கள் என்னை க்ஷமிப்பதுடன் பிழைகளைத் தெரிவிக்கும்படியும் பிரார்த்திக்கிறேன். அவைகளை யடுத்தபதிப்பில் திருத்திக்கொள்வேன்.

இங்ஙனம்,
ஸையத் இப்ராஹீம்,
*Dy. Inspector of Schools*

திருநெல்வேலி,
10—1—1935

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

எப்புகழும் எமதிறைவன் அல்லாஹு தஆலாவுக்கே.
ஸலவாத்தும், சலாமும் எம்பெருமானார் (ஸல்.)
அவர்கள் மீதும், அன்னார் இனமித்திரர்
மீதும் உண்டாவதாக !

# இஸ்லாமிய சரிதை

## நான்காம் பாகம்

### பனீ அப்பாஸ்கள்

அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் அவர்களுக்குப் பத்து புத்திரர்களுண்டாயினும் அப்புதல்வருள் அபூதாலிப், அப்பாஸ் (ரலி.) இவ்விருவருக்குமே அதிகமான சந்ததிகளேற்பட்டு, ஆப்பிரிகா தொடுத்து ஆசியாவின் மத்திய பாகம் வரை இஸ்லாமிய நாடுகளின் ஒவ்வொரு மூலையிலும் இருந்துவந்தனர். இஸ்லாமிய சரித்திரத்தில் இவ்விரு வம்சங்களும் அதிகமாகப் பங்கெடுத்துக் கொண்டன. தற்போது நாம் அப்பாஸ் (ரலி.) அவர்களது சந்ததிகளின் சரிதையையே ஈண்டு வரைவாம்.

## ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.)

இவர்களின் அன்னையார் நுதைலா பின்து ஜனுப் என்பாராவர். இவர்கள் யானைச் சண்டைக்கு மூன்றாண்டு களுக்கு முன்பு ஜனித்தார்களாதலால் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு மூத்தோரா யிருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள் 'பனீஹாஷிம்' வர்க் கத்துத் தலைவர்களையும், அறிஞர்களையும் சேர்ந்திருந் தார்கள். பெருமானார் (ஸல்.) நபித்துவம் பெற்றபோது இவர்கள் இஸ்லாமைத் தழுவாது போயினும் பெருமா னாருடன் அன்னியோன்னியமா யொழுகி வந்தார்கள். இரண்டாவது அகபா உறுதிமொழியின்போது பெருமா னார் (ஸல்.) இராத்திரியில் மதினாவாசிகளான அன்ஸார் களைச் சந்திப்பதற்காகச் சென்றபோழ்து ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களும் கூடவிருந்தார்கள். இவர்கள் அன்ஸார் களை முன்னோக்கி,

"முஹம்மத் (ஸல்.) இங்கு தமது வர்க்கத்தில் கௌரவத்துடனும், அமைதியுடனு மிருக்கின்றனர். இன்னாரைத் தம்முடன் கூட்டிச்செல்லக்கருதும் நீங்கள் அரப்தேசம் முழுமையுடனே யும் சண்டையிட நேரிடுமென்பதைக் கருதிப்பாருங்கள்! எனவே, தற்போழ்தே நன்காலோசித்துக்கொள்ளுங்கள்! உங்களிடம் தற் காப்பிற்கான வன்மையிருக்குமாயின் அழைத்துச்செல்லுங்கள்! இன்றேல் விட்டுவிடுங்கள். உண்மையான வார்த்தையே நன்மை யானதாம்"

எனக்கூறினார்கள். இதைக்கேட்டு அன்ஸார்கள் தமது ஆவியை அர்ப்பணஞ்செய்வதாய் வாக்களித்தார்கள். அன் ஸார்களைச் சேர்ந்த பரா பின் மஃரூர் (ரலி.) அவர்கள்

"எங்களுள்ளங்களில் மாறுபட்ட விஷயமிருக்குமாயின் நாங்களதை வெளியிட அஞ்சமாட்டோம். நாங்கள் சத்தியசீலர்களாகவும், நம்பிக்கையாளர்களாகவு மிருக்கிறோம். எங்களது ஆவிகளைப்

பெருமானார் (ஸல்.) அவர்களுக்காகத் தியாகம்புரியத் தயாரா யிருக்கிறோம்''

என்றார்கள். அன்ஸார்கள் பைஅத் (உறுதிமொழி) செய்து கொடுக்கும்போது அப்பாஸ் (ரலி.) "நீங்கள் செய்து கொடுக்கும் உறுதிமொழியைப் பூர்த்திசெய்ய வேண்டு மென்பதை ஞாபகத்தில் வையுங்கள்!" எனக் கண்டித்துக் கொண்டிருந்தார்கள்.

'பதர்' யுத்தத்திற்காக குறைஷ்களில் ஒருவரும் பாக்கியிராது யாவரும் முஸ்லிம்களை எதிர்ப்பதற்காகக் கிளம்பியபோது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களும், தாலிப், அகீல் என்னும் அவர்களது சகோதரர் புதல்வர் இருவரும் தமது வர்க்கத்துடன் புறப்பட்டுச்செல்லும்படி நேரிட்டது. இக் காரணத்தாலேயே பெருமானார் (ஸல்.) தமது தோழர்களுக்கு "இவர்களில் யாரையும் கொல்லவேண்டாம்" எனக் கட்டளையிட்டிருந்தார்கள். எனவே, இவர்கள் கைதுசெய்யப் பட்டார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) தமக்காகவும், அகீல் என்பாருக்காகவும் நஷ்டயீடு செலுத்தி விட்டுப் பிறகு மக்காவில் குடியேறினார்கள். அங்கு எதிரிகளின் தீமைகளிற் சிக்குண்டிருந்த பலவீனமான முஸ்லிம்களுக் குதவிபுரிந்துகொண்டும், பெருமானாருக்குச் சங்கதிகளை யறிவித்துக்கொண்டு மிருந்துவந்தார்கள். சின்னாட்களுக்குப் பிறகு மதீனா வருவதற்கு அனுமதி கோரினார்கள். எனினும், பெருமானார் (ஸல்.) "நீங்கள் அங்கிருப்பதே நன்மையானதாக விருக்கின்றது" என்றெழுதிவிடவே அவர்கள் வரவில்லை. 'ஹுதைபிய்யா' உடன்படிக்கை ஏற்பட்டு, சகலவர்க்கங்களும் போகவரத் தொடுக்கவே ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள்.

ஹி. 8-ம் ஆண்டில் பெருமானார் (ஸல்.) மக்காவின் மீது படையெடுத்தபோது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) கூடவிருந்

தார்கள். அவர்களின் இளகிய நெஞ்சம் தமது வர்க்கத்தவருக்காகப் பதைத்துக்கொண் டிருந்தது. மக்காவுக்குச் சமீபமாக இச்சேனை கூடாரமடித்ததும் இவர்கள் இராக்காலத்தில் புறப்பட்டார்கள். சிறு பிராயம் முதற்கொண்டே இவர்களின் அன்பிற்குப் பாத்திரமாயிருந்த அபூஸுப்யான் (ரலி.) அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களைத் தமது பாதுகாப்பிற் கொணர்ந்து பெருமானாரின் அனுமதியின்பேரில் அவர்களைத் தம்முடன் கொண்டு சென்று, இஸ்லாமின் உண்மையை விளக்கிக் காட்டினார்கள். எனவே, அவர்கள் மறுதினம் காலையில் பெருமானாரின் சமூகத்திற்குச்சென்று இஸ்லாமைத் தழுவினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களின் வேண்டுகோளின்மீது பெருமானார் (ஸல்.) அடைக்கல விஷயத்தில் அபூஸுப்யான் (ரலி.) அவர்களின் இல்லத்தை 'கஃபா'வுக்குச் சமதை யாக்கினார்கள். இதன் காரணத்தால் இவர்கள் மக்காவுக்குச் சென்று குரைஷ்களைப் பயமுறுத்திச் சண்டையிடாது தடுத்தார்கள். இதனால் முஸ்லிம்கள் சண்டையிடாமலேயே மக்காவுக்குள் பிரவேசித்தார்கள். குரைஷ்கள் சண்டையிடுவதைவிட்டும் தப்பிக்கொண்டு, பொதுவான அடைக்கலம் பெற்றபின் சந்தோஷத்துடன் இஸ்லாமை யங்கீகரித்தார்கள். 'ஹுனைன்' யுத்தத்திலும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) கலந்திருந்தார்கள். யாவரும் எதிரிகளின் அம்புகளால் முகங்களைத் திருப்பிக்கொண்டபோதும் இவர்கள் ஸ்திரமாக நின்றிருந்து, பெருமானாருடைய வாகனத்தின் அங்கவடியைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்.) இவர்கள்மீது பூரண அன்பு பூண்டும், இவர்களைக் கண்ணியப்படுத்தியும் வந்தார்கள். பெருமானாருக்குப்பின் கலீபாக்களும் இவ்விதமே யொழுகி வந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) ஹஸ்ரத் உத்மான் (ரலி.)

அவர்களின் காலத்தில் ஹி. 32-ம் ஆண்டு, ரஜப் மாதம், 14-ந் தேதி வெள்ளிக்கிழமை மதீனாவில் காலஞ்சென்றார்கள். அவ்வமயம் அவர்களுக்கு வயது 88 நிரம்பியிருந்தது. 'பகீஃ' என்னுமிடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களின் புத்திரர்களில் பஜ்ல் என்பார் யாவருக்கும் மூத்தவரா யிருந்ததால் அவர்களுக்கு "அபுல்பஜ்ல் = பஜ்லின் தந்தையார்" என்னும் சிறப்புப் பெயரும் இருந் தது. எஞ்சிய சந்ததிகள் அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், அப்துர் ரஹ்மான், குதும், மஃபத், உம்முஹபீபா இவர்களாம். இவர்களின் அன்னையார் லுபாபா பின்து ஹாரித் என்பா ராவார். கதீர், தமாம் என்னும் இருபுதல்வர்களும், ஸபிய்யா, உமைமா என்னும் இரு புதல்விகளும் அடிமைப் பெண் ணுக்கு ஜனித்திருந்தார்கள். ஹாரித் என்னும் பெயருடைய வொரு புதல்வர் ஜமீலா பின்து ஜுந்துப் ஹதலீ என்பா ருக்கு ஜனித்தார். எனினும் இவர்களுள் அப்துல்லாஹ் (ரலி.) அவர்களைத் தவிர்த்து வேறுயாருக்கும் சந்ததிகள் ஏற்படவில்லை.

## அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.)

இவர்கள் ஹிஜ்ரத்திற்கு மூன்றுண்டுகளுக்கு முன்பு ஜனித்தார்கள். பெருமானார் (ஸல்.) இவ்வுலகைவிட்டு மறைந்தபோது இவர்கள் 12-வயது நிரம்பப்பெற்றிருந்தார் கள். பெருமானார் (ஸல்.) இவர்களை அன்புடன் நடாத்தி வந்தார்கள். இவர்களுக்காக "ஆண்டவனே மார்க்கத்தில் இவருக்கு ஞானத்தையளிப்பாயாக!" என்னும் பிரார்த்தனையும் செய்தார்கள். எனவே, இவர்கள் குர்ஆ னின் கருத்துக்களைப் பகுத்தறிவதில் ஸஹாபாக்களுள் தனிச்சிறப்புப் பெற்றிருந்தார்கள். இஸ்லாமிய அறிஞர் கள் இதனாலேயே இவர்களுக்கு "ஜஹரே உம்மத் = முஸ்லிம் களில் வெளிப்படையானோர்" என்னும் சிறப்புப் பெயரை

யளித்துள்ளார்கள். இலக்கண இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களும் இவர்களை மிகவும் அன்புடன் நடாத்திவந்தார்கள். சிறு பிராயத்தவராயிருந்தும் இவர்களைத் தமது ஆலோசனைக் கூட்டத்தில் சேர்த்திருந்தார்கள். ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்கள் முற்றுகையிடப்பட்டபோது இவர்களையே ஹாஜிகளின் தலைவராய் நியமித்தனுப்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி.) கலீபாவாயினபோது இவர்கள் அவர்களுக்கு உதவியாளராயிருந்தார்கள். அவர்கள் இவர்களை 'பஸரா'வுக்கு அதிபராய் நியமித்திருந்தார்கள். எனினும் சின்னாட்களுக்குப் பிறகு இவர்கள் பொதுநிதியிலிருந்து ஒருதொகையை எடுத்துக்கொண்டதாய்க் குற்றஞ்சாட்டப் பட்டார்கள். இதனால் இவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களது ஆதரணையை விட்டுவிட்டு 'தாயிப்' சென்று, அங்கேயே தங்கிவிட்டார்கள். அமீர் முஆவியா (ரலி.) தமது காலத்தில் இவர்களை மிகவும் அன்பாகவும், கண்ணியமாகவும் நடாத்திவந்தார்கள். அபூஸுப்யான் (ரலி.) அவர்களுக்கு அப்பாஸ் (ரலி.) அவர்கள் மீதிருந்த பிரியமே இவர்கள்மீது அமீர் முஆவியா (ரலி.) அவர்களுக்கிருந்தது. அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) ஹி. 28-ம் ஆண்டு தாயிபில் காலஞ்சென்றார்கள்.

## அலீ பின் அப்துல்லாஹ் (ரலி.)

இவர்கள் ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி.) அவர்கள் காலஞ்சென்ற இரவே ஜனித்தார்கள். இதனாலேயே இவர்களுக்கு "அலீ" என்னும் நாமமிடப்பட்டது. இவர்கள் மிக அழகராயிருந்தார்கள். மிகவும் நெட்டையராகவுமிருந்தார்கள். கஃபாவைப் பிரதக்ஷணஞ் செய்யும்போது ஏனையோர் உட்கார்ந்திருந்து இவர்கள்மட்டும் நின்றிருப்பது போல் தோற்றமளிப்பார்கள். மதீனாவிலிருந்து திமஷ்க்

செல்லும் வழியிலுள்ள பனீஉமையாக்களின் ஊரான 'ஹமீமா' இவர்களுக்கு ஜாகீராக அளிக்கப்பட் டிருந்தது. இதிலேயே குடியிருந்தார்கள். அங்கேயே ஹி. 117-ம் ஆண்டில் 22-புதல்வர்களையும், 11-புதல்விகளையும் விட்டு விட்டு மரண மடைந்தார்கள். புதல்வர்களில் மூத்தவரான முஹம்மத் என்பாரே இவர்களுக்குப் பிரதிநிதியானார்கள்.

## முஹம்மத் பின் அலீ

அப்பாஸிய்யாக்கள் கிலாபத்தை விழைந்தது இவர்களது காலத்திலிருந்தேயாம். இவர்கள் இமாம் இப்ராஹீம், அப்பாஸிய்யாக்களின் முதல் கலீபாவான அபுல்அப்பாஸ் ஸப்பாஹ், இரண்டாவது கலீபாவான அபூஜஃபர் மன்ஸூர் இவர்களின் பிதாவாவார்கள். ஈண்டு "அப்பாஸிய்யாக்கள் கிலாபத்தை ஏன் விழைந்து நின்றார்கள்?" என்பதைக் குறிப்பிடுவதும் முக்கியமாம்.

## கிலாபத்

நபிகள் பெருமானார் (ஸல்.) மரணவியாதியிலிருக்கும் போது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம் "முஹம்மத் (ஸல்.) தப்பிப் பிழைப்பார்களென்னும் நம்பிக்கையில்லை. இறுதி (மரண) நேரத்தில் ஹாஷிம் குலத்தவர்கள் அடையப்பெறும் நிலைமையை நான் பலதடவைகளிற் கண்டிருக்கிறேனாதலால் நான் அதை நன்கறிந்துகொள்வேன். எனவே, நீங்கள் அவர்களின் திருச்சமுகத்திற்குச்சென்று கிலாபத்தின் விஷயமாய் முடிவுசெய்துகொள்ளுங்கள்! அஃது ஹாஷிம் குலத்தவரிடம் இருக்குமாயின் நன்று. இன்றேல் கலீபாவாக வருவோருக்கு நம்மைப்பற்றி நன்மொழிகள் கூறும்படிச் செய்யுங்கள்!" எனவும் ஹஸ்ரத் அலீ (ரலி.) "இன்று பெருமானார்(ஸல்.) கிலாபத்தை நமக்கில்லாது செய்துவிடுவார்களாயின் உலகமுடிவு நாள்வரை நமக்கு எப்பொழுதுமே அஃது கிடையாது போய்விடும்" எனக்கூறி அங்ஙனம் செய்வதை மறுத்துவிட்டார்கள். பெருமானார் (ஸல்.) இவ்வுலகைவிட்டு மறைந்தபிறகு முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் கரத்தில் பைஅத் செய்தார்கள். அவ்வமயம் பெருமானாரின் நெருங்கிய சுற்றத்தாரில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களிருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களாவார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) பாந்தவ்வியத்தில் நெருங்கியோராயும், வயதில் முதியோராயு மிருந்தாலும் முந்தி இஸ்லாமைத் தழுவியதும், இஸ்லாமுக்குப் பணிசெய்ததுமான சிறப்பு ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம் அதிகமாகக்

காணப்பெற்றது. தவிர, பெருமானாரின் திருப்புதல்வியார் ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) இவர்களின் மனைவியரா யிருந்தார்கள். இதனால் இவர்கள் தம்மையே கிலாபத்திற்கு நெருங்கிய பாத்தியதை யுடையோராய்க் கருதிவந்தார்கள். இதே கருத்தினால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களின் பைஅத்திற் கலந்திருக்கவில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் காலஞ்சென்ற பிறகே பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி.) கலீபாவாயினதும் ஹஸ்ரத் அலீ, அப்பாஸ் (ரலி........) இவ்விருவரும் அவர்கள் கரத்தில் பைஅத் செய்தார்கள்

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுக்குப்பிறகு கிலாபத் ஆலோசனைக்கூட்டத்தில் வந்தபோது, தாம் தேர்ந்தெடுக்கப்படலாமென்னும் திடமான நம்பிக்கை ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்கேற்பட்டது. எனினும், பெரும்பான்மையான வாக்குகளால் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) கலீபாவானார்கள். இதனால் ஹஸ்ரத் அலீ (ரலி.) மனத்தாங்கலடைந்தார்கள். ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களது கிலாபத்தின் எழாம் வருஷத்தில் ஹி. 30-ம் ஆண்டு பெரிய பெரிய இஸ்லாமிய தலைநகரங்களில் "ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களை கிலாபத்திலிருந்து நீக்கி, ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை நியமிக்கவேண்டும்" என்னும் பிரசினை கிளம்பியது. கூபா, பஸரா, ஷாம், மிஸ்ர் இப்பகுதிகளில் ஒரு கூட்டம் இப்பிரசினையைக் கிளப்பியது. இதற்குத் தலைவன் அப்துல்லாஹ் பின் ஸபா வென்பானா யிருந்தான். இக்குழாத்தினர் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களால் நியமிக்கப்பட்ட அதிபர்கள்மீது பலவிதமான அபவாதங்களைக் கிளப்பிவிட்டுக்கொண்டு, பொதுமக்களுக்கு அவர்கள்மீது கெட்ட அபிப்பிராயத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருந்தனர். இதே

விதமான நிரூபங்கள் ஒரு நகரத்திலிருந்து மற்ெருரு நகரத்திற்கு அனுப்பப்பட்டு வந்தன. அவ்விடங்களிலுள்ள குழப்பக்காரர்கள் இதைப் பிரகடனப் படுத்துவார்கள். பொதுமக்கள் இவைகளைச் செவியுற்று 'இன்ன நகரத்தில் முஸ்லிம்கள் இத்தகைய இன்னல்களடைகிருர்கள்' எனப் பச்சாத்தாபத்துடன் கூறுவார்கள். பஸராவாசிகள் கூபா வாசிகள் மீதும், கூபாவாசிகள் பஸராவாசிகள்மீதும் அனுதாபப்படுவார்கள். ஒவ்வொருவனும் தான் தற்போது ஆபத்தை விட்டும் தப்பியிருப்பதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவான். ஒவ்வோரிடத்திலிருந்தும் கடிதங்கள் கிடைக்கப்பெறும் நகரமான மதீனுவிலுள்ளோர் யாவரின் நிலைமைகள் மீதும் அனுதாபப்பட்டு, தாம் இன்னல்களைவிட்டுந் தப்பியிருப்பதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவார்கள். இவ்விதமாக இக்குழப்பக்காரர்கள் மாகாண அதிபர்கள்மீது அபவாதங்களைக் கட்டிவிட்டுப் பொதுமக்களைக் கிளப்பிவிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் உத்மான் (ரலி.) இவைகளைத் தீர விசாரிப்பதற்காகப் பலவிடங்களுக்கும் பொறுக்கி யெடுக்கப்பட்ட ஸஹாபாக்களை யனுப்பியதில் "இவைகள் யாவும் அபாண்டமான கட்டுக்கதைகள். ஒரு சிலரின் தூண்டுதலாலேயே இத்தகைய அபாண்டமான நிரூபங்கள் அனுப்பப்படுகின்றன" வெனத்தெரிய வந்தது. ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்கள் மிருதுவான குணமுள்ளோராகவும், தம்மால் எத்தகைய குழப்பமும் ஏற்பட்டு விடுமோவென அஞ்சுவோராகவு மிருந்ததால் இக்குழப்பங்களைப்பற்றித் துப்பறியவுமில்லை; அவர்களுக்கு எத்தகைய தண்டனையுங் கொடுக்க இசையவுமில்லை. எனவே, அவர்கள் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களைப்பற்றியே முறையீடுசெய்யத் தொடுத்து, அவர்கள்மீதே குற்றங் கண்டார்கள். பிறகு

மிஸ்ர், கூபா, பஸரா இம்மூன்று பகுதிகளிலிருந்தும் இக்கூட்டத்தார்கள் அவர்களிடம் சென்று, அவர்கள் முன்னாலேயே முறையீடுகளையெல்லாம் சொன்னார்கள். ஹஸ்ரத் உத்மான் (ரலி.) இவைகளுக்குப் பதில்மட்டுமளித்து, அவர்களைத் திருப்பியனுப்பி விட்டார்கள். அந்நேரத்திலும் அவர்களை யொன்றுமே செய்யவில்லை. சின்னாட்களுக்குப் பிறகு இவர்கள் திரும்பி மதீனாவுக்கு வந்து, தாம் மதீனாவிலிருந்து திரும்பி மிஸ்ர் போய்ச் சேரும்போது தமக்குத் தண்டனை யளிக்கும்படி அவ்விடத்து அதிபருக்கு ஹஸ்ரத் உத்மான் (ரலி.) எழுதியிருப்பதாக ஒரு பொய்க் காகிதத்தைக் காண்பித்தார்கள். அதில் ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களின் முத்திரையும், கையொப்பமும் வைக்கப்பட்டிருந்தன. அக்கடிதம் அவர்களிடம் காண்பிக்கப்பட்டபோது அவர்கள் இறைவனைச் சாக்ஷியாக்கிவைத்து "நான் இதை வரையவில்லை; இதை யானறியேன்" என்றார்கள். அந்த ஜனங்கள் "தாங்கள் இதைச் செய்யாவிடின், தங்கள் இலிபி மர்வான் என்பார் இதைச் செய்திருப்பார். அவரை எங்கள் வசம் ஒப்பிவித்து விடுங்கள்!" எனக்கூறினார்கள். ஹஸ்ரத் உத்மான் (ரலி.) "ஒருவரது கையெழுத்தைப் போல் எழுதலாம். ஒரு முத்திரையைப்போல் வேறு முத்திரையையும் தயாரிக்கலாம். நிரூபிப்பதற்காக இரு நீதிவான்களான சாக்ஷிகள் முக்கியம்" என்றார்கள். அவர்கள் இதைக் கேட்டு புரட்சி செய்வதாய்ப் பிரகடனப்படுத்தி, ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்களை அவர்கள் வீட்டில் சிறைவைத்து விட்டார்கள். சின்னாட்களுக்குப்பிறகு அதைக் கொளுத்தி விட்டு, உள் நுழைந்து அவர்களைக் கொன்றுவிட்டார்கள்.

மூன்றாவது கலீபாவைக் கொன்றுவிட்டு ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கரத்தில் பைஅத் செய்தார்கள். அவர்களுக்கும் ஒரு தினமாகினும் நிம்மதி கிடைக்கக் கூடாது

போயிற்று. அவர்கள் தமது கொஞ்சகால கிலாபத்தில் பஸரா, நஹ்ர்வான், ஸிப்பீன் இவைகளின் சண்டைகளிற் கலந்துகொண்டார்கள். இறுதியாக பஞ்சாயத்தார்கள் அவர்களை கிலாபத்திலிருந்து நீக்கியும்விட்டார்கள். அவர்கள் இத்தீர்ப்பை யொப்புக்கொள்ளாதுபோகவே ஒரு காரிஜி ஹி. 40-ம் ஆண்டு, ரமலான்மாதத்தில் இராக்காலத்தில் பதுங்கியிருந்து வாள்வீசினன்; அதனுல் அவர்கள் ஆவி பிரிந்தார்கள். முஆவியா பின் அபீஸுப்யான் (ரலி.) அவர்களின் வன்மை அப்போது பெருகியிருந்தது. ஷாம், ஹிஜாஸ், யமன், மிஸ்ர் இவைகளிலுள்ளோர் அவர்கள் கரத்தில் பைஅத் செய்திருந்தார்கள். இதனுல் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்குப் பிறகு பெருவாரியான முஸ்லிம் சமூகம் அவர்கள் புறமே சார்ந்திருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களைச் சேர்ந்தோர்(ஷீஆக்)களின் தலைநகரான கூபா மட்டும் அவர்களது பைஅத்தைவிட்டும் பிரிந்தது. அதிலுள்ளோர் அமீர் முஆவியா (ரலி.) அவர்களைப் பார்க்கினும் மட்டல்லாது சென்றுபோன கலீபாக்கள் யாவரினும் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களையே மேன்மையாகக் கருதிவந்தனர். இவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்குப்பிறகு இமாம் ஹஸன் (ரலி.) அவர்களை அவர்களுக்குப் பிரதிநிதியாக்கினுர்கள். அமீர் முஆவியா (ரலி.) சேனையைக் கொண்டுவந்தார்கள். முதலெதிர்ப்பிலேயே இராக்வாசிகள் தோல்வியடைந்தார்கள். இமாம் ஹஸன் (ரலி.) அவர்களும் காயமடைந்தார்கள். எனவே, இவர்கள் இதே இராக்வாசிகளின் நயவஞ்சகத்தாலேயே தமது பிதா அவர்கள் வெற்றியடைய முடியாது போயினரென்பதையும், இனி தாம் இவர்களை நம்பியிருப்பதில் எத்தகைய பலனுமில்லை யென்பதையும் நன்கறிந்துகொண்டு அமீர் முஆவியா (ரலி.) அவர்களுடன் சமரஸம் செய்துகொண்டு மதீனுவிற்கு வந்து

விட்டார்கள். அங்கேயே ஹி. 50-ம் ஆண்டில் காலமடைந்தார்கள்.

அமீர் முஆவியா மிகவும் பொறுமை, புத்திநுட்பம், கருணை இவைகளுடன் கிலாபத்தை நிர்வகித்து வந்தார்கள். இதனால் அவர்களை எதிர்ப்பதற்கான ஆவேசம் அழிந்து பட்டது. பெருமானாரின் சுற்றத்தவர்கள் கிலாபத்தை விழைந்து நிற்பதும் அடங்கிவிட்டது. இஃது உசிதமான காலத்தை எதிர்பார்த்து, உள்ளங்களில் புதைந்திருந்த தென்பது முண்மையே. அமீர் முஆவியா (ரலி.) தமது ஜீவிய காலத்தில் தமது புதல்வர் யஜீதை இளவரசாகத் தேர்ந்தெடுக்க பைஅத் வாங்கினார்கள். அக்காலத்தில் இதைச் சிலர் எதிர்த்தனர். அவர்களுக்குப் பிறகு யஜீத் கலீபாவானதும் மக்கா, மதீனா, கூபா இம்மூன்று விடங்களிலும் எதிர்ப்புகள் கிளம்பின. மக்காவில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) இருந்தார்கள். அங்கு அவர்கள் தமது கிலாபத்தின் புறம் ஜனங்களை யழைக்கத் தொடுத்தார்கள். மதீனாவில் ஒரு கூட்டம் எதிர்ப்பிற்காகக் கிளம்பி, யஜீதின் பைஅத்தை முறித்துவிட்டது. யஜீத் முஸ்லிம் பின் உக்பா வசம் சேனையைகொடுத்தனுப்பியதில் அவன் அங்குசென்று கொடுமைகள் பல புரிந்து புரட்சியை யொடுக்கினான். கூபாவிலுள்ள பெருமானாரின் வம்சத்தை யாதரித்து நிற்கும் கூட்டத்தவர் நிரூபரையனுப்பி, இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களை கலீபாவாகத் தேர்ந்தெடுப்பதற்காக அழைத்தார்கள். இமாமவர்கள் அக்குழாத்தினரின் நிலைமைகளை நன்கறிந்திருந்தும், அன்னார் ஹஸ்ரத் அலீ, இமாம் ஹஸன் (ரலி...) இவர்களுடன் புரிந்த செய்கைகளைக் கண்கூடாகக் கண்டிருந்தும் எத்தகைய சேனையோ, தளவாடங்களோ ஒன்றுமேயில்லாமல் அங்குசெல்லப் புறப்பட்டுவிட்டார்கள். அங்கு சென்று உபைதுல்லாஹ் பின் ஜியாதின் சேனையுடன்

எதிர்ப்பேற்பட்டது. இறுதியாக ஷாம்வாசியே கலப்பில்லாத அதே கூபாவாசிகளின் கூட்டத்திலொருவன் அவர்களையும், அவர்களின் கூட்டத்தையும் கொன்றுவிட்டான்.

இச்சம்பவங்கள் கழிந்துபோயின. ஹி. 24-ம் ஆண்டில் யஜீதும் இறந்துபட்டார். தற்போது அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களின் கூட்டம் விஸ்தரித்துவிட்டது. ஹிஜாஸ், மிஸ்ர், இராக் இவ்விடத்து மக்கள் அவர்களுக்கு பைஅத் செய்யத் தொடுத்தனர். ஹிஜாஸில் பனீ ஹாஷிம் குலத்தவரிற் சிலர் அவர்களுக்கு பைஅத் செய்யாதிருந்து விட்டனர். இவர்களில் “இப்னுஹனபிய்யா” வென வழங்கிவரும் முஹம்மத் பின் அபீதாலிப், அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி...) இவர்களை முக்கியமாய்க் குறிப்பிடலாம். அப்துல்லாஹ் (ரலி.) இவர்களைக் கைது செய்து விட்டார்கள். ஷாமில் பனீஉமையாக்கள் மர்வான் பின் ஹகமை கிலாபத்திற்காக நிறுத்தினர்கள். அங்கிருந்த அப்துல்லாஹ் (ரலி.) அவர்களை யாதரிக்குஞ் சிலருக்கும், பனீஉமையாக்களுக்குமிடையே பெரியதொரு போர் ஏற்பட்டுவிட்டது. இச்சமயத்தில் முக்தார் பின் அபீஉபைத் தகபீ என்பான் ஹி. 66-ம் ஆண்டில் தலைதூக்கி, இக்குழப்பங்களுக்கிடையே இராக்கைத் தன் வயப்படுத்திக்கொள்ளக் கருதினன். இராக்வாசிகள் பெருமானரின் வம்சத்தை யாதரிப்போரா (ஷீஆக்களா) யிருந்தமையால் அவர்களது உதவியைப் பெறுவதற்காகத் தானும் அவ்வம்சத்தை யாதரித்து நிற்கவேண்டியதாயிருந்தது. எனவே, அவன் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களின் கொலைக்குப் பழிக்குப்பழி வாங்கப் போவதாய்க் கொடியுயர்த்தி, அக்காலத்திலிருந்த ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களது புத்திரர்களில் பெரியவர்களான முஹம்மத் பின் ஹனபிய்யா (ரலி.) அவர்களுக்கு பைஅத் செய்யும்படி ஜனங்களை யழைத்ததுடன், அவர்களை

"இமாம் மஹ்தீ" என்னும் சிறப்புப் பெயரால் விளம்பரமுட படுத்தினன். முக்தார் தனது நோக்கம் ஈடேறச் செய்வதற் காக பொய், மெய்யெனப்பாராமல் ஒவ்வொரு கட்டுரை யையும், பிரசங்கத்தையும் கையாண்டான். இவன் அதிக மாகப் பொய்யுரைத்துவந்ததால் கூபாவின் அறிஞர்கள் இவ னுக்கு "கத்தாப் = பொய்யன்" என்னும் சிறப்புப் பெயரை யளித்தார்கள். இவன் ஷீஆக்களின் தலைவர்களைத் தம்முட னழைத்துக்கொண்டு சிறையிலிருந்த முஹம்மத் பின் ஹன பிய்யா அவர்களை விடுவித்தான்.

அவ்வருடம் முஸ்லிம்களுள் ஏற்பட்டிருந்த பிளவுகள் காரணமாக 'அரபாத்' மைதானத்தில் நான்கு கொடிகள் பறந்தன. முதலாவது அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) அவர்களுடையது; இரண்டாவது பனீஉமையாக்கள் உடை யது; மூன்றாவது முஹம்மத் பின் ஹனபிய்யா (ரலி.) அவர்களுடையது; நான்காவது கவாரிஜ்கள் உடையதாம். எனினும் எத்தகைய போரும் அங்கு நிகழவில்லை. முக்தாரின் செய்கைகளைக் கண்டு அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) தமது சகோதரர் முஸ்அப் (ரலி.) அவர்கள் வசம் அவனை யொழிப்பதற்காக ஒரு சேனையை யனுப்பி னார்கள். இராக்கின் தலைவர்கள் முக்தாரின் எண்ணத் தையும், செய்கையையும் அறிந்திருந்தார்களாதலால் முஸ் அப் (ரலி.) அவர்களுடன் சேர்ந்தார்கள். இறுதியாக இவர் களே வெற்றி பெற்றார்கள்; முக்தார் கொல்லப்பட்டான். அவன் அரசாங்க மாளிகைக்குள்ளிருக்கும்போது அவனைச் சிப்பாய்கள் முற்றுகையிட்டுவிட்ட சமயம் அவனுடனிருந்த சிலரில் ஒருவன் "நீங்கள் முன்பின் யோசியாமல் வெளிக்கிளம்பி இலக்ஷக்கணக்கானவர்களை ஏனோ இன்னல் களுக்கிலக்காக்கிவிட்டீர்கள்?" எனக் கேட்க அவன் "ஷாமில் மர்வான், இராக்கில் அப்துல்லாஹ் பின் ஜுபைர்

(ரலி.) இவர்கள் கிலாபத்திற்காக நிற்பதைக்கண்ட எனக்கு "நான் இவர்களில் யாருக்கும், எவ்விஷயத்திலேனும் குறைவுபட்டவனல்லன்" என்னுமெண்ணம் ஏற்பட்டது" என்றான்.

ஷாம் தேசத்தில் பனீஉமையாக்கள் வெற்றிபெற்றார்கள். எனினும் மர்வான் இறந்துபோய், அவரது புதல்வர் அப்துல்மலிக் கலீபாவாயினர். இவர் மிஸ்ர், இராக் இவ்விரண்டையும் கைவசப்படுத்தித் தனக்காக பைஅத் வாங்கிக்கொண்டார். எஞ்சியிருந்தது ஹிஜாஸே. ஹி. 72-ம் வருஷம் ஹஜ்ஜாஜ் என்பானுக்குச் சேனையைக் கொடுத்து மக்காவுக் கனுப்பியதில் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி.) கொல்லப்பட்டார்கள். இஸ்லாமிய நாடுகள் யாவும் அப்துல் மலிக்கின் கிலாபத்தை ஏற்றுக்கொண்டது. முஹம்மத் பின் ஹனபிய்யா (ரலி.) அவர்களும் அவருக்கு பைஅத் செய்தார்கள். எனினும், அவர்களைச் சேர்ந்தோர் இதற்குப்பின்னும் அவர்களையே கிலாபத்திற்கு தக்கோராய்க் கருதிவந்தார்கள். அவர்கள் காலஞ்சென்றதைக் கேள்விப்பட்டதும் அன்னாரிற் சிலர் அவர்களின் மரணத்தை மறுத்து, அவர்கள் மரிக்கவில்லையெனவும், மேலும் மறைந்து போயிருக்கிறார்களெனவும், சின்னாட்களுக்குப் பிறகு அவர்கள் வெளிவந்து கிலாபத்தை ஏற்றுக்கொள்வார்களெனவும் கூறினர். எனினும், பெரும்பான்மையோர் அவர்களின் புதல்வர் அபூஹாஷிம் அவர்களை அவர்களுக்குப் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டனர். இவர்கள் "கைஸானிய்யா" வெனப் படுவார்கள். 'கைஸான்' என்ற சிறப்புப் பெயரைப்படைத்த முக்தார் தகபீயை இன்னார் சேர்ந்திருந்ததே இதற்குக் காரணமாம்.

'இமாமிய்யா' வென்னும் வகுப்பார் அலீ பின் ஹுஸைன் என்னும் ஜைனுல்ஆபிதீன் (ரலி.) அவர்களை

இமாமாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இப்பெரியார் யஜீத், அப்துல்மலிக் இவ்விருவரிடமும் பைஅத் செய்திருந்தார்கள்; தமக்காக கிலாபத்தை விழைந்து நின்றார்களல்லர். இவர்களுக்குப் பிறகு இவர்கள் புதல்வர் முஹம்மத் பாகிர் என்பாரை அக்குழாத்தினர் இமாமாகக்கொண்டனர். கிலாபத் ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களுக்கு ஜனித்த ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் வம்சத்திற்கே சொந்தமானதென்பதும், இமாம் ஹுஸைன் (ரலி.) இதற்காகத் தமது ஆவியையும் தியாகம் புரிந்தார்களாதலால் இது அவ்வம்சத்திற்கே சொந்தமாய் விட்டதென்பதும் அக்குழாத்தினரின் கருத்து. மற்றொரு கூட்டம் "ஹஸ்ரத் அலீ (ரலி.) பெருமானார் (ஸல்.) மரணத் தருவாயில் சுட்டிக்காண்பித்துச் சென்ற 'வஸீ'யாவார்கள். எனவே, பெருமானாருக்குப் பின் முதல் இமாம் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களே. அவர்களுக்குப் பிறகு இமாம் ஹஸன் (ரலி.), பிறகு இமாம் ஹுஸைன் (ரலி.), பிறகு அவர்களது திருப்புதல்வர் ஜைனுல்ஆபிதீன் (ரலி.) இவர்கள் இமாமாவார்கள். இவர்களுக்குப் பிறகு பாத்திமா (ரலி.) அவர்களது சந்ததியிலுதித்த கல்வி, வீரம், கொடை இவைகள் நிரம்பப்பெற்ற ஒவ்வொருவரும் இமாமாகலாம்" எனக் கூறுகின்றது. இவர்கள் ஜைத் பின் அலீ பின் ஹுஸைன் (ரலி.) என்பாரைத் தமக்கு இமாமாகக் கொண்டதால் 'ஜைதீ' என்றழைக்கப் பட்டனர். நாளிதுவரை அதே பெயரால் வழங்கிவருகிறார்கள்.

'கைஸானிய்யா' வென்னும் கூட்டத்தின் இமாமான அபூஹாஷிம் 'ஹமீமா'வுக்குச் சென்று, அங்கேயே வியாதியுற்று இறந்து விட்டார்கள். இவர்கள் தமக்குப்பிறகு புத்திரரெவரையும் விட்டுச் செல்லவில்லையாதலால் பனீ அப்பாஸ்கள் அலீ பின் அப்துல்லாஹ் என்பாரை இமாமாக நியமிக்கும்படிக் கூறிவிட்டு அவர்கள் இறந்ததாய்க் கூறி

னார்கள். கைஸானிய்யா வென்னும் கூட்டம் இதன்பேரில் அவர்களுடன் கலந்துகொண்டது. எனினும் அலீ பின் அப்துல்லாஹ் பெயரளவில் இமாமாக விருந்தார்களே யல்லாது செய்யவேண்டிய பணிகளையெல்லாம் அவர்களின் புதல்வரான முஹம்மத் என்பாரே செய்தனர். அவர்களுக்குப் பின் அன்னாரே இமாமாகவும் நியமிக்கப்பட்டனர். அலீ பின் அப்துல்லாஹ் இறந்துபோன அதே காலத்தில் 'இமாமிய்யா' வென்னும் கூட்டத்தின் இமாம் முஹம்மத்பாகிர் என்பாரும் இறந்துபோனார்கள். இமாமிய்யாக்கள் அவர்களின் புதல்வர் ஜஃபர் ஸாதிக் என்பாரை இமாமாக ஏற்றுக் கொண்டார்கள். இக்குழாத்தினர் எப்பொழுதும் கிலாபத்தை விழைந்து நின்றது கிடையாது. ஜைதீக்கள் இமாம் ஜைத் அவர்களுக்கு உதவியளிப்பதற்காக கூபாவில் கொடி யுயர்த்திய துண்மையே. ஆனால் அவர்கள் தூக்கிலிட்டுக்கொல்லப்பட்டார்கள். பிறகு அவர்கள் புதல்வர் யஹ்யாவை நிற்கச் செய்தார்கள். இவர்களின் முடிவும் இவ்வாறேயானது. எனினும், முஹம்மத் பின் அலீ பின் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) மிகவும் புத்திகூர்மை யுடையோராயிருந்தனர். கிலாபத்தையும், அரசுரிமையையும் ஒரு வம்சத்திலிருந்து மற்றொரு வம்சத்திற்கு மாற்றுவது திடீரென ஏற்படும் ஆவேசத்தைக்கொண்டு முடியாத காரிய மெனவும், ஒரு பெருந் தொகையுள்ள கூட்டத்தை இதற்காகத் தயாரிக்காதவரை இதில் வெற்றிபெற முடியாதெனவும் இவர்கள் கண்டுகொண்டார்கள். எனவே, இவர்கள் தம்மைச் சேர்ந்தோரில் ஒரு கூட்டத்தைப் பெருமானாரின் வம்சத்தைச் சேர்ந்தோருக்கு இமாமத்பாத்தியதை யுடையதெனப் பிரசாரஞ் செய்யவும், எவருடைய பெயரையுங் குறிப்பிடாதிருக்கவும் கட்டளையிட்டு நியமித்தார்கள். எந்த இமாமின் பெயரையேனும் குறிப்பிட்டுவிட்டால் பனீஉமையாக்கள் அதையறிந்து,

ஆவரைக் கொன்றுவிட்டாலும் விடலாமென்பதே அவர்களின் கருத்து.

அவர்கள் தமது பிரசாரத்திற்காக கூபா, குராஸான் இவ்விரண்டையும் தலை நகரங்களாக நியமித்தார்கள். கூபாவை அவர்கள் நியமித்தது அஃது ஏற்கனவே ஷீஆக்களின் உறைவிடமா யிருந்ததாலேயாம். குராஸானை நியமித்தது அங்குள்ளோர் புதிய முஸ்லிம்களாயும், இஸ்லாமிய சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகத்துவம் இவைகளை நன்கறிந்து கொள்ளாத அறிவீனர்களாயிருந்ததாலும், அவர்களிடமிருந்த மன்னர்களின் சரித்திரத்தை முன்னிட்டு "பெருமானாரின் நெருங்கிய சுற்றத்தவரும், வம்சத்தோரும் கிலாபத்திற்கு அதிகமான பாத்தியதையுடையோராவர்" என்பதை அவர்களது கருத்திற்படும்படிச் செய்வது மிகவும் எளிதானதா யிருந்தாலும், ஈரான் வாசிகளும், குராஸான் வாசிகளும் புராதனகாலந்தொடுத்தே அதிகாரம் படைத்தோராயிருந்தும் பனீஉமையாக்கள் அவர்களை மிகவும் ஒடுக்கி வந்ததுடன் அரசியலில் அவர்களுக்கு எத்தகைய பங்கும் கொடுக்காது போயினதை முன்னிட்டு அவர்கள் புரட்சியை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாலுமேயாம். எனவே, முஹம்மத் பின் அலீ அவர்கள் தமது பிரசாரகர்களை குராஸானுக்கனுப்பும் நேரத்திற் செய்த சொற்பொழிவில்

"கூபாவிலும், கூபாவைச் சுற்றிலுமுள்ளோர் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களையும், அவர்களது சந்ததிகளையும் ஆதரிப்போரா யிருக்கின்றனர். பஸராவிலும், பஸராவைச் சுற்றிலுமுள்ளோர் உத்மான் (ரலி.) அவர்களைச் சேர்ந்தோராவர். அன்னார் "கொலையுண்டோனின் அடிமையாகவிரு. கொலையாளியாகவிராதே!" என்னுங் கொள்கைகொண்டோராவர். ஜஸீரா வாசிகள் இஸ்லாமுக்குப் புறம்பே நிற்போரும், முஸ்லிம்களின்

நாமங்களையும், கிறிஸ்துவர்களின் குணங்களையும் பூண்டிருப்போருமாவர். ஷாம்வாசிகள் அறிவிலிகளும், முரடர்களுமாவார்கள். அவர்கள் பனீஉமையாக்களைத் தவிர்த்து பிறிதெவரையும் அறியார்கள். மக்கா, மதீனா இவ்விடத்து மக்கள் அபூபக்ர், உமர் (ரலி...) இவர்கள் மீது பயபக்தி பூண்டோராவர். எனவே, நீங்கள் உலகதீபமான சூரியனுதிக்கும் திசையான கிழக்குத்திசையை முன்னோக்குங்கள். அங்கிருப்பவர்களது உள்ளம் சாதாரணமானதாயும், நெஞ்சம் அகன்றதாயும், உடல் பருத்ததாயும், சிரம் பெரியதாயுமிருக்கின்றது. அன்னார் தொகையிலும் பெருத்தோரேயாவர் ''

எனக் குறிப்பிட்டார்கள்.

## இரகசியக் கூட்டம்

பிரசாரஞ் செய்யப் புறப்பட்ட இவ்விரகசியக் கூட்டம் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஹஸ்ரத் உமர்பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களது கிலாபத்தின் காலத்தில் நியமிக்கப் பட்டது. அக்காலத்தில் அலீ பின் அப்துல்லாஹ் உயிருடனிருந்தாலும், வேலைகளைச் செய்வோர் அவர்களின் புதல்வர் முஹம்மத் அவர்களாகவே யிருந்தார்கள். கூபாவின் தலைநகரத்தில் அவர்கள் தமது வீட்டின் சொந்த அடிமையான மைஸராவை நியமித்ததுடன் குராஸான் பகுதிகளில் இரண்டிடங்களில் தங்கியிருக்கும்படி முஹம்மத் பின் கனீஸ், அபூஇக்ரிமா இவ்விருவரையும் நியமித்தார்கள். இத்துடன் பின் வரும் பன்னிரண்டு நகீப் (காரியதரிசி)களையும் நியமித்தார்கள் :—

1. ஸுலைமான் பின் கதீர் குஜாஈ
2. மாலிக் பின் ஹதீம் ,,
3. தல்ஹா பின் ஜுரைக் ,,
4. அம்ரு பின் அஃயுன் ,,
5. ஈஸா பின் ,, ,,

6. கஹ்தபா பின் ஷைப் தாயீ
7. லா ஹிஜ் பின் குரைல் தமீமீ
8. மூஸா பின் கஅப்
9. காஸிம் பின் முஜாஷிஃ
10. அபூதாவூத் காலித் பின் இப்ராஹீம் ஷைபானீ
11. அபூஹிரவீ ஸபல் பின் லம்மான் ஹனபீ
12. இம்ரான் பின் இஸ்மாஈல் முஈதீ

இக்காரியதரிசிகளின் கீழ் எழுபதுபேரை இவர்களது சொற்படி நடப்பதற்காக நியமித்தார்கள். வேலைசெய்ய வேண்டிய ஒழுங்குமுறைக்காக முஹம்மத் பின் அலீயவர்கள் ஒரு திட்டத்தைத் தயாரித்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரதியைக் கொடுத்துவிட்டார்கள். இப்பிரசாரகர்கள் அப்பொழுதே சென்று தமது அலுவல்களைக் கவனிக்கத் தொடுத்தார்கள். ஒரு நூற்றாண்டில் மூன்றிலொரு பங்கு காலத்திற்குள்ளாகவே தமது நோக்கத்தில் வெற்றியடைந்தார்கள். ஹி. 132-ம் ஆண்டில் அவர்கள் முஹம்மத் பின் அலீயவர்களின் புதல்வர் ஸப்பாஹ் என்பாரை கூபாவில் கலீபாவாக்கி, பனீஉமையாக்களின் கிலாபத்தை முற்றுப்பெறச் செய்தார்கள்.

இவர்கள் தமது காரியங்களை முடித்த இக்காலம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். முதற்காலத்தில் இவர்களின் பிரசாரம் பிரசங்கங்களாய் மட்டுமே நடைபெற்று வந்தது. அப்பிரசாரகர்களிடம் அக்காலத்தில் பிரயோகிக்கத்தக்க எத்தகைய பலமுமிருக்கவில்லை. தவிர அக்காலத்தில் பனீஉமையாக்களுள் உட்குழப்பமும், உட்பிரிவினையும் அதிகமாயிருக்கவில்லை. அவர்களின் வன்மையே அதிகமா யிருந்தது. எனவே, அவர்களுக்குப் பயந்து கொண்டே இவர்கள் தமது பிரசாரத்தை இரகசியத்தில் செய்துவந்தார்கள். இந்நிலைமை 29-வருடங்கள் வரையி

விருந்தது. இரண்டாவது காலத்தில் இவர்களது பிரசாரத்தின் வாய்ப்பட்ட கூட்டம் பெருகிவிடவே அபூமுஸ்லிம் குராஸானீ இமாமின் புறத்தால் நியமிக்கப் பெற்ற தலைவனாய் வந்து, பலத்தைப் பிரயோகிக்கத் தொடுத்தான்.

## முந்தியகாலம்

(ஹி. 100 தொடுத்து, 128 வரையிலும்.)

அப்பிரசாரகர்கள் ஹி. 100-ம் ஆண்டு குராஸானில் தமது பிரசாரத்தைத் துவக்கினார்கள். வெளிப்படையாக வியாபாரிகளின் கோலத்தைப் பூண்டுகொண்டு இரகசியத்தில் பெருமானாரின் சுற்றத்தவரது கிலாபத்தை எடுத்தோதுவார்கள். அங்கிருந்து தமது காரியாதிகளின் நிலைமையைக் கூபாவுக் கறிவிப்பார்கள். கூபாவிலிருப்போன் அதை 'ஹமீமா'விலிருக்கும் இமாமுக்கு வரைந்துவிடுவான். இத்துடன் ஒவ்வோராண்டும் ஹஜ்ஜுக்காலத்தில் மக்காவுக்கு இவர்களிற் சிலர் செல்வார்கள். அங்கு இமாமைச் சந்தித்து எல்லாச் செய்திகளையும் விவரித்துக் கூறி, அவர்களிடமிருந்து மேற்கொண்டு செய்யவேண்டிய விஷயங்களுக்கான கட்டளைகளையறிந்துகொண்டு திரும்புவார்கள். இவ்விதமாக குராஸானிலிருந்து ஹமீமாவரைக்கும் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தார்கள். இமாம் ஹமீமாவிலிருந்தது இக்காரியங்கள் வெளிவரா திருப்பதற்கு அனுகூலமானதாயிருந்தது. தவிர, கிலாபத்தின் தலை நகரத்தை யண்மித்திருந்ததால் அவ்விடத்துச் செய்தியையும் அவர்கள் அறிந்துகொண்டிருந்தார்கள்.

ஹி. 102-ம் வருஷத்தில் குராஸானின் அதிபர் ஸஈத் ஹதனிய்யா வென்பாருக்கு தமீம் வர்க்கத்தைச் சேர்ந்தவரொருவர் "பெருமானாரின் சுற்றத்தவருக்காக பைஅத் வாங்கும் சிலர் இங்கு காணப்படுகிறார்கள்" என்றறிவித்

தார். ஸஊத் அன்னாரின் இருப்பிடத்தை யறிந்துகொண்டு அன்னாரைக் கூப்பிட்டனுப்பி, "நீங்கள் எவ்விஷயத்தை இங்கு பிரகடனப் படுத்துகிறீர்கள்? நீங்கள் பெருமானாரின் சுற்றத்தாருக்காகப் பிரசாரகர்களாய் இங்கு வந்திருக்கிறீர்களா?" வெனக் கேட்டார். அவர்கள் "நாங்கள் வியாபாரிகளாவோம். எங்களுக்கும், பிரசாரத்திற்கும் யாது சம்பந்தமுளது?" என்றார்கள். அதற்கு அவர் "உங்களுக்கு அறிமுகமானவரெவரேனும் இங்கிருந்தால் அவரை யழைத்து வாருங்கள்!" எனவும் அன்னார் ரபீஆ, யமன் இவைகளைச்சேர்ந்தோர் சிலரை அழைத்துக்கொண்டு சென்றனர். அவர்கள் "நாங்கள் இவர்களை யறிவோம். இவர்களுக்காக நாங்கள் ஜாமீனாயிருக்கிறோம். உங்களது விருப்பத்திற்கு மாற்றமாய் இவர்கள் எக்காரியத்தையும் செய்யமாட்டார்கள்" எனவும் ஸஊத் அன்னாரை விட்டு விட்டார். ஹி. 105-ல் இக்கூட்டத்தில் அப்பாஸிய்யாக்களின் மாபெருந் தலைவனெனக் கொள்ளப்படும் புகைர் பின் மாஹான் என்பான் கலந்துகொண்டான். இவன் செல்வம் படைத்த சீமானாயிருந்ததால் தனது செல்வத்தைக்கொண்டும் இப்பிரசாரத்திற் குதவிபுரிந்தான். இக்காலத்தில் கூபாவில் நியமிக்கப்பட்டிருந்த மைஸரா இறந்துவிட்டான். இமாமவர்கள் அவன் ஸ்தானத்தில் புகைரை நியமித்தார்கள்.

ஹி. 108-ம் வருஷத்தில் குராஸானின் அதிகாரியான அஸத் பின் அப்துல்லாஹ் குஸ்ரீ என்பானுக்கு இப்பிரசாரகர்களைக் குறித்து சிலதகவல்கள் கிடைக்கவே அவன் இவர்களில் ஒரு கூட்டத்தைக் கைதுசெய்தான். அதில் அபூஇக்ரிமா, அபூமுஹம்மத் ஸாதிக், முஹம்மத் பின் கனீஸ், அம்மார் உப்பாதீ இவர்களிருந்தார்கள். அவ்வதிகாரி இவர்களின் அந்தரங்கத்தை யறியக்கூடாதுபோயினும் "இஃது தற்கால அரசாங்கத்திற்கு விரோதமான அரசியல் கூட்டம்"

என்று நிச்சயிக்க முடிந்தது. இதன்பேரில் கைகள், கால்கள் இவைகளைத் துணித்து அவர்களைத் தூக்கிலிட்டுவிட்டான். அம்மார் உப்பாதீ மட்டும் எப்படியோ தப்பிவந்து கூபாவில் நியமிக்கப்பட்டிருக்கும் புகைர் பின் மாஹான் என்பானுக்கு இதைத் தெரிவிக்கவும் அவன் இமாமவர்களுக்கு இதை எழுதினான். அங்கிருந்து கிடைத்த பதிலில்

"இச்சத்தியப் பிரசாரத்தில் சில ஆவிகளின் தியாகத்தையும் ஏற்றுக்கொண்டதற்காக இறைவனுக்கு நன்றிசெலுத்துகிறேன். இன்னும் இவ்வழியில் அர்ப்பிக்கப்படவேண்டிய பல ஆவிகளுள"

வெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அம்மார் உப்பாதீ மீண்டும் குராஸானுக்கு வந்ததில் இரண்டாந்தடவையாக அஸதிடம் சிக்கிக்கொண்டான். தற்போது தப்பிச்செல்லக் கூடவில்லை. இக்கூட்டத்தின் மீது கொண்டிருந்த க்ஷாத்திரத்தால் இவர்களில் யார் கிடைத்தாலும் அஸத் உயிருடன் விடுவதில்லை. எனவே, இவன் காலத்தில் இப்பிரசினை ஒடுங்கிப்போயிருந்தது. ஹி. 109-ல் அவன் உத்தியோகத்தைவிட்டும் நீக்கப்படவே பிரசாரகர்களுக்கு இடங்கிடைத்தது. எனினும் 112-ல் அவன் மீண்டும் உத்தியோகத்திற்கு வரவே இக்கூட்டத்தின்மீது அதே கொடுமைகளைப் புரியத் தொடுத்து அவர்களிற் சிலரைக் கொன்றும், சிலரைக் கைது செய்தும் விட்டான். ஒருதடவை ஸுலைமான் பின் கதீர், மாலிக் பின் ஹதீம், மூஸா பின் கஅப், லாஹிஜ் பின் கரீல், காலித் பின் இப்ராஹீம், தல்ஹா பின் ஜுரைக் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அக்காலத்தில் குராஸானிலிருந்த யமன் வாசிகள், முலர் வர்க்கத்தவர் இவர்களிடம் வகுப்புத் துவேஷம் மிகுதியாகக் காணப்பட்டது. அவர்கள் இவனிடம் "நாங்கள் தங்களது வகுப்பைச் சேர்ந்திருக்கிறோம். மூலர் வர்க்கத்தவர் வகுப்புத்துவேஷங் காரணமாகவே இவ்

விதமான அபவாதங்களை யெல்லாம் எங்கள்மீது கட்டி விட்டிருக்கின்றனர். இதனால் தாங்கள் எங்களைக் கொன்று விடவேண்டுமென்பது அவர்களின் கருத்து. எங்களது தொழில் வியாபாரமே. எங்களுக்கும், அரசியற் பிரசாரத் திற்கும் என்ன சம்பந்தமுளது?" என்றார்கள். இந்தத் தந்திரத்தால் அஸதின் உள்ளன்பு கிடைக்கப்பெற்று, அவர்கள் யாவரும் விடுதலை யடைந்தனர். ஹி. 140-ம் ஆண்டில் அஸத் இறந்துவிடவே அக்குழாத்தினர் எத்தகைய பயமுமின்றியே தமது நோக்கத்திலீடுபட்டனர். தவிர, அங்கேற்பட்ட மற்றுமிரு காரணங்களால் அக் குழாத்தினர் வெற்றிபெறுதற்குத் தக்கதொரு சமயம் கிட்டியது.

### முதற் காரணம்

பனீஉமையாக்களுள் உட்சண்டை ஏற்பட்டுவிட்டது. ஹி. 125-ம் ஆண்டில் இரண்டாவது வலீத் கலீபாவாய், அவன் ஜனங்கள்மீது பலவிதமான அதிக்கிரமங்களைப் புரியத் தொடுக்கவே அவனது சிறியதகப்பனார் புதல்வனான யஜீத் அவன்மீது பல குற்றங்களைக் கற்பித்தான். யஜீத் துறவி யாகவும், தெய்வ பக்தி நிரம்பியவனாகவுமிருந்ததால் ஜனங் கள் அவன் வார்த்தைகளை நம்பினார்கள். எனவே ஒரு கூட் டம் அவனை யாதரித்தது. அவன் அக்கூட்டத்தின் உதவி யால் வலீதைக் கொன்றுவிட்டு, கிலாபத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இதுவே உட்சண்டையின் துவக்கமாம். இதைக்கண்ட பனீஉமையாக்களின் தலைவர்கள் ஷாம் தேசத் தின் பல பகுதிகளிலிருந்தும் சேனைகளுடன் வலீதின் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காக யஜீதை எதிர்த் தார்கள். பல பயங்கரமான யுத்தங்கள் நிகழ்ந்தன. இதற் கிடையில் யஜீத் இறந்துவிட்டான். அவனுக்குப் பதிலாக அவனது சகோதரன் இப்ராஹீம் கலீபா வாயினான். பனீ

உமையாக்களின் மாபெருந்தலைவனும் ஜஸீரா, ஆர்மீனியா இவைகளின் அதிகாரியும், பெரிய சேனையைத் தன் கை வசம் வைத்திருந்தோனுமான மர்வான் பின் முஹம்மத் என்பான் இவனது கிலாபத்தை யாதரிக்காமல் திமஷ்கின்மீது படையெடுத்தான். இப்ராஹீம் அச்சத்தினால் ஓடிவிடவே, மர்வான் தனது கிலாபத்திற்காக பைஅத் வாங்கிக்கொண்டான். இவ்வித உட்சண்டைகளின் காரணமாக பனீ உமையாக்களுள் ஒற்றுமையில்லாது, அவர்களின் வன்மையும் முறிந்துவிட்டது.

## இரண்டாவது காரணம்

குராஸானிலிருந்த அரபிகளுள் மௌட்டிய துவேஷங்கள் குடிகொண்டன. அஸத் பின் அப்துல்லாஹ் குஸ்ரீ அவ்விடத்து அதிகாரியாகவே அவன் வம்ச துவேஷத்தை முன்னிட்டு அங்கு அதிகமாகவிருந்த யமன்வாசிகளை யாதரித்தும், நஜாரீக்களை வெறுத்தும், பகைத்தும், கொடுமையாய் நடத்தியும் வந்தான். அஸதுக்குப்பிறகு 'முலர்' வர்க்கத்து 'பனீகினான' வென்னும் பகுதியைச் சேர்ந்த நஸ்ர் பின் ஸையார் என்பான் நஜாரீக்களை யாதரித்தான். இதனால் அங்குள்ள அரபிகள் இரண்டாய்ப் பிரிந்துவிட்டார்கள். நஜாரீக்களுக்கு நஸ்ர் பின் ஸையார் என்னும் அதிபதியே ஆதரணைக் கர்த்தாவாகவும், யமனீக்களுக்கு (கிர்மானில் ஜனித்ததால்) 'கிர்மானீ' யென வழங்கிவரும் ஜதீஃ பின் ஷைப் என்பான் தலைவனாகவுமிருந்தான். நஸ்ர், கிர்மானீ இவ்விருவர்களுக்கும் துவக்கத்தில் ஆழ்ந்த நட்பிருந்தது. எனினும் இவ்வகுப்புத்துவேஷமே இவர்களுக்குள் பகைமையை ஏற்படுத்திவிட்டது. நஜாரீக்களுள்ளும் இரு பிரிவுகளிருந்தன. ஒன்று ரபீஆ; மற்றொன்று முலர். 'ரபீஆ' வர்க்கத்தவர் பனீஉமையாக்களின் கிலாபத்தை யொப்புக்கொள்ளாது தான் மட்டும் ஒரு தனிப்பிரிவை

ஏற்படுத்திக்கொண்டு குர்ஆனின்படியும், பெருமானாரின் முன்மாதிரியின்படியும் நடக்கும்படி ஜனங்களுக்குப் பிரசாரம் செய்துவந்த ஷைபான் பின் ஸல்மா ஹரூரீ என்னும் காரிஜீயையே அநேகமாய்ச் சார்ந்திருந்தனர். இவ்வம்சத் துவேஷம் நஸ்ர், கிர்மானீ இவர்களுள் சண்டை மூட்டியது. நஸ்ர் தோல்வியுற்று குராஸானின் தலைநகரமாயிருந்த மர்ருதுக்குச் சென்றுவிட்டான். கிர்மானீ முலர் அரபிகளின் இல்லங்களையுந் தோண்டிவிட்டான்.

இதேகாலத்தில் இமாம் முஹம்மத் பின் அலீ ஹமீமாவில் இறந்துவிட்டார்கள். அவர்களுக்குப் பிரதிநிதியாக அவர்களின் புதல்வர் இப்ராஹீம் ஏற்பட்டார்கள். இத்துடன் கூபாவில் நியமிக்கப்பட்டிருந்த புகைர் பின் மாஹானும் இறந்துபோயினன். அவனது ஸ்தானத்தில் அவனது மருமகன் அபூமுஸ்லிம் கிலால் ஹப்ஸ் பின் ஸுலைமான் என்னும் 'பனீஹாரித்' வர்க்கத்தின் சுயேச்சையடைந்த அடிமை நியமிக்கப்பட்டான். இமாம் இப்ராஹீம் இடத்தில் தளரா ஊக்கமும், சாதுர்யமும் நிரம்பப்பெற்ற அபூமுஸ்லிம் குராஸானீ என்னும் வாலிபனொருவனிருந்தான். இவன் முந்திஈஸா பின் மஃகல் உடைய அடிமையாயிருந்தான். புகைர் பின் மாஹான் அவனை வாங்கி, பிரசாரத்திட்டத்தைக் கற்பித்து, ஹி. 125-ல் ஹமீமாவுக்கு இமாம் முஹம்மத் இடம் அனுப்பினன். அவர்கள் காலஞ்சென்றபின் இவன் இமாம் இப்ராஹீம் இடமிருந்து வந்தான். இமாம் இப்ராஹீம் பிரசாரத்தைத் தமது தந்தையாரைவிட அதிகமான கவனத்துடன் நடாத்தி வந்தார்கள், ஒருபுறம் பனீ உமையாக்கள் உட்சண்டையில் மூழ்கியிருப்பதையும், மற்றொருபுறம் கீழ்த்தேசத்தில் அரபிகளுள் வம்சத்துவேஷம் மிகுந்திருப்பதையுங்கண்டு "இதுவே காரியசித்தி யடையும் காலம்" எனக்கொண்டு சாதுர்யம் நிரம்பப்பெற்ற அபூ

முஸ்லிம் என்பானை குராஸானுக்கனுப்பி அங்குள்ள தமது கூட்டத்தாருக்கு "நான் இவனை யுங்களுக் கதிகாரியாக நியமித்துள்ளேன். இவனுக்கு வழிபடுங்கள்!" என்றெழுதி விட்டு அபூமுஸ்லிமை நோக்கி,

"நீர் நமது வீட்டைச் சேர்ந்தவரா யிருக்கிறீர். நமது வார்த்தைகளைக் கவனத்தில் வைத்து அதன் பிரகாரம் ஒழுகல் வேண்டும். அங்குபோய்ச் சேர்ந்து யமன்வாசிகளைக் கண்ணியப்படுத்தி, அவர்களை யும்முடன் சேர்த்துக் கொள்ளவேண்டும்! அவர்களைச் சேர்த்துக்கொள்ளாமல் வெற்றி கிடைக்காது. 'ரபீஆ' வர்க்கத்தவரை யொருபோதும் நம்பவேண்டாம்! 'முலர்' வர்க்கத்தவரை ஜன்ம விரோதியாய்ப் பாவித்தல் வேண்டும்! குராஸானிலுள்ள அரபிபேசும் ஒருவனையும் விடாது ஒவ்வொருவனையும் வேலைதீர்த்துவிட முடியுமாயின் அதில் குறைவு செய்யவேண்டாம்! யார் விஷயத்திலேனும் உமக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிடுமாயின் அவனைக்கொன்று விடுவீராக! உமக்குக் கஷ்டமேற்படும் விஷயத்தில் பிரசாரகர்களின் தலைவர் ஸுலைமான் பின் கதீரிடம் உதவிதேடிக் கொள்ளவேண்டும். அவனை எனக்குப் பிரதிநிதியாகப் பாவித்தல் வேண்டும்! அவனுக்கு மாறுசெய்யவேண்டாம்!"

எனக் கூறினர்கள். யமன்வாசிகள் வம்சத் துவேஷத்தை முன்னிட்டு பனீஉமையாக்களின் கிலாபத்திற்கு விரோதிகளாயிருந்தமையால் அவர்களைச் சேர்த்துக் கொள்ளும்படிக் கூறினர்கள். முலர்வாசிகள் அந்த கிலாபத்திற்கு ஆதரவளிப்போரா யிருந்ததை முன்னிட்டு அவர்களைப் புறக்கணிக்கும்படியும், குராஸான் வாசிகள் மீது அவர்களுக் கிருந்த நம்பிக்கை அரபிகள்மீது அவர்களுக் கில்லாததால் முலர், யமன் இவ்வர்க்கங்களை வேலைதீர்த்துவிடும்படியும் கூறினர்கள்.

அபூமுஸ்லிம் ஹி. 128-ல் அங்குபோய்ச் சேர்ந்தான். அரபிகளின் உட்சண்டையைக் கொள்ளையாகக்கொண்டு

ஒருவருடம்வரை தனதுபுறம் ஜனங்களை யழைத்துக் கொண்டே சென்றான். பிறகு இமாமைச் சந்திப்பதற் காகப் புறப்பட்டான். எனினும், கூஸ் போய்ச் சேர்ந்த போது "'அந்-நஸ்ர்' எனனும் கொடியை யும்மிடம் அனுப்பியுள்ளேன். அதை எடுத்துக்கொண்டு குராஸானுக் குத் திரும்பிச் செல்லும்! எனக்காகக் கொண்டுவந்திருக் கும் சன்மானங்களை கஹ்தபா வசம் கொடுத்து, ஹஜ்ஜுக் காலத்தில் மக்காவில் சந்திக்கும்படி யனுப்பிவையும்!" என்றெழுதப்பட்ட இமாமின் கடிதம் கிடைத்தது. அபூ முஸ்லிம் இந்நிரூபத்தின் பிரகாரம் திரும்பி வந்தான். இதற்குப் பிறகு அவன் பகிரங்கமாகவும், பலத்தைப் பிர யோகித்தும் வேலைசெய்யத் தொடுத்தான்.

## இரண்டாவது காலம்

(ஹி. 129 தொடுத்து, 132 வரை.)

அபூமுஸ்லிம் என்பான் மர்ருதுக்குச் சமீபமாயுள்ள 'ஸபீதஞ்ச்' என்னும் ஊரில் தங்கியிருந்தான். அங்கிருந்துகொண்டு குராஸானிலுள்ள ஒவ்வொருவிடத்திற்கும் தனது பிரசாரகர்களை யனுப்பி, ஹி. 129, ரமலான் மாதத்தில் பெருமானார் (ஸல்.) அவர்களின் சுற்றத்தவரது கிலாபத்திற்காக பைஅத் செய்தவர்களை யொருங்கே திரட்டினான். "லில்", "ஸஹாப்" என்னும் பெயருடையவையும், இமாமால் அவனுக்குக் கிடைத்தவையுமான இரு கொடிகளையுயர்த்தி, அப்பாஸிய்யாக்களின் வழமைபோல் தன் குழாத்தினர் கருப்பு ஆடைகளை அணிந்துகொள்ளும்படி யாக்ஞாபித்து, அவர்களுக்குத் தளவாடங்களையுங் கொடுத்துச் சண்டைக்குத் தயாரித்தான். முதன்முதலாக குராஸானின் அதிகாரியான நஸ்ர் பின் ஸையாருக்குப் பயமுறுத்தல் நிருபமொன்று வரைந்தான். இதைக்கண்ணுற்றதும் அவன் கோபமடைந்து தனது அடிமையான யஜீத் என்பானைக் குதிரைவீரர்களடங்கியதொரு கூட்டத்துடன் இவனைக் கைது செய்வதற்காக வனுப்பினான். அபூமுஸ்லிம் எதிர்ப்பிற்காக மாலிக் பின் ஹதீமுடன் ஒரு சேனையை யனுப்பினான். இருதரப்பாரும் 'ஆலீன்' என்னும் ஊரைச் சேர்ந்தாற்போல் அணிவகுத்தனர். இதில் ஷீஆக்கள் வெற்றியடைவே இவ்வெற்றிக்குப்பின் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக அபூமுஸ்லிம் உடைய கூட்டத்தில் சேரத்தொடுத்தார்கள். ஜனப்

பெருக்கத்தின் காரணமாக அவன் ஸபீதஞ்சை விட்டுவிட்டு 'மாக்வான்' என்னும் நகரத்திற்குச் சென்றுவிடவும் நேர்ந்தது. அந்நகரத்தைச்சுற்றி அகழ்தோண்டிக்கொண்டும், கோட்டையைக் கட்டிக்கொண்டும் பாதுகாப்புடனிருந்தான். ஒவ்வொரு நேரத்திலும் 7,000-பேர்கள் அவனுடனிருந்து வந்தார்கள்.

அபூமுஸ்லிமின் வன்மை பெருகிக்கொண்டே செல்வதைக்கண்ட நஸ்ர் பின் ஸையார் அரபிகளை யொருங்கு சேர்க்கக் கருதி 'ரபீஆ' வர்க்கத்தின் தலைவனான ஷைபான் என்பானுக்கு "நாமும் நீங்களும் ஒருவருக்கொருவர் பகைமை பூண்டிருந்தாலும் இப்புதிய கூட்டம் நம்மிருவருக்கும் விரோதியாக விருக்கின்றது. அதை யெதிர்ப்பதற்காக என்னுடன் நீங்கள் ஒருங்கு சேருங்கள்" என்றெழுதவே ஷைபானுக்கும் நஸ்ருடன் ஒன்றுசேரவேண்டுமென்னும் ஆவல் எழுந்தது. இதற்கிடையில் கிர்மானீயை நஸ்ர் அழைக்க அன்னவன் ஒன்றுபடாது போகவே அவனைக் கொன்றுவிட்டான். கிர்மானீயின் புதல்வனான அலீ தனது பிதாவின் கொலைக்குப் பழிக்குப்பழி வாங்குவதற்காக யமன் வாசிகளுடன் கிளம்பினான். இதையே வழிபார்த்திருந்த அபூமுஸ்லிம் அலீயிடம் "உங்கள்மீது அதிக்கிரமம் புரியப்பட்டிருக்கின்றது. உங்கள் பிதாவின் கொலைக்குப் பழி வாங்க நீங்கள் கருதுகிறீர்கள். எனவே, உங்களாற் கூடுமானவரைக்கும் நஸ்ருடன் ஒன்றுபடாது ஷைபானைத் தடுத்து வையுங்கள்! இன்றேல் உங்களால் பழிவாங்க முடியாது" எனக் கூறி யனுப்பினான். அலீ ஷைபானைச் சந்தித்து, அவனது கருத்தை விட்டுவிடச் செய்தான். இதையறிந்த நஸ்ர் "நீங்கள் மிகவும் ஏமாற்றமடைந்து விட்டீர்கள். தற்போது கிளம்பியிருக்கும் இக் குழப்பம் மிகவும் பலம் பொருந்தியது. இதைக் கவனிக்குங்கால் நான்

உங்களது எதிர்ப்பில் ஒன்றுமே பெருதவனுவேன்" என ஷைபானுக் கெழுதினுன்.

ஷைபானும் தீர்க்காலோசித்து, இக்குழப்பம் அதிகரித்துக்கொண்டே செல்வதைக்கண்டு ஒரு வருஷத்திற்கு நஸ்ருடன் சமரஸ உடன்படிக்கை செய்துகொண்டான். அபூ முஸ்லிம் தகப்பனது கொலைக்குப் பதில் வாங்க அலீயைத் தூண்டினுன். அவன் ஷைபானிடம் உதவி தேடினுன். அவன் ஒப்பந்தம் செய்துகொண்டதால் நஸ்ருக்கு விரோதமாய் உதவிசெய்ய முடியாது போயினன். எனவே, வேறு வழியின்றி அபூமுஸ்லிமிடம் அலீ உதவி தேடினுன். அவன் இதையே வழி பார்த்திருந்ததால் "நான் எனது முழு வன்மையுடனும் உங்களுடன் சேருகிறேன்" எனக் கூறியனுப்பினுன். இதையறிந்த நஸ்ர் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக அபூமுஸ்லிமிடம் ஒரு தூதுக் கோஷ்டியை யனுப்பினுன். ஷைபான் புறத்தினின்றும் ஒரு கூட்டம் சென்றது. யமன் வாசிகளும் வந்து சேர்ந்தார்கள். இம் மூன்று தூதுக்கோஷ்டிகளும் ஒருமிக்க மாக்வானில் பிரவேசித்தன. அபூமுஸ்லிம் யமன்வாசிகளுடனும், ரபீஆக்களுடனும் சமரஸம் செய்து கொண்டான். எனினும் 'முலர்' வர்க்கத்தவரைப்பற்றி "இன்னுர் மர்வானின் அதிபராயும், பெருமானுரின் குடும்பத்தவரைக் கொன்ருேராயும் இருக்கின்றனர். இவர்களுடன் எத்தகைய சம்பந்தமும் வைத்துக் கொள்வதை நான் அனுமதியேன்" எனக் கூறிவிடவே, முலர் வர்க்கத்தவர் மனமுடைந்து அங்கிருந்து திரும்பினர். யமன் வாசிகளும், ரபீஆக்களும் சந்தோஷமாய்த் திரும்பினுர்கள். எனினும், அவர்களின் தலைவிதி அவர்களுக்கு விரோதமாய்த் திரும்பிக்கொண்டிருந்தது.

ஒருங்கு சேரவிருந்த அரபிவர்க்கங்களுள் பகைமையை யுண்டுசெய்து அபூமுஸ்லிம் தனது வெற்றிக்கான பாட்டை

யைச் சீர்படுத்திக்கொண்டான். ஹி. 130, ஜமாதில் அவ்வல் மாதத்தில் அவன் அலீயுக்கு "நீங்கள் நஸ்ர் மீது படையெடுங்கள்! நான் உதவிக்கு வருகிறேன். 'அவன் உங்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு என்னை எதிர்க்க வந்துவிடுவானோ?' வென நான் அஞ்சுகிறேன். எனவே, துவக்கத்தில் அப்பக்கமாய் மர்ருதுக்குள் பிரவேசித்துச் சண்டையைத் துவக்கிவிடுங்கள். பிறகு நான் இப்பக்கமாய் வருகிறேன்" என்றெழுதினான். அலீ இதன் பிரகாரம் ஒழுகினான். அபூமுஸ்லிம் மர்ருதுக்குள் பிரவேசிக்கும் நேரத்தில் நஸ்ர், அலீ இவ்விருவரின் சேனைகளும் உக்கிரமமாய்ச் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. அவன் "நகரவாசிகள் அறியாதிருக்கும்போது நகரத்தில் அவர் பிரவேசித்தார். அங்கு தம்மையாதரிப்போரில் நின்றிருப்போனும், தமது விரோதிகளினின்றிருப்போனுமாக இருவர் சண்டையிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார்" எனப்பொருட்படும் திருக்குர்ஆனின் வசனத்தை யோதினான். பிறகு சண்டையை நிறுத்திவிட்டுத் தான் அரசாங்க மாளிகையைக் கைப்பற்றிக்கொண்டான். நஸ்ர் அங்கிருந்து ஓடிவிட்டான். தற்போது மர்ருத் அபூமுஸ்லிமின் கைவசமாய்விட்டது. அவன் அங்குள்ள ஜனங்களிடம் பைஅத் வாங்கிக்கொண்டு 'முலர்' வர்க்கத்தைச் சேர்ந்தோரில் தன் நேத்திரங்களுக்குப் புலப்பட்டோரையெல்லாம் கொன்றுவிட்டான். பிறகு தன்னிடம் வந்து பைஅத் செய்யும்படி ஷைபானுக்குச் சொல்லியனுப்பினான். அவன் அங்ஙனம் செய்ய மறுத்து மர்ருதை விட்டுவிட்டு 'ஸரக்ஸ்' புறம் சென்றுபட்டான். அபூமுஸ்லிம் அவனைப் பின்றொடர்ந்து ஒரு சேனையை யனுப்பியதில் அஃது அவனையும், அவனது சகாக்களையும் அழித்துவிட்டது.

கிர்மானீயின் இருபுதல்வர்களான அலீ, உத்மான் இவர்களேயும், இதர யமன் தலேவர்களேயும் அபூமுஸ்லிம் கைதுசெய்துக் கொன்றுவிட்டான். தற்போது குராஸான் முழுமையுமே அவனது கைவசம் வந்துவிட்டது. அவன் அங்கு ஒவ்வொரு புறத்திற்கும் தனது அதிபர்களே யனுப்பி, மாகாண அரசியலே யொழுங்குபடுத்தி, அதைத் தன் வயப்படுத்திக் கொண்டான். நஸ்ரைப் பின்ருெடர்ந்து செல்லும்படி கஹ்தபா பின் ஷபீப் தாயீயிடம் ஒரு சேனே யைக் கொடுத்தனுப்பினதில் அச்சேனே ஒவ்வொரு நகர மாய் அவனேத் துரத்திக்கொண்டே சென்றது. நஸ்ர் வழியில் வியாதியடைந்து 'ஸாவா' போய்ச்சேர்ந்து இறந்து விட்டான். 'ரை'யைக் கைப்பற்றிக்கொண்டு, தனது புதல்வன் ஹஸன் என்பானே 'ஹமதான்' புறம் கஹ்தபா அனுப்பினுன். அவன் அங்கிருந்து நுஹாவந்த், ஷஹர்ஜோர், மூஸில் வரைக்குமுள்ள பிரதேசங்களேக் கைப்பற்றிக்கொண்டான். கஹ்தபாவும் அங்கு சென்று, ஹஸனேத் தன்னுடன் கூட்டிக்கொண்டு இராக்கின்புறம் முன்னேறிச் சென்ருன். அங்கு மர்வான் மூலம் நியமிக் கப்பட்ட யஜீத் பின் அம்ரு பின் ஹபீரா தலேவனு யிருந்தான். அவன் கூபாவிலிருந்து 23-மைல்கள் தூரத் தில் 'புராத்' நதியின் மேற்குகரையில் எதிர்த் தான். அநேக தினங்கள்வரை சண்டை நடைபெற்றது. இதே காலத்தில் கஹ்தபா இறந்துவிடவே அவனது புதல் வனுன ஹஸன் சேனுதிபதி யானுன். அவன் இறந்து போகும் நேரத்தில் புத்திரனிடம் "நீர் கூபா போய்ச்சேர்ந் தால் எல்லா விஷயங்களேயும் அங்கிருக்கும் காரியதரிசி அபூஸல்மா கிலால் வசம் ஒப்புவித்துவிட்டு, அவருக்கு வழி பட்டு நடக்கவேண்டும். அவர் பெருமானுரின் சுற்றத்த வருக்கு மந்திரியாவார்" எனக்கூறினுன்.

இப்னு ஹபீரா (யஜீத்) பல யுத்தங்களுக்குப் பிறகு தோல்வியடைந்து 'வாஸித்' புறம் சென்றுவிட்டான். ஹஸன் சேனையுடன் ஹி. 132, முஹர்ரம் மாதம் கூபா வுக்குள் பிரவேசித்துத் தனது பிதாவின் மரணவாக்குப் பிரகாரம் அரசியலை அபூஸல்மாவிடம் ஒப்புவித்து விட்டான். அவன் ஹஸனை இன்னும் மற்ற சேனைத்தலைவர் களுடன் இப்னுஹபீராவைப் பின்றொடர்ந்து செல்லும்படி வாஸித் புறம் அனுப்பினன். தவிர ஹமீத் பின் கஹ்தபாவை 'மதாயின்' புறமும், முஸையப் பின் ஜஹீர், காலித் பின் பர்மக் இவர்களை 'தேர்கனீ' புறமும், முஹல்லபீ, ஷராஹீல் இவர்களை 'ஐனுத்தமர்' புறமும், பஸ்ஸாம் என்பானை 'அஹ்வாஜ்' புறமும் சேனைகளுடனனுப்பி வைத்தான். ஒருபுறம் குராஸானிலும், இராக்கிலும் இச்சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்குங்கால் மற்றொரு புறம் பனீஉமையாக்களின் தலைவர்கள் ஷாம், ஹிஜாஸ் இப்பகுதிகளில் உட்சண்டைகளில் மூழ்கியிருந்தார்கள்.

## உண்மை வெளியாதல்

இந்நீண்ட காலத்தில் ஷீஆக்கள் செய்துவந்த காரியாதிகள் பனீஉமையாக்களின் கலீபாக்களுக்குத் தெரியாதிருந்தது. 'இமாம் யார்?' என்னும் அந்தரங்கம் அக்காரிய தரிசிகளையும், ஷீஆக்களில் குறிப்பிட்டவர்களையுந் தவிர வேறெவருக்குந் தெரியாது. பொதுமக்களிடம் பெருமானரின் குடும்பத்தவரை யாதரிக்கும்படி மட்டும் பைஅத் வாங்கப்பட்டு வந்தது. எவர் பெயரும் குறிப்பிடப்பட வில்லை. இறுதியாக இமாம் இப்ராஹீம் அவர்களால் அபூ முஸ்லிமுக்கு வரையப் பெற்றதும், குராஸானிலுள்ள அரபிகள் யாவரையும் கொன்றுவிடும்படிக் குறிப்பிடப்பட்டிருந்ததுமானதொரு நிரூபம் கலீபா மர்வான் இடம்

கிடைக்கவே அவன் அன்னாரை உடனே 'ஹமீமா'வி லிருந்து கொண்டுவந்து 'ஹுர்ரான்' என்னுமிடத்தில் சிறைவைத்துவிட்டான். அவர்கள் அச்சிறையிலேயே இறந்துபோனார்கள். கைது செய்யப்படும் நேரத்தில் தமது சகோதரன் அபுல்அப்பாஸ் ஸப்பாஹ் என்பானைத் தமக்குப் பிரதிநிதியாக நியமித்துத் தமது கூட்டத்தவருக்கு அன்னவனை வழிபடும்படி ஆக்ஞாபித்திருந்தார்கள். இப்ராஹீம் அவர்கள் கைது செய்யப்பட்டபிறகு அவர்களது குடும்பத்தவர் யாவரையும் அபூஸல்மா கிலால் கூபாவுக்குக் கொணர்ந்து ஒருவிடத்தில் வைத்திருந்தான். அவர்களைப் பற்றிய செய்திகளைத் தனது கூட்டத்தவருக்கும் அவன் வெளியிடாது, தானே கூபாவுக்கு மூன்றுமைல் தூரத்தில் தங்கியிருந்தான்.

ஹஸன் இராக்கைக் கைப்பற்றி, அதன் சம்பந்தமான சகல உரிமைகளையும் இன்னவனிடம் ஒப்புவிக்கவே பனீ அப்பாஸ்(அப்பாஸ் (ரலி.) அவர்களின் சந்ததி)களுக்குப் பதிலாக பனீபாத்திமா(பாத்திமா(ரலி.) அவர்களின்சந்ததி)க்களுக்கு கிலாபத்தைக் கொடுக்கக் கருதினான். அவ்வமயம் அவர்களுள் இமாம் ஜஃபர் ஸாதிக், அப்துல்லாஹ் பின் ஹஸன் பின் ஹஸன், உமர் அஷ்ரப் பின் ஜைனுல்ஆபிதீன் இம்மூவரும் பிரசித்திபெற்றிருந்தார்கள். இவன் முதலாவதாக இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களுக்கு "தாங்கள் இமாமத்தை யொப்புக்கொள்ளுங்கள்!" என்றெழுதினான். நிருபன் இக்கடிதத்தையவர்களிடம் கொடுத்தபோது அவர்கள் "அபூஸல்மா எமது வர்க்கத்தைச் சேர்ந்தவனல்லன். அவனுக்கும், எமக்கும் யாது சம்பந்தமுளது?" எனக் கூறினார்கள். அவன் "கடிதத்தைப் படித்துவிடுங்கள்!" எனவே அவர்கள் தீபத்தைப் பக்கத்திற்கொணர்ந்து, அதன்மீது கடிதத்தை வைத்துக் கொளுத்திவிட்டு "இதுவே அதற்

குப் பதில்'' என்றார்கள். அங்கு தனது கருத்து நிறை வேறாததுகண்ட இவன் அப்துல்லாஹ் அவர்களுக் கெழுதி னான். அவர்கள் இக்கடிதத்தைப் படித்ததும் இமாம் ஜஃப ரிடம் ஆலோசனை கேட்பதற்காகச் சென்றார்கள். அவர்கள் "குராஸான் வாசிகள் எப்பொழுதேனும் உங்கள் வர்க்கத் தைச் சார்ந்திருந்தார்களா? நீங்கள் அபூமுஸ்லிமை அங் கனுப்பியிருந்தீர்களா? நீங்கள் அவர்களில் யாருடைய நாமத்தையேனும், அடையாளத்தையேனும் அறிவீர்களா? இந்த வீணான ஆவலிற் சிக்கிக்கொள்ள வேண்டாம்! முத லாவதாக இச்செய்தி என்னிடமே வந்தது. நான் அதை மறுத்துவிட்டேன்'' எனவும் அவர்களும் ஒருபதிலுமளிக் காது மௌனமா யிருந்துவிட்டார்கள். இறுதியாக அவன் உமர் அஷ்ரப் அவர்களுக்கெழுதியதற்கு அவர்கள் "இந் நிரூபம் வரைந்தோனை யானறியேன். எனவே, அதற்கு எத்தகைய மறுமொழியு மளிக்கமுடியாதவனா யிருக்கி றேன்'' எனக் கூறிவிட்டார்கள். 'பனீஅப்பாஸ்' வர்க் கத்தைச் சார்ந்திருக்கும் தலைவர்களிற் சிலருக்கு அபூஸல் மாவின் இவ்விரகசிய நடவடிக்கை தெரிந்துவிடவே அன்னார் அவசரப்பட்டு ஓடிவந்து அபுல்அப்பாஸ் ஸப்பாஹ் என்பா னுக்கு கிலாபத்தின் முகமன் கூறினார்கள். அபூஸல்மா பிறகு அவனுக்கு வழிபட்டு நடந்தாலும் அவனுள்ளத்தில் இவன்மீது கெட்டபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் ஏற்பட்ட விளைவுகள் பின்னால் தெரியவரும்.

அபுல்அப்பாஸ் ஹி. 132, ரபீஉல் அவ்வல், 13-ந் தேதி கூபாவின் ஜாமிஃ மஸ்ஜிதில் ஜுமுஆத் தொழுகையை நடாத்திவிட்டுப் பிரசங்கத்தைத் துவக்கித் தான் பெருமானா ரின் சுற்றத்தவனா யிருப்பதைப்பற்றிப் பெருமை பாராட் டிப்பேசி, பிறகு பனீஉமையாக்களின் அதிக்கிரமங்களை எடுத்துக் கூறி முடித்துவிட்டு,

"நாங்கள் நன்மையை விழைந்து நிற்பவர்களா யிருக்கிறோம். எங்களால் அதிக்கிரமும், குழப்பமும் நிகழுமென்ற அச்சம் கிடையாது. கூபாவாசிகளே! நீங்கள் எப்பொழுதும் எங்கள் நண்பர்களா யிருந்து வந்தீர்கள். இவ்வழியில் பெரிய பெரிய கஷ்டங்களையும், கொடுமைகளையும் சகித்துக்கொண்டிருந் தீர்கள். உங்களுக்கு எங்கள் காலமும், எங்களது அரசாங்கத் தின் பாக்கியமும் கிட்டியதற்காக அல்லாஹ்வைத் துதிக்கிறேன். நான் உங்கள் சம்பளங்களில் நூறு நூறு திர்ஹம்களை யுயர்த்தி, உங்களது பாக்கியத்திற்காகச் சந்தோஷ மடைகிறேன்" என்றான். அபுல்அப்பாஸுக்கு அன்று ஜுரம் கண்டிருந் ததால் இதைச் சொல்லிவிட்டு உட்கார்ந்து கொண்டான். அவனது சிறிய தந்தையும், வாக்சாதுர்யம் நிரம்பியவனு மான தாவூத் பின் அலீ அவனுக்குப் பக்கத்தில் பிரசங்க மேடை மீது நின்றுகொண்டு ஒரு பிரசங்கம் புரிந்தான். அதன் சுருக்கம் வருமாறு:—

"நாங்கள் பொருளீட்டுதற்கு இந்த கிலாபத்தையடைய முயற்சிக்க வில்லை. உயர்ந்த மாளிகைகளையும், பூங்காவனங்களையும் நிர் மாணிப்பதும், அதில் நதிகளை வகுப்பதும் எங்களது நோக்க மன்று. மேலும், எமது உரிமைகள் ஜீரணமாக்கப்பட்டுப் போனதையும், எமது வர்க்கத்தவர் அவமதிக்கப்படுவதையும், பிரஜைகள் கொடுமையாய் நடாத்தப்படுவதையும், அவர்களின் பொருட்கள் பறிமுதல்செய்யப்படுவதையுங் கண்டு எம்மால் இவைகளைச் சகிக்கக்கூடவில்லை. தற்போது அல்லாஹ், அவனது ரஸூல் (ஸல்.) அவர்கள், அவர்களின் சிறியதந்தையார் அப்பாஸ் (ரலி.) இவர்களை முன்வைத்து 'யாம் திருக்குர்ஆன், பெருமானாரின் முன்மாதிரி இவைகள் பிரகாரம் நடப்போ' மென்பதை உறுதியாய்க் கூறுகிறேன்."

இதற்குப்பிறகு அவன் கூபாவாசிகளை மிகவும் துதித்து விட்டு, அவர்கள் பெருமானாரின் சுற்றத்தவரை யாதரிப் பதற்காக அநேக தியாகங்கள் புரிந்ததற்காகப் பல நம்பிக் கைகளைக்காண்பித்து, இறுதியாக

"பெருமானருக்குப் பிறகு இப்பிரசங்க மேடைமீது அலீ (ரலி.) அவர்களையும், (ஸப்பாஹைச் சுட்டிக்காட்டி) இவரையுந் தவிர்த்து பிறிதெந்த உண்மையான கலீபாவும் உட்காரவில்லை யென்பதை ஞாபகத்தில் வையுங்கள்! இந்த கிலாபத் இனி எப்பொழுதும் எமது கைவசத்திலிருக்குமென்பதை நன்கறிந்து கொள்ளுங்கள். இறுதிகாலத்தில் யாமே இதை ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களிடம் ஒப்புவிப்போம்"

எனக்கூறினன். இச்சொற்பொழிவுக்குப் பிறகு ஸப்பாஹ் எழுந்து, அரசாங்க மாளிகைக்குச் சென்றுவிட்டான். அவனது சகோதரனான அபூஜஃபர் மன்ஸூர் ஜனங்களிடம் அவனது கிலாபத்திற்காக பைஅத் வாங்கினன்.

## பனீஉமையாக்களின் முடிவு

கிலாபத்தின் பைஅத்திற்குப்பிறகு முக்கியமானபிரசினை ஐஸீராவில் 1,20,000-பேர்கள் கொண்டதொரு சேனையுடனிருக்கும் மர்வான் என்னும் கலீபாவை யொழிப்பதாகவே யிருந்தது. ஸப்பாஹ் அவனை எதிர்ப்பதற்காகத் தனது சிறிய தந்தை அப்துல்லாஹ் என்பானின் தலைமையின் கீழ் பெரிய சேனையொன்றை யனுப்பினன். 'திஜ்லா' வின் கிளை நதியான 'ஜாப்' நதிக்கரையில் இரு சேனைகளுக்கும் யுத்தம் மூண்டது. இறுதியாக அப்துல்லாஹ் வெற்றியடைந்தான். ஷாம்வாசிகளில் பொறுக்கியெடுக்கப் பட்டவர்களைக்கொண்ட மர்வானின் சேனை அவனது ஆதீனத்தின் கீழ் வந்துவிட்டது. 'ஹர்ரான்' என்னுமிடத்திற்கு மார்வான் ஓடிவந்துவிட்டான். அங்கு அவனது சகோதரன் குமாரனான அபான் என்பான் அதிகாரியாகவிருந்தான். அப்துல்லாஹ் அவனைப் பிற்றொடர்ந்து அங்கு செல்லவே அபான் இவன் கரத்தில் பைஅத் செய்தான். அப்துல்லாஹ் அவனுக்கு அடைக்கலமளித்துவிட்டான். மர்வான் அங்கிருந்து புறப்பட்டு, 'கன்ஸரீன்' சென்று

விட்டான். அப்துல்லாஹ்வும் அங்கு செல்லவே அவன் அங்கிருந்து ஹிம்மஸுக்கும், ஹிம்மஸிலிருந்து திமஷ்குக்கும் ஓடினுன். அப்துல்லாஹ் திமஷ்க் போய்ச் சேர்ந்து அதை வெற்றிகொண்டு, அதன் தலைவனயிருந்த வலீத் பின் முஆவியாவைக் கொன்றுவிட்டான். அர்தன், பாலஸ்தீன் இவைகளுக்குச் சென்று மிஸ்ருக்குள் பிரவேசித்து, அப்பகுதியிலுள்ள 'போஸீர்' என்னும் கிராமத்தின் கிறிஸ்துவக் கோவிலுக்குள் மர்வான் சரண் புகுந்தான். அப்துல்லாஹ் அவனைப் பின்றொடர்ந்து ஸாலிஹ் பின் அலீ என்பானை ஒரு சேனையுடனனுப்பியதில் அவன் போஸீர் போய்ச்சேர்ந்து ஹி. 132, துல்ஹஜ், 28-ந் தேதி மர்வானைக் கொன்றுவிட்டான். அவனது கொலையுடன் பனீஉமையாக்களின் கிலாபத் முற்றுப்பெற்றது.

'வாஸித்' நகரத்தில் இப்னுஹபீரா விடத்திலும் ஒரு பலம் பொருந்திய சேனை யிருந்தது. ஹஸன் பின் கஹ்தபா அங்கு சேனையைக் கொண்டு செல்லவே அவன் கோட்டைக்குள் பதுங்கிக்கொண்டான். ஹஸன் 11-மாதங்கள் முற்றுகையிட்டிருந்தான். மர்வான் கொல்லப்பட்ட செய்தி கிடைக்கவே இப்னுஹபீரா சமாஸம் செய்து கொள்ள விரும்பினுன். தூதுவர்களின் போக்குவரத்துக்குப் பிறகு அபூஜஃபர் மன்ஸூர் அவனுக்கு அடைக்கலம் கொடுக்கவே அவன் நேரே வந்தான். உடன்படிக்கையும் வரையப்பெற்றது. எனினும், இதற்கிடையே "இப்னுஹபீராவை விட்டுவைப்பது உசிதமன்று" என்றெழுதப்பட்ட அபூமுஸ்லிம் உடைய நிரூபம் கிடைக்கவே அபூஜஃபர் மன்ஸூர் அவனையும், அவனது சகாக்களையும் உடன்படிக்கை வரையப்பெற்று மிகச்சிறியகாலம் செல்வதற்குள்ளாகவே கொன்றுவிட்டான்.

## அப்பாஸிய்யாக்களின் கிலாபத்

இதை ஷீஆக்கள் 'மார்க்க மூலக்கொள்கை' யென நிறுவினர்கள். "கிலாபத் முஹம்மத் (ஸல்.) அவர்களது சுற்றத்தவருக்குப் பாத்தியதை யுடையது. அவர்களே அதை யடையவேண்டும். மர்வானின் சுற்றத்தார் (பனீஉமையாக்கள்) அதைப் பிடுங்கிக்கொண்டனரேயல்லாது அதற்குப் பாத்தியதை யுடையோரல்லர்" எனக்கூறி அவர்கள் பொதுமக்களின் உள்ளங்களை மயக்கிவைத்திருந்தார்கள். இப்பிரசாரகர்கள் பனீஉமையாக்களைப்பற்றி அநேக குறைகளைப் பிரசுரம் செய்தும், அவர்களை இழிவு படுத்துவதற்காக அநேக பொய்யான நாயகத் திருமொழி(ஹதீத்)களைப் பரப்பியும் வந்தார்கள். குராஸான், கூபா இவ்விடத்து மக்கள் பெருமானரின் சுற்றத்தாரை யாதரித்து நிற்கச் செய்து, அதனல் தமது வன்மையைப் பெருக்கிக் கொள்வதன் மூலம் தேவைப்படுங் காலத்தில் பெருமானரின் சுற்றத்தவரது கிலாபத்திற்குப் பக்தியுடன் ஆதரவளிக்கவும், மர்வானின் சுற்றத்தவரை எதிர்க்கவும் உதவுவதற்காகவே நாம் மேலே விவரித்து வந்த காரணங்களால் அவ்விருநகரங்களை கிலாபத்தின் பிரசாரத்திற்காகத் தேர்ந்தெடுத்தார்கள். இதற்கேற்ப குராஸான் வாசிகளின் உள்ளங்களில் "பனீஉமையாக்களுடன் யுத்தந்தொடுப்பதும், அவர்களிடமிருந்து கிலாபத்தைப் பிடுங்கிப் பெருமானரின் சுற்றத்தாருக்குக் கொடுப்பதும் முக்கியமான மார்க்கக் கட்டளையாகும்" என்னும் நம்பிக்கையுண்டாக்கிவைக்கப் பட்டிருந்தது. அங்கிருந்த அரபிகள் இதை நம்பாதவர்களாதலால் அபூமுஸ்லிமுக்கு

"உம்மால் அரபி பேசும் ஒருவனையும் விடாது ஒவ்வொருவனையும் வேலைதீர்த்துவிட முடியுமாயின் அதில் குறைவு செய்ய வேண்டாம்" என இமாம் கூறினார்கள். இஃது துரிதத்தில் பூர்த்தி செய்யப்படும் தமது சுயநலமொன்றையே பிரதானமாகக் கருதப்பட்ட கூற்றாம். இன்றேல் மதம், யுக்தி இவ்விரண்டிற்குமே இஃது மாற்றமானதே.

புராதனகாலந்தொடுத்தே வன்மையான அரசியலையுடைத்தாயிருந்த அரபிகளல்லாதார் பனீஉமையாக்களின் காலத்தில் அரபிகளுக் கடிமைப்பட் டிருந்ததையுன்னி இப்புரட்சியிற் கலந்துகொண்டனர். அரசியலை மாற்றும் இயக்கத்தில் தாமும் கலந்துகொண்டால், அம்மாற்றலில் தமக்கும் பங்குகிடைக்குமென இன்னார் கருதினர். எனவே, இச்சண்டை வெளித்தோற்றத்தில் பனீஉமையாக்கள்-பனீ அப்பாஸ்கள் இவர்களின் சண்டையாகத் தோன்றினாலும் உண்மையில் அரபிகள்-அரபிகளல்லாதாரின் சண்டையாகவேயிருந்தது. இம்முயற்சியில் வீணாக உதிரஞ் சிந்தப்பட்டது. சந்தேகப்படும் நபர்களைக் கொன்றுவிடும்படி அபூமுஸ்லிமுக்கு இமாம் கூறியிருந்த துண்மை. குராஸானில் பெரியதொரு கூட்டம் அவன் கொடிக்குக்கீழ் வந்துவிட்டாலும் தற்காப்பை முன்னிட்டு ஒவ்வொருவன் மீதும் அவனுக்குச் சந்தேகம் ஏற்படுதலியல்பு. எனவே, அவன் அவ்வாக்கினைப்பிரகாரம் சந்தேகப்படும் பேர்வழிகளையெல்லாம் கொன்றுவந்தான். அரபிகள், அரபிகளல்லாதார் இவர்களில் அவனால் கொல்லப்பட்டவர்களின் தொகை 6,00,000-க்கதிகமாகவே கணக்கிடப்பட்டுளது.

அரபிகள் இஸ்லாமுக்கு முன்பிருந்தே வாக்குத்தத்தத்தைப் பூர்த்தி செய்வதில் பிரசித்திபெற்றிருந்தார்கள். இஸ்லாமும் தனிமையாக அதைவற்புறுத்தியது. எனினும்,

அப்பாஸிய்யா கிலாபத்தை நிறுவியவர்கள் இக்குணத்தைத் தமது அரசியல் கைவிட்டுவிட்டார்கள். அவர்களை நம்பி யிருந்தோரிடமும் அவர்கள் அவசியமேற்படுங்காலை சதி செய்வதற்குப் பின்னடையார்கள். எனவே, வாக்குத்தத் தத்தைப் புறக்கணிப்பது அப்பாஸிய்யா கலீபாக்களிடம் தொடர்ப்படியாகக் காணப்பட்டு வந்தது. இதனாலேயே முஹம்மத் பின் அலீ தபாதபாயீ என்பாரும் தமது 'அல்-பக்ரீ' என்னும் நூலில்

> "அப்பாஸிய்யா அரசியலின் போக்கு தந்திரம், சூழ்ச்சி, வாக்குத் தத்தத்தைப் புறக்கணித்தல் இவைகள் மூலமாகவே நடைபெற் றது. அவ்வரசியலில் வன்மையைப் பார்க்கினும் ஏமாற்றல், வாக்குக்கு மாறுசெய்தல் இவைகளே அதிகமாகக் காணப்பட் டன"

என வரைந்துள்ளார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் அரப் தேசத்திற்கு வெளியே நிறுவியதும், ஹஸ்ரத் உமர், உத்மான்(ரலி....) இவ்விருவரும் பெருக்கி, அக்காலத்து அரசாங்கங்களில் வன்மையுடையதாகச் செய்ததும், பிறகு பனீஉமையாக்கள் கீழ்ப்பகுதியிலும், மேற்பகுதியிலும் எல்லையை விஸ்தீரணமாக்கியதுமான அரசாங்கம் தற்போது பனீஅப்பாஸ்கள் கைவசம் வந்துவிட்டது. இவ்விடம் அதன் விவரத்தையும் சுருக்கமாக வரைவது உசிதமெனவே கொள்கிறோம். இஸ்லாமால் ஒப்புவிக்கப்பட்ட அமானத்தையும், இஸ்லாமிய வாரிஸ் பொருளையும் அவர்கள் எங்ஙனம் வைத்திருந்தார்களென்பது நன்கு விளங்குதற்காக இஃது முக்கியமேயாம். இவ்வரசியல் நீளத்தில் ‘காஷ்கர்’ தொடுத்து கருங்கடலின் கரையிலுள்ள ‘ஸ—பிஸெஅக்ஸா’ வரைக்கும் முகத்தஸீ என்பாரின் கூற்றுக்கிணங்க 2,600-மைல்களாம். அகலத்தில் ‘கஜ்வீன்’ கடலிலிருந்து ‘நௌபியா’ வரைக்குமாம். இதில் பெரியபெரிய தேசங்களெல்லாம் சேர்ந்திருந்தன. பல அரசாங்கங்களுமிருந்தன. அவைகளின் விவரம் வருமாறு :—

## (1) ஜஸீரத்துல் அரப்

இதில் நான்கு அரசாங்கங்களிருந்தன :—

(1) ஹிஜாஸ். இதன் தலைநகரம் மக்காவாம். தாயிப், தையிபா, யன்பஃ ஜாஅ, ஜித்தா இவைகள் இதற்குக் கீழ்ப்பட்டிருந்தன.

(2) யமன். இஃது இரண்டாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. கடற்கரைப் பகுதி ‘திஹாமா’ வெனக் கூறப்பட்டு

வந்தது. அதன் தலைநகரம் ஜபீத். மலைப்பிரதேசப்பகுதி 'நஜத்' எனக் கூறப்பட்டு வந்தது. அதன் தலை நகரம் ஸன்ஆ. ஹலரெமௌத், மிஹ்ரா இவைகள் சேர்ந்த அஹ்காபும் இதைச்சேர்ந்ததே.

(3) உம்மான். இதன் தலைநகரம் இந்து மகாசமுத்திரக் கரையிலுள்ள ஸஹார்.

(4) ஹிஜ்ர். இதன் தலைநகரம் ஷஹரெ இஹ்ஸா. 'ஹஜர்' என்னும் பெரிய சந்தையுடைய யமாமாவும் இதைச் சேர்ந்ததேயாம்.

தற்போது உம்மான், ஹிஜ்ர் இவைகளில் கவாரிஜ்களும், யமனில் ஜைதிய்யாக்களும் அதிகமாக விருக்கின்றனர். இதரப் பகுதிகளில் 'அஹ்லெஸுன்னத்' என்னும் பொதுவான முஸ்லிம்களிருக்கிறார்கள்.

## (2) இராக்

இதன் அரசாங்கங்கள் ஆறு :—

(1) கூபா. இதன்கீழ் ஐனுத்தமர், காதிஸிய்யா இவைகளிருந்தன.

(2) பஸரா. அப்லஹ், உப்பாதான் வரை இதற்குக் கீழிருந்தது.

(3) வாஸித். பமுஸ்ஸுல்ஹ் இவ்வரசியலின் பிரசித்திபெற்ற நகரமாம்.

(4) மதாயின். ஸர்ஸானீ தலைநகரம். நஹர்வான், ஜலூலா இதற்குக் கீழ்ப்பட்டவை.

(5) ஹலவான். கானிகைன், ஷர்வான் இதிலுள்ளவை.

(6) ஸாமிரா. இதன் பிரசித்திபெற்ற நகரங்களுள் கர்க், இக்பர், அன்பாரஹீத், திக்ரீக் இவைகளும் சேர்ந்தன.

இராக்கைப் புராதன காலத்தில் 'பாபில் கண்டம்' எனக் கூறிவந்தார்கள். திஜ்லா, புராத் இருநதிகளும் இதி

லிருக்கின்றன. அப்பாஸிய்யாக்கள் இதையே தமது கிலாபத்திற்குத் தலைமையாய்க் கொண்டிருந்தார்கள். இப்பகுதி அக்காலத்தில் கல்விக்குத் தலைமையானதாயும், செல்வத்திற்குப் பீடபூமியாயும், உலக சஞ்சாரிகளுக்குக் காக்ஷியளிக்கும் பிரதேசமாயு மிருந்தது. இதன் பூர்வ குடிகள் நப்தீ அரபிகளாவார்கள். இராக்கின் நீளம் கடற்கரை தொடுத்து 'ஸின்' என்னுமிடம்வரை 135-மைல்கள். அகலம் 'அதீப்' தொடுத்து ஹலவான் வரைக்கும் 80-மைல்கள்.

## (3) ஜஸீரா கண்டம்

புராதன சரித்திரங்களில் இதற்கு 'ஆகூர்', 'ஆதூர்', 'ஆஷூர்' என்னும் நாமங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இஃது திஜ்லா, புராத் இவ்விரு நதிகளுக்குமிடையேயுள்ள பிரதேசமாம். இஃது மூன்று அரசாங்கங்களாய் வகுக்கப்பட்டுளது.

(1) தியாரே ரபீஆ. இதன் பிரசித்திபெற்ற நகரங்களுள் ஹதீதா, ஸஞ்சார், நஸீபைன், தாரா, ராஸுல்ஐன் இவைகளுமுள.

(2) தியாரே முலர். இதன் தலைநகரம் ரிக்கா. இதில் பாஜர்வான், ஹர்ரான், ரிஹா இந்நகரங்களுள.

(3) தியாரே பக்ர் இதன் தலைநகரம் ஆமத். மியாபாரிகைன், ஹிஸ்ன்கைபா இவைகள் இதற்குக் கீழ்ப்பட்டிருந்தன.

இஸ்லாமுக்கு முன்பு ஜஸீராவில் அத்னனீ வர்க்கத்தவர் குடியேறி யிருந்தனர். அவர்களின் நாமங்களே இதன் பாகங்களுக்கிடப்பட்டுள்ளன. இதன் எல்லை ரூம் (ஆசியா மைனர்), ஆர்மீனியா இவைகளுடன் போய்ச்சேருகின்றது.

## (4) ஷாம் கண்டம்.

இதன் அரசாங்கங்கள் ஆறு:—

(1) கன்ஸரீன். இதன் தலைநகரம் ஹலப். இதன் கீழ் அன்தாகிய்யா, பாஸ், ஸமீஸாத், நபீஹ், மர்அஷ், இஸ்கந்தரூனு, மஃரதுன் னுஃமான் இவைகளிருந்தன.

(2) ஹிம்மஸ். இதன் பிரசித்திபெற்ற தலைநகரங்கள் ஸல்மிய்யா, ததம்முர், லாதிகிய்யா, அன்தர்ஸூஸ் இவைகளாம்.

(3) திமஷ்க். இதன்கீழ் பான்பாஸ், ஸைதா, பேரூத் இவைகளிருந்தன.

(4) அர்வான். இதன் தலைநகரம் தப்ரிய்யா. இதன் கீழ் ஸூர், உக்கா, பீஸான், தராபுல்ஸ், அத்ரிஆத் இவைகளிருந்தன.

(5) பலஸ்தீன். இதன் தலைநகரம் ரமலாவாம். பைத்துல் முகத்தஸ், அஸ்கலான், யாபா, அர்ஸூப், கைஸாரிய்யா, அரீஜா இவைகள் இதிலேயே யுள்ளன.

(6) ஷராத். இதன் தலைநகரம் ஸிகர் என்பதாம். மஆப், உம்மான், தபூக், அத்ராஜ் இதைச் சேர்ந்தவையே.

இஸ்லாமுக்கு முன்பு ஷாமில் அரபிகள் போய்க்குடியேறிவிட்டார்கள். பனீஉமையாக்களின் காலத்தில் இது செல்வம், அதிகாரம் இவைகளுக்கிருப்பிடமா யிருந்தது. இவர்களது கிலாபத்தின் தலைநகரம் திமஷ்காயிருந்ததே இதற்குக்காரணம். இதன் வடக்கெல்லைப்புறம் ரூமுடன் போய்ச் சேருகின்றது.

## (5) மிஸ்ர்

இதன் அரசாங்கங்கள் ஆறு:—

(1) ஜபார். இதன் தலை நகரம் பர்மாவாம். இதே பகுதியில் பகாரா, தார்தஹ், அரீஷ் இவைகளிருந்தன.

(2) ஹூப். தலைநகரம் பல்பீஸ் என்பதாம். மஷ்தூல், காகூஸ் இவைகள் இதற்குக் கீழ்ப்பட்டிருந்தன.

(3) ரீப். தலைநகரம் அப்பாஸிய்யாவாம். இதன் பிரசித்திபெற்ற நகரங்களுள் வமன்ஹூர், ஸன்ஹூர், ஸத்னூப், மலீஜ், மஹல்லயெ கபீரா, தக்ஹலா இவைகளுமிருந்தன.

(4) இஸ்கந்தரியா. ரஷீத், மர்பூத், பர்லஸ், தாத்தெஅக்மாம் இதற்குக்கீழிருந்தன.

(5) மக்தூனிய்யா. இதன் தலைநகரம் புஸ்தாத் என்பதாம். அஜீஜிய்யா, ஜீஸர், ஐனுஷ்ஷம்ஸ் இதற்குக் கீழிருந்தன.

(6) ஸஈத். தலைநகரம் அஸ்வான் என்பதாம். கூஸ், அக்மீம், பிலௌனு, அல்பஹூம் இவைகள் இதற்குக் கீழிருந்தன.

மிஸ்ரின் பூர்வகுடிகள் கிப்தீகளாயிருந்தார்கள். தத்தம் அரசாங்கக் காலங்களில் யூனானியர்களும், ரூமியர்களும் குடியேறினார்கள். ஹூபில் சில அரபி வர்க்கத்தவர் குடியேறி யிருந்தனர். இத்தேசத்தை முஸ்லிம்கள் வெற்றி கொண்டபோது அரபிகள் அதிகமாக அங்குவந்து குடியேறி, தோல்வியடைந்த வர்க்கங்களுடன் பாந்தவ்வியத்தை யுண்டு செய்து, அவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார்கள். அப்பாஸிய்யாக்களின் காலத்தில் அங்கிருந்த பொதுமக்கள் முஸ்லிம்களாய் விட்டதுடன் அரபி பேசத் தெரிந்து கொண்டும் விட்டனர்.

## (4) மக்ரிப்

அரசாங்கங்கள் ஏழு :—

(1) புர்கா. இதிலேயே ரிமாதா, தராபுல்ஸ் இவைகள் சேர்ந்திருந்தன.

(2) ஆப்ரிகா. இதன் தலைநகரம் கைர்வான் என்பதாம். அக்காலத்தில் அதன் பிரசித்திபெற்ற நகரங்களுள் ஸகாகிஸ், ஸஃபிஸா, தூனிஸ், பூனு, நதீர், ஜஸீரா, பனீஜக்னுன இவைகளிருந்தன.

(3) தாஹரத். இதன்கீழ் மத்மாதா, தெஹ்ரான் இவைகளிருந்தன.

(4) ஸஜல்மாஸா. இதிலேயே தர்ஆ, அம்ஸலீ, நாஜர்த் இவைகள் சேர்ந்திருந்தன.

(5) பாஸ். முந்தி இதன் தலைநகரம் ஸஃபிஸெஅத்னுவாக விருந்தது. அப்பாஸிய்யாக்களின் காலத்தில் பாஸ் நகரம் நிர்மாணிக்கப்பட்டது. இதே அரசாங்கத்தில் பஸரா, திர்கா, ஸன்ஹாஜா, ஹவாரா, ஸலா இவைகள் சேர்ந்திருந்தன.

(6) ஸஃபிஸெஅக்ஸா. இதன் தலைநகரம் தர்கானுவாம். இதன் பிரசித்திபெற்ற நகரங்களுள் இக்மாத், மாஸா இவைகளுமிருந்தன.

(7) உந்துலுஸ். தலைநகரம் குர்துபாவாம்.

உந்துலுஸ்வாசிகள் ரூமியர்களும், யகூதாக்களும், காட்டுமிராண்டிகளுமா யிருந்தார்கள். இஸ்லாமிய வெற்றிக்குப்பிறகு ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றுண்டுவரை முஸ்லிம்கள் அதிமாகக் குடியேறவில்லை. பிறகே குடியேறத் தொடுத்தார்கள். அப்பாஸிய்யாக்களின் அரசியலின்கீழ் இவ்வரசாங்கம் வரவில்லை.

## (7) மாவராவுன்னஹர்

*அரசாங்கங்கள் ஆறு :—*

இஃந்து ஜைஹூன் நதிக்குக் கீழ்ப்பகுதியி லிருக்கின்றது. " மாவராவுன்னஹர் செழிப்பானதும், பொன் விளையத் தக்கதுமான பிரதேசம். அவ்விடத்து மக்கள் மார்க்க பக்தி மிகுந்தோராயும், கல்விப்பிரியராயும், திடகாத்திரமும்,

வீரமுமிருந்து சண்டைக்குப் பயப்படாதோராயுமிருக்கின்றனர். வேற்றுமையை வெறுத்து, ஒற்றுமையை விழைந்து நிற்போராயும், பரிசுத்த வாழ்க்கை, விருந்தோம்பல் இவைகளில் பிரசித்திபெற்ருேராயு மிருக்கின்றனர்" என பஷ்ஷாரீ என்பார் வரைந்துள்ளார்.

(1) பர்கான இதன்கீழ் நஸ்ராபாத், ஔஜ்கந்த், முர்கீனன் இவைகளிருந்தன.

(2) இஸ்பீஜாப். இதன் பிரசித்திபெற்ற நகரங்களுள் பாராப், தர்ரார், திராஜ், பலாஸாகூன் இவைகளுமுள.

(3) ஷாஸ். இதன் தலைநகரம் நப்கத் என்பதாம்.

(4) ஷருஸன. இதன் தலைநகரம் பஞ்சகத் என்பதாம்.

(5) ஸகத். ஸமர்கந்த் என்னும் பகுதி.

(6) புகாரா. பேகந்த் இதைச் சேர்ந்ததே.

இக்கண்டத்தின் மிகப் பெரியநதி ஜைஹூன் என்பதாம். இதனின்றும் பலகிளைநதிகள் உற்பத்தியாகின்றன. இதைத் தவிர இன்னும் பல நதிகளுமுள. இவைகளின் கரையில் பெரிய பெரிய நகரங்களிருக்கின்றன. அவைகளுள் கதலின் தலைநகரமான ஹல்பக், கவார்ஜமின் தலைநகரமான தீர்காத், ஜூர்ஜான், திர்மத், காலப், நவீதாஜம், பர்பர், ஆமில் இவைகளை முக்கியமாய்க் குறிப்பிடலாம்.

## (8) குராஸான்

அரசாங்கங்கள் ஒன்பது :—

(1) பல்க். லவாயிஜ், தால்கான் என்னும் பிரசித்திபெற்ற நகரங்களையுடைய தகாரிஸ்தான் இதற்குக் கீழிருந்தது.

(2) கஜ்னேன். காபல் இதற்குக் கீழ்ப்பட்டதே.

(3) பஸ்த். சரித்திராசிரியர்களிற் சிலர் இதை கஜ்னீன் உடன் ஒரு அரசாங்கமாகச் சேர்த்து அதற்கு 'காபலிஸ் தான்' எனப் பெயர் கொடுக்கின்றனர்.

(4) ஸஜிஸ்தான். இதுவே ஸீஸ்தான். ஜரிஞ்ச் என்னும் பெயருடையதே இதன் தலை நகரமாம்.

(5) ஹிராத். பாத்கைஸ் இதைச் சேர்ந்ததே.

(6) ஜூஸ்ஜான். இதன் தலைநகரம் யஹூதிய்யா வாம்.

(7) மர்ருதே ஷாஹேஜஹான். மர்ருரூத் இதற்குக் கீழ்ப்பட்டதே.

(8) நைஷாபூர். பைஹக், தூஸ், நஸா, அப்யூரத் இவைகள் இந்தச் சேர்ந்தவையே.

(9) குஹிஸ்தான். இதன் தலைநகரம் காயின் என்பதாம்.

இஸ்லாமிய நாடுகளில் குராஸானே ஜனத்தொகை மிகுந்ததும், செழிப்பானதுமான பிரதேசம். இவ்விடத்து மக்களாலேயே அப்பாஸிய்யா அரசாங்கம் நிறுவப்பெற்றது. இஸ்லாமிய கலாவல்லுனர்கள் அதிகமாக இப்பகுதியிலேயே யுண்டாயினர்.

## (9) தேலம் கண்டம்

அரசாங்கங்கள் ஐந்து :—

(1) கூமிஸ். இதன் தலைநகரம் தாமிகான். ஸம்னூன், புஸ்தாம் இவைகள் இதற்குக் கீழ்ப்பட்டவைகளே.

(2) ஜுர்ஜான். இதன் தலைநகரம் ஷஹரிஸ்தான். அஸ்தராபாத், ஆப்ஸகூன் இதற்குக் கீழ்ப்பட்டவைகளே.

(3) தபரிஸ்தான். ஆமில் நகரமே தலைநகரம். ஸாலூஸ், ஸாரிய்யா இதற்குக் கீழ்ப்பட்டவைகளே.

(4) தேலமான். இதன் தலைநகரம் யர்வான்.

(5) கஜர். இதன் தலை நகரம் 'ஆமில்' என்னும் பெயராலேயே பிரசித்திபெற்றிருந்தது. இதன் குறிப்பிட்ட பகுதிகள் பல்கார், ஸமந்தர் இவைகளாம். 'அதல்' நதி இப்பகுதியிலேயே ஓடுகின்றது.

அப்பாஸிய்யாக்களின் காலத்தில் இக்கண்டத்தில் இஸ்லாம் அதிகமாகப் பரவியது.

## (10) ரிஹாப்

அரசாங்கங்கள் மூன்று :—

(1) அரான். இதன் தலைநகரம் பரூஆ. இதன்கீழ் தப்லீஸ், ஷர்வான், முல்லாஜ்குர்த், பாபுல்அப்வாப் இவைகளுள.

(2) ஆர்மீனிய்யா. இதன் தலைநகரம் தபீல். பதீஸ், கிலாத், கோய், ஸில்மாலா, அர்மிய்யா, முராகா, மரந்த், காலீகலா இவைகள் இதைச் சேர்ந்தவைகளே.

(3) ஆதர்பீஜான். இதன் தலைவன் உர்த்பேல் என்னுமிடத்தி லிருந்துவந்தான். தப்ரேஜ் இதே பிரதேசத்திலிருந்தது.

இக்கண்டத்தின் பூர்வகுடிகள் குர்த், அர்மன், ஈரானீ இவர்களாவார்கள். இதில் குர், ரஸ் என்னும் இருநதிகள் ஓடுகின்றன. இவர்களும் அப்பாஸிய்யாக்களின் காலத்தில் அதிகமாக இஸ்லாமைத் தழுவினார்கள்.

## (11) மலைப்பிரதேசங்கள்

அரசாங்கங்கள் மூன்று :—

(1) ரை. இதன்கீழ் ஆவா, ஸாவா, கஜ்வீன், அப்ஹர் இவைகளிருந்தன.

(2) ஹமதான்.

(3) இஸ்பஹான்.

## (12) கோஜிஸ்தான்

*அரசாங்கங்கள் ஏழு :—*

(1) ஸூஸ். இராக்—கோஹிஸ்தான் எல்லைப்புறத்தி லுள்ளது.

(2) துஸ்தர். (ஷூஸ்தர்)

(3) ஜந்தீஸாபூர்.

(4) அஸ்கரே முகர்ரம்.

(5) அஹ்வாஜ்.

(6) தரூக்.

(7) ராமேஹுர்முஜ்.

## (13) பாரஸீகம்

*அரசாங்கங்கள் ஆறு :—*

(1) அரஜாத்.

(2) கர்ராஉர்த்ஷேர்.

(3) தாராப்ஜார்த்.

(4) ஷீராஜ். இதன்கீழ் பைலா, பிஸா இவைகளுள.

(5) ஸாபூர். இதன் தலைநகரம் ஷஹரிஸ்தான். இதன் கீழ் காஜர்தன், நவீனத்ஜான், தூஜ் இவைகளுள.

(6) இஸ்தகர். ஈரானின் பழைய தலைநகரம்.

இக்கண்டத்தில் பாரஸீகர்களுடன் குர்த்களும் அதிகமாக விருந்தார்கள்.

## (14) கிர்மான்

*அரசாங்கங்கள் ஐந்து :—*

(1) பருஸீர். மாஹான், குர்கான், ஜரிந்த் இதிற் சேர்ந்தவைகளே.

(2) நர்மாஸீர்.

(3) ஸீர்ஜான்.

(4) பம்.

(5) ஜீரப்த். கடற்கரைப் பிரதேசம்.

(15) ஸிந்த்

அரசாங்கங்கள் நான்கு :—

(1) மக்ரான். இதன் தலைநகரம் பஞ்ச்பூர்.

(2) தூரான். கஸ்தாரஸ் இதன் தலைநகரம்.

(3) காஸ் ஸிந்த். இதன் தலைநகரம் மன்ஸூரா. தேபல் இதற்குக் கீழ்ப்பட்டதே.

(4) தீஹந்த்.

இக்கண்டத்தில் மிஹ்ரான் நதியிருக்கின்றது. இஃது மிஸ்ரின் நீல்நதிக்கு எவ்விதத்தாலும் குறைவுபட்டதன்று.

இப்பதினைந்து பிரதேசங்களில் ஆறு தேசங்களின் பாஷை அரபி. நீளத்திலும், அகலத்திலும் பெரிதான இவ்வரசியல் குராஸானிலுள்ள ஷீஆக்களின் உதவியால் பனீ அப்பாஸ்களுக்குக் கிடைத்தது.

## பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்

---

இரண்டாம் பாகத்தில் கிலாபத்தென்பது ஜன நாயகத்துவமென்பதையும், கலீபாவைத் தேர்ந்தெடுத்தல் முஸ்லிம்களின் பொதுவான ஒப்பந்தத்தின்மீது ஆகவேண்டியதென்பதையும், கலீபா பொதுமக்களது நன்மைக்காகவும், அவர்களது முக்கியமான பிரசினைகளை யொழுங்கு படுத்துதற்காகவுமே ஏற்படுத்தப் படுகிறாரென்பதையும் கிலாபத்தின் விவரணத்திற் கூறிவந்துள்ளோம். பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு ஸஹாபாக்கள் எத்தகைய மேற்கோளையுங் காரணமாகக்கொள்ளாமல் தமது அபிப்பிராயப்படியே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களின் கரத்தில் பைஅத்செய்து, அவர்களையே கலீபாவாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு சரக்கைக் கொள்முதல் செய்யும்போது விற்போன், வாங்குவோன் இவ்விருவரும் கைசேர்த்துச் செய்துக்கொள்ளும் ஒப்பந்தமே 'பைஅத்'என்பதாம். இங்கு(கலீபாவைத் தேர்ந்தெடுக்கும்போது)ம் இரு தரப்பாரது ஒப்பந்தமே காணக்கிடைக்கின்றது. கலீபா பிரஜைகளை குர்ஆன், பெருமானாரின் முன்மாதிரி இவைகள் பிரகாரம் நடாத்துவதாகவும், பிரஜைகள் இறைவனது சம்மதியைப் பெறுதற்கான விஷயங்களில் கலீபாவைப் பின்றொடர்ந்து நடப்பதாகவும் செய்துகொள்ளும் ஒப்பந்தம் இங்கு காணக்கிடைக்கின்றதன்றோ? இந்த பைஅத்தே கலீபாவின் வன்மைக்கு அஸ்திவாரமாயிருக்கின்றது. இதற்குப் பிறகு பிரஜைகள் கலீபாவுக்கு வழிபட்டு நடப்பது மார்க்கக்கட்டளையாய்ப் போகின்றது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) கலீபாவைத் தேர்ந்தெடுப்பதற்கு வேறொரு வழியைப் பின்பற்றினார்கள். ஆலோசனையாளர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க அவர்கள் தமக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட மனிதரை கலீபாவாகத் தேர்ந்தெடுப்பதாய் பைஅத் செய்யும்படி தமக்குப் பிரதிநிதியொருவரை நியமித்தார்கள். இதையே "பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்" எனக்குறிப்பிடுவர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) இங்ஙனம் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் பொதுமக்களின் அபிப்பிராயத்தையும், பொதுமக்களின் நன்மைகளையுமே முக்கியமாகக்கொண்டு தமது வர்க்கத்தைச் சேர்ந்திராதோரும், தமது சுற்றத்தவரா யிராதோருமான ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களைத் தமக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். கிலாபத்தெராஷிதாவுக்குப் பிறகு அமீர் முஆவியா (ரலி.) அவர்களும் இதேவழியைப் பின்பற்றினார்கள். எனினும், இன்னார் தமது சொந்தப் புதல்வர் யஜீதைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துத் தமக்குச் சாதகமானோரிடம் பெயரளவில் பைஅத் வாங்கிக்கொண்டு, பாதகமானோரிடமும் பைஅத் வாங்கிக்கொண்டனர். இன்னாருக்குப் பின்பு பனீஉமையாக்கள் இதே முறையைத் தொடர்ப்படியாகக் கையாண்டுவந்ததுடன், பொதுமக்களது அபிப்பிராயத்தையும் விட்டுவிட்டுத் தமது சொந்த அபிப்பிராயத்தின் பிரகாரமே தம்மைச் சார்ந்தோரைப் பொதுவாகவும், தமது புதல்வர்களை அதிகமாகவும் நியமித்து வந்ததல்லாமல், ஒருவருக்குப்பதிலாய் இருவரைப் பிரதிநிதிகளாய் நியமித்தும் வந்தார்கள். இறுதியான முறை குழப்பத்தைப் பின்னும் அதிகமாக்கியதுடன் இறுதியாக அவர்களின் முடிவுக்கே காரணமுமாயது. பனீஅப்பாஸ்களும் அவர்களின் சரிதையால் பயன்பெறுமல் அதே முறைமையில் பிரதிநிதிகளை நியமித்து வந்ததுடன், இருவர் மூவரை

யும் பிரதிநிதிகளாய் நியமித்தார்கள். இச்சீர்கெட்ட முறையால் பனீஉமையாக்கள்மீது வந்த கஷ்டங்களைத் தாமும் அடைந்தார்கள்.

பனீஅப்பாஸ்களின் முதல்கலீபாவான ஸப்பாஹ் தனது சகோதரன் அபூஜஃபர் மன்ஸூர் என்பானையும், அவனுக்குப் பிறகு தனது சகோதரன் புதல்வன் ஈஸா பின்மூஸாவையும் பிரதிநிதிகளாய் நியமித்தனன். மன்ஸூர் கிலாபத்தின் பீடத்தமர்ந்த பின்பு தனது புதல்வன் மஹ்தீ வாலிபனானதும் தனக்குப் பிறகு ஈஸா கலீபாவாய், தனது புதல்வன் சாதாரண மனிதனாயிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே, 'தனது புதல்வனுக்குப் பிறகே ஈஸா கலீபாகவேண்டு'மென அவன் விரும்பினான். இதற்கு ஈஸா இசையாததுபோகவே அவனைப் பலவழிகளில் இம்சித்ததுடன், விஷத்தையும் கொடுத்தான். எனினும், அவனது கடுமையான ஆவி அதிலும் அவனைவிட்டுப் பிரியவில்லை. எனினும், இதனால் மஹ்தீயுக்குப்பிறகு கிலாபத்தை ஏற்றுக்கொள்ள இசையும்படி நேரிட்டது. இந்த ஈஸாவே மன்ஸூரின்காலத்தில் பெரிய பெரிய காரியாதிகளைப் பூர்த்தி செய்தானென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதே. மஹ்தீ கலீபாவாயினதும் தனது தகப்பனின் முறைகளைப் பின்பற்றித் தனது புதல்வர்களான ஹாதீ, ஹாரூன் இவ்விருவரையும் தனக்குப் பிரதிநிதியாய் நியமிக்கும் விஷயத்தில் ஒன்றுபடும்படியும், கிலாபத்தின் எண்ணத்தையே விட்டுவிடும்படியும் ஈஸாவை வற்புறுத்தினான். பல கொடுமைகளை ஏற்றுக்கொண்ட பிறகு "கிலாபத் எனக்கு வேண்டியதில்லை" யென ஈஸா எழுதிக்கொடுத்துவிட்டான். தற்போது மஹ்தீயும் அதே குறையைச் செய்து தனக்குப் பின் தனது புதல்வர்களான ஹாதீ, ஹாரூன் இருவரையும்

ஒருவருக்குப்பின் மற்ெருருவராய்த் தனக்குப் பிரதிநிதி களாய் நியமித்தான்.

ஹாதீ கலீபாவாயினதும் ஹாரூனைப் பிரதிநிதி ஸ்தா னத்திலிருந்து நீக்கிவிட்டு, தனது யௌவன குமாரனைப் பிரதிநிதியாக்கக் கருதினுன். எனினும், ஹாரூனின் ஆதர வுக்குப் பக்கபலம் அதிகமாக விருந்ததால் அவன் இம் முயற்சியில் வெற்றிபெறவில்லை. இதே சண்டையில் அவ னுக்கு மரணமும் வந்துற்றது. சிலர் அவன் விஷத்தா லிறந்ததாய்க் குறிக்கின்றனர். ஹாரூன் கலீபாவானதும் முதலாவதாக மாமூன் என்பானை கலீபாவாக்கக் கருதினுன். அவன் அடிமைப் பெண்ணுக்குப் பிறந்தவனுயிருந்ததால் ஜுபைதாவின் தூண்டுதலுக்குட்பட்டு ஹி. 173-ல் அமீன் என்பானைப் பிரதிநிதியாக நியமித்தான். அவனது வயது அப்போது மூன்றுக்கு மேலிருக்கவில்லை. பத்தாண்டு களுக்குப் பிறகு மாமூனுக்குப் போஷகனுயிருந்த ஜஃபர் பின் யஹ்யா பர்மகீயின் முயற்சியால் மாமூனையும் பிரதி நிதியாக நியமித்தான். பிறகு அப்துல்மலிக் பின் ஸாலிஹ் உடைய ஆலோசனைப் பிரகாரம் தனது மூன்ருவது புதல் வனுன காஸிம் என்பானையும் பிரதிநிதியாக நியமித்து, அவனுக்கு மூத்தமின் என்னும் சிறப்புப் பெயரை யளித் தான். இதற்குப் பிறகு இஸ்லாமிய நாடுகள் யாவையும் இம்மூவருக்கும் பங்கிட்டு, கிழக்குப்பகுதியான குராஸான் முதலியவைகளை மாமூனுக்கும், மேற்குப்பகுதியான மிஸ்ர், ஷாம் இவைகளை அமீனுக்கும், ஜஸீராவை மூத்தமினுக்கும் கொடுத்துவிட்டு, அந்தந்தப்பகுதிக்கு அவ்வவனைத் தலைவ னுக்கிவிட்டான். இவ்விதமாக அன்னவன் தனது சந்ததி களுள் பிளவென்னும் விதையைத் தனது கரத்தாலேயே நட்டுவிட்டனன்.

இதற்குப் பிறகு ஹஜ்ஜுக்குச் சென்றபோது ஹரமில் அமீன், மாமூன் இருவருக்குமிடையே ஒப்பந்தப்பத்திர மென்றெழுதி, ஹரம்வாசிகளின் முன்னிலையில் இரு சகோதரர்களும் பிரசன்னமா யிருக்கும்போது அதை வாசித்துக் காண்பித்தான். அறிஞர்களும், மார்க்க நிபுணர்களும், மற்றும் அங்கிருந்த யாவரும், அல்லாஹ்வும், தேவர்களும் அதற்குச்சாக்ஷிகளாய்க் கொள்ளப்பட்டார்கள். அவ்விருவரும் அவ்வொப்பந்தத்தைத் தகர்க்கக்கூடாதெனவும், ஒருவனுடனொருவன் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாதெனவும் அதில் கண்டிக்கப்பட்டிருந்தது. எனினும், ஹாரூன் காலஞ்சென்று அமீன் அரசியலை ஏற்றுக்கொண்டதும் தனது முன்னோர்கள் கொண்டிருந்த ஆவலையே அவனும் மேற்கொண்டு, மாமூனைப் பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டுத் தனது புதல்வனைப் பிரதிநிதியாக்க விரும்பினான். மாமூன் குராஸானின் அதிபனாகவிருந்தான். அவனுக்குச் சேனையின் பக்க பலமு மிருந்ததாதலால் அவன் இதை மறுத்து விட்டான். அமீன் படையையனுப்பினான். இறுதியாக இஸ்லாமிய நாடுகளில் பெரிய புரட்சியை யுண்டாக்கத்தக்க இரத்தக்களம் ஏற்பட்டது. பக்தாத் நகரமே முற்றுகையிடப்பட்டது. இறுதியாக அமீன் கொல்லப்படவே மாமூன் கலீபாவாயினான். மாமூன் தனது சகோதரன் முஃதஸிம் என்பானை மட்டும் தனக்குப் பிரதிநிதியாக்கினான். இங்ஙனமே முஃதஸிமும் தனது குமாரன் வாதிக்கை மட்டுமே பிரதிநிதியாக்கினான். வாதிக் எவனையும் பிரதிநிதியாக்காமலேயே காலஞ்சென்று விட்டான். இவன் இறந்தபிறகு அரசாங்க அங்கத்தினர்கள் முத்தவக்கில் என்பானைத் தேர்ந்தெடுத்தார்கள். முத்தவக்கில் மீண்டும் ஹாரூன் செய்திருந்த குற்றத்தையே செய்து, தனது மூன்று புதல்வர்களான முன்தஸர், முஃதஜ்,

முஜயத் இவர்களை ஒருவருக்குப்பின் மற்றொருவராகப் பிரதிநிதிகளாய் நியமித்து, ஒவ்வொருவருக்கும் உறுதிமொழியின் கொடியான கருப்புக்கொடி யொன்றும், அதிகாரக் கொடியன வெள்ளைக்கொடி யொன்றுமாக இருகொடிகளைக் கொடுத்து, இஸ்லாமிய நாடுகளில் ஆப்பிரிகா, மக்ரிப், ஷாம், ஜஸீரா, ஹிஜாஸ், இராக், யமன், அஹ்வாஜ், மக்ரான், ஸிந்து இவைகளை முன்தஸருக்கும்,குராஸான், தப்ரிஸ்தான், ஆர்மீனிய்யா, ஆதர்பீஜான், பாரஸீகம் இவைகளை முஃதஜ்ஜுக்கும், ஜுந்தெஹிம்மஸ், ஜுந்தெ திமஷ்க், ஜுந்தெ பலஸ்தீன் இவைகளை முஜயதுக்குமாகப் பங்கிட்டுவிட்டான். பனீஅப்பாஸ்களிடம் சத்தியம் கிடையாதென்பதையறிந்து கொண்டபின்னும், ஹாரூனின் சந்ததிகளது முடிவைக் கண்டபின்னும் மூத்தவக்கில் தனது செய்கைகளில் கொஞ்சமும் தூரதிருஷ்டியைச் செலுத்தினனல்லன்.

இறுதியாக சிலகாரணங்களைக்கொண்டு தனது மூத்த புதல்வன் முன்தஸரைப் பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிடக் கருதினான். எனினும், அவன் தனிப்பட்ட தலைவனாயிருந்ததாலும், அவனிடம் துர்க்கியர்களின் ஒருகூட்டமிருந்துவந்ததாலும் அவன் மூத்தவக்கிலைக் கொன்றுவிட்டுத் தான் கலீபாவாய் விட்டான். 40-தினங்களுக்குப் பிறகு தனதிரு சகோதரர்களையுமழைத்துப் பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீங்கிவிட்டதான கட்டளையைத் தெரிவித்தனன். முஜயத் ஒப்புக்கொண்டான். முஃதஜ் மறுத்தானெனினும், இறுதியாக வேறுவழியின்றி ஒப்புக்கொள்ளும்படியே நேர்ந்தது. இதெல்லாம் தன் சுயநலமொன்றையே மேற்கொண்டதாயிருந்தது. இன்றேல் தனக்குப் பிரதிநிதியாக நியமித்துச் செல்லத்தக்க புதல்வன் அவனுக்கில்லை. எனவே, அவன் பிரதிநிதியை நியமிக்காமலேயே காலஞ்சென்றான். அவன் இறந்தபிறகு அரசாங்க அங்கத்தினர்

கள் முஸ்தான் பின் முஹம்மத் பின் முஃதஸிம் என்பானைக் கொணர்ந்து சிம்மாசனமேற்றினார்கள். இவனை அவர்கள் முத்தவக்கிலுக்குப் பயந்து மறைத்து வைத்திருந்தார்கள். இக்காலத்திலிருந்து கிலாபத் துர்க்கிய அடிமைகளின் கைவசம் வந்துவிட்டது. அவர்களே தமதிஷ்டப்பிரகாரம் கலீபாக்களை நியமிப்பதும், நீக்குவதுமான காரியங்களைச் செய்துவந்தார்கள். அப்பாஸிய்யாக்களில் பதினைந்தாம் கலீபாவான முஃதமித் என்பான் தனது சகோதரனின் புதல்வன் முஃதலித் என்பானைத் தனக்குப் பிரதிநிதியாக நியமித்தான். இவன் தனது புதல்வன் முக்தபீயை நியமித்தான். இதற்குப்பிறகு கலீபாவை நியமிப்பதும், நீக்குவதும் துர்க்கியர்களின் கைவசமே வந்துவிட்டது.

பனீபவிய்யாக்களின் காலத்தில் சகல உரிமைகளும் அவர்களின் கைவசமே யிருந்தது. கலீபாக்கள் பெயருக்காக நியமிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் நியமிக்கப்பட்ட கலீபாக்கள் யாவரும் நீக்கப்பட்டே வந்தார்கள். காதிர் என்பான் மட்டும் கொஞ்சகாலம் நீடித்திருந்து, தனது புதல்வன் காயிம் என்பானைப் பிரதிநிதியாக நியமித்துச் சென்றான். இதற்குப் பிறகு தந்தைக்குப் பின் தனயனுக்கு கிலாபத் கிடைத்துவந்தது. ஹி. 656-ம் ஆண்டில் சங்கீஸ் கான் என்பானின் பௌத்திரனான ஹலாகூ பக்தாதைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்த கடைசி அப்பாஸீ கலீபாவான முஸ்தஃஸிம் என்பானைக் கொன்றுவிட்டான். சுருங்கக் கூறுமிடத்து, அப்பாஸிய்யாக்களின் காலத்தில் சகல விதமான கலைகளும் பரவியிருந்தும் கிலாபத்திற்காக எத்தகைய சரியான ஒழுங்குமுறையு மிருக்கவில்லை. இதன் விளைவு தமக்குத்தாமே அழிவு தேடிக்கொண்டதேயாம்.

## 1. ஸப்பாஹ்

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) அவர்களின் புதல்வர் அலீ; அன்னார் புதல்வர் முஹம்மத்; அன்னார் புதல்வனே இந்த அபுல் அப்பாஸ் அப்துல்லாஹ் ஸப்பாஹ் என்பானவன். இவனது அன்னை 'பனீ ஹாரித்' வர்க்கத்துதித்த ரீதா வென்னும் பெண்மணி யாவார். இவன் ஹி. 104-ல் ஹமீமா வென்னுமிடத்தில் ஜனித்தான். அவ்வமயம் இவனது வம்சம் அங்கிருந்து வந்தது. முஹம்மத் பின் அலீ என்பார் தமது புதல்வர் இப்ராஹீம் என்பாரைத் தமக்குத் பிரதிநிதியாய் நியமித்துச் சென்றனர். இப்ராஹீம் கைதியாக்கப்பெற்றுத் தாம் தப்புவது அசாத்தியமென்றறிந்து கொண்டதும் ஸப்பாஹை இமாமாக நியமித்துச் சென்றனர். இவன் தனது வர்க்கத்தவர் சமேதராக "பெருமானாரின் சுற்றத்தவர்களது மந்திரி" என்றழைக்கப்படும் அபூஸல்மாவுடன் கூபாவுக்கு வந்துவிட்டனன். கி. பி. 749, அக்டோபர் 30-க்குச் சரியான ஹி. 132, ரபீஉல்அவ்வல், 13-ந் தேதி கூபாவில் இவனது கரத்தில் பைஅத் செய்யப்பட்டது. எனினும், அதுவரையில் பனீஉமையாக்களின் இறுதி கலீபாவான மர்வான் உயிருடனிருந்தான். அவன் கி. பி. 750, ஆகஸ்ட், 15-க்குச் சரியான ஹி. 132, துல்ஹஜ், 28-ந்தேதி மிஸ்ரில் கொல்லப்படவே இவனது தனிமையான கிலாபத் துவங்கியது. கூபா அலீ (ரலி.) அவர்களைச் சார்ந்தோரின் தலைநகரமா யிருந்ததால் பனீஅப்பாஸ்கள் அதைத் தமது தலைநகரமாய்க் கொள்வது உசிதமெனக் கொள்ளவில்லை. எனவே அவர்கள் ஹீராவுக்கும், பிறகு அங்கிருந்து அம்பாருக்குமாக மாறினார்கள்.

## உள் நிலைமை

மர்வான் கொல்லப்பட்டபிறகு பனீஅப்பாஸ்களின் இன்னல்கள் முடிவடைந்து போகவில்லை. பனீஉமையாக் களை யாதரித்துவந்த அநேக தலைவர்கள் சதிசெய்தார்கள். ஸப்பாஹ் உடைய கிலாபத்தின் காலம் இப்புரட்சியை யொடுக்குவதிலேயே பெரும்பாலும் கழிந்தது. பரந்த எண்ணமும், நன்னோக்கமுங்கொண்ட பெரியார்கள் தமது கரங்களில் பழிவாங்கும் சக்தி ஏற்பட்டபோது க்ஷமித்தல், அன்புடன் நடாத்தல் இவைகளால் தமது எதிரிகளின் உள் ளங்களைக் கவர்ந்து நிற்பார்கள். ஹஸ்ரத் யூஸுப் (அலை.) தமது சகோதரர்களின் குற்றங்களை க்ஷமித்து, அன்னாரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்கள். இங்ஙனமே எம் பெருமானார் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்கள் மக்கா உடைய வெற்றியின் போதுஇஸ்லாமை விரோதிப்பதிலும், பெருமானாரையும், முஸ்லிம்களையும் இம்சிப்பதிலும் கிஞ்சிற்றும் குறைசெய்திராத குரைஷ்களுக் குப் பொதுவான மன்னிப்பளித்து, அவர்களில் தனிப்பட்ட குற்றவாளிகளைத் தவிர்த்து வேறெவரிடத்தும் எத்தகைய பழியும் வாங்கவில்லை. எனினும், பனீஅப்பாஸ்கள் தமது வர்க்கத்தைச் சேர்ந்திருந்த தமது சகோதரர்களான பனீ உமையாக்களை வெற்றிகொண்டதும் அவர்களை யழிப்பதி லும், ஒடுக்குவதிலும் காட்டிய கொடுமைக்குவமை இஸ் லாமிய சரித்திரத்திலேயே கிடையாது.

ஸப்பாஹின் சிறிய தந்தையான தாவூத் பின் அலீ என்பான் மக்கா, மதீனா இவைகளிலிருந்த பனீஉமையாக் கள் யாவரையும் கொன்றுவிட்டான். அவனது சகோதர னான ஸுலைமான் பின் அலீ என்பான் பஸராவில் இங் ஙனமே செய்தான். இவன் தான் கொன்ற சவங்களை யெல்லாம் காலைப்பிடித்திழுத்துத் தெருக்களிற் போட்டு

விடுவான். அப்துல்லாஹ் பின் அலீ என்பான் ஷாமில் பனீ உமையாக்களைச்சேர்ந்த ஒவ்வொருவரையும் தேடிப்பிடித்துக் கொன்றான். பால்குடிக்கும் சிசுக்களையும், ஓடிப்பிழைத்துப் போனவர்களையுந்தவிர வேறெவரும் தப்ப வழியில்லை. இம் மட்டன்று. அவன் ஆவேசத்தால் அமீர் முஆவியா (ரலி.), யஜீத்,அப்துல்மலிக் முதலியோரின் கல்லறைகளைத்தோண்டி, அதிலிருந்த எலும்புகளை எடுத்தும் வீசி யெறிந்தான். ஹிஷாம் பின் அப்துல் மலிக் உடைய சவம் பழுதடையாம லிருந்தது; மூக்குமட்டும் அழுகிப்போயிருந்தது. அதைச் சாட்டையாலடித்துத் தூக்குமரத்திலேற்றினான். பிறகு தீயிலெரித்துச் சாம்பலைக் காற்றிலூதினான். இராக்கில் ஸப்பாஹும் இங்ஙனமே செய்தான். ஒரு தடவை அவன் தன தாசனத்தி லமர்ந்திருந்தான். ஒரு பக்கம் நாற்காலிகளில் பனீ ஹாஷிம்களும், மறுபுறம் கழுதைகள் மீது பனீஉமை யாக்களு மிருந்தார்கள். இதற்கிடையே ஒரு கவிஞன் பனீ உமையாக்களின் அநீதிகளைக் குறித்து ஒரு கவி கூறினான். ஸப்பாஹின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. அவன் பனீஉமையாக்களை முன்னோக்கி "ஓ நிர்ப்பாக்கியர்களா! உங்களாற் கொல்லப்பட்ட எமக்குச் சாதக மானவர்கள் அழிந்துவிட்டார்கள். நீங்கள் இதுவரை இவ்வுலகத்தில் சுகமனுபவிக்க உயிருடனிருக்கிறீர்களா?" வெனக் கூறி விட்டு அவர்கள்மீது பாயும்படி குராஸான்வாசிகளுக்குக் கட்டளையிட்டான். பிறகு யாவரையும் கொன்று விட்டான். ஹஸ்ரத் உமர் பின் அப்துல்அஜீஜ் (ரஹ்.) அவர்களின் திருப்புதல்வரான அப்துல்அஜீஜ் என்பார் மட்டும் தாவூத் பின் அலீயின் வேண்டுகோளினால் தப்பினர்.

அப்துர்ரஹ்மான் பின் முஆவியா பின் ஹிஷாம் பின் அப்துல்மலிக் என்னும் பெயருடைய பனீஉமையாக்களி லொருவன் இதைவிட்டும் எங்ஙனமோ தப்பி, ஆப்பிரிக்கா

வுக்குச் சென்றுவிட்டான். அங்கிருந்து உந்துலுஸுக்குச் சென்று அப்பகுதியில் தனது அரசியலை நிறுவிக் கொண்டான். இவ்வரசியல் மிகச்சிறிய விடத்திலிருந்தாலும் சின்னாட்களுள் அப்பாஸிய்யாக்களின் கிலாபத்திற்கு நிகரானதாய்விட்டது. பனீ அப்பாஸ்கள் இக் கொடுமையை பனீஉமையாக்கள்மீது மட்டல்லாது தமது வர்க்கத்தவர் மீதும் புரியத்தொடுத்தார்கள். ‘பெருமானாரின் சுற்றத்தவரது மந்திரி’ என்னும் சிறப்புப் பெயர் படைத்த அபூஸல்மா கிலால் என்பான் இந்த கிலாபத்தை நிறுவுதற்கு மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டான். அவன் இதை அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகளுக்குக் கொடுத்துவிடக் கருதியதன் பேரில் ஸப்பாஹ் அவன்மீது கோபங்கொண்டான். எனவே அவனைக் கொன்றுவிடக் கருதினான். இவ்விஷயத்தில் அபூமுஸ்லிமைக் கலந்து கொள்வதும் அவசியமானதா யிருந்ததால் அதற்காகத் தனது சகோதரன் மன்ஸூரை குராஸானுக் கனுப்பினான். “நீங்கள் ஒன்றுமே செய்யவேண்டாம். இதற்குத் தகுந்த நடவடிக்கை நான் எடுத்துக்கொள்கிறேன்” என அபூமுஸ்லிம் சொல்லியனுப்பிவிட்டு, குராஸான்வாசி யொருவனைக் கூபாவுக்கனுப்பி, அபூஸல்மாவைப் பார்த்தவிடத்திற் கொன்றுவிடும்படிக் கட்டளையிட் டனுப்பினான். இவன் மறைந்திருந்தான். ஸப்பாஹின் சன்னதியிலிருந்து அபூஸல்மா வெளியே புறப்பட்டுப் பகிரங்கமான பாட்டையிற் செல்லும்போது அவனைக் கொன்றுவிட்டான். சிலபேர் அங்கு கூடிக்கொண்டு, ஒரு காரிஜீ அவனைக் கொன்றுவிட்டதாய்க் கூச்சல் போட்டுவிட்டார்கள்.

அதே காலத்தில் பிரசாரகர்களின் தலைவனான ஸுலைமான் பின் கதீர் குஜாஈ என்பான்மீதும் அபூமுஸ்லிம் இவ்விதப் பழியையே சுமத்தி “இவன் அப்பாஸ் (ரலி.)

அவர்களின் சந்ததிகளைப் பார்க்கினும் அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகளையே அதிகமாக விரும்புகிறான்" எனக் கூறினான். இவனது முயற்சி அந்த கிலாபத்தை நிறுவுவதில் அபூஸல்மாவின் முயற்சிக்கு எவ்விதத்தாலும் குறைபட்டதல்ல வென்பதையும், இமாம் இப்ராஹீம் குராஸானுக்கு அபூமுஸ்லிமைத் தலைவனாக்கி யனுப்பும் நேரத்தில் "சிக்கலான பிரசினைகளில் நீங்கள் இதே தலைவனிடம் யோசனை கலந்துகொள்ள வேண்டும். எனக்குப் பிரதிநிதியாக இவனைக் கருதவேண்டும்" எனக் கூறியனுப்பினரென்பதையும் ஈண்டு குறிப்பிடல் மிகையாகாது. அபூமுஸ்லிம் அவனைக்கூப்பிட்டு "எனக்குச் சந்தேகமேற்படும் பேர்வழிகளைக் கொன்றுவிடும்படி இமாம் எனக்குக் கட்டளையிட்டிருப்பது உமக்குத் தெரியுமா?" வெனக் கேட்டதற்கு அவன் "ஆம்! தெரியும்" என்றான். அபூமுஸ்லிம் "நீர் இமாமின்மீது உண்மை யன்பு பூண்டில்லை யெனச் சந்தேகிக்கிறேன்" எனவும் அவன் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தான். எனினும் அபூமுஸ்லிமின் செவிகளில் அவனது பிரமாணம் ஏறவில்லை; அவனைக் கொன்றே விட்டான். சுருங்கக் கூறுமிடத்து ஸப்பாஹின் காலம் பனீஉமையாக்களை யழிப்பதிலும், மற்றும் காணப்பெற்ற பொந்துக்களை மூடுவதிலுமே கழிந்தது. கிஞ்சிற்றேனும் சந்தேகத்திற்கிடமானவர்கள் எல்லாம் கொல்லப்பட்டார்கள். இங்ஙனம் அகாரணமாக உதிரஞ் சிந்தப்படலும், கொடுமைகள் பல புரிதலும் வரம்பைமீறி அதிகமானதல்லாது வாக்குத்தத்தத்திற்கு மாறுசெய்வதற்கும், உடன்படிக்கையைத் தகர்த்தெறிவதற்கும் அக்காலம் ஒரு உதாரணமாகப் போய்விட்டது. இவைகள் காரணமாக அரசியல் தலைவர்களுள்ளங்களை விட்டும் அமைதியும், அமைதியுடன் உள்ளும் புறமுமொத்த நேர்மையும் எடுபட்டுப் போய்விட்டன.

## அதிகாரிகள்

ஸப்பாஹ்ஹின் காலத்தில் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் யாவரும் பனீ அப்பாஸ்களே யாவர். இதற்குக் காரணம் மற்றையோர்மீது நம்பிக்கையின்மையே. இத்தலைவர்களில் மூவர் அதிகாரத்தில் தனிச்சிறப்புப் பெற்றிருந்தனர். மிஸ்ர், ஷாம் இவைகளின் அதிகாரி அப்துல்லாஹ் பின் அலீ, இராக், ஜஸீரா இவைகளின் அதிகாரி அபூஜஃபர் மன்ஸூர், குராஸானின் தலைவன் அபூமுஸ்லிம். இவர்களே யாவருக்கும் அதிகாரிகளா யிருந்தார்கள். எனினும், இவர்களுள் ஒற்றுமையும், நேர்மையுங் கிடையாது. அபூமுஸ்லிமின் பலத்தைக் கண்டு பொறுமைப்பட்டு அபூஜஃபர் அவனுக்கு விரோதியாய்ப் போய்விட்டான். இதனால் அவனைக் கொன்றுவிடும்படி அடிக்கடி ஸப்பாஹ்ஹிடம் கூறிவந்ததுமுண்டு. ஸப்பாஹூம் இதற்கிசைந்தே யிருந்தான். எனினும், 'அந்த அரசியலைச் சம்பாதித்துக் கொடுத்த குராஸான்வாசிகள் அவன் கொல்லப்பட்டால் தம்மை எதிர்ப்பார்களோ?' வென்றஞ்சியே துணிகரமாய் முன்வராது போயினன். அப்துல்லாஹ் பின் அலீ கிலாபத்தை யாதரவு வைத்திருந்ததால் 'ஸப்பாஹ்ஹிடமிருந்து தனக்குப் பிரதிநிதி ஸ்தானத்தை மன்ஸூர் சம்பாதித்துக்கொள்வானோ?' வென்றஞ்சினான். இக்காரணங்களால் அவர்களுள் ஒற்றுமை இருக்கவில்லை.

ஹி. 132-ல் ஸப்பாஹ்ஹிடம் அபூமுஸ்லிம் ஹஜ்ஜூக்காக அனுமதி கோரினான். அவன் அபூமுஸ்லிமை ஹாஜிகளின் தலைவனாக நியமிக்க விரும்பவில்லை யாதலால் மன்ஸூருக்கு "நீரும் ஹஜ்ஜூக்காக விண்ணப்பம் செய்யும்" எனக் கூறினான். அவன் விண்ணப்பித்துக் கொள்ளவே அவனது விண்ணப்பத்தின் பேரில் "நீர் இவ்வருடம் ஹாஜிகளின்

தலைவராய் நியமிக்கப் பட்டிருக்கிறீர்" என்றெழுதிவிட்டு அபூமுஸ்லிமுக்கு "நீர் ஹஜ்ஜுக்குச் செல்லலாம். எனினும், மன்ஸூரும் ஹஜ்ஜுக்குச் செல்ல அனுமதி கோரியிருப்பதால் அவரை ஹாஜிகளின் தலைவராய் நியமித்துவிட்டேன்" என்றெழுதினான். அபூமுஸ்லிம் இதைப்பற்றி மனவருத்தமுற்றதாய்க் காண்பித்துக் கொள்ளாது "நான் அவரது தலைமையின்கீழ் ஹஜ்ஜுக்குச்செல்வதைப்பற்றிச் சந்தோஷிக்கிறேன்" என்றெழுதிவிட்டுத் தனக்குச் சாதகமானவர்களிடம் "மன்ஸூர் இவ்வருடந்தான் ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டுமோ?" வெனக் கூறினான். அவ்விரண்டு காபிலாக்(Caravan = கார்வான்)களும் ஒருமிக்க ஒரே பாட்டையில் மக்காவுக்குப் புறப்பட்டன. இடைவழியில் அபூமுஸ்லிம் தனது பெருமையையும், கொடையையும் மன்ஸூரின் பொறாமை பின்னும் அதிகமாகும் விதத்தில் வெளிக்காண்பித்துக் கொண்டான். இதுவே பின்னால் அபூமுஸ்லிம் கொல்லப்படுவதற்குக் காரணமாய்த் திகழ்ந்தது.

## பிரதிநிதியை நியமித்தல்

ஹி. 136-ல் ஸப்பாஹ் தனது சகோதரன் மன்ஸூர், அவனுக்குப்பிறகு ஈஸா பின் மூஸா பின் முஹம்மத் பின் அலீ இவ்விருவரையும் முறையே பிரதிநிதிகளாய் நியமித்தான். இக்கட்டளையைப் பட்டுத்துண்டின்மீது வரைந்து, முதலாவதாக தனது முத்திரையையதில் பதிந்தான். பிறகு தனது வம்சத்தாரின் முத்திரைகளைப் பதிந்து, ஈஸா பின் மூஸாவிடம் கொடுத்துவிட்டான்.

## மரணம்

அதே வருடம் அவன் இருமல் நோயால் பீடிக்கப்பட்டு கி. பி. 752, ஜூன், 8-க்குச் சரியான ஹி. 136, துல்ஹஜ்,

13-ந் தேதி சனிக்கிழமை 'அம்பார்' என்னுமிடத்தில் காலகதி யடைந்தான். பைஅத் செய்யப்பட்ட தினம் தொடுத்து மரணதினம் வரை அவன் 4-வருடங்கள், 9-மாதங்களும், மர்வான் கொல்லப்பட்டதிலிருந்து 4-வருடங்கள், 14-தினங்களும் கிலாபத்தை நிர்வகித்தான்.

## 2. மன்ஸூர்

அபூஜஃபர் அப்துல்லாஹ் பின் முஹம்மத் பின் அலீ பின் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி.) என்னும் பெயருடைய இவனது அன்னை ஸலாமா வென்னும் பெயருடைய அடிமைப் பெண்ணாவார். இவன் ஹி. 101-ல் ஹமீமாவில் ஜனித்தான். அப்பாஸிய்யா கிலாபத்திற்கான முழுமுயற்சியும், ஒழுங்குகளும் பூர்த்திபெறச் செய்வதில் இவன் ஸப்பாஹுக்கு வலக்கரமாக விருந்தான். அவன் இறந்தபோது இவன் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தான். இரண்டாவது பிரதிநிதியான ஈஸா பின் மூஸா இவனுக்காக பைஅத் வாங்கி, இவனுக்குச் செய்தியை யறிவித்தான். இவன் திரும்பி வரும்போது இடைவழியில் நிருபன்மூலம் செய்தியை யறிந்து தீவிரமாய் அம்பாருக்கு வந்து கிலாபத்தின் பீடத்தமர்ந்தான்.

### உள் நிலைமை

பனீஉமையாக்களைப் பற்றியோ, அவர்களின் ஆதரணை கர்த்தாக்களைப்பற்றியோ தனது கிலாபத்திற்காக எத்தகைய பயமும் மன்ஸூருக் கிருக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே அழிந்துவிட்டார்களன்றோ? எனினும், அவனது பயத்திற்குக் காரணஸ்தரா யிருந்தோர் மூவராவர் :—

(1) அவனது சிறியதகப்பன் அப்துல்லாஹ் பின் அலீ. பனீ அப்பாஸ்களில் இவன் தனிச்சிறப்பு பெற்றவன். ஸப்பாஹ் இவனைப் பொதுவான சேனாதிபதியாக நியமித்திருந்ததால் ஷாம், ஜஸீரா, மூஸில் முதலிய விடங்களிலிருந்த சேனைகள் இவன் கைவசமிருந்தன. இவன் மிகவும் பலம் பொருந்தியவன். மன்ஸூர் இடைவழியில் ஸப்பாஹ் இறந்துவிட்டதைக் கேள்விப்பட்டதும் இப்பயத்தை அபூமுஸ்லிமிடம் வெளியிட்டுமுள்ளான்.

(2) அப்பாஸிய்யா கிலாபத்திற்கு மூலபுருஷனான அபூமுஸ்லிம். இவனும் மிக்க வன்மை படைத்தவன். அரசியல் விஷயம் முழுவதிலும் அவன் கலந்துகொண்டவனாவன். 'அவன் தன்னைப் பகைஞனெனக்கொண்டு கிலாபத்தை வேறு யாருக்கும் கொடுத்துவிடுவானோ?' வென அபூஜஃபர் அஞ்சினான்.

(3) பொதுவாக அலீ (ரலி.) அவர்களது சந்ததிகளான தனது சிறியதந்தைகள் யாவரும், அன்னாருள் சிறப்பாக முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் ஹஸன் பின் ஹஸன் பின் அலீ பின் அபீதாலிப் (ரலி.) என்பாருமாம். இவன் ஹாஜிகளின் தலைவனாய் நியமிக்கப்படவும் முற்கூறப்பெற்ற முஹம்மதும், அன்னாரின் சகோதரரான இப்ராஹீம் என்பாரும் ஹஜ்ஜுக்கு வராததிலிருந்து இவ்வச்சம் பின்னும் அதிகமாயது. இம்மூன்று வழிகளிலேற்படும் அச்சத்தையும் அவன் நன்கறிந்து கொண்டான். அவன் தீரம், புத்திநுட்பம், தீர்க்காலோசனை இவைகள் மிகுந்துள்ளவனாதலால் அம்மூவருள் ஒருவருக்கெதிராக மற்றொருவரைத் தூண்டிவிட்டு, அவர்களின் வன்மையைத் தகர்த்துவிடக் கருதினான்.

## அப்துல்லாஹ் பின் அலீ

ஈஸா பின் மூஸா பைஅத்திற்காக அப்துல்லாஹ்வை யழைத்தான். அவன் அவ்வமயம் ரூமியர்களுடன் சண்டையிட்டுத் திரும்பிவந்துகொண்டிருந்தான். ஹார்ரான் போய்ச் சேர்ந்ததும் அவன் தனது சேனைகளை யொருங்கு சேர்த்துத் தனது கிலாபத்திற்காக பைஅத் வாங்கிக்கொண்டான். மன்ஸூர் சகல தளவாடங்களுடன் கூடியதொரு பெரிய சேனையை அபூமுஸ்லிம் உடைய தலைமையின் கீழ் அவனை யெதிர்ப்பதற்காக வனுப்பினான். அப்துல்லாஹ்விடம் குராஸானின் சேனையுமிருந்தது. அதன் தலைவன் ஹமீத்

பின் கஹ்தபா வென்பானு யிருந்தான். 'அவர்கள் அபூ முஸ்லிமின் காரணத்தால் தம்மை விட்டுவிடுவார்களோ?' வெனக் கருதிய அப்துல்லாஹ் ஹமீதிடம் ஒரு நிரூபம் கொடுத்து, ஹலப் உடைய தலைவனுன ஜபர் பின் ஆஸிம் இடமனுப்பினுன். அவன் சென்றபின்பு பல்லாயிரக் கணக்கிலிருந்த குராஸான்வாசிகளைக் கொன்றுவிட்டான். அங்கு சென்ற ஹமீத் இடைவழியில் அந்நிரூபத்தைப் பிரித்து வாசித்துப் பார்க்க அதில் "இவன் உம்மிடம் வந்து சேர்ந்ததும் கொன்றுவிடும்!" என்றெழுதி யிருந்தது. இதைப் பார்த்ததும் அவன் ஹலபுக்குச் செல்லாது, தனது சகாக்களை யழைத்துக்கொண்டு இராக்குக்குத் திரும்பினுன். குராஸான்வாசிகள் கொல்லப்பட்டதாலும், ஹமீத் வெளிக்கிளம்பிவிட்டதாலும் அப்துல்லாஹ்வின் சேனையின் நிலைமை மாறிவிட்டது. அவன் சேனையை ஹர்ரானிலிருந்து நஸீபைனுக்குக் கொண்டுசென்றுன். அஃது சேனைக்குப் பாதுகாப்பானவிடமாம். அங்கிருந்துகொண்டு யுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யலானுன்.

அபூமுஸ்லிம் அங்கு சேர்ந்து பார்க்க அப்துல்லாஹ் வெற்றிகொள்வது எளிதாயிராத பாதுகாப்பான விடத்தைப் பிடித்துக்கொண்டிருந்ததைக் கண்டான். எனவே அவனுக்கொரு நிரூபம் விடுத்தான். அதில் "நான் உம்முடன் சண்டையிடக் கட்டளையிடப் படவில்லை. மேலும் ஷாம் தேசத்திற்குத் தலைவனுக அனுப்பப்பட்டுள்ளேன்; அங்கேயே செல்கிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தான். அப்துல்லாஹ் அவனது சூழ்ச்சியை யறிந்துகொண்டான். எனினும், அவனுடனிருந்த ஷாம் தேசத்திய தலைவர்கள் 'நாம் இங்கிருக்கும்போது அவன் அங்குசென்று நமது வீட்டார்களை என்னதான் செய்வானே?' வென றஞ்சி, ஷாம் தேசத்தின் புறம் செல்லும்படி அப்துல்லாஹ்வைத் தூண்டினுர்கள்.

அவன் அவர்களை ஷாமுக்கழைத்துச் சென்றான். அபூ முஸ்லிம் சமயம் பார்த்து நஸீபைனுக்குட் பிரவேசித்துப் பாதுகாப்பான விடத்தில் இருந்துகொண்டான். எதிரி தனது எண்ணத்தை ஈடேற்றிக் கொண்டுவிட்டதை யறிந்த அப்துல்லாஹ் வேறுவழியின்றி அபூமுஸ்லிமின் சேனை ஏற்கனவே யிருந்தவிடத்தில் கூடாரமடித்தான். இருதரப்பாருக்கும் யுத்தம் மூண்டது. ஷாம்வாசிகள் தொகையில் அதிகமானவர்களாயிருந்தாலும், தளவாடங்களில் குராஸான் வாசிகளைவிட நந்நிலைமையி லிருந்தாலும் அபூமுஸ்லிம் சம்பாதித்துக்கொண்ட சம்பவத்தால் இவர்களை வெற்றி கொள்ளக் கூடாது போனார்கள். ஆறுமாதங்கள் வரை யுத்தம் நடைபெற்றுவந்தும் எத்தகைய முடிவும் ஏற்படவில்லை. ஹி. 137, ஜமாதில்ஆகிர், 7-ந்தேதி செவ்வாய்க்கிழமை அபூமுஸ்லிம் தன் சேனையின் வலப்பகுதியின் தலைவனான ஹஸன் பின் கஹ்தபாவுக்கு அன்று இடது புறத்தில் அதிகமான சேனையை வைக்கும்படியும், வலது புறத்தில் பொறுக்கியெடுத்த வீரர்களை மட்டும் நிறுத்தி வைக்கும்படியும் கட்டளையிட்டான். இதைக்கண்ட அப்துல்லாஹ் தனது வலதுபுறத்தில் அதிக சேனையை நிறுத்தி, இடதுபுறத்தைக் காலியாக வைத்தான். அபூமுஸ்லிம் நடுப்பாகத்தையும், வலப்பாகத்தையும் எதிரியின் இடப்பக்கம் முன்னேறச் செய்தான். இதனால் ஷாம்வாசிகளின் வன்மை தகர்ந்துவிட்டது; அவர்கள் தோல்வி யடைந்துவிட்டார்கள்.

அந்நேரத்தில் அப்துல்லாஹ் பின் அலீ பனீ ஹாஷிம்கள் எக்காலத்திலும் அவமானமளிக்கக் கூடியதாய்க் கருதிவந்த செய்கையை மேற்கொண்டு விட்டான். அவன் போர்க்களத்தை விட்டும் ஓடியதே அவ்வவமானச் செய்கையாம். அவனது சேனைத் தலைவர்கள் "ஓடுவது ஒரு சிப்பாய் செய்யத்தக்க கருமமன்று. மரணத்திற்குப் பயந்து ஓடிய

தால் நீங்களே மர்வானை எப்பொழுதும் நிந்தித்துக்கொண் டிருந்தீர்கள். இன்று நீங்களே அந்நிந்தனையை என் ஏற்றுக் கொள்கிறீர்கள் ?" எனக் கூறியும் அவனது கால்கள் நிற்க வில்லை. வெற்றிக்குப் பிறகு அபூமுஸ்லிம் ஷாம்வாசிகள் யாவருக்கும் பொதுவான அபயமளித்து விட்டான். அப் துல்லாஹ் பஸரா போய்ச் சேர்ந்தான். அங்கு அவனது சகோதரன் ஸுலைமான் பின் அலீ அதிகாரியாயிருந்தான். சின்னாட்கள்வரை இவன் அவனிடம் ஒளிந்துகொண்டிருந் தான். இதையறிந்த மன்ஸூர் அப்துல்லாஹ்வைத் தம் மிடம் அனுப்பிவிடும்படியும், தான் அவனுக்கு அபயமளித் திருப்பதாகவும் ஸுலைமானுக் கெழுதினான். ஸுலைமான் அவனை யழைத்துக்கொண்டு நேரே சென்றான். அபயமளித் திருந்தும் மன்ஸூர் அவனைக் கைதுசெய்துவிட்டான். ஹி. 147-ல் அதே சிறையில் அவன் இறந்தான்.

## அபூமுஸ்லிம்

அபூமுஸ்லிமின் முயற்சியால் அப்துல்லாஹ்வின் புறத்தால் மன்ஸூருக்கு அமைதி கிடைத்துவிட்டது. எனினும், இவ்வெற்றியால் தனது மதிப்பு பின்னும் அதிக மாய் விட்டதையும், மன்ஸூரின் இயற்கைக் குணம் தன் னைத்தவிர பிறிதெவருக்கும் எத்தகைய மதிப்பும் ஏற்படு வதைக் கண்டு சகியாததென்பதையும் கருதி அபூமுஸ்லிம் சற்றே பயந்தான். இத்துடன் தனது நிரூபங்களைக் காணும் அபூமுஸ்லிம் தன்னைப் பரிகசிப்பதாயும் மன்ஸூருக் குத் தெரியவரவே அவனை வேலைதீர்த்துவிடுவதென மன் ஸூர் முடிவுகட்டிக் கொண்டான். இதற்கிடையில் மன் ஸூர் மூலமாய் அபூமுஸ்லிமின் உள்ளத்திலும் பயமேற் படத்தக்க சம்பவமொன்று நிகழ்ந்தது: அவன் ஷாம்வாசி களை வெற்றிகொள்ளவும் மன்ஸூர் ஒருவனை அவனிட மனுப்பி " அச்சண்டையிற் கிடைத்த கொள்ளைப் பொருட்

களை யெல்லாம்சரியாகக் கணக்கிட்டு, அவன் வசம் ஒப்புவிக்க வேண்டு''மென வரைந்தான். இக்கடிதத்தைப் படித்த அபூ முஸ்லிம் "யுத்தவிஷயத்தில் யான் நம்பப்படலாம்; பொருள் விஷயத்தில் நம்பப்படக்கூடாதோ?'' வெனக்கூறி அந்நிரூபனைக் கொன்றுவிடக் கட்டளையிட்டான். எனினும் அவனது சமூகத்திலிருந்தோர் "இவ்வேழைமீது யாது குற்றமுளது?'' என விண்ணப்பித்துக்கொள்ளவே அவனை விட்டுவிட்டான். அவன் திரும்பிவந்து எல்லாச் செய்திகளையும் மன்ஸூரிடம் கூறினான். தன்புறத்தால் அபூ முஸ்லிமின் உள்ளத்திற்கு எத்தகைய சந்தேகமும் ஏற்படக் கூடாதென்பதற்காக மன்ஸூர் எவ்வளவோ கவலைகளை எடுத்துக்கொண்டான். அவன் தன்மீது சந்தேகங்கொண்டு குராஸானுக்குச் சென்றுவிட்டால் அவனை யொடுக்குவது கஷ்டமாய் விடுமென்பதையும், அங்கு அவனுக்கு மிகவும் பலமிருக்கின்றதென்பதையும் இவன் அறிவான். எனவே, இவன் உடனே அபூமுஸ்லிமுக்கு ஒரு நிரூபம் விடுத்தான். அதில் குராஸானுக்குப் பதிலாய்த் தான் அவனை ஷாம், மிஸ்ர் இவைகளுக்குத் தலைவனாய் நியமித்திருப்பதாயும், அவன் ஷாமிலிருந்துகொண்டு தனதிஷ்டப்பிரகாரம் எவனை யேனும் மிஸ்ருக்கு அதிகாரியாய் நியமித்தனுப்பலாமெனவும் குறிப்பிட்டிருந்தான்.

இந்நிரூபத்தைக்கண்ணுற்ற பின்பு அவன் பின்னுமதிகமாய்க் கோபங்கொண்டு "குராஸான் எனது தலைநகரம். நான் அதை விடக்கூடாதவனாயிருக்கிறேன்'' எனக் கூறித் தனது சேனைகள் யாவையும் அழைத்துக்கொண்டு கிழக்குப் பக்கமாய்ச் சென்றான். அவன் குராஸான் போய்ச் சேர்ந்துவிட்டால் 'முடிவு இன்னதுதான் ஏற்படுமென்று குறிக்கவியலாத சண்டை நேரிடு'மென்பதை யறிந்த மன்ஸூர் அங்ஙனம் நேரிடக்கூடாதென முடிவுகட்டிக்கொண்டு, அம்

பாரிலிருந்து மதாயின் வந்து சேர்ந்துத் தன்னைக் காணும்படி அபூமுஸ்லிமுக்குக் கட்டளையிட்டான். அபூ முஸ்லிம் அதற்குப் பதிலெழுதுமுகத்தான்

"கலீபாவுக்குத் தற்போது பயப்படத்தக்க எத்தகைய பகைஞனு மிருக்கவில்லை. ஸாஸான் வர்க்கத்தவரின் சரிதையில் "அமைதியுள்ள நேரத்தில் அரசன் மந்திரிகளுக்கே யதிகமாய்ப் பயப் படுகிறான்" என்பதை யாம் கேள்விப்பட்டுள்ளோம். எனவே, தங்களுக்கு அண்மித்திருப்பதைவிட்டும் செல்கிறோம். நமது கருத்து 'தூரவிருந்து உள்ளன்புடன் வழிபட்டு நடக்க வேண்டும்' என்பதே. இதற்கு மாற்றமாய்த் தாங்கள் வற் புறுத்தித் தங்களது மனோரதத்தையே பூர்த்திசெய்துகொள்ளக் கருதினால், அஃது எம்முடன் செய்துகொண்ட உடன்படிக் கைக்கு மாற்றமானதேயாம்"

என்றெழுதி யனுப்பினான். இக்கடிதத்தால் மன்ஸூரின் உள்ளத்தில் பழிவாங்கவேண்டு மென்னும் தீ பின்னும் ஜ்வாலை விட்டெரிந்தது. அபூமுஸ்லிம் தனது பலத்தின் தைரியத்தால் அவனது கட்டளைகளுக்கு மாறு செய்ததோடு மட்டும் நில்லாது அவனுக்கு நிகராகவும் தன்னை மதித்துக் கொண்டு மிரட்டியு மிருக்கிறானன்றோ? எனவே மன்ஸூர் அதற்குப் பதிலெழுதுமுகத்தான்

"நான் உமது கடிதத்தை வாசித்தேன். தமது குற்றங்களுக்காக அரசர்களுக்குப் பயந்தொளிந்துகொண்டும், தமது தற்காப்பிற் காக அரசாங்கத்தில் புரட்சி ஏற்படுத்த முயற்சித்துக்கொண்டு மிருக்கும் சதிகாரர்கள் கூட்டத்தில் நீர் சேர்ந்தவரல்லீர். மேலும், நீவிர் இவ்விராஜ்ஜியத்திற்கு மகத்தான பணியாற்றி யிருக்கின்றீர். எமக்கு உமது நல்லெண்ணம், கீழ்ப்படிதல், இவைகள்மீது பூரண நம்பிக்கை யிருக்கின்றது. இந்நிரூபம் எனது பிரதிநிதி ஈஸா பின் மூஸாவின் கைவசமாய் உமக் கனுப்பப்படுகின்றது. அவரது வார்த்தைகளால் உமக்கு நிம்மதி ஏற்படுவதற்காகவும், மனதிலுள்ள சந்தேகங்கள் நீங்கு வதற்காகவுமே இங்ஙனம் அவரை யனுப்பியுள்ளேன்"

என்றெழுதி ஈஸாவுடன் வாக்சாதுர்யம் நிரம்பப்பெற்ற அபூஹமீத் மருரூஜீ என்பானையுமனுப்பி, அவனிடம் "துவக்கத்தில் அபூமுஸ்லிமிடம் மிருதுவாக வார்த்தையாடி இங்கு வருவதற்கு இசையும்படிச் செய்யவேண்டும். அவன் மறுத்து விட்டால் "நீர் வராவிட்டால் தாமே இங்கு வருவதாகவும், நீர் ஓடினால் பின்றொடர்வதாகவும், சமுத்திரத்திலோ, தீயிலோ வீழ்ந்தால் தாமும் வீழ்ந்து, உம்மைக் கொல்ல முடியாவிடினும் உம்முடன் இறந்துபோவதாகவும் கலீபா சத்தியம்செய்துள்ளார்" எனக் கூறவேண்டும்" எனச் சொல்லியனுப்பினன். அபூஹமீத் இதன் பிரகாரம் துவக்கத்தில் அபூமுஸ்லிமிடம் மிருதுவாக வார்த்தையாடினன். அவன் குராஸான்வாசிகளைக் கலந்தாலோசித்ததில் அவர்கள் மன்ஸூரிடம் செல்வது உசிதமல்லவெனவும், அவனது எண்ணம் பரிசுத்தமானதாய்த் தெரியவில்லையெனவும் அபிப்பிராயங் கொடுத்தார்கள். இதன் பேரில் அவன் வர மறுக்கவே அபூமுஸ்லிம் இரண்டாவது செய்தியைக் கூறினன். அதைக் கேள்விப்படவும் அவனது உள்ளம் ஒடுங்கிவிட்டது.

இந்தப்புறம் அபூமுஸ்லிம் இல்லாதசமயத்தில் குராஸானின் அதிகாரியாக வேலை பார்த்துவரும் அவனுக்குக் கீழ்பட்ட அதிகாரியைச் சர்வாதிகாரியாக நியமித்துவிட்டதாய் வரைந்தனுப்பினன். தனது சம்பந்தம் குராஸானை விட்டும் எடுபட்டுவிட்டதைக் கண்ட அபூமுஸ்லிமுக்கு கலீபாவிடம் செல்வதைத் தவிர்த்து வேறுவழி இருக்கவில்லை. எனவே, அவன் குராஸானைவிட்டும் மதாயினுக்குத் திரும்பினன். மன்ஸூர் அவனைக் கொன்றுவிடுவதாகவே முடிவு கட்டிக்கொண்டான். எனினும், தனது இவ்வெண்ணத்தை மிகவும் இரகசியமாக வைத்திருந்தான். இதனல் அபூமுஸ்லிம் குராஸானுக்குச் சமீபமாய்ப் போய்ச்சேர்ந்த

போது அவன் தலைவர்களையும், அதிகாரிகளையும் அவனை வரவேற்க வனுப்பினான். அவன் தனது சமுகத்திற்கு வந்தபோது தானும் அவனைச் சந்தோஷமாய்ச் சந்தித்தான். இதனால் அவனது பயம் நீங்கி, மனதிற்கு நிம்மதி ஏற்பட்டது. இரண்டாவது தினம் அபூமுஸ்லிம் அரச சமுகத்திற்கு வருவதற்குமுன் நான்கு சிப்பாய்களைத் திரைமறைவில் ஒளித்துவைக்கும்படியும், தான் கைதட்டும் சப்தத்தைக் கேட்டதும் அவனைக் கொன்றுவிடவேண்டுமெனவும் 'ஷார்த்தா'வின் தலைவனான உத்மான் பின் நஹீக் என்பானுக்குக் கட்டளையிட்டிருந்தான். அபூமுஸ்லிம் அரச சமுகத்திற்பிரவேசித்ததும் மன்ஸூர் அவனுடன் வார்த்தையாடத்தொடுத்தான். அவன் கரத்திலிருந்த அழகிய, சிறிய ஈட்டியையும் பார்க்க விரும்பியதுபோல் வாங்கிக் கொண்டான்; பிறகு அவனது குற்றங்களை யெல்லாம் கணக்கிட்டுக்கொண்டேவந்து இறுதியாக "நீர் எனது ஆக்ஞைக்கு விரோதமாய் குராஸான்புறம் ஏன் செல்லத் தொடுத்தீர்?" எனக்கேட்கவே அபூமுஸ்லிம் பயந்துவிட்டான். மன்ஸூர் இதற்கிடையே கைதட்டினான். அந்நான்கு சிப்பாய்களும் வெளிக்கிளம்பிவந்து அபூமுஸ்லிம் மீது பாய்ந்தார்கள். அவன் "பெரிய பிரசினைகளுக்காக என்னை விட்டுவையுங்கள்! கொல்லவேண்டாம்!" எனக் கதறிக்கொண்டிருந்தான். எனினும், சில நிமிஷங்களுள் அவன் வேலை தீர்க்கப்பட்டான்.

அவனது தோழர்கள் இதைச் செவியுற்றதும் ஆவேசத்துடன் வெளிக்கிளம்பி அரசமாளிகையை முற்றுகையிட்டார்கள். எனினும், அபூஜஃபர் அவர்களுக்கு அநேக தங்கத் தோடாக்களை யளித்ததில் அவர்கள் மனச்சாந்தியடைந்து விட்டார்கள். அவர்களின் தலைவர்களுக்கு அவன் பெரிய வெகுமதிகளையும், விலையுயர்ந்த ஆடைகளையுங்

கொடுத்தான். அபூமுஸ்லிம் கொல்லப்பட்டபிறகு மன்ஸூர் நிம்மதியடைந்து, அன்றே தனது கிலாபத் துவங்கியதாய்க் கொண்டான். அபூமுஸ்லிம் கம்பீரம், தீரம், தீர்க்காலோசனை இவைகள் நிரப்பப் பெற்ற தலைவனுவன். அவனிடம் அற்பபுத்திமட்டும் இல்லாதிருக்குமாயின் உலகத்தின் ஒப்பற்ற தலைவர்களின் தொகையிற் சேர்க்கப்பட்டிருப்பான். அவன் அப்பாஸிய்யா கிலாபத்தை நிறுவுவதில் அளவிறந்த உதிரங்களைச் சிந்தினன். சந்தேகப்படும் பேர்வழிகளைக் கொன்றுவிடும்படி இமாம் இப்ராஹீம் இட்ட கட்டளைப் பிரகாரம் பிரசாரகர்களின் தலைவனுன ஸுலைமான் பின் கதீரை வீணுண சந்தேகத்திற் கிடங்கொடுத்துக் கொன்றுவிட்டான். இந்த கிலாபத்தின் உற்பத்தியே இவ்வாருயின் அவன் மட்டும் யாங்ஙனம் தப்புவான்? மன்ஸூருக்கும் அவன் எண்ணத்தின்மீது ஐயம் ஜனித்தது. எனவே, அவனை வேலைதீர்த்துவிட்டான். இதுவும் இறைவனது திருச்செய்கையாம். இதையே அவன் தனது திருமறையில் கீழ்க்கண்டவாறு விவரித்துள்ளான்:—"இங்ஙனமே அவரவர்களின் செய்கைகள் காரணமாக அநியாயக்காரர்களில் ஒருவனை மற்றொருவனிடம் ஒப்புவித்துவிடுகிறோம்." (அல்—குர்ஆன்)

## முஹம்மத் பின் அப்துல்லாஹ் 'நப்ஸே ஜகிய்யா'

பெருமானரின் குடும்பத்தைச் சார்ந்தோரில் இமாமிய்யா, ஜைதிய்யா என்னும் இருபிரிவினர் அதிகமாகப் பரவியிருந்தனர். அவர்களின் பிரசாரம் பொதுவானதாகவிருந்தது. பனீ அப்பாஸ்கள் தாம் கிலாபத்தை விழைந்து நின்றக்கால் இமாமின் பெயரைக் குறிப்பது உசிதமெனக் கொள்ளவில்லை. இப்பொதுவான பிரசாரத்தால் பலனடைய வேண்டுமென்பது அவர்களது நோக்கமாதலின், பெருமானரின் குடும்பத்தவரது கிலாபத்திற்கான பிரசாரத்

றை மட்டுமே செய்து, தமது நோக்கத்தில் வெற்றியடைந்தார்கள். பனீபாத்திமாக்கள் இன்னுரையும் பனீஉமையாக்களே போன்ற அனியாயக்காரர்களெனவே குறித்தனர். பனீபாத்திமாக்கள் தங்களுக்கே கிலாபத் பாத்தியதையுடையதென்னுங் கொள்கை கொண்டிருந்ததே இதற்குக் காரணமாம். அச்சமயம் அவர்களுள் இமாம் ஜஃபர் ஸாதிக், முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் ஹஸன் பின் ஹஸன் இவ்விருவரும் தனிச்சிறப்பு பெற்றிருந்தனர். இவ்விருவரில் முந்தியோர் இமாமிய்யாக்களின் ஆருவது இமாமும், பிந்தியோர் தமது பரிசுத்த குணாதிசயங்கள் காரணமாக "நப்ஸே ஜகிய்யா=பரிசுத்த ஆத்மா" என்னும் சிறப்புப்பெயர் பெற்றிருந்ததுடன் பெருமானாரின் குடும்பத்தவரில் பெரும்பான்மையோரால் 'மஹ்தீ'யென வொப்புக்கொள்ளப் பட்டோருமாவர்.

இமாம் ஜஃபர் ஸாதிக் விதியை நினைத்துப் பொறுமையைக் கடைப்பிடித்தும், இறைவனுக்கு நன்றிசெலுத்திக் கொண்டு மிருந்தார்கள். அவர்கள் பனீஅப்பாஸ்களுக்கு விரோதமாய் எத்தகைய முயற்சியும் செய்யாது, அங்ஙனமேயிருக்கும்படி தமது சீஷர்களுக்கும் தாக்கீது செய்துவந்தார்கள். எனினும், முஹம்மத் நப்ஸெஜகிய்யா தமது கிலாபத்திற்காக மிகவும் முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். பனீஉமையாக்களின் இறுதி கலீபாவான மர்வானின் காலத்திலேயே பனீஹாஷிம்களில் அநேக தலைவர்கள் அவர்களிடம் பைஅத் செய்து, அவர்களை 'இமாம் மஹ்தீ' யென வொப்புக் கொண்டிருந்தார்கள். அந்த பைஅத்தில் ஸப்பாஹ், மன்ஸூர் இவ்விருவரும் கலந்திருந்தனர். இதே காரணத்தால் அப்பாஸிய்யாக்கள் கிலாபத்தை ஸ்தாபித்த போது அவர்கள் ஸப்பாஹின் கரத்தில் பைஅத் செய்யாது தாமே கிலாபத்தை விழைந்து நிற்கவேண்டுமென விரும்பி

ணுர்கள். ஸப்பாஹ் அவர்களுக்கு நிரூபம் விடுத்தான். இவனது நன்றிக்குப் பாத்திரமானவர்களா யிருந்ததால் அவர்கள் இவனுக்கு மாறுசெய்யா திருந்தார்கள். முஹம்மத் என்பாருக்கு இப்ராஹீம் பின் அப்துல்லாஹ்வென்னும் பெயருடைய சகோதர ரொருவரிருந்தனர். இவர்களை குராஸான்வாசிகளில் ஒரு கூட்டம் இமாமாக வொப்புக் கொண்டதுடன் அவர்களை யாதரிப்பதற்குத் தயாராகவும் நின்றது.

மன்ஸூர் கலீபாவானதும் அவ்விரு சகோதரர்களது நிலைமைகளையும், கருத்தையும் அவன் நன்கறிந்திருந்தானுதலால் அவர்களைப்பற்றி சதா அஞ்சிக்கொண்டே யிருந்தான். ஹி. 136-ல் அவன் ஹாஜிகளின் தலைவனுய்ச் சென்றபோது அவ்விருவரில் எவரும் ஹஜ்ஜுக்கு வரவில்லை. இக்காரணத்தால் அவனது சந்தேகம் பின்னும் ஊர்ஜிதப் பட்டது. அக்காலத்தில் ஜியாத் பின் அப்துல்லாஹ் ஹாரிதீ என்பான் மதீனுவின் தலைவனுயிருந்தான். அவனிடம் மன்ஸூர் முஹம்மத் நப்ஸெஜகிய்யாவின் நோக்கத்தைப்பற்றிக் கேட்டபோது அவன் "அவர்களைப்பற்றி எத்தகைய ஐயமும் தாங்கள் கொள்ளவேண்டாம்! நான் அவர்களைத் தங்கள் சமுகத்திற்குக் கொண்டுவருகிறேன்" என்ருன். பனீ ஹாஷிம்களில் ஒவ்வொருவரையும் தனித்தனியே கூப்பிட்டு முஹம்மத் அவர்களின் விஷயமாக மன்ஸூர் விசாரிக்கவும் ஒவ்வொருவரும் "ஏற்கனவே அவர்கள் கிலாபத்தை விழைந்து நின்றதுண்மையே. எனினும், தற்போது நீங்கள் கிலாபத்தை யடைந்துகொள்ளவும் அவர்கள் தமெண்ணத்தை விட்டுவிட்டார்கள். தற்போது அவர்கள் உங்களை எதிர்க்கத் தயாராயில்லை" எனவே கூறினர். எனினும், ஹஸன் பின் ஜைத் பின் ஹஸன் பின் அலீ என்பார் மட்டும் அவர்களின் நிலைமையை யொளிக்காமல் வெளி

யிட்டு "அவர்கள் தயாராய்க்கொண்டே யிருக்கிறார்கள். எச்சமயத்திலும் உங்களை எதிர்ப்பதற்குக் கட்டாயம் வர லாம்" என்றார். இதைக் கேட்டதும் விழித்தழலை படைத்த மன்ஸூரின் நேத்திரங்கள் திறந்துகொண்டன.

அவன் முஹம்மத் அவர்களைத் தேடிக்கொண்டே யிருந்தான். அவர்கள் விஷயமாய் நிம்மதியளித்துச்சென்ற மதீனாவின் தலைவனான ஜியாத் அவர்களைக் கொண்டுவந்து ஒப்புவிக்க முடியாதுபோகவே மன்ஸூர் அவனை நீக்கி விட்டு, அவனது ஸ்தானத்தில் முஹம்மத் பின் காலித் பின் அப்துல்லாஹ் குஸ்ரீயை அவ்விடத்துத் தலைவனாய் நியமித் தனுப்பி "எவ்வளவு தொகையாயினும் செலவழித்து, முஹம்மத் உடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவேண் டும்" எனக்கட்டளையிட்டான். இவனும் எவ்வளயோ முயற்சி யெடுத்தும் அவர்களைப் பிடிக்கமுடியவில்லை. இதனால் மன் ஸூர் இவனையும் நீக்கிவிட்டு ரிபாஹ் பின் உத்மான் என் பானை யனுப்பினான். அவன் ஹி. 144-ல் மதீனாவுக்கு வந் தான். முதன்முதலாக மாஜிதலைவனான முஹம்மத் பின் காலிதுக்கும், அவனது இலிபிக்கும் தண்டனை யளித்து விட்டு, முஹம்மதைத் தேடவாரம்பித்தான். அவர்கள் மறைந்திருப்பினும் தமது வீட்டிற்குப் போய்வந்து கொண்டிருந்தார்கள். இதை யறிந்துகொண்ட ரிபாஹ் பனீ ஹஸன் வர்க்கத்தவரில் 13-பேரைக் கைதுசெய்து மன்ஸூ ரிடம் அனுப்பினான். அவர்களுள் முஹம்மத் பின் அப்துல் லாஹ் பின் அம்ரு பின் உத்மான் (ரலி.) என்பாருமிருந்தனர். அன்னார் தாய்வழியில் பனீஹஸன் வர்க்கத்துடன் பாந்தவ் வியங் கொண்டிருந்ததுடன், அன்னாரின் திருப்புதல்வி நப்ஸெஜகிய்யாவின் சகோதரர் இப்ராஹீம் என்பாருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருந்தார். மன்ஸூர் அவர் கள் யாவர் மீதும் பொதுவாகவும், அவர்களுள் ஈண்டு குறிப்

பிடப்பெற்ற முஹம்மத் என்பார்மீது குறிப்பாகவும் எழுத முடியாத கொடுமைகளைப் புரிந்தனன். இக்கொடுமைகளால் அவர்களிலநேகர் அழிந்துபட்டனர். இந்த பனீஅப்பாஸ் கள் யாவர்? "நாங்கள் பெருமானாரின் குடும்பத்தவரைக் கொன்றோரைப் பழிவாங்கவே கிளம்பியிருக்கிறோம்" என முழுவுலகிற்கே பறையறிவித்தோரன்றோ இன்னார்? "பனீ உமையாக்களின் காலத்தில் பெருமானாரின் குடும்பத்தாரில் கொல்லப்பட்ட தலைவர்கள் யாவரும் போர்க்களத்தில் சண்டையிட்டே மடிந்தனர். பனீஉமையாக்கள் அவர்களில் ஒருவரையும் இவ்விதம் அதிக்கிரமமான வழியில் கொல்ல வில்லை" யென்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கதே. தமது வர்க்கத்தவர் மீது இத்தகைய கொடுமைகள் புரியப்படு வதைக் கண்டு முஹம்மத் நப்ஸெஜகிய்யா சகியாமல் ஹி. 145, ரஜப் மாதத்தில் 250-வீரர்களுடன் மதீனா விற் பிரவேசித்தார்கள். அவ்விடத்து மக்கள் இவர்களை யாதரித்தனர். மதீனாவின் தலைவனான ரிபாஹ் இவர்களை எதிர்க்கக் கருதினான். எனினும் ஜனங்கள் அவனைக் கைது செய்துவிட்டு, மதீனாவைக் கைப்பற்றிக் கொண்டார்கள். நப்ஸெஜகிய்யா பொதுக் கூட்டத்தில் நின்றுகொண்டு ஒரு சொற்பொழிவாற்றினார்கள். அதன் சாரம் வருமாறு:—

மகாஜனங்களே! நமக்கும், இக்கொடுங்கோலன் மன்ஸூருக்கு மிடையேயிருந்துவரும் விஷயம் உங்களுக்குத் தெரிந்ததே. அவன் கஃபாவை இழிவுபடுத்துதற்கே தனது மாளிகையின் பச்சை ஸ்தூபியைக் கட்டியுள்ளான். அவன் அல்லாஹ்வின் எதிரியாவான். பிர்ஔனும் இவ்விதமே மாறுசெய்து வந்தான். அதன் காரணமாக அவன் இறைவனது முனிவை யடைந் தான். அல்லாஹு தஆலா இவனையும் அழிப்பானாக! இஸ்லாம் மதத்தைக் காப்பதற்கு மூலபாத்தியதையுடையோர் முந்திய முஹாஜிரீன்களின் புத்திரர்களும், அன்ஸார்களின் புதல்வர்களுமாவார்கள், மதீனாவாசிகள் மிகவும் பலம் பொருந்

தியவர்களென்னும் காரணத்தை முன்னிட்டு நான் மதீனாவைத் தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கவில்லை யென்பதையும், மேலும் இவ்விடத்து மக்களை நான் நேசிப்பதாலேயே யென்பதையும் உங்களுக் கறிவித்துவிடக் கருதுகிறேன். இஸ்லாமிய உலகத்தில் ஒவ்வொருவிடத்திலுள்ள ஜனங்களும் எனது கிலாபத்திற்காக பைஅத் செய்துகொண்டபிறகே நான் இங்கு வந்துள்ளேன்.''

மதீனாவாசிகள் இதைச் செவியுற்று மிகவும் சந்தோஷமெய்தினார்கள். என்றாலும் உண்மை இதுவன்று. மன்ஸூர் ஒவ்வோரிடத்திலும் தனது ஆட்களை நியமித்து முஹம்மத் அவர்களுக்கு அவ்வவ்விடத்து மக்கள் அவர்களை கலீபாவாக வொப்புக்கொள்ள விசைவதாய் நிரூபம் வரையும்படிச்செய்திருந்தான். இதனால் ஒவ்வோரிடத்து மக்களும் தமது கிலாபத்தை யொப்புக்கொள்வதாயும், தம்மை யாதரிப்பதாயும் அவர்கள் கருதிக்கொண்டார்கள். இரண்டாவதாக அவர்கள் தமது சகோதரர் இப்ராஹீம் என்பாரிடம் தாம் மதீனாவில் வெளிப்போகும் தினம் பஸராவில் அன்னாரும் தமது கூட்டத்துடன் வெளிப்போக வேண்டுமென முடிவு கட்டியிருந்தார்கள். இதனால் மன்ஸூர் இவர்களிருவரையும் எதிர்க்கமுடியாது போய்விடுவானென்பது அவர்களின் கருத்து. எனினும், இப்ராஹீம் அக்காலத்தில் வியாதியடைந்துவிட்டதால் அந்நோக்கம் நிறைவேறாது போயிற்று; நப்ஸெஜகிய்யா தாம் பெற்றிருப்பதாய்க் கொண்டிருந்த வன்மையின் மதிப்பு பொய்த்துப் போய்விட்டது. இவைகள் தவிர அவர்கள் மதீனாவைத் தமது தலைநகரமாய்க் கொண்டிருந்ததும் பிழையேயாம். அந்நகரத்திற்குத் தேவையான பொருட்கள் யாவும் வெளியேயிருந்து வரவேண்டியதாயிருந்ததுடன் நான்கு தினங்களின் முற்றுகையையும் அஃது தாங்க முடியாததாகவு மிருந்தது. முஹம்மத் பின் காலித் குஸ்ரீ அவர்களிடம் "நீங்கள் ஏனோ மதீனாவைத் தேர்ந்

தெடுத்தீர்கள்? ஜலம் தடுக்கப்பட்டு விட்டாலே இரு தினங்களில் இங்குள்ளோர் இருந்து போவர். எனவே தாங்கள் என்னுடன் யமனுக்கு வாருங்கள். ஒரு லக்ஷம் போர்வீரர்களுடன் நான் தங்களுக் குதவியாய் நிற்கிறேன்'' எனவும் விண்ணப்பித்துக்கொண்டான். எனினும், அவர்கள் இதை யொப்புக்கொள்ளவில்லை. மன்ஸூர் அக்காலத்தில் பக்தாதை நிறுவுவதிற் கவனஞ் செலுத்தியிருந்தான். இதைக் கேள்விப்பட்டதும் ரபீஃ பின் அப்துல்லாஹ் என்பானிடம் "முஹம்மத் புரட்சிக் கொடியை யுயர்த்தியுள்ளார்'' எனக் கூறவும் அவன் "எங்கே?'' எனக்கேட்டான். மன்ஸூர் "மதீனாவில்'' எனப் பதிலளிக்கவே அவன் "அங்கென்னவிருக்கின்றது? மனிதரும், மற்ற வசதிகளும் ஒன்று மில்லாத விடத்தை நம்பித் தம்மைத்தாமே வீணாய் அழித்துக்கொள்ளப் போகின்றார்'' என்றான். மன்ஸூருக்குக் கூபாவைப்பற்றிய கவலையே அதிகமாக விருந்தது. அங்கு அலீ (ரலி.) அவர்களைச் சார்ந்தோர் அதிகமாக விருந்தனர். எனவே, அவன் உடனே அங்கு சென்று வெளிப்புறத்துச் சம்பந்தம் முற்றுப்பெறும்படி அதன் வாயிலை மூடிவிட்டான். பிறகு முஹம்மத் நப்ஸெ ஜகிய்யாவுக்கொரு நிரூபம் விடுத்தான்:—

"கலீபா அபூஜஃபர் அப்துல்லாஹ் பின் முஹம்மதிடமிருந்து முஹம்மத் பின் அப்துல்லாஹ்வுக்கு

குர்ஆனில் அல்லாஹுதஆலா "நீங்கள் அவர்களைப் பிடிப்பதற்கு முன்பு தௌபா(பாவ மன்னிப்பு)ச் செய்துகொண்டோர்கள் தவிர அல்லாஹ்வுடனும், அவனது ரஸூல் (தீர்க்கதரிசி) அவர்களுடனும் சண்டையிட்டு, உலகத்திற் குழப்பத்தை யுண்டாக்கித் திரிவோருக்குத் தண்டனை அவர்கள் கொல்லப்படுவதோ, தூக்கிலிடப்படுவதோ, மாறுகால் மாறுகை வாங்கப்படுவதோ, அல்லது தேசப்பிரஷ்டம் செய்யப்படுவதோவாம்'' எனக் குறிப்பிட்டுள்ளான். எனவே அல்லாஹ்வையும், அவனது

ரஸூல் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை யும் முன்வைத்து நான் உறுதிமொழிகூறுவதாவது:- "நான் உங்கள் மீது வெற்றி கொள்வதற்கு முன்னமேயே நீங்கள் தௌபாச் செய்துவிட்டால் நான் உங்களையும், இப்புரட்சியிற் கலந்து கொண்ட உங்கள் சகோதரர்களையும், சகாக்களையும், சீஷர்களை யும் உயிருடன் விட்டுவிடுவதுடன் உங்களுக்குப் பத்துலக்ஷம் திர்ஹமும் கொடுக்கிறேன். நீங்கள் இஷ்டப்பட்டவிடத்தி லிருக்கலாம். நீங்கள் தேவைப்பட்டதை யெல்லாம் பூர்த்திசெய்தும் வைப்பேன். உங்களது குடும்பத்தவர், உங்களைச் சார்ந்தோர் இவர்களில் எனது சிறையிலிருப்போர் யாவரையும் எத்தகைய கஷ்டத்துக்கு மிடமின்றியே விடுவித்துவிடுவேன்" என்பதே. உங்களுக்கு இஃது சம்மதமாயின் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனொருவனையனுப்பி என்னிடம் உடன்படிக்கை செய்து கொள்ளச் செய்யுங்கள்!"

இதற்குப் பதிலெழுதுங்கால் நப்ஸெஜகிய்யா குறிப்பிட்டதாவது:—

"கலீபாவான முஹம்மத் பின் அப்துல்லாஹ் மஹ்தீயிடமிருந்து அப்துல்லாஹ்பின் முஹம்மதுக்கு

நீங்கள் எனக்காக வளித்திருக்கும் வகையைச் சேர்ந்த அடைக்கலத்தையே நான் உங்களுக்காகவு மளிக்கிறேன். கிலாபத் எமக்குப் பாத்தியதை யுடையதென்பதையும், எமது மேன்மைகளாலும், எம்மைச் சேர்ந்தோராலுமே நீங்கள் அதையடைந்தீர்களென்பதையும் நீங்களே யறிவீர்கள். எமது பிதா ஹஸ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு பெருமானாரின் வஸீயாகவும், இமாமாகவு மிருந்தார்கள். அவர்களது புதல்வர்களான யாங்கள் உயிருடனிருக்கும்போது நீங்கள் அதற்கு யாங்ஙனம் வாரிஸாய் விட்டீர்கள்? இஸ்லாமுக்கு முன்பும், இஸ்லாம் வெளியான பிறகும் பனீஹாஷிம்களுள் எமக்குள்ள வம்சப்பெருமையும், மேன்மையும் வேறு யாருக்குமில்லை யென்பதையும் நீங்களறிவீர்கள். இஸ்லாமுக்கு முந்திய நாட்களிலிருந்த பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்

பாட்டியார் பாத்திமா பின்து அம்ரு என்பாருக்கு யாமே ஜனித்துள்ளோம்; நீங்களல்லீர். பனீஹாஷிம்களின் சந்ததிகளில் குறிப்பாக யான் யாவரையும் விடச் சிறந்தோனாகவும், தாய், தகப்பன் இருவழியிலும் மேம்பட்டவனாகவுமிருக்கிறேன். எனது நரம்புகளில் அரபிகளல்லாத அன்னைமார்களின் உதிரம் இல்லவேயில்லை. எனது வம்சத்தை எப்பொழுதும் அல்லாஹுதஆலா தனிச்சிறப்புப் பெற்றதாகவே வைத்திருக்கிறான். நபிமார்(தீர்க்கதரிசி)கள் யாவரினும் மேம்பட்டோர் பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களாவார்கள். நான் அவர்களின் புத்திரனாவேன். இஸ்லாமில் யாவருக்கும் முந்திபோரும், கல்வியில் எல்லாருக்கும் மேம்பட்டோரும், மார்க்க யுத்தத்தில் யாவரினும் சிறந்தோருமாயிருந்த ஹஸ்ரத் அலீ (ரலி.) எனது பிதாவாவார்கள். முஸ்லிம்களில் யாவருக்கு முன்பு தொழுகையை நிறைவேற்றிய ஹஸ்ரத் கதீஜா (ரலி.) எனது அன்னையாராவார்கள். பிறகு அவர்களது புத்திரிகள் யாவரினும் மேம்பட்டோரும், ஸுவர்க்கத்து மாதர்களின் தலைவர்களுமான ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) ஆவார்கள். இஸ்லாமுக்குப்பிறகு ஹாஷிம் குலத்துதித்த சத்புத்திரர்கள் ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன் (ரலி...) இவர்களாவர்கள். ஸுவர்க்கத்து வாலிபர்களின் தலைவர்களான இவ்விருவரில் முதியோரின் புத்திரன் யான். தற்போது பாருங்கள்! ஹஸ்ரத் அலீ (ரலி.) மாதா, பிதா இருவர் மூலமாகவும் ஹாஷிமின் புத்திரராவர். இமாம் ஹஸன் (ரலி.) மாதா, பிதா இருவர் மூலமாகவும் அப்துல் முத்தலிபின் புதல்வராவர். யான் மாதா, பிதா இருவர் மூலமாகவும் பெருமானார் (ஸல்.) அவர்களின் புதல்வனாவேன்.

அல்லாஹுதஆலா எப்பொழுதும் எமக்குத் தனிச்சிறப்பளித்துள்ளான். நரகலோகத்திலும் இச்சிறப்பை யளித்திருக்கிறானென்பதுண்மை. நான் ஸுவர்க்கத்தில் யாவரினும் மேன்மையான பதவியையுடையோருடையவும் புத்திரனாயுள்ளேன். நரகத்தில் யாவரினும் குறைந்த வேதனையை யடைவோனுடை

யவும் புத்திரனுயுள்ளேன். இங்ஙனம் நன்மைகள் மிகுந்துள்ள நல்லோருடையவும், பாவத்தில் யாவரினும் குறைந்த பாவி யுடையவும் புதல்வனுவேன். யான் ஒவ்வொரு விஷயத்திலும் அபயமளிப்ப தன்னியில் உங்கள்மீது ஏற்படும் மார்க்க விஷய மான தண்டனைகளுக்காகவும், முஸ்லிமுடையவும், உடன் படிக்கையுடையவும் உரிமை விஷயத்தில் ஏற்படும் தண்டனை களுக்காகவும் அடைக்கலமளிப்பதாய் அல்லாஹ்வை முன்வைத் துக்கூறுகிறேன். உங்களைவிட அதிகமாக நான் வாக்குத்தத்தத் தைக் காப்பாற்றுவேன். நீங்கள் எனக்குக் கொடுத்த அடைக் கலம் இப்னுஹுபீராவுக்குக் கொடுத்தது போன்றதாமோ? அல் லது உங்கள் சிறியதந்தை அப்துல்லாஹ்வுக்கு, அல்லது அபூ முஸ்லிமுக்குக் கொடுத்தது போன்றதா யிருக்குமோ?''

என்பதே. பெருமானுர் (ஸல்.) "மௌட்டிய காலத்துத் துர்ப்பழக்கங்கள்'' எனக்குறிப்பிட்டு மக்காவுடைய வெற்றி யின் போது தமது பாதங்களின் கீழ் மிதித்து விட்டதும், எல்லா முஸ்லிம்களையும் சகோதரர்களாக்கிய குர்ஆன் அடியோடழித்ததுமான வம்சப்பெருமையை இவ்விமாம்கள் தமக்குள்ள கிலாபத்தின் பாத்தியதையை நிரூபிப்பதற்கு எவ்வெவ்வகையில் வெளியிடுகின்றுர்களென்பதை நினைக்க ஆச்சரியம் மேலிடுகின்றதன்ருே? அவர்களது நோக்கம் சுயநலமே யென்பதும், ஜனநாயகத்துவமல்ல வென்பதும் உண்மையே. மன்ஸூரிடம் இக்கடிதம் கிடைத்ததும் அவ னது இலிபி இதற்குப் பதில் வரைய அனுமதி கோரினுன். "இஃது உமது வேலையன்று! வம்சம், வர்க்கம் இவைகளின் சண்டைகள் வந்துற்றகாலத்து நானே அதற்குப் பதிலளிக்க வேண்டும்'' எனக் கூறிவிட்டு மன்ஸூர் தானே அதற்குக் கீழ்க்கண்டவாறு பதிலெழுதத்தொடுத்தான்:—

"கலீபா அபூஜஃபர் அப்துல்லாஹ் பின் முஹம்மதிடமிருந்து முஹம்மத் பின் அப்துல்லாஹ்வுக்கு

உங்கள் கடிதம் எனக்குக் கிடைத்தது. பொதுமக்களைக் கிளப்பி விடுவதற்கும், அறிவிலிகளிடம் ஒப்புக்கொள்ளப் பட்டோராய்ப் போவதற்குமே பெண்களை அஸ்திவாரமாகக் கொண்ட வம்சப் பெருமையை யடுக்கியுள்ளீர்கள். சிறியதகப்பனுக்குள்ள மேன்மை மனைவிகளுக்குக் கிடையாதென்பது உண்மையேயன்றோ? அல்லாஹுத் தஆலா பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு நபித்துவத்தை யருளிச் செய்தபோது அவர்களது சிறியதந்தைகளில் நால்வர் (ஹம்ஜா, அப்பாஸ், அபூதாலிப், அபூலஹப்) உயிரோடிருந்தன ரென்பதையும், அவர்களில் இஸ்லாமைத்தழுவிய இருவருள் எனது தந்தை யொருவராவா ரென்பதையும், இஸ்லாமைத் தழுவாத இருவருள் உங்கள் தந்தை யொருவராவா ரென்பதையும் நீங்களே யறிவீர்கள். நீங்கள் பெண்களைக் குறிப்பிட்டு, அவர்களது பாந்தவ்வியத்தை யுடைத்தாயிருப்பதில் பெருமை யடித்துக்கொள்கிறீர்கள். இஃது அறியாமையேயாம். பெண்களுக்கு வம்சப்பெருமையில் பங்கு கிடைக்குமாயின் எல்லாப் பெருமையும் பெருமானாரின் அன்னையரான ஆமினு பின்து வஹப் அவர்களுக்கே கிடைத்திருக்கும். எனினும், அல்லாஹுத் தஆலா தான் கருதியோருக்குத் தனது மதத்தில் பெருமை யளிக்கிறான்.

அபூதாலிப் உடைய அன்னையார் பாத்திமா பின்து அம்ரு என்பாரைப் பற்றியும் நீங்கள் பெருமையடிப்பது ஆச்சரியத்திற்கிடமே யாகின்றது. 'அன்னாரின் புதல்வர்களில் எவருக்கேனும் இஸ்லாமைத் தழுவும் பாக்கியம் கிடைத்ததா?' வென்பதைச் சற்றே நினைத்துப் பார்த்தீர்களா? அஃது கிடைத்திருக்குமாயின் அதற்கு அதிகமான பாத்தியதையுடையோர் பெருமானாரின் தந்தையார் அப்துல்லாஹ்வே யாவர். எனினும், அஃது இறைகருணையைப் பொருத்திருக்கின்றதன்றோ? ஹஸ்ரத் அலீ(ரலி.) தாய் தந்தை இருவர்புறத்தாலும் ஹாஷிம் வர்க்கத்தைச் சேர்ந்திருப்பதையும், ஹஸன்(ரலி.) தாய்தந்தை இருவர் புறத்தாலும் அப்துல் முத்தலிப் உடைய புத்திராயிருப்பதையும் நீங்கள் பெருமைக்குக் காரணமாய்க் கொண்டு, உங்

களது வம்சவழியைப் பெருமானார் (ஸல்.) வரையில் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறீர்கள். இஃது பெருமைக்குக் காரணமாயிருப்பின் பெருமானார் (ஸல்.) இதற்கு அதிகமான பாத்தியதை யுடையோராயிருப்பார்கள். ஆனால் அவர்கள் ஒரு வழியால் மட்டும் ஹாஷிம் குலத்தைச் சேர்கிறார்கள். பிறகு நீங்கள் உங்களைப் பெருமானார் (ஸல்.) அவர்களின் புத்திரரெனக் குறிப்பிடுகின்றீர்கள். இதை அல்லாஹ்வே மறுத்துத் தனது கிரந்தத்தில் "முஹம்மத் உங்களில் எவரது தந்தையாகவுமிருக்கவில்லை" யென வெட்டவெளிச்சமாய்க் குறிப்பிடுகிறான். நீங்கள் அவர்களது புதல்விகளின் புத்திரரென்பதுண்மையே. இஃது நெருங்கிய பாந்தவ்விய மென்பதும் சரியே. எனினும், இதனால் நீங்கள் எத்தகைய வாரிஸ் பாத்தியதையைக் கொள்ள முடியாது. இதனால் இமாமத்திற்குப் பாத்தியதையுடையோராகவும் மாட்டீர்கள்.

இதே பாந்தவ்வியத்தை முன்னிட்டு உங்கள் பிதா ஹஸ்ரத் அலீ (ரலி.) எவ்விதத்தாலும் கிலாபத்தை யடைவதற்கு முயற்சித்தனர். ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களுடன் சண்டையிடச்செய்து மனவருத்தத்தை யுண்டு செய்தனர். இதே கோபத்தினால் அவர்களின் வியாதியையும் ஒருவருக்கும் வெளியிடவில்லை. அவர்கள் ஆவி துறந்து விடவும் இரவுக்கிரவே அவர்களை நல்லடக்கம் செய்துவிட்டனர். ஆயினும், எவரும் அபூபக்ர் (ரலி.) அவர்களல்லாது இன்னாரை கலீபாவாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. பெருமானார் (ஸல்.) வியாதி யுற்றிருக்கும் போதும் அன்னார் இருந்தனர். எனினும், தொழுகையை நடாத்திச்செல்வதற்கு யாரை நியமித்தனரென்பதைத் தாங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களுக்குப்பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி.) அன்னாரின் பிரதிநிதியானார்கள். பிறகு கிலாபத் ஆலோசனையாளர்களின் கைவசம் வந்தது. இதிலும் ஹஸ்ரத் அலீ (ரலி.) தேர்ந்தெடுக்கப்படக்கூடவில்லை; ஹஸ்ரத் உத்மான் (ரலி.) கலீபாவானார்கள். அவர்களுக்குப்பிறகு தல்ஹா, ஜுபைர் (ரலி.)

இவர்களை அலீ (ரலி.) இம்சித்தனர். ஸஅத் பின் அபீவக்காஸ் (ரலி.) இடம் பைஅத் வாங்க முயற்சித்தனர். எனினும், இவர்கள் தமது வாயிலை யடைத்துக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி.) காலஞ்சென்றபிறகு இமாம் ஹஸன் (ரலி.) அன்னாரின் ஸ்தானத்திற்கு வந்தார்கள். முஆவியா (ரலி.) ஷாமிலிருந்து அவர்கள்மேல் படையெடுத்தார்கள். இதன் முடிவு அவர்கள் கொஞ்சம் தொகையைப் பெற்றுக்கொண்டு தமது வர்க்கத்தையும், கிலாபத்தையும் அமீர் முஆவியா (ரலி.) அவர்களுக்கு விற்றுவிட்டுத் தாம் மதீனாவுக்கு வந்துவிட்டதேயாம். எனவே, உங்களுக்கு ஏதேனும் பாத்தியதை யிருக்குமாயின் அதையும் நீங்களே விற்றுவிட்டீர்கள். உங்கள் தந்தை அபூதாலிபுக்கு நரகத்தில் எளிய தண்டனை கிடைக்கு மென்பதைக் கொண்டு நரகத்திலும் உங்களுக்குத் தனிச்சிறப்பு இருப்பதாய்க் குறித்திருப்பதை நோக்க மிகவும் விசனிக்கவேண்டியதாகவே யிருக்கின்றது. இறைவனது தண்டனை குறைந்ததேயாயினும், அதிகமானதே யாயினும் முஸ்லிம் ஒருவனது பெருமைக்குக் காரணமாயிராது; அதில் எத்தகைய மதிப்புங் கிடையாது. பிறகு “எமது நரம்புகளில் அரபியல்லாத உதிரங்கிடையவே கிடையாது” என நீங்கள் எழுதியிருப்பதிலிருந்து பெருமானாரின் புதல்வர் இப்ராஹீம் என்பாரைப் பார்க்கினும் உங்களை மேன்மையாய் நீங்கள் கருதுவதாகவே தெரியவருகின்றது. அன்னார் ஒவ்வொரு விஷயத்திலும் உங்களைப்பார்க்கினும் மேன்மையானோரா யிருந்தனர். உங்களது வம்சத்திலேயே ஜைனுல் ஆபிதீன் (ரலி.) உங்களது பாட்டனார் ஹஸன் பின் ஹஸன் (ரலி.) அவர்களைப் பார்க்கினும் மேம்பட்டோரா யிருந்தனர். பிறகு அன்னாரின் புதல்வர் முஹம்மத்பாகிர் உங்கள் தந்தையைப் பார்க்கினும் மேம்பட்டோரா யிருந்தனர். அன்னாரின் புத்திரர் ஜஃபர் ஸாதிக் உங்களைப் பார்க்கினும் மேம்பட்டோராவர். இவர்கள் யாவரின் நரம்புகளிலும் அரபியல்லாத உதிரம் ஓடுகின்றதன்றோ?

நீங்கள் வம்சத்திலும், தாய்தந்தையர் மூலமாகவும் உங்களை பனீ ஹாஷிம்கள் யாவரினும் மேன்மைக் குரியோரெனக் குறிப்பிடு

றீர்கள். 'பனீஹாஷிம்கள்' என்பதில் பெருமானாரும் கலந்திருக்கிறார்கள். இறுதிதினத்தில் அல்லாஹ்வின் முன்னிலையில் நிற்கவேண்டுமென்பதையும் நீங்கள் கருதிப்பார்த்திருக்கவேண்டும். 'ஸிப்பீன்' சண்டையில் உங்கள் தந்தை ஹஸ்ரத் அலீ (ரலி.) பஞ்சாயத்தார்களது தீர்ப்பின் பிரகாரம் நடப்பதாய் வாக்களித்திருந்தனர். பஞ்சாயத்தார் அவர்களை கிலாபத்தைவிட்டும் நீக்கிவிட்டதாய் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். யஜீத் உடைய காலத்தில் உங்கள் சிறிபதந்தையார் ஹுஸைன் பின் அலீயென்பார் இப்னுஜியாதை எதிர்ப்பதற்காக வந்து, அவர்களுக்கு ஆதரவாயிருந்தோரின் கரத்தாலேயே கொல்லப்பட்டனர். பிறகு உங்கள் வர்க்கத்தில் எத்தனையோபேர் தலைதூக்கினர். பனீஉமையாக்கள் அவர்களைக் கொன்றார்கள்; தூக்கிவிட்டார்கள். இறுதியாக நாங்கள் முன்வந்து உங்களுக்காகவும், எங்களுக்காகவும் பழிவாங்கினோம். அவர்கள் தொழுகைக்குப் பிறகு உங்கள்மீது சாபமிட்டுக்கொண்டிருந்ததைத் தடுத்தோம். உங்கள் மதிப்பையுயர்த்தினோம். தற்போது எங்களிடம் இதே விஷயங்களைப் பிரமாணங்களாய் எடுத்துக்காட்ட முன்வருகிறீர்கள். நாங்கள் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் மதிப்புரைகளைக் குறிப்பிடுவதன் மூலம் ஹஸ்ரத் அப்பாஸ், ஹம்ஜா, ஜஃபர் (ரலி.........) இவர்களைப் பார்க்கினும் அன்னாரை மேன்மையானோராய் நாங்கள் கருதிக்கொள்வோமெனக் கொள்கிறீர்களா? அப்பெரியார்கள் நன்னிலைமையில், எத்தகைய குழப்பமுமின்றியே காலஞ்சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி.) முஸ்லிம்களது உதிரஞ்சிந்தப்பெற்ற யுத்தங்களில் வீழ்ந்துவிட்டார்கள்.

இஸ்லாமுக்கு முந்தியநாட்களில் ஹாஜிகளுக்குத் தண்ணீர்ப் புகட்டலும், ஜம்ஜம் உடைய தலைமைத்துவமும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களுக்குக் கிடைத்திருந்ததென்பதையும், அபூதாலிப் அவர்களுக்குக் கிடைக்கவில்லை யென்பதையும் நீங்களறிவீர்கள். ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களின் முன்பு உங்கள் தகப்பனார் இவ்வியாஜ்ஜியத்தையுந் தொடுத்தனர். எனினும் எங்களுக்குச் சாதகமாகவே தீர்ப்புக் கிடைத்தது. பெரு

மானூர் (ஸல்.) இவ்வுலகைவிட்டுப் பிரிந்தபோது அவர்களின் சிறிய தந்தைகளில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தவிர்த்து பிறிதெவரும் உயிருடனிருக்கவில்லை. எனவே, அப்துல் முத்தலிப் உடைய புதல்வர் யாவரினும் பெருமானாரின் வாரிஸ் அவர்களே யாவார்கள். பிறகு பனீஹாஷிம்களில் அநேகர் கிலாபத்தையடைவதற்காகக் கிளம்பினர். எனினும் பனீஅப்பாஸ்களே அதையடைந்தார்கள். எனவே, புராதான உரிமையும், தற்போதைய வெற்றியும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களுக்கும, அவர்களின் புதல்வர்களுக்குமே கிடைத்தது. 'பதர்' யுத்தத்திறகு உங்களது சிறிய தந்தையர் தாலிப், அகீல் இவர்கள் காரணமாகவே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களும் வரநேர்ந்தது. அவ்விருவரும் பசியால் இறந்திருப்பர்; அன்றி உத்பா, ஷைபா இவர்களின் பாத்திரத்தை நக்கியிருப்பர். எங்களது பிதாவாலேயே இவ்விழிவைவிட்டுத் தப்பினர். தவிர, இஸ்லாமின் துவக்க நாட்களில் பஞ்சத்தில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களே அபூதாலிபுக்கு உதவிசெய்தார்கள். உங்கள் சிறிய தகப்பனார் அகீலுக்காக ஏற்பட்ட 'பதர்' யுத்தத்து நஷ்டயீட்டையும் அவர்களே கொடுத்தார்கள். சுருங்கக்கூறுமிடத்து இஸ்லாமுக்கு முன்பும், பின்பும் இருகாலத்திலும் எங்களது நன்மைகளே உங்கள்மீது இருக்கின்றன. எங்கள் பிதா உங்கள் பிதாவுக்கு நன்மைகள் செய்தனர்; நாங்கள் உங்களுக்கு நன்மைகள் செய்தோம். நீங்கள் அடையமுடியாத மதிப்பை நாங்கள் உங்களுக்குத் தந்தோம். நீங்கள் வாங்காத பழியை நாங்கள் உங்களுக்காக வாங்கினோம். **வஸ்ஸலாம்.**"

தற்பெருமை, எதிரியிடம் குற்றங்காணல் இவைகளைத் தவிர்த்து வேறெத்தகைய பொருளும் கொள்ளத்தகாத இக்கடிதப்போக்குவரவுக்குப் பிறகு சண்டைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குராஸான்வாசிகளுக்கு முஹம்மத் அவர்கள் வெளிக்கிளம்பி யிருக்கும் செய்தி தெரியக்கூடாதெனவும், இன்றேல் அபூமுஸ்லிமின் கொலையால் பனீஅப்பாஸ்கள் மீது வருத்தமடைந்திருக்கும் அவர்களும் முஹம்

மதை யாதரிக்கக் கிளம்பிவிடலாமெனவும் மன்ஸூர் பயந் தான். எனவே, அவர்களுக்கு எத்தகைய விஷயமும் தெரி யாதிருப்பதற்காகக் கீழ்ப்புறத்துவாயிலை யடைத்துவிட் டான். முஹம்மதை எதிர்ப்பதற்காக மன்ஸூர் தனது பிரதிநிதி ஈஸா பின் மூஸாவைத் தேர்ந்தெடுத்தான். இவன் ஒரு சேனையைக்கொண்டு மதீனா போய்ச் சேர்ந்து, அங் குள்ள தலைவர்களுக்கு இக்குழப்பத்திற் கலந்துகொள்ள வேண்டா மெனவும், தமது சொத்தையும், ஆவியையும் அபாயத்திற் கிலக்காக்க வேண்டாமெனவும் எழுதினான். மதீனாவாசிகளிலநேகர் முஹம்மதை யாதரிப்பதை விடுத்து ஈஸாவிடம் வந்து சேர்ந்தனர். அவர்களிலநேகர் பெரு மானாரின் குடும்பத்தைச் சார்ந்தோராவர். முஹம்மத் தற் காப்புக்காக மதீனாவைச் சுற்றி அகழ்த்தோண்டினர். ஈஸா நான்கு புறத்தாலும் முற்றுகையிட்டான். முஹம்மத் எதிர்க்கமுடியாது, வழிபடுவதாய் வரைந்தனுப்பினர். ஈஸா அதற்கு எவ்வித பதிலும் எழுதாதுபோகவே முன்னூறுக் கும், நானூறுக்கும் இடையேயுள்ள தொகையினருள்ள தமது சொந்த மனிதருடன் முஹம்மத் போர்க்களத்திற்கு ஹி. 145, ரமலான், 14-ந்தேதி வந்து சண்டையிட்டு மடிந் தனர். அன்னாரின் தலை மன்ஸூரிடம் அனுப்பப்பெற் றது. ஈஸா மதீனாவுக்குட் பிரவேசித்து பனீஹஸன் களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். பிறகு மதீனா வாசிகளுக்குப் பொதுவான அடைக்கலம் கொடுத்துவிட்டு, ரமலான், 19-ந்தேதி மக்காவுக்குப் பிரயாணமானான்.

## இப்ராஹீம்

இமாம் முஹம்மத் உடைய சகோதரர் இப்ராஹீம் பஸராவிலிருந்தனர். அங்கு அநேகர் அன்னாரை யாதரிப் பதாக பைஅத் செய்திருந்தனர். முஹம்மத் வெளிப்பட்ட சின்னாட்களுக்குப்பிறகு அவர்கள் தமது இமாமத்தின்

கொடியை யுயர்த்தி, பஸரா தொடுத்து அஹ்வாஜ் வரைக் கும் கைப்பற்றிக் கொண்டார்கள். மதீனுவின் சம்பவத்தை முடித்துவிட்டு வந்திருந்த ஈஸாவுக்கு உடனே சென்று இவ் விஷயத்தையுங் கவனிக்கும்படி மன்ஸூர் வரைந்தான். இதற்கிடையே இப்ராஹீமுக்குத் தமது சகோதரர் முஹம் மத் கொல்லப்பட்ட செய்தி கிடைக்கவே இன்னாது தீரம் குன்றியது. ஹி. 145, துல்கஃதா, 25-ந்தேதி ஈஸா சென்று இன்னுரைக் கொன்றுவிட்டனன். இவ்விரண்டு சகோதரர்களும் அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகளில் வீரம், தெய்வபக்தி, கல்வி, நன்னடத்தை இவைகளில் தனிச்சிறப்புப் பெற்றிருந்தார்கள். எனினும், விதி அவர் களுக்குச் சாதகமாயிருக்கவில்லை. மதீனுவில் இமாம் மாலிக் (ரஹ்.) முஹம்மதின் பைஅத்திற்காக பத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுத்ததால் அப்பாஸிய்யாக்கள் அவர்களைச் சாட் டையா லடித்ததாகவும், இராக்கில் இமாம் அபூஹனீபா (ரஹ்.) இப்ராஹீமை யாதரித்ததால் மன்ஸூர் அவர்களை பக்தாதுக்குக் கொண்டுசென்று சிறைசெய்ததாகவும், அதே சிறையில் ஹி. 150-ல் அவர்கள் இறந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

குராஸான் வாசிகளுக்கு எப்பொழுதுமே மன்ஸூர் அஞ்சியிருந்தான். 'அலீ (ரலி.) அவர்களின் சுற்றத்தார் மீது தான் செய்துள்ள கொடுமைகள் காரணமாக அவர்கள் தனக்கு விரோதிகளாய் விடுவார்களோ?' வென்றஞ்சிய அவன் அவர்களின் தலைவர்களைக் கொண்டதொரு கூட்டத் தின்முன்னிலையில் ஒரு சொற்பொழி வாற்றினுன். அதன் சாரம் வருமாறு:—

"குராஸான்வாசிகளே! நீங்கள் எம்மைச் சார்ந்தோரும், எமக் குதவியாளரும், எமது அரசியலை நிறுவியோருமாவீர்கள். நீங் கள் எம்மைத்தவிர்த்து பிறிதெவன் கரத்திலும் பைஅத் செய்

திருப்பின் அவன் எம்மைவிட நல்லவனாயிருக்கமாட்டான். எமது சிறிய தகப்பனார் சந்ததிகளான பெருமானார் குடும்பத்தவரையும், கிலாபத்தையும் ஒருகாலம் வரை நாங்கள் விட்டுவைத்திருந்தோம். "அவர்கள் என்னதான் செய்கிறார்கள் பார்க்கலாம்!" எனப் பொறுத்திருந்தோம். அவர்களில் முதன்முதலாக ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கைவசம் கிலாபத் வந்தது. அவர்களின் ஆடை முஸ்லிம்களின் உதிரத்தால் கறைப்பட்டது. அவர்கள் காலத்தில் முஸ்லிம்களுள் பிளவேற்பட்டது. இருதரப்பாலும் பஞ்சாயத்தார் நியமிக்கப் பெற்றனர். அவர்கள் ஒருமனதாய் அன்னாரை நீக்கிவிட்டார்கள். அவர்களின் தீர்ப்பை அன்னார் ஒப்புக்கொள்ளாது போகவே அன்னாரைச் சேர்ந்த ஆதரணைக்கர்த்தாக்களும், அன்னாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்தவர்களும் ஒருங்கு சேர்ந்துக் கிளம்பி, அன்னாரைக் கொன்றுவிட்டார்கள். பிறகு இமாம் ஹஸன் (ரலி.) அன்னாரின் பிரதிநிதியானார்கள். இவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. முஆவியா (ரலி.) இவர்கள் முன்பு பொருளைவைத்து இரகசியத்தில் "எனக்குப் பின் உங்களை எனது பிரதிநிதியாக்குகிறேன்" எனக்கூறி யனுப்பவும் இதனால் ஏமார்ந்துபோய் கிலாபத்தை முஆவியா (ரலி.) அவர்கள் வசம் ஒப்புவித்துவிட்டு மதீனாவுக்கு வந்து, தமது காலத்தை ஸ்திரீகளுடன் கழிக்கலானார்கள். தினம் ஒரு விவாகம் செய்வதும், ஒரு விவாகரத்து செய்வதுமா யிருந்தார்கள். இதே காரியத்தில் மூழ்கியிருந்து தமது படுக்கையில் இறந்துபோனார்கள். பிறகு அவர்களின் சகோதரர் ஹுஸைன் (ரலி.) வெளிக்கிளம்பினார்கள். நயவஞ்சகர்களான கூபாவாசிகள் அவர்களை யழைத்துக் கொன்று விட்டார்கள். அவர்களுக்குப்பிறகு அதே கூபாவாசிகள் ஜைத் பின் அலீயின் கைவசம் பைஅத் செய்தார்கள். எனது சிறிய தந்தை தாவூத் பின் அலீயும், இமாம் முஹம்மத் பாகிரும் ஜைத் அவர்களுக்கு என்னதான் போதித்துத் தடுத்தும், கூபாவாசிகளின் தூண்டுதலால் அவர்கள் இவர்களின் போதனைகளைக் கேட்கவில்லை. சமயத்தில் கூபாவாசிகள் இவர்களைக் கைவிட்டார்கள். இதன்

பயனாக அவர்கள் கொல்லப்பட்டு, அவர்களின் திரேகம் தூக்கி விடப்பெற்றது.

பனீஉமையாக்கள் இக்கோபத்தில் பனீஅப்பாஸ்கள்மீதும் கொடுமைகள்புரியத் தொடுத்தார்கள். எமது பெருமை, மரியாதை இவைகளை எடுத்துவிட்டார்கள். கைதிகளைப்போல் எம்மை தாயிபுக்கும், ஷாமுக்கும், ஷராத்துக்குமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கனுப்பத் தொடுத்தார்கள். இக்கஷ்டகாலத்தில் அல்லாஹு தஆலா உங்களுள்ளங்களுக்கு எமக்கு உதவளிப்பதற்கான உணர்ச்சியைக் கொடுத்தான். இதனால் எமதுரிமையும், அழிந்துபட்ட மரியாதையும் எமக்குக் கிடைத்ததுடன், கிலாபத்தும் அதற்குப் பாத்தியதையுடையோரிடம் வந்துவிட்டது. தற்போது எமது கிலாபத் நிறுவப்பெற்றபிறகு ஏற்கனவே ஒன்றுமே செய்திராத இவர்கள் பொறாமையாலும், பகைமையாலும் புரட்சி செய்கிறார்கள். யாம் இவர்களுக்கு என்னதான் நன்றிசெய்தாலும் இவர்கள் மாறுசெய்யவே முன்வருகிறதுடன் பைஅத்தைமுறித்தும், புரட்சிசெய்தும் தமது பொருள், ஆவி இவைகளை எமக்காக அர்ப்பணம் செய்கிறார்கள்.''

## அரசியல் ஒழுங்குமுறை

தேசவொழுங்குமுறை பனீஉமையாக்களின் காலத்திலிருந்தவாறே பனீஅப்பாஸ்களின் காலத்திலுமிருந்தது. ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் கலீபாவின் புறத்தால் ஒவ்வொரு அதிகாரி நியமிக்கப்படுவான். அவனது கடமைகள் (1) பிறமதஸ்தருடன் மதயுத்தம் (2) தொழுகையை நடாத்தல் (3) தீர்வை வசூலித்தல் (4) அமைதிநிறுவல் ஆக நான்காம். இவைகளுள் தான் கருதியவைக்கு அதிகாரி தனக்காகப் பிரதிநிதியையும் நியமிப்பான். நியாயாதிபதி கலீபாவாலேயே நியமிக்கப்படுவான். யுத்தபயம் ஏற்பட்ட பிரதேசங்களில் சேனாதிபதியும் கலீபாவின் புறத்தால் அனுப்பப்படுவான். அரசாங்கமும் குறிப்பானதாயிராது. சிலசமயங்களில் இரு அரசாங்கங்கள் ஒரே அதிகாரியிடம்

ஒப்புவிக்கப்படும். சில சமயங்களில் ஒரு அரசாங்கம் இரண்டாய் வகுக்கப்பட்டு இரு அதிகாரிகளின் கைவசம் ஒப்புவிக்கப்படும். மன்ஸூரின் காலத்தில் அவனது வம்சத்தைச் சேர்ந்தோரே அநேகமாய் மாகாண அதிபர்களாய் நியமிக்கப்பட்டுவந்தார்கள். அப்பாஸிய்யா கலீபாக்கள் எவ்வதிகாரியும் நீண்டகாலமாய் ஒரு அரசியலிலிருப்பதை விரும்பார்கள். 'அவன் தனிப்பட்ட தலைவனென வாதாடுவானோ?' வென்ற அச்சமே இதற்குக் காரணமாம்.

## மந்திரிப் பதவி

பனீஉமையாக்களின் காலத்தில் மந்திரிப்பதவி இருக்கவில்லை. அரசாங்க அங்கத்தவர் 'அமீர் = தலைவர்' எனவும், 'முஷீர் = ஆலோசனையாளர்' எனவுங் குறிப்பிடப்படுவர். அப்பாஸிய்யாக்களின் காலத்தில் முதன்முதலாக அபூஸல்மா கிலால் இப்பதவியையடைந்தான். ஸப்பாஹ் அவனைக் கொன்றுவிட்டதும் காலித் பின் பர்மக் என்பானை இப்பதவியில் நியமித்தான். இவன் பனீஅப்பாஸ்களின் பிரசாரகனுவன். அவர்களது கிலாபத்தை நிறுவுவதில் குராஸானில் அதிகமுயற்சி எடுத்துக்கொண்டான். இவன் ஆலோசனை, கொடை இவைகள் நிரம்பியோனும், பொதுஜன ஆதரவு பெற்றோனுமாயிருந்தான். இதனால் ஸப்பாஹ் இவனை மந்திரி ஸ்தானத்திற்கு நியமித்தான். அபூஸல்மாவின் முடிவைக் கண்ட இவன் பயந்து, தன்னை 'மந்திரி' யெனக் குறிப்பதில்லை. மன்ஸூர் இயற்கையாகவே யதேச்சாதிகாரத்தை விரும்புவோனாதலின் வேறொருவன் கரத்தில் சுதந்தரத்தைக் கொடுக்க விசைவதில்லை. எனவே, அவன் காலத்தில் மந்திரிப்பதவிக்கு எத்தகைய மகிமையுமிருக்கவில்லை. எனவே, காலித்இதைவிட்டுவிட்டு ஒரு மாகாணத்தின் தலைவனாகச் சென்றுவிட்டான்.

## அபூஐயூப்

காலிதின் ஸ்தானத்தில் அபூஐயூப் மூர்யானீ மந்திரியா ஞன். இவன் அஹ்வாஜைச்சேர்ந்த 'மூர்யான்' என்னும் ஊர்வாசியாவான். பனீஉமையாக்களின் காலத்தில் ஸுலை மான் பின் ஹபீப் பின் முஹல்லப் பின் அபீஸுப்ரா என பானின் இலிபியாயிருந்தான். மன்ஸுர் அக்காலத்தில் ஸுலைமானது அதிகாரத்தின்கீழ் ஒரு ஜில்லாவின் அதிகாரி யாயிருந்தான். ஸுலைமான் இவன் மோசம் செய்ததாய் வந்த குற்றத்திற்காகச் சாட்டையடி கொடுத்தான். பின் னும் கொன்றுவிடவே கருதினான். அபூஐயூப் அவனைத் தப்பவைத்தான். இந்நன்றிக்குப் பிரதியாக அவன் கலீபா வானதும் இவனை மந்திரியாக்கிக்கொண்டான். அபூஐயூப் அவனது குணாதிசயங்களை யறிந்திருந்தானாதலால் அவன் முன்னால் செல்லாமலிருந்ததுடன் ஒவ்வொரு சமயத்திலும் அவனுக்குப் பயந்திருந்தான். இறுதியாக அவன் பயம் சரியானதாகவே போனது. ஹி. 153-ல் மன்ஸுர் அவன் மீது கடிந்துகொண்டு அவனையும், அவனது வம்சத்தவரை யும் பல இன்னல்களுக்கிலக்காக்கிக் கைதுசெய்ததுடன், அவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்துவிட் டான்.

## ரபீஃ பின் யூனுஸ் ஹாஜிப்

மன்ஸுர் அபூஐயூபைக் கைதுசெய்துவிட்டு, ரபீஃ என்பானுக்கு மந்திரிப்பதவி யளித்தான். இவன் ஹஸ்ரத் உத்மான் பின் அப்பான் (ரலி.) அவர்களின் அடிமை கைஸான் உடைய சந்ததிகளினின்றிருந்தான். புத்தி நுட்பம், இலக்கிய இலக்கணம், கொடை இவைகள் நிரம்பப் பெற்றோனும், கணிதத்தில் தேர்ச்சிபெற்றோனுமாவன். மன்ஸுர் மக்காவில் ஆவிதுறந்தபோது இவன் கூடவிருந் தான். இவனே அவனது புதல்வன் மஹ்தீயுக்காக பைஅத்

வீங்கினன். ஹாதீயின் காலம்வரை தனது உத்தியோகத்திலேயே யிருந்து, ஹி. 170-ல் காலகதியடைந்தான். இவன் மந்திரிப்பதவியை வகித்துவந்தாலும் இவனது சிறப்புப்பெயர் 'ஹாஜிப் = வாயில்காப்போன்' எனவே வழங்கி வந்தது.

## ஹாஜிப்

வாயில் காப்பது அக்காலத்திய சிறப்புப்பெற்ற உத்தியோகமாம். ஹாஜிபின் அனுமதியன்றியே எவனும் கலீபாவிடம் செல்லமுடியாது. ஹஸ்ரத் அலீ, அமீர் முஆவியா (ரலி....) முதலியவர்களை கவாரிஜ்கள் எதிர்த்தது தொடுத்து, யாரும் திடீரெனப் பிரவேசித்து கலீபாவைக் கொன்றுவிடாதிருக்கும் பொருட்டு கலீபாக்கள் இவ்வுத்தியோகத்தை நிறுவினர்கள். பெரிய பெரிய அரசியல் விஷயங்களில் ஹாஜிப் இடம் கலந்தாலோசிப்பது முக்கியமாகக் கருதப்பட்டு வந்தது. அப்பாஸிய்யாக்களது கிலாபத்தின் காலத்தில் இவ்வுத்தியோகம் மிகவும் மேன்மையானதாகவிருந்தது.

## இலிகிதம்

ஹாஜிபுக்கு அடுத்தது இலிகித உத்தியோகமாகவே யிருந்தது. இவன் கலீபாவிடமிருந்துகொண்டு அதிகாரிகளுக்கு நிரூபங்களும், கட்டளைகளும் வரைந்தனுப்புவான். சிலசமயங்களில் மந்திரிப் பதவியும், இலிகிதப் பதவியும் ஒருவனுக்கே யளிக்கப்படுவதுமுண்டு.

## நீதிமன்றம்

ஒவ்வொரு பெரிய நகரத்திலும் வழக்குகளைத் தீர்ப்பதற்காக ஒவ்வொரு நீதிபதி நியமிக்கப்படுவான். மன்ஸூரின் காலத்தில் பிரதமநீதிபதி உத்தியோகம் ஏற்படவில்லை. அக்காலத்திய பிரசித்திபெற்ற நீதிபதி முஹம்மத் பின் அப்துர்ரஹ்மான் பின் அபீலைலா என்பாராயிருந்தார். இன்

97437

ஞர் ஆலோசனையாளர்களைச் சேர்ந்திருந்தனர். இன்னர் 30-வருடங்கள்வரை கூபாவில் நீதிபதியாகவிருந்தனர். ஹி. 148-ல் இறந்து போயினர்.

## போலீஸ்

இவ்வுத்தியோகத்திற்கு திடசரீரம், புத்திநுட்பம் மிகுந்தவன் தலைவனாய் நியமிக்கப்படுவான். அமைதி நிலவச் செய்வதும், கொள்ளை, திருட்டு முதலிய ஏனைய குற்றங்களைத் தடைசெய்வதும் இவனது கடமையாம். ஒவ்வொரு நகரத்திலும், மாகாணத்திலும் உள்ள அரசியல் ஒழுங்கு முறை ஏறக்குறைய இதுவேயாம்.

## சேனை

ஒவ்வொரு அரசாங்கமும் தனக்கு நம்பிக்கையுள்ளோரையே சேனையிற் சேர்த்துக்கொள்ளுகின்றது. பனீஉமையாக்களின் காலத்தில் சேனையில் அரபிகளே சேர்க்கப்பட்டு வந்தார்கள். அதன் தலைமைப்பதவியும் அவர்களுக்கே அளிக்கப்பட்டுவந்தது. குராஸான்வாசிகளின் உதவியைக் கொண்டு அரசியலை நிறுவியதால் பனீஅப்பாஸ்களின் காலத்தில் கீழ்த்தேச மக்களில் ஒருபெருந்தொகை சேனையிற்சேர்க்கப்பெற்றது. அபூமுஸ்லிம் குராஸான்சிப்பாய்களின் தலைவனாகவும், அப்துல்லாஹ் பின் அலீ அரபிசிப்பாய்களின் தலைவனாகவுமிருந்தான். குராஸான் சிப்பாய்கள் அப்துல்லாஹ் பின் அலீயை நஸீபைனில் தோற்கச்செய்து, அரபிசேனையை வெற்றிகொண்டதால் அவர்கள்மீது பின்னும் அதிக நம்பிக்கை ஏற்பட்டது. எனினும், குராஸான் வாசிகளின் வன்மை அதிகமாவதையும் மன்ஸூர் விரும்பவில்லையாதலால் அபூமுஸ்லிமைக் கொன்றுவிட்டுத் தனது வர்க்கத்தைச் சேர்ந்தோரையும், தனது வர்க்கத்து அடிமைகளையும் அநேகமாய் சேனைத்தலைவர்களாய் நியமித்தான். முஹம்மத், இப்ராஹீம் இவ்விருவரையும் எதிர்ப்பதற்காகத்

தனது பிரதிநிதியான ஈஸாவையே யனுப்பியதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதே.

**மஅன் பின் ஜாயிதா**

மன்ஸூருடைய பிரசித்திபெற்ற சேனாதிபதிகளுள் மஅன் பின் ஜாயிதா வென்பானும் ஒருவன். இவன் பனீ உமையாக்களின் காலத்தில் இராக்கைன் உடைய தலைவனான இப்னுஹுபீரா விடமிருந்தான். வாஸித் நகரத்து முற்றுகையின்போது அவனுடனிருந்து, தீரத்துடன் எதிர்த்தான். அவன் கொல்லப்பட்ட பிறகு மன்ஸூருக்குப் பயந்து ஒளிந்து திரிந்துகொண்டிருந்தான். ஏறக்குறைய அறுநூறு பேர்களைக்கொண்ட குராஸான்வாசிகளின் ஒரு கூட்டம் அபூமுஸ்லிமின் கொலைக்காக மன்ஸூரைப் பழி வாங்கத்தயாரானது. இவர்கள் காஷானுக்குச் சமீபமாக 'பலீதா' வென்னுமிடத்தில் ஒன்றுசேர்ந்து, அங்கிருந்து புறப்பட்டு அம்பார் போய்ச்சேர்ந்தார்கள். இவர்கள் நகரத்திற்பிரவேசித்ததும் மன்ஸூருக்கு இச்செய்தி கிடைத்தது. அவன் எதிர்ப்பதற்காகக் கிளம்பினான். அந்நேரத்தில் மஅன் அரசாங்கமாளிகைக்கு முன்னிருந்தான். அவன் கலீபாவின் அங்கவடியைப் பிடித்துக்கொண்டு திரும்பிச்செல்லும்படியும், தாமே எதிரிகளை எதிர்ப்பதற்குப் போதுமெனவும் விண்ணப்பித்துக் கொண்டான். மன்ஸூர் திரும்பிச்செல்ல மறுத்தான். இதற்கிடையில் குராஸான் வாசிகள் அங்குவந்து சேர்ந்து, அவன்மீது பாய்ந்தார்கள். மஅன் சிலபேர்களின் உதவியைக்கொண்டே அவர்களை யடித்துவிரட்டித் தனது திறமையைக் காண்பித்தான். இவனது வீரத்தைக் கண்ணுற்ற மன்ஸூர் திகைத்துப்போய் இவனுக்கு 'மனுஷசிங்கம்'என்னும் சிறப்புப்பெயரை யளித்ததுடன் இவனது பெயரையும், நிலைமையையும் தெரிந்த பிறகு அபயமுமளித்தான். பின்னும் 10,000-திர்ஹம் சன்

மானமளித்து யமன் தேசத்திய தலைமைத்துவமுமளித் தான். அங்கு அவன் புரட்சியையொடுக்கி அமைதி நிலவச் செய்து, மிகத்திறமையுடன் தனது கடமைகளைப் பூர்த்தி செய்தான். ஸீஸ்தானில் குழப்பம் அதிகமாகத் தலைகாட் டியபோது மன்ஸூர் அவனை அவ்விடத்துத் தலைவனாய் நியமித்தனுப்பினான். அவன் அம்மாகாணத்தையும் சீர்ப் படுத்தினான். ஹி. 151-ல் அங்கேயே அவன் அயர்ந்திருக் கும் போது காரிஜீக்கள் கொன்றுவிட்டார்கள். மஅன் புத்தி நுட்பம், அமைதி இவைகள் நிரம்பப்பெற்றோனாயும், கொடையில் ஹாத்திமாயும், வீரத்தில் ருஸ்துமாயும் இருந் தான்.

## அம்ரு பின் அலா

இவனும் மன்ஸூரின் சேனாதிபதிகளுள் ஒருவனா வான். தப்ரிஸ்தானைச்சுற்றி ஏற்பட்ட புரட்சிகளை இவன் ஒடுக்கினான். இஸ்பஹாந்தின் கோட்டையைக் கைப்பற்றி னான். மிஸ்மகான் உடைய அரசனை வெற்றிகொண்டு, அவன் தேசத்தைக் கைப்பற்றினான்.

## கிலாபத்தின் தலைநகரம்

ஸப்பாஹ் அம்பாரை கிலாபத்தின் தலைநகரமாய்க் கொண்டு, அதைச் சேர்ந்தாப்போல் ஹாஷிமிய்யாவில் ஒரு கோட்டையை நிர்மாணித்தான். மன்ஸூர் கலீபா வானதும் ஹாஷிமிய்யா சென்றான். பிறகு கிலாபத்திற்குப் புதியதொரு தலைநகரத்தை நிர்மாணிக்கக் கருதி, அதற்காக பக்தாதிருக்குமிடத்தைத் தேர்ந்தெடுத்தான். சீனம், இந்தியா இத்தேசங்களிலிருந்து ஒவ்வொரு வகையைச் சேர்ந்த வியாபாரச் சரக்குகளும், ஜஸீரா, ஆர்மீனிய்யா இத் தேசங்களின் விளைபொருட்களும் வர ஹேதுவாயிருந்த திஜ்லாநதி ஒரு கரையிலிருந்ததும், ஷாம், ரிக்கா இத்தேசங் களின் பழவகைகள் வர ஹேதுவாயிருந்த புராத்நதி மற்

ெருரு கரையிலிருந்ததுமே இதை யவன் தேர்ந்தெடுத்த தற்குக் காரணமாம். அவன் அதற்கான அஸ்திவாரத்தை திஜ்லா, புராத் இவ்விரு நதிகளுக்கிடையே நாட்டித் தன்னல் குறிக்கப்பட்டிருந்த படத்திற் (Plan) கிணங்க அதை நிர்மாணித்தான். நகரத்தின் அஸ்திவாரத்தை வட்டமாக் கினதுடன் இருகோட்டைகளையும் நிர்மாணித்தான். ஒன்று கிலாபத்தின் மாளிகை, காரியாலயம் இவைகளின் தற்காப்புக்காகவும், மற்ெருன்று நகரத்தைச் சுற்றியுமாம். பிறகு திஜ்லாவிலிருந்து ஒரு நதியையும், புராத்தின் கிளைநதியான 'கர்காயா' விலிருந்து ஒரு நதியையும் பிரித்து நகரத்திற்குக் கொணர்ந்தான். இவைகள் மூலமாய் நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஜலம் கிடைக்க வழியேற்பட்டது.

நகரத்தின் மத்தியில் ஜாமிஉமஸ்ஜித் இருந்தது. அதையடுத்தாற்போல் கிலாபத்தின் மாளிகை இருந்தது. இதன் நடுவே 30-கஜம் நீளமும், 20-கஜம் அகலமுமுள்ள பச்சை ஸ்தூபியுடைய ஒரு ஆலோசனைமண்டபம் நிர்மாணிக்கப் பட்டது. இதனுல் அதற்குப்பெயர் "பச்சைஸ்தூபி" என வைக்கப்பெற்றது. பூமிமட்டத்திலிருந்து இதன் உயரம் 80-கஜமாயிருந்தது. அதன்மேல் கையில் அம்புடன் வாகனத்தின்மீது வீற்றிருக்கும் வீரனெருவனது உருவம் செதுக்கப்பட்டிருந்தது. 'கர்க்' என்னும் தெருவில் விஜாஜ், கலாயீன், தாபிக், பஜ்ஜாஜீன் என்னும் பெயருடைய நான்கு நதிகள் சேர்க்கப்பட்டன. நதிக்கரையில் தனக்காகவும் மன்ஸூர் ஒரு மாளிகையைக் கட்டி அதற்கு 'குல்த்' எனப் பெயரிட்டான். ஹி. 151-ல் தனது பிரதிநிதியான மஹ்தீயுக்காக 'ரஸாபா' வென்னும் நகரத்தை நிறுவி அதில் மாளிகைகளையும், தெருக்களையும் நிர்மாணித்து, நதிகளைக்கொண்டு சென்ருன். தோட்டங்கள், மைதானங்கள் இவைகளுக்கான நிலங்களை விடுத்து அதைச்

சுற்றியும் கோட்டை கட்டினுன்; அகழும் தோண்டினுன். பக்தாதை நிர்மாணிப்பதில் மன்ஸூர் ஏறக்குறைய 2,00,00,000-தீனுர் (சுமார் ரூ. 2—8—0 மதிப்புள்ள நாணயம்) செலவழித்தான். கட்டிடங்கள் முடிந்ததும் ஒவ்வோரிடத்திலிருந்தும் கல்விமான்கள், அறிஞர்கள், தொழிலாளிகள் இவர்களை யழைத்தான். அநேகமான ஜனங்கள் வந்து குடியேறினுர்கள். வியாபாரத்திற்காகவும் அஃது பெரியஸ்தலமாயது. சுருங்கக்கூறுமிடத்து அக்காலத்தில் அஃது நிகரற்ற நகரமாய் விளங்கியதெனலாம்.

## வெளிநிலைமைகள்

மன்ஸூரின் காலத்தில் பனீஉமையாக்களில் எஞ்சியிருந்த அப்துர்ரஹ்மான் பின் முஆவியா உந்துலுஸுக்கு ஓடிச்சென்று, அங்கு தனது தனி அரசியலை ஸ்தாபித்துக் கொண்டான். மன்ஸூர் அவனுக்கு விரோதியாயிருப்பினும் அவனது ஸ்திரம், உறுதியான எண்ணம், வீரம் இவைகளை எப்பொழுதுமே ஸ்துதிசெய்து "அவ்வளவு தூரதேசத்திற்குத் தனிமையாய்ச் சென்று, எங்ஙனம் அரசியலை நிறுவிக்கொண்டான் பாருங்கள்!" எனக்கூறிக்கொண்டிருப்பான். மன்ஸூரின் காலத்தில் ரூம்தேசத்தில் ஐந்தாவது குஸ்துன்தீன் என்னும் அரசனிருந்தான். வடப்பாகத்தில் அவனுடன் சண்டை எப்பொழுதும் நடைபெற்று வந்தது. ஹி. 138-ல் குஸ்துன்தீன் இஸ்லாமிய ஆட்சியிலிருந்த 'மல்திய்யா' வென்னும் ஊரையழித்துவிட்டான். மன்ஸூர் தனது சிறியதந்தை ஸாலிஹ் பின் அலீ என்பானையும், தனது சகோதரன் அப்பாஸ் பின் முஹம்மத் என்பானையும் சேனைகளுடனனுப்பியதில் இவர்கள் சென்று ரூமியர்களை விரட்டிவிட்டு, மல்திய்யாவை மீண்டும் உண்டாக்கினுர்கள். ஸாலிஹின் சகோதரிகளான உம்மூஸா, லுபாணு இவ்விருவரும் " பனீஉமையாக்களின் கிலாபத்தை அல்லாஹு

தஜூலா அழித்துவிட்டால் நேர்வழியில் சண்டையிடுவோம்" என நேர்ச்சை செய்திருந்ததால் அவர்கள் தங்கள் நேர்ச்சையைப் பூர்த்திசெய்யுமுகத்தான் இச்சண்டையிற் கலந்து கொண்டார்கள். ரூமியர்கள் சமரஸ உடன்படிக்கை செய்து கொண்டு முஸ்லிம் கைதிகளை விடுவித்துவிட்டார்கள். ஹி. 140-ல் மீண்டும் அவர்கள் தலைதூக்கினார்கள். ஹஸன் பின் கஹ்தபா, அப்துல்வஹ்ஹாப்பின் இப்ராஹீம் இவர்களை கோடைகாலசேனையுடன் மன்ஸூர் அனுப்பினான். இஸ்லாமிய சேனைகளின் வருகையையறிந்து ரூமீசேனைகள் திரும்பிவிட்டன. தங்களுக்குச் சமயங்கிடைக்கும் போதெல்லாம் இஸ்லாமிய எல்லைப்புறத்தில் புகுந்து கொள்ளையடிப்பதும் ஓடிவிடுவதுமே அவர்களின் வேலையாகவிருந்தது. ஹி. 155-ல் அவர்கள் சமரஸ உடன்படிக்கைசெய்து கொண்டார்கள். கிழ்த்தேச எல்லைப்புறங்களிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. எனினும் மன்ஸூர் ஜாக்கிரதையாயிருந்து சேனைகளையனுப்பியதில் ஒவ்வோரிடத்திலும் அமைதி நிலவியது.

## மன்ஸூரின் குணாதிசயங்கள்

வீரம், பெருங்குணம், ஜாக்கிரதை, கல்வி, தீர்க்காலோசனை இவைகளால் மன்ஸூர் அப்பாஸிய்யா கலீபாக்கள் யாவரினும் மேம்பட்டவனா யிருந்தான். இந்த கிலாபத்திற்கு மூலபுருஷனும், இதன்மீது பயபக்தியை ஏற்படுத்தியவனும் அவனேயாவான். அவன் எப்பொழுதுமே வேலை செய்வதற்குச் சளைக்கமாட்டான். காலை நேரத்திலிருந்து அஸ்ர் (அஸ்தமனத்திற்கு முந்தியநேரம்) வரை சேனைகளை யொழுங்குபடுத்துவதிலும், முக்கிய விஷயங்களை யாலோசிப்பதிலும், பிரஜைகளின் காரியாதிகளைக் கவனிப்பதிலும் கழிப்பான். அஸ்ர் தொழுகைக்குப் பிறகு தனது வீட்டு விஷயங்களைக் கவனிப்பதுடன் சுற்றத்

தார்களையும் சந்திப்பான். பிறகு மாலை நேரத்தில் ஜனங்களுடன் கலந்துட்காருவான். இஷா(இரா)த்தொழுகைக்குப்பிறகு சுற்றுப்புறத் தேசங்களிலிருந்து வந்திருக்கும் நிருபங்களையும், அறிக்கைகளையும் வாசிப்பான். பிறகு தூங்குவான். இராத்திரியில் கடைசி பாகத்திலெழுந்து நிம்மதியுடன் தஹஜ்ஜுத் (இராத்திரின் கடைசி பகுதி) தொழுகையைப் பூர்த்தி செய்வான். பிறகு காலையில் மஸ்ஜிதுக்குச் சென்று காலைத்தொழுகையை நிறைவேற்றிவிட்டு, கிலாபத்தின் மாளிகைக்கு வந்து அலுவல்களைக் கவனிப்பான். அவன் கிலாபத்தின் பீடத்திலிருக்கும்வரை ஜனங்கள் அவனது பயபக்தியால் நடுங்கிக்கொண்டிருப்பார்கள். எனினும், அவன் வீட்டிலோ, சபையிலோ உட்கார்ந்திருந்தால் சிரித்த முகத்துடனும், முகமலர்ச்சியுடனும் இருப்பான்.

ஒருதடவை அவன் தனது பீடத்திலிருந்துகொண்டு "அரசாங்கத்திற்கு நான்குவகையான மனிதர்கள் மிக முக்கியம். அவர்களே உண்மையில் அரசாங்கத்திற்கு அங்கத்தினராவார்கள்" என்றான். ஜனங்கள் இதை விவரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளவே அவன் "முதலாவது எத்தகைய பயமும், தாக்ஷண்யமுமின்றியே சத்தியத்தை மட்டுமே முன்வைத்துத் தீர்ப்பளிக்கும் நீதிபதி. இரண்டாவது வலியோன் எளியோன் மீது கொடுமை புரியாது தடுக்கும் போலீஸ் அதிகாரி. மூன்றாவது பிரஜைகளிடமிருந்து மிருதுவாயும், சத்தியத்துடனும் தீர்வை வசூலிக்கும் அதிகாரி. நான்காவது, ஆ! நான்காவது!" எனக்கூறித் தனது கைவிரல்களைப் பல்லாற்கடிக்கத் தொடுத்தான். ஜனங்கள் அதைக் கேட்டபோது "இவ்விஷயங்களை யெல்லாம் சரியாகவும், கூட்டிக்குறைக்காமலும் கலீபாவுக்குத் தெரிவிக்கும் நேர்மையான லிபி" என்றான். துப்பறியும் இலா

காவை விட்டதாலேயே பனீஉமையாக்கள் அழிந்துபோனார்களென்பது மன்ஸூருக்குத் தெரியும். எனவே, அவன் இந்தப்புறம் அதிகமான கவனத்தைச் செலுத்தலானான். தனது வம்சத்தவரை இதற்கு நியமிக்க விரும்பினானெனினும், இஃது அவர்களுக்கு இழிவானதெனக்கருதித் தனது அடிமைகளை இதற்கு நியமித்தான். ஒவ்வோரிடத்திலிருந்தும் தினந்தோறும் நீதிபதிகளின் தீர்ப்புக்கள், அதிபர்களின் அலுவல்கள், கடைவீதியின் விலைவிவரங்கள் இவைகளைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும் அவனுக்கு அறிவிக்கப்பட்டு வந்தது. இதனால் ஒவ்வொரு விஷயத்தையும் அவன் அறிந்திருந்தான். எங்கேனும் கெடுதியைக் கண்டால் அதற்கு உடனே பரிகாரம் தேடுவான். ஒருதடவை ஒரு அரபியை 'ஹலரெமௌத்'தின் தலைவனாய் நியமித்திருந்தான். அவன் அநேகமாய் வேட்டையாடுவதில் காலங்கழிப்பதாய்ச் செய்தி கிடைக்கவே அவனை நீக்கிவிட்டு, "நான் உம்மைப் பிரஜைகளின் ஒழுங்கு முறைக்காக வனுப்பினேனல்லாது காட்டுமிருகங்களை வேட்டை யாடுவதற்காக வன்று" எனவரைந்தான்.

மன்ஸூரின் குணாதிசயங்களுள் கஷ்டங்கள் வந்துற்ற காலத்து ஸ்திரம் பெற்றும், சித்தசபல மடையாமலுமிருந்ததே மிகவும் போற்றற் குரியுதாம். அவன் கலீபாவாயின காலத்து அவனைச்சுற்றியும் பல பயங்கரமான விஷயங்கள் காணப்பெற்றன. அவனது திடசித்தத்தாலேயே அவைகளையெல்லாம் வெற்றிகொண்டான். மன்ஸூர் சிக்கனத்தில் பிரசித்திபெற்றிருந்தான். அரசாங்கத்தின் வரவு செலவுகளை மிகவும் கவனித்துவந்தான். கவிஞர்களுக்கும் பெருத்த வெகுமதிகளை யவன் ஒருபோதும் கொடுத்தது கிடையாது. தன்னுடையவும், தனது சந்ததிகளுடையவும் செலவினங்களையுங்கூடக் குறைத்தே வைத்திருந்தான்.

பழைய ஆடைகளை ஒட்டுப்போட்டு அணிந்துகொள்வான். அதிபர்களின் சம்பளத்தை யவன் 300-திர்ஹ(0—5—0 மதிப்புள்ள நாணய)மாகவே வைத்திருந்தான். இச்சம்பளமே மாமூன் உடைய காலம்வரை நடந்துவந்தது. பலல் பின் ஸஹல் என்பான் தனது மந்திரிப்பதவியில் அதை யுயர்த்தினன். மன்ஸூர் இறந்தபின் மஹ்தீ தன் இஷ்டம் போல் செலவுசெய்ய இடங்கொடுத்ததும், தீர்ந்துபோகுமென்ற பயமேகொள்ளச்செய்யாததுமான அளவுக்கு கஜானு நிரம்பியிருந்ததும் மன்ஸூர் உடைய சிக்கனத்தின் பயனேயாம். குர்ஆனையும், பெருமானரின் அமுதமொழிகளையும் பகுத்தறிவதில் அவன் வல்லுனனுயிருந்தான். அவனது சொற்பொழிவு இலக்கியம் மிகுந்து, மனதைக் கவரத்தக்கதாயிருந்தது. அரசியல் ஞானத்தில் பனீஉமையாக்களுள் அப்துல்மலிக் பின் மர்வானுக்குச் சமமாய் பனீ அப்பாஸ்களுள் இவனிருந்தான். எனினும், இவனிடம் கலீபாக்களுக்கும், அரசர்களுக்கும் எவ்விதத்தாலும் தகுதியற்றதான வாக்குத்தத்தத்தை மீறுவதென்னும் துர்ப்பழக்கம் காணப்பெற்றது. உடன்படிக்கை எழுதப்பெற்றபிறகு இப்னுஹுபீராவைக் கொன்றுவிட்டான். தனது சிறிய தந்தை அப்துல்லாஹ்வுக்கு அடைக்கலம் கொடுத்தபிறகு அவனைச் சிறைப்படுத்தினன். இங்ஙனமே அபூமுஸ்லிம் என்பானைக் கண்ணியத்துடனழைத்து, அவமதித்துக் கொன்றுவிட்டான். அர்தா பின்து மன்ஸூர் ஹிம்யரீ என்னும் பெண்ணை 'அவள் உயிருடனிருக்கும்வரை வேறு பெண்ணை மணந்துகொள்வதில்லை' என்னும் உறுதிமொழியின்பேரில் மணம்புரிந்து கொண்டான். எனினும், சின்னுட்களுக்குள்ளாகவே அதற்கு மாறுசெய்யக்கருதி, ஒவ்வோரிடத்து மார்க்க நிபுணர்களிடமிருந்தும் மார்க்கத் தீர்ப்புகளைத் தருவித்தான். இதனுல் இந்தக் கெட்டபெயர்

அவ்வறிஞர்கள்மீது ஏற்படவேண்டுமென்பது இவனது கருத்து. எனினும், அர்தாவும் கெட்டிக்காரப் பெண்ணு யிருந்தாள் 'இன்ன அறிஞரிடம் கலீபா இவ்விஷயத்தில் மார்க்கத்தீர்ப்புக் கேட்டிருக்கிறுன்' எனத்தெரிந்துகொண் டால் தனது அடிமைகள்மூலமாக தங்கத்தோடாக்களை யனுப்பி, உண்மையை யறிவித்து, அவரதுபேருவைத் தடுத்துவிடுவாள்.

## மரணம்

ஹி. 158-ல் மன்ஸூர் ஹஜ்ஜுக்குச் சென்றுகொண் டிருந்தான். இடைவழியில் வியாதியுற்று மக்காவுக்குச் சமீபமான 'பீரெமைமூன்' என்னுமிடத்தில் கி. பி. 775, அக்டோபர், 8-ந்தேதிக்குச் சரியான ஹி. 158, துல்ஹஜ், 7-ந்தேதி காலஞ்சென்றுன். ரபீஃ என்னும் பெயருடைய வாயில்காப்போன் தன்னுடனிருந்த கலீபாவின் குடும்பத் தார்கள், சேனைத்தலைவர்கள் இவர்களை யொருங்குசேர்த்து, மஹ்தீ பின் மன்ஸூருக்காக பைஅத் வாங்கினுன். பிறகு அப்பாஸ் பின் முஹம்மத் பின் அலீ, முஹம்மத் பின் ஸுலை மான் பின் அலீ இவர்களை மக்காவுக்கனுப்பினுன். இவ்விரு வரும் அங்குசென்று கலீபாவின் மரணத்தை விளம்பரப் படுத்தினுர்கள். பிறகு மகாமெ இப்ராஹீம், ருக்ன் இரண் டிற்கும் நடுவே நின்றுகொண்டு ஹரம்வாசிகளிடம் பைஅத் வாங்கினுர்கள். மன்ஸூர் கிலாபத்தை நிர்வகித்தகாலம் ஆறு நாட்கள் குறைய 22-வருடங்களாம்.

## சந்ததிகள்

மன்ஸூர் எட்டு புதல்வர்களையும், ஒரு புதல்வியையும் விட்டு இறந்துபோனுன்:

மஹம்மத் மஹ்தீ, ஜஃபரே அக்பர். இவ்விருவரும் மன்ஸூர் ஹிம்யரீயின் புதல்விக்கு ஜனித்தோராவர்.

ஸுலைமான், ஈஸா, யஃகூப். இம்மூவரின் அன்னை ஹஸ்ரத் தல்ஹா (ரலி.) அவர்களின் சந்ததிகளிலுதித்த பாத்திமாவென்னும் பெண்மணியாவார்.

ஜஃபரே அஸ்கர். இவன் குரவீ அடிமைப் பெண்ணின் புதல்வன்.

ஸாலிம். ரூம்தேசத்திய அடிமைப் பெண்ணுக்கு ஜனித்தவன்.

ஆலியா. இப்பெண்குழவி பனீஉமையாக்களைச் சேர்ந்த பெண்மணிக்கு ஜனித்தவர். இஸ்ஹாஹ் பின் ஸுலைமான் பின் அலீ என்பானுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருந்தார்.

## 3. மஹ்தீ

அபூஜஃபர் மன்ஸூரின் புதல்வனான இந்த முஹம்மத் மஹ்தீ என்பான் அர்தா ஹிம்யரீயின் புதல்வனாவான். இவன் ஹி. 126-ல் ஜனித்தனன். இவனது 15-ம் வயதில் ஹி. 141-ம் வருஷம் மன்ஸூர் இவனைச் சேனாதிபதியாக நியமித்து, குராஸானுக் கனுப்பினான். அவ்விடத்து அதிகாரியான அப்துல்ஜப்பார் பின் அப்துர்ரஹ்மான் சதி செய்தான். இவன் அங்கு சென்று அப்புரட்சியை யொடுக்கினான். இதற்குப் பிறகு தப்ரிஸ்தானில் ஜிஹாதுக்குச் சென்று, ஹி. 144-ல் திரும்பி வந்தான். ரீதா பின்து ஸப்பாஹ் என்னும் பெண்மணியை மன்ஸூர் இவனுக்கு விவாகம் செய்வித்ததுடன் தன் பிரதிநிதியான ஈஸா பின் மூஸாவைப் பிற்படுத்தி ஹி. 147-ல் இவனை முதற் பிரதிநிதியாக ஏற்படுத்தி ரையின் அதிகாரியாக நியமித்தான். இவன் அங்கு நான்காண்டுகளிருந்து ஹி. 151-ல் திரும்பி வந்தான். மன்ஸூர் பக்தாதின் கீழ்ப்புறத்தில் 'ரஸபா'வை இவனுக்காகவே நிர்மாணித்தான். ஹி. 153-ல் இவனை ஹாஜிகளின் தலைவனாய் நியமித்தனுப்பினான். மன்ஸூர் இறந்த தினமான ஹி. 158, துல்ஹஜ், 7-ந் தேதி இவனது கிலாபத்திற்காக பைஅத் செய்யப்பட்டது.

### உள் நிலைமை

மஹ்தீயின் காலத்தில் அப்பாஸிய்யா கிலாபத்திற்கான அஸ்திவாரம் உறுதியாக்கப்பெற்றது. போட்டியாக வந்தோரெல்லாம் அழிக்கப்பட்டனர். அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகளுடைய வன்மை யொடுக்கப்பட்டது. அவர்

களில் பெரியபெரியவர்களெல்லாம் பக்தாதில் கண்காணிப்பிலிருந்தார்கள். எஞ்சியிருந்தோர் மதீனுவில் அவ்விடத்துத் தலைவனின் மேற்பார்வையிலிருந்தனர். அவன் தினந்தோறும் இவர்களை ஆஜர்பார்த்து வந்தான். இக்காரணங்களை மேற்கொண்டு மன்ஸூரின் காலத்திலிருந்த இன்னல்கள் நீடித்திருப்பது மஹ்தீயுக்கு உசிதமாகத் தோற்றவில்லை. எனவே, அவன் அநேகமாய் சந்தேகத்தின்மீதே சிறைவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் யாவரையும் விடுவித்து விட்டான். இவனது காலம் செழிப்பானதாகவிருந்தது. எத்தகைய குழப்பமும் அதில் தலைகாட்டவில்லை. இதனுல் இவன் தனது கவனத்தை அநேகமாக சீர்திருத்தத்திற் செலுத்தினுன். மன்ஸூருக்குப் பிறகு ஏற்பட்ட இவனதுகாலம் அநேக விஷயங்களில் அப்துல்மலிக்குக்குப் பிறகு ஏற்பட்ட வலீதின் காலத்திற்குச் சமமானதாக விருந்தது. இவன் மக்காவின் பாட்டைகளில் பிரயாணிகளின் சௌகரியத்திற்காகப் பல சத்திரங்களை நிர்மாணித்தான். ஸப்பாஹின் காலத்திலேற்பட்ட காதிஸிய்யாவிலிருந்து ஜபாலா செல்லும் பாட்டை பழுதடைந்திருந்தது. இவன் அதைச் சீர்ப்படுத்தினுன்; அதிலிருந்த சத்திரங்களைப் பழுதுபார்த்தான். ஒவ்வொரு தங்குமிடத்திலும் கிணறுகளைத் தோண்டினுன். அவைகளுக்குப் பக்கத்தில் குளங்களைக்கட்டி பிரயாணிகள், ஏனைய ஜீவராசிகள் உடைய சௌகரியத்திற்காக "அவைகளில் எப்பொழுதும் ஜலம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்" எனக்கட்டளையிட்டான். ஒவ்வொரு குஷ்டரோகியும் பாட்டைகளில் திரிவதால் அத்தொத்துவியாதி அதிகமாகப் பரவுதற்குக் காரணமாகுமாதலின் அவர்கள் அங்ஙனம் திரியாதபடி அவர்களுக்குப் பொது நிதியிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி பொதுவான கட்டளை பிறப்பித்தான். கைதிகளின் சுற்றத்

தாரில் ஜீவனோபாயத்திற்குக் கஷ்டப்படுவோருக்கு தினச் சம்பளம் கொடுக்கவும் ஏற்பாடு செய்தான். மக்கா, மதீனா, யமன், இராக் இத்தேசங்களுள் கடிதப்போக்கு வரவுக்கான தபால் இலாகாவையும் ஏற்படுத்தினான். மஸ்ஜிதெஹறாமை (கஃபாவை)ச் சுற்றியிருந்த நிலத்தை வாங்கி, அதன் எல்லையை விஸ்தீரணப்படுத்தினான். இவனுக்குத் தனது பெயர் பிரபலமடைய வேண்டுமென்னும் ஆவல் மிகுதியாகவுண்டு. இதனால் வலீத் பின் அப்துல்மலிக் உடைய பெயரை மஸ்ஜிதெநபவீயின் மேலிருந்து அழித்துவிட்டுத் தனது பெயரை வரையச் செய்தான். சென்றுபோன மூதாதைகளின் காரியாதிகள்மீது வரையப் பெற்றிருக்கும் அவர்களது நாமங்களை யழித்துவிட்டு, அவ்விடத்தில் தமது நாமங்களை வரையும்படிச் செய்வதனால் அக்காரியாதிகள் தமது நாமங்களால் வழங்கிவருமெனக் கருதி அங்ஙனம் செய்யும் சில அரசர்களும், அதிபர்களும் சரித்திரத்தில் காணக்கிடைக்கிறார்கள். ஆயினும் இஃதொரு மடமையும், கடைத்தெருக்களில் சுற்றித்திரியும் சாதாரண மனிதனுக்கும் தகுதியற்றதுமான காரியமேயாம். அரசர்களுக்கோ மிகவும் இழிவைத் தரத்தக்கதாகும்.

## மார்க்கத்தைச் சீர்குலைக்கும் குழப்பம்

மஹ்தீயின் காலத்தில் மர்வுத் பிரதேசத்தின் ஓரூரில் மக்னஃ குராஸானீ என்னும் பெயருடையோனொருவன் புனர்ஜன்மத்தையும், மறுபிறப்பையும் ஆதரிக்கும் கொள்கை பூண்டவனாய் வெளிக்கிளம்பி, ஆயிரக் கணக்கானவர்களைக் கெடுத்தான். பிறகு மாவராவுன்னஹறுக்குச் சென்று அங்கும் இக்கொள்கையைப் பிரசாரஞ் செய்தான். மஹ்தீ மார்க்க விஷயங்களில் கண்டிப்பான கொள்கை பூண்டவனாதலின் முஆத் பின் முஸ்லிம் என்பானை யொருசேனையுடன் மக்னஐ எதிர்ப்பதற்காக வனுப்பினான். மக்னஃ 'குஷ்'

நகரத்துக் கோட்டையில் அடைக்கலம் புகுந்தான். இறு தியாக தப்ப வழியில்லாது போகவே முதலில் தனது குடும்பத்தவருக்கும், பிறகு தனது சகாக்களுக்கும் விஷத் தைக் கொடுத்தான். பிறகு தானும் குடித்துவிட்டுத் தற் கொலை புரிந்துகொண்டான். மார்க்கத்தைச் சீர்குலைப்பவ னுக்கு மஹ்தீ கொலைதண்டனை விதிப்பது வழக்கம். இத னால் அவனது காலத்தில் சிலருக்குத் தமது பகைஞர்களை யழிப்பதற்கு இஃது (தனது எதிரி மார்க்கக்கொள்கைகளைப் புரட்டுவதாய்க் குற்றங்கற்பிப்பது) ஒரு வழியாய்ப் போயிருந்தது.

## மந்திரிப்பதவி

தனது தகப்பன் மன்ஸூரைப்போன்று அவ்வளவுக் குச் சுயநலமிருந்தவனென மஹ்தீயைக் கொள்ள முடியாது. தவிர அவனது காலமும் அமைதியானது. இதனால் அவ னது காலத்தில் மந்திரிப்பதவியின் உரிமைகள் அதிகமாய துடன் அதற்குத் தனிமதிப்பும் ஏற்பட்டது.

## அபூஅப்துல்லாஹ்

மஹ்தீயின் முதன்முதலான மந்திரி அபூஅப்துல்லாஹ் முஆவியா பின் யஸார் என்பானயிருந்தான். இவன் அஷ் அரீக்களின் சுயேச்சைபெற்ற அடிமையாகவிருந்தான். இவன் இலக்கியத்தில் பாண்டித்தியமடைந்து, அக்காலத் தில் நிகரற்ற கட்டுரையாளனயிருந்தான். முதலாவதாக இவனை மன்ஸூர் தனது மந்திரியாக நியமித்திருந்தான். மஹ்தீயுக்கும் ஒரு தேர்ந்த ஆசிரியன் வேண்டியிருந்ததால் அவ்வேலைக்கே பிறகு நியமிக்கப்பட்டான். மஹ்தீ இவனை மிகவும் பிரியத்துடன் நடாத்திவந்து, கலீபாவாயினதும் இவனையே முதன்மந்திரியாக்கினன். அபூஅப்துல்லாஹ் அரசாங்கக் கணக்குகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி, துவக்

கத்திலிருந்தே அவைகளைச் சுத்தமாக்கினான். கிஸ்தியில் ரொக்கத்திற்குப் பதிலாய் விளைபொருட்களில் ஒருபாகத்தை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தான். கிஸ்திவசூல் விஷயமாய் ஒரு நூலையும் இயற்றினான். இஸ்லாமில் இவ்விஷயமாயியற்றப்பெற்ற முதல்நூல் இதுவே. இந்நூலில் அவன் கிஸ்திவசூல் விஷயமான சட்டதிட்டங்கள், அதற்கான மார்க்கக் கட்டளைகள், சென்றுபோன கலீபாக்களின் முன் மாதிரி இவைகளை நன்குவிவரித்திருந்தான்.

வாயில்காப்போனான ரபீஃ இவனது பழைய நண்பனானவன். மன்ஸூரின் காலத்தில் இவன்மீது எத்தகைய முறையீடும் வந்துற்றால் அவன் அதைமறுத்து, மன்ஸூரைச் சரிப்படுத்திவந்தான். மன்ஸூர் காலகதியடைந்ததும் ரபீஃ மஹ்தீயுக்காக பைஅத் வாங்கிக்கொண்டு அங்கிருந்து பக்தாதுக்குத் திரும்பிவந்தபோது, மஹ்தீயைச் சந்திப்பதற்குச் செல்லுமுன்பு அபூஅப்துல்லாஹ்வைக் காணச்சென்றான். அபூஅப்துல்லாஹ் அன்பாய் அவனைக் காணவில்லை. கொஞ்சநேரம் காக்கவைத்து, இஷாத்தொழுகைக்குப் பிறகு உள்ளேயழைத்தான். அவன் உள்ளே சென்றபோது அவனது மரியாதைக்காக எழுந்து நிற்கவுமில்லை; இடத்தைவிட்டு அசையவுமில்லை. படுக்கையில் தலையணைபோட்டுச் சாய்ந்திருந்தான். ரபீஃ அவனுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டான். அபூஅப்துல்லாஹ் அவனது க்ஷேமத்தையும், பிரயாணத்தையும் பெயருக்காக மேம்போக்காய் விசாரித்தான். மஹ்தீயுக்காக பைஅத் வாங்கியதான பெரியகாரியத்தைப்பற்றி யொன்றுமே கூறவில்லை. அவனாகவே இவ்வார்த்தையை யெடுத்தபோதும் "எனக்கும் அது தெரியும்" என்றான். அவன் வயிறெரிந்து அங்கிருந்து வெளிவந்து தனது புதல்வன் பலல் என்பானிடம் "அபூஅப்துல்லாஹ் தன் தற்பெருமையின் பிரதிபலனைக்

கட்டாயம் அனுபவிக்கும்படி நான் செய்வேன். இதனுல் எனது கண்ணியம், உத்தியோகம், சொத்து யாவும் அழிந்து போவதாயினும் பின்னிடையமாட்டேன்'' என்ருன். அபூ அப்துல்லாஹ் கல்விமானும், உள்ளும்புறமுமொத்தவனுமா யிருந்ததால் ரபீஃ என்னதான் தந்திரோபாயங்கள் செய் தும் அவனிடம் குற்றங்காண முடியவில்லை. எனினும், அவனது புதல்வன் முஹம்மத் மார்க்கத்தைச் சிதைப்படுத் தும் கூட்டத்திற் சேர்ந்திருந்தான். 'மஹ்தீ இத்தகை யோருக்கு விரோதியாவான்' என்பதை நன்கறிந்திருந்த ரபீஃ அவனுக்கு விரோதமாய் மஹ்தீயைத் தூண்டிவிட் டான். அவன் முஹம்மதைத் தன் சமுகத்திற்கழைத்துக் குர்ஆனை யோதும்படிக் கூறினன். அவன் பிழையாய் ஓதவே மஹ்தீ அபூஅப்துல்லாஹ்வை விளித்து "நீர் என் னிடம் "மஹ்தீ குர்ஆனை மனனஞ்செய்தவன்" எனக்கூறி யிருக்கின்றீரன்ருே?" வெனவும் அவன் "ஆமாம்! எனி னும், இந்த இரண்டாண்டுகளாக அவன் என்னுடனிருப்ப தில்லை. அவன் இதற்கிடையே அதைப் படிப்பதில்லை போல் தெரிகிறது" எனப் பதிலளித்தான். இதனுல் மஹ்தீ கோபமடைந்து "நீரே எழுந்து அவனைக் கொல் லும்!" என்ருன். அபூஅப்துல்லாஹ் எழுந்தானெனினும் கீழே விழுந்துவிட்டான். அப்பாஸ் பின் முஹம்மத் என் பான் மஹ்தீயிடம் "இக்கிழவரை மன்னித்துவிடுவீர் களாக!" என விண்ணப்பித்துக் கொண்டதை மஹ்தீ ஒப்புக்கொண்டு, கொலையாளிகள் மூலமாக முஹம்மதைக் கொன்றுவிட்டான். இதன் மேல் மஹ்தீயின் உள்ளத்தில் அபூஅப்துல்லாஹ்வின் விஷயமாய்ச் சந்தேகம் குடிகொண் டது. அவனது புதல்வனைக் கொன்றபிறகு அவனிடமிருந்து நேர்மையை யாதரவுவைக்க முடியாதன்ருே? ரபீஃ தனது சுய மனஸ்தாபத்தை முன்னிட்டு இங்ஙனம் கலீபாவுக்கும்,

அவனது மந்திரிக்குமிடையே வெருப்புண்டாக்கிவிட்டான். இதற்குப் பிறகு அபூஅப்துல்லாஹ்வின் விஷயமாய்ச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் முறையீடு செய்துகொண்டிருந்தான். இதன் பயனாக ஹி. 161-ல் அபூஅப்துல்லாஹ்வை மஹ்தீ நீக்கிவிட்டான்.

**யஃகூப்**

அபூஅப்துல்லாஹ்வுக்குப் பிறகு மஹ்தீ பனீஸலீம் வர்க்கத்தின் சுயேச்சை பெற்ற அடிமைகளுள் ஒருவனான யஃகூப் பின் தாவூதை மந்திரி பீடத்தமர்த்தினான். தாவூத் என்பான் குராஸானில் பனீஉமையாக்கள் காலத்திய நஸ்ர் பின் ஸையாரின் இலிபியாவான். அவனது புதல்வர்களான தாவூத், அலீ இருவரும் இலக்கியத்தில் நிகரற்றோராயிருந்தனர். பனீஅப்பாஸ்களின் காலத்தில் தங்களுக்கு எத்தகைய மதிப்புமில்லாததைக் கண்ட அவர்கள் ஜைதிய்யா கூட்டத்திற் சேர்ந்துகொண்டு இமாம் முஹம்மத் நப்ஸெஸஜகிய்யா, அவர்கள் சகோதரர் இமாம் இப்ராஹீம் இவர்களின் இமாமத்தைப் பிரசாரஞ் செய்யத்தொடுத்தார்கள். இமாம் இப்ராஹீம் கொல்லப்பட்டபோது அவர்களுடன் யஃகூப் இருந்தான். மன்ஸூர் அவனைக் கைது செய்துவிட்டான். மஹ்தீ அரசியல் கைதிகளை விடுவித்தபோது இவனும் விடுதலையடைந்தான்.

மஹ்தீயுக்கு ஜைதிய்யாக்களைப்பற்றிப் பயமதிகம். எனவே, அக்கூட்டத்தவரைத் தனது கைவசம் வைத்திருப்பதற்காக அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனொருவன் கிடைத்தால் அவனைத் தனக்கு மந்திரியாக்கிக் கொள்வதாய்க் கருதியிருந்தான். இதையறிந்த ஜனங்கள் அவனிடம் யஃகூபைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்கள். அவன் இவனை யழைத்துச் சம்பாஷித்து, ஜைதிய்யாக்களின் தலைவனான ஈஸா பின் ஜைத் என்பானைப்பற்றி விசாரித்

தான். 'அவன் விஷயமாய் எத்தகைய குழப்பமும் ஏற்படாதிருக்கும்' என்பதற்குத் தான் ஜாமீனுயிருப்பதாக யஃகூப் கூறினன். இவனைத் தனது நோக்கத்திற்கு ஏற்றவனென மஹ்தீ கண்டு அரசியல் சம்பந்தமான சகல காரியாதிகளையும் இவன் வசம் ஒப்புவித்துவிட்டான். இவன் உதயகிரிதொடுத்து அஸ்தகிரிவரையிலுள்ள பெரிய உத்தியோகங்களிலெல்லாம் ஜைதிய்யாக்களின் தலைவர்களை நியமித்துவிட்டானதலால் அரசியல் அதிகாரம் யாவும் அவர்களின் கைவசம் வந்துவிட்டது. இவ்வளவிருந்தும் அலவீக்கள் அவனைப்பற்றி சதா அஞ்சிக்கொண்டே யிருந்தனர். தம்மைக் கண்காணிப்பதற்காகவே அவன் மந்திரிப்பதவியடைந்திருப்பதாய் அவர்கள் கருதியிருந்ததே இதற்குக் காரணமாம். மறுபுறத்தில் பனீ அப்பாஸ்கள் அவன் ஜைதிய்யாக்களுக்குப் பலங்கொடுத்து கிலாபத்தை யவர்களிடம் கொடுத்துவிடக் கருதுவதாய் எண்ணிக்கொண்டார்கள். எனவே, அவர்கள் மஹ்தீயிடம் ஜைதிய்யாக்களின் தலைவன் இஸ்ஹாக் பின் பலல் என்பானை யஃகூப் புரட்சி செய்யத் தூண்டுவதாகவும், அவன் கூடியசீக்கிரத்தில் தனது கூட்டத்தவருடன் ஒரு குறிப்பிட்ட தேதியில் பனீ அப்பாஸ்களுக்கு விரோதமாய்க் கிளம்புவானெனவும் கூறினார்கள். இதைச்செவியுற்று மஹ்தீயின் உள்ளத்தில் சந்தேகம் குடிகொண்டது. இதற்கிடையே இஸ்ஹாக்குக்கு மிஸ்ரின் அதிகாரம் கொடுக்கும்படி மஹ்தீயிடம் யஃகூப் விண்ணப்பித்துக்கொண்டான். இதனுல் அவனது சந்தேகம் பின்னும் பலப்பட்டது. அவன் ஒரு அடிமைப் பெண்ணை இவனது ஒவ்வொரு செய்கைகளையும் கவனித்து வரும்படி ஏற்பாடுசெய்து, அவளை யஃகூபுக்குக் கொடுத்தான். பிறகு ஒரு அலவீயைப் பிடித்து இவன் வசம் ஒப்புவித்துக் கொல்லும்படிக் கட்டளை யிட்டான். யஃகூப்

அவனை இரகசியமாய் விட்டுவிட்டான். அவ்வடிமைப் பெண் இதை மஹ்தீயுக்கு வரைந்தனுப்பினள். அவன் குதிரை வீரனொருவனை யனுப்பி, மீண்டும் அவனைக் கைது செய்து விட்டு, மறுதினம் யஃகூபிடம் அவனைப்பற்றி விசாரித்தான். அவன் "தங்கள் கட்டளைப்படி செய்துவிட்டேன்" எனவே மஹ்தீ அந்த அலவீயைக் கூப்பிட்டு இவன் முன்பு நிறுத்தினன். யஃகூப் நடுநடுங்கிப்போய் மஹ்தீயின் பாதங்களில் வீழ்ந்தான். அவன் இவனது சொத்தைப் பறிமுதல் செய்து அவனையும், அவனது இல்லத்தார்களையும் கைது செய்துவிட்டு, அவனால் ஏற்படுத்தப்பட்ட அதிபர்கள் யாவரையும் நீக்கிவிட்டதாய்க் கட்டளை பிறப்பித்தான்.

## இப்னு அபீஸாலிஹ்

யஃகூபுக்குப்பிறகு பைல் பின் அபீ ஸாலிஹ் மந்திரியானன். இவன் நைஷாபூரிலிருந்த கிறிஸ்துவ குடும்பத்தைச்சேர்ந்தவன். கல்வி, கொடை, பரந்தநோக்கம் இவைகளில் தலைசிறந்து விளங்கினனெனினும், தற்பெருமை, முரட்டுத்தனம் இவைகள் மிகுந்தவனவன். மஹ்தீயின் மரணம்வரை தனது உத்தியோகத்திலிருந்தான்.

## வெளி நிலைமை

துவக்கந்தொட்டே உந்துலுஸ் உடைய தலைவனான அப்துர்ரஹ்மான் உடன் பக்தாதின் கிலாபத் பகைமை பூண்டிருந்தது. மன்ஸூர், அவனுக்குப் பிறகு மஹ்தீ இவ்விருவரும் பனீஉமையாக்களின் அவ்வரசியலை யழித்துவிடக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தார்கள். எனினும், இடையே ஆப்ரிகாவின் ஸஹாரா பாலைவனம் குறுக்கிட்டிருந்தது. அதைக் கடந்து சேனையைக் கொண்டுசென்று அவர்களுடன் சண்டையிடுவது எளிய காரியமாயிருக்கவில்லை. எனவே, வாயளவில் மட்டும் பகைமை வெளியிடப்

பட்டு வந்தது. அக்காலத்தில் பிரான்ஸின் அரசன் ஷார்லமேன் என்பானுயிருந்தான். தனது அரசியலை விஸ்தீரணப் படுத்தவேண்டுமெனக் கங்கணங்கட்டியிருந்த அவன், முஸ்லிம்களுள்ளேற்பட்ட உட்சண்டையைக்கண்டு பக்தாதின் கிலாபத்துடன் சிநேகபாவத்தை மேற்கொண்டான். இவர்களின் நட்பைக்கொண்டு உந்துலுஸ்மீது படையெடுக்கலாமென்பது அவனது கருத்து. இதன் விளைவுகள் பின்னால் தெரியவரும்.

ரூமியர்களுடனும் சண்டை நடைபெற்றுவந்தது. ஹி. 163-ல் மஹ்தீ தானே ஒரு பெரிய சேனையைக் கொண்டு சென்று ரூமியர்களை எதிர்த்து, அநேக கோட்டைகளைக் கைப்பற்றினான். 'ஸிமாலா' கோட்டையை 38-தினங்கள் வரை முற்றுகையிட்டிருந்து அதைக் கைப்பற்றிய பிறகு திரும்பினான். ஹி. 165-ல் தனது புதல்வன் ஹாரூனுர் ரஷீத் உடன் ஓரிலக்ஷம் பேர்கள் கொண்ட சேனையை குஸ்துன்துனிய்யாவின் புறம் அனுப்பினான். அக்காலத்தில் அங்கு ஈரேனீ அரசி அரசுசெலுத்திவந்தனள். அவள் வருடமொன்றுக்கு 90,000-தீனர் ஜிஸ்யா கொடுப்பதாய்ச் சமரஸம் செய்துகொண்டனள். திரும்புகாலையில் ஹாரூனின் உத்தரவுப் பிரகாரம் ஒவ்வொரு தங்குமிடத்திலும் அவள் இஸ்லாமிய சேனைகளுக்காகச் சந்தையை ஏற்படுத்தியதுடன், சௌகரியத்திற்காக வழித்துணைவர்களையுமனுப்பினள். இச்சமரஸம் மூன்றுவருஷங்களுக்குச் செய்யப்பட்டிருந்தது. எனினும், ரூமியர்கள் ஒரு வருஷம் மட்டும் தொகையைக் கொடுத்துவிட்டு, மறுவருஷம் மறுத்துவிட்டார்கள். ஜஸீராவின் அதிபனுன ஸுலைமான் பின் அலீ ரூம் புறம் முன்னேறிச்சென்று ரூமியர்களைத் தோற்கடித்து, ஏராளமான கொள்ளைப் பொருட்களைக் கைப்பற்றிக்கொண்டு சென்றுன்.

இந்து தேசத்தில் சிந்து நதிவரை இஸ்லாமால் கைப் பற்றப்பட்டிருந்தது. மஹ்தீ 10,000-பேர்கள் கொண்ட தொருசேனையுடன் கடல்மார்க்கமாய் முன்னேறிச்செல்லும் படி அப்துல்மலிக் பின் ஷிஹாப் என்பானை யனுப்பினன். அவன் 'பார்பத்' நகரத்தை முற்றுகையிட்டு, மூன்றுதினங் களுள் அதை வெற்றிகொண்டான். எனினும், அவ்விடத் துக்காற்று முஸ்லிம்களுக்கு ஒவ்வாததால் அநேகர் பிணி யுற்றனர்; ஏறக்குறைய ஆயிரம்பேர் இறந்துவிட்டனர். எனவே, கப்பல்களில் திரும்பிச் சென்றனர். இடைவழி யில் புயலேற்படவே அநேக கப்பல்கள் மூழ்கிவிட்டன.

## மஹ்தீயின் குணாதிசயங்கள்

மஹ்தீயிடம் நாணம், மன்னித்தல் இக்குணங்கள் அதிகமாகக் காணப்பெற்றன. அரசியல் குற்றவாளிகள் அவனுக்கு முன்பு கொண்டுவரப்பட்டால் அநேகமாக அவர் களை விட்டுவிடுவான். அவன் குர்ஆனை மிகவும் மதித்து வந்தான். ஒரு தடவை யவன் தொழுகையில் "நீங்கள் அதிகாரத்தை யடைந்தக்கால் உலகில் குழப்பத்தை யுண் டாக்குவதும், பாந்தவ்வியத்தை முறிப்பதும் சகஜமாய்விடும் போலும் !" எனப் பொருட்படும் குர்ஆனின் திருவசனத்தை யோதினன். அக்காலத்தில் மூஸா பின் ஜஃபர் அலவீ இவனது சிறையிலிருந்தனர். அவர்களை யழைத்து தான் இவ்வசனத்தை யோதியதைக் குறிப்பிட்டு "நான் இதிற் குறிக்கப்பட்டவ னாய்விடுவேனோ வென்றஞ்சுகிறேன். எனவே, உங்களை விடுவித்துவிடக் கருதுகிறேன். எனது கிலாபத்திற்கு மாற்றமாய்க் 'குழப்பத்தை யுண்டாக்க மாட்டே'னென வாக்குறுதி செய்யும்படிக் கேட்டுக்கொள் கிறேன்" என்றான். அவர்கள் அங்ஙனமே வாக்குறுதி செய்ததால் அவர்களை விடுவித்து விட்டான். அரசியல் காரியாதிகளை மிகவும் ஊக்கத்துடனும், கஷ்டத்துடனும்

கவனித்து வந்தான். தீர்ப்பளிப்பதற்கு நீதிபதிகளைத் தனக்கு முன்னிலையில் இருக்கச் செய்வான். முறையீடு செய்வோர் தட்டுத்தடையின்றி அவன் முன் போய்க்கொண்டிருந்தனர். சிலர் அவன்மீதே பிராது தொடுத்தனர்; நியாயதிபதிகள் அவனுக்குப் பாதகமாயும் தீர்ப்புச் செய்தார்கள். அவன் அதற்கும் சிரம் பணிந்தான்.

மஹ்தீயிடம் சாந்தம், கொடை, பெருமானாரின் முன் மாதிரியைப் பின்பற்றும் நேர்மை, வாக்சாதுர்யம், இலக்கியம் இவைகள் மிகுந்து காணப்பட்டன. பனீஉமையாக்களின் காலத்திலிருந்து கலீபாக்களுக்கென மஸ்ஜித்களில் கட்டப்பெற்றிருந்த அறைகளைத் தகர்த்துவிட்டான். மிக்வும் உயரமாகக் கட்டப்பெற்றிருந்த மெம்பர்(பிரசங்க மேடை)களைக் குட்டையாக்கி, பெருமானார் (ஸல்.) அவர்களின் மெம்பர் உயரத்திற்கே கொணர்ந்தான். ஒருதடவை அவனது அடிமை அபூஔளன் அதிகமாய் வியாதியுற்றிருந்தான். மஹ்தீ அவனைப் பார்ப்பதற்குச் சென்று அவனிடம் "ஏதேனும் உமக்கு விருப்பமாயிருப்பின் என்னிடம் சொல்லும்! நான் அதைப் பூர்த்தி செய்கிறேன்" என்றதற்கு அவன் "தாங்கள் என்மீது அன்புடனிருக்க வேண்டுமென்பதே எனது ஆவல். ஒரு குறிப்பிட்ட காலமாய் நீங்கள் என்னுடன் அன்பாய் நடந்துகொள்வதில்லையென நினைக்கிறேன்" என்றான். அதற்கு மஹ்தீ "(அபூபக்ர், உமர் ரலி....) இரு பெரியார்களையும் நீர் நிந்திக்கிறீர். நீர் அதை விட்டும் தௌபாச் செய்யாதவரை நான் உம்மிடம் நட்புக் கொள்ளமாட்டேன்" என்றான். அதன்பேரில் அவன் "கலீபாவே! 'கிலாபத் பெருமானாரின் குடும்பத்தவருக்குப் பாத்தியதையுடையது. அவர்களிடமிருந்து அதைப் பிடுங்கிக்கொண்டோர் அநியாயக்காரராவர்' என்னும் கொள்கைக்காகவே நாங்கள் முன் வந்தோம். இதே கொள்கை

எங்களுக்குப் போதிக்கப்பட்டது. இதையே நாங்கள் பிரசாரம் செய்து வந்தோம். தற்போது ஏதேனும் புதிய வார்த்தை ஏற்பட்டிருப்பின் அதைக்கூறுங்கள்! நாங்கள் அதன் பிரகாரம் நடக்கிறோம்" என்றான். பனீ அப்பாஸ்கள் இமாமத்தைப் பிரசாரஞ் செய்ததில் துவக்கமாக அவர்களிடம் ராபிலீக்களின் கொள்கை காணப்பெற்றது. எனினும், அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகளிடமிருந்து அவர்களுக்கு ஏற்பட்டுவந்த இன்னல்கள் காரணமாக அக்கொள்கையை விட்டுவிட்டு குலபாயெராஷிதீன்களுள் அவர்களுக்கிருந்த மதிப்பையே கொடுத்தார்கள்.

### பிரதிநிதியை நியமித்தல்

மஹ்தீயும் மன்ஸூரைப் போலவே ஈஸா பின் மூஸாவை இம்சித்து, கிலாபத்தை விட்டுவிடும்படி அவனை வற்புறுத்தினான். பிறகு மூஸா ஹாதீ, ஹாரூனுர் ரஷீத் இவ்விருவரையும் பிரதிநிதிகளாக நியமித்தான்.

### மரணம்

மஹ்தீ ஹி. 169-ல் ஜுர்ஜான் புறம் பயணப்பட்டான். இடைவழியில் வியாதியடைந்து மாஸூப்தான் போய்ச் சேர்ந்து கி. பி. 785, ஆகஸ்ட், 4-ந் தேதிக்குச் சரியான ஹி. 169, முஹர்ரம், 22-ந்தேதி மரணமடைந்தான். அவன் கிலாபத்தை நிர்வகித்தது 10-வருஷங்கள், $1\frac{1}{2}$-மாதங்களாம்.

## 4. ஹாதீ

அஸாஹாதீ பின் மஹ்தீ பின் அபூஜஃபர் மன்ஸூர் என்னும் இவனது அன்னை கேஜ்ரான் என்பவராவார். இப்பெண் துவக்கத்தில் மஹ்தீயின் அடிமைப் பெண்ணா யிருந்தார். இவரது வயிற்றிலிருந்து ஹாதீ, ஹாரூன் இவ்விருவரும் ஜனிக்கவே மஹ்தீயின் நேத்திரங்களில் இப்பெண்ணின் மகிமை பெரிதாய்த் தெரிந்தது. எனவே, ஹி. 159-ல் சுயேச்சையாக்கி, அவரை மணந்துகொண்டான். ஹாதீ ஹி. 144-ல் ஜனித்தான். 15-ம் வயதில் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். மஹ்தீயின் ஆயுட்காலத்திலேயே சேனையுடன் ஜுர்ஜானுக்குச் சென்றான். அவன் அதே புறத்திலிருக்கும்போது மஹ்தீ இடைவழியிலிறந்து விட்டான். ஹாரூன் அவனுக்காக பைஅத் வாங்கினான். பிறகு கிலாபத்தின் போர்வை, கைப்பிரம்பு, முத்திரை இவைகளை மரணச்செய்தியுடன் ஜுர்ஜானுக்கு ஹாதீயிடமனுப்பினான்.

### உள் நிலைமை

ஹாதீயும் தனது பிதாவைப்போன்றே மார்க்கப்புரட்டர்களுக்குக் கடும்விரோதியாக விருந்தான். குறிப்பாக ஒளி, இருள் இரண்டையும் இரு கடவுள்களாய் வணங்கும் ‘பைரவான் மானீ’ என்போருக்குப் பரமசத்துருவாயிருந்தான். மஹ்தீ பனீஹாஷிம்களில் தாவூத் பின் அலீயின் புத்திரர்களிலொருவனையும், யஃகூப் பின் பலல் என்பானையும் மார்க்கப்புரட்டின் குற்றத்தின்மேல் கைதுசெய்திருந்தான். அவன் ‘பனீஹாஷிம்களில் ஒருவரையும் கொல்வதில்லை’ யெனச் சத்தியம் செய்துகொண்டிருந்ததால் அவர்களைச் சிறையில்

வைத்து, "நீர் கலீபாவாயினதும் அவர்களைக் கொன்றுவிட வேண்டும்" என ஹாதீயிடம் கூறியிறந்துவிட்டான். அவர்களில் தாவூத் உடைய புத்திரன் சிறையிலேயே இறந்துவிட்டான். உயிருடனிருந்த யஃகூபைத் தகப்பனுருடைய வாக்குப்பிரகாரம் ஹாதீ கொன்றுவிட்டான்.

## ஹுஸைன் பின் அலீ

ஹி. 169-ல் ஹுஸைன் பின் அலீ பின் ஹஸனுல் முதல்லத் என்பார் மதீனுவில் தமது இமாமத்தைப் பிரகடனப்படுத்தினர். கூபாவாசிகளிற் சிலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். துவக்கமாக அவர்கள் மதீனுவாசிகளிடம் பைஅத் வாங்கிக்கொண்டு, பிறகு அங்கிருந்த கஜானுவைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மதீனுவின் அதிபரும், அப்துல்லாஹ் பின் உமர் பின் கத்தாப் (ரலி.) அவர்களின் பௌத்திரருமான உமர் பின் அப்துல்அஜீஜ் என்பார் இவர்களை எதிர்க்கவியாலாது போயினர். ஹுஸைன் பின் அலீ இமாமத்தைப் பிரகடனப்படுத்திய பிறகு பதினொரு தினங்கள் மதீனுவிலிருந்தார்கள். பிறகு துல்கஅதா, 24-ந் தேதி தனது சகாக்களுடன் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டார்கள். முஹம்மத் பின் ஸுலைமான் அப்பாஸீயை அவ்வருஷம் ஹாஜிகளின் தலைவனுக்கி ஹுஸைனை எதிர்ப்பதற்காக ஹாதீ யனுப்பினுன். பக் என்னுமிடத்தில் இருதாரப்பாருக்கும் யுத்தம் மூண்டது. ஹுஸைனும், அன்னுரின் சகாக்களும் கொல்லப்பட்டனர். இத்ரீஸ் பின் அப்துல்லாஹ், முஹம்மத் நப்ஸேஜகிய்யாவின் சகோதரரான யஹ்யா பின் அப்துல்லாஹ் இவ்விருவர் மட்டும் இச்சண்டையிலிருந்து தப்பிவந்துவிட்டனர். இத்ரீஸ் ஆப்ரிகாவிற்குச் சென்று தங்கினுர். யஹ்யா தேலம்பிரதேசத்திற்குச் சென்று எதிர்ப்புக்கொடியை யுயர்த்தினுர். இவர்களின் சம்பவங்கள் பின்னுல் விவரிக்கப்படும்.

## ஹாதீயின் குணாதிசயங்கள்

ஹாதீ பலாட்டியனும், தீரனுமிருந்தான். இரண்டு கவசங்களை யணிந்துகொண்டு குதிரையின்மீது பாய்ந் தேறுவான். அவன் தனது சமுகத்தை யாவருக்கும் பொது வானதாக வைத்திருந்ததால் வாயிற்காப்போனான ரபீஃ என் பானுக்கு "என்னிடம் எவர் வந்தாலும் தடைசெய்ய வேண்டாம். அரசன் திரைமறைவிலிருப்பது, அரசன், பிரஜைகள் இருசாராருக்குமே தீமையை விளைவிப்பதற்குக் காரணமாகும். அதனால் இறைகருணையும் எடுபட்டுப் போகும்" எனக் கட்டளையிட்டிருந்தான். அரசியல் விஷயங் களை அவன் ஆழ்ந்து கவனித்து வந்தான். கொடை, நற் குணம், இவைகள் நிரம்பப்பெற்றிருந்தான். உரோஷம் மிகுந்திருந்தான். மஹ்தீயின் காலந்தொடுத்தே அரசியல் விஷயங்களில் பிரவேசித்து விட்டிருந்த அவனது தாயான கேஜ்ரான் என்னும் பெண்மணியை தலைவர்களும், அதிபர் களும், யாசகர்களும் அதிகமாகக் காணச்செல்வார்கள். ஹாதீ இக்கூட்டத்தைத் தடுத்து "இங்கு வருவோனுக்குத் தண்டனை யளிப்பதுடன் அவனது சொத்தையும் பறிமுதல் செய்துவிடுவேன்" எனக்கூறிவிட்டுத் தாயாரிடம் "நீங்கள் உங்கள் நேரத்தைத் தொழுகை, தியானம், குர்ஆனை யோதல் இவைகளில் கழியுங்கள்! அல்லது நூல்நூற்றுக்கொண் டிருங்கள். அரசியல் விஷயங்களுக்கும், உங்களுக்கும் யாது சம்பந்தமுளது?" எனக்கூறி விட்டான். இராக் தேசத்து மார்க்கத் தலைவர்கள் அனுமதித்திருந்த 'நபீத்' என்னும் பானமருந்திக்கொண்டிருந்தான். சங்கீதப் பிரியமுங் கொஞ் சிற்றே கொண்டிருந்தான்.

## பிரதிநிதியை நியமித்தல்

மஹ்தீயின் கட்டளைப்பிரகாரம் ஹாதீயுக்குப் பிறகு ஹாரூன் பிரதிநிதியாவான். எனினும் ஹாதீ அவனது ஸ்தானத்தில் தனது புதல்வன் ஜஃபர் என்பானைப் பிரதிநிதியாக்கக் கருதினான். அநேக சேனைத்தலைவர்களும் இதை யாதரித்தார்கள். எனவே அவன் பிரதிநிதி ஸ்தானத்தை விட்டுவிடும்படி ஹாரூனை இம்சிக்கத்தொடுத்தான். இவ்வின்னல்களைச் சகியாது ஹாரூன் அங்ஙனம் விட்டுவிடவுந் தயாராய் விட்டனன். எனினும், அவனது போஷகனான யஹ்யா பர்மகி அவனைத் தடுத்தான். ஹாதீயின் மரணம் இச் சண்டையை முற்றுப்பெறச் செய்தது. அவன் திடீரென வியாதியுற்று மூன்று தினங்களில் இறந்துவிட்டான். சிலர் "ஹாரூன், யஹ்யா இவ்விருவரின் தூண்டுதலின் பேரிலும் ஹாதீயின் கொடுமைகளால் மனத்தாங்கலடைந்திருந்த கேஜ்ரான் அவனுக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டனள்" என்றபிப்பிராயப் படுகின்றனர். ஹாதீ வியாதி யடைந்திருக்கும்போது யஹ்யாவுக்கு "சமயம் அண்மித்துவிட்டது. நீங்கள் தயாராயிருங்கள்!" என கேஜ்ரான் சொல்லியனுப்பியதிலிருந்து இவ்வபிப்பிராயம் பலப்படுகின்றது. கேஜ்ரானின் எச்சறிக்கையிலிருந்து அதிகாரிகளுக்கு அனுப்பப்படவேண்டிய கட்டளைகள் யாவையும் யஹ்யா ஏற்கனவே எழுதிவைத்திருந்தான். ஹாதீ இறந்து போயினதும் தபால் மூலமாய் அவைகளை யனுப்பிவிட்டான்.

## மரணம்

கி. பி. 786, செப்டம்பர், 13-ந்தேதிக்குச் சரியான ஹி. 170, ரபீஉல் அவ்வல், 14-ந்தேதி தனது 26-ம் வயதில் ஹாதீ 'ஈஸாபாத்' என்னுமிடத்தில் ஆவிதுறந்தான். அவன் கிலாபத்தை நிர்வகித்தது ஒருவருஷம், ஒருமாதம், இருபத்திரண்டு தினங்களாம்.

## 5. ஹாரூன்

ஹாரூனுர்ரஷீத் பின் மஹ்தி என்னும் இவன் கேஜ்ரானின் வயிற்றிலிருந்து ஹி. 145-ல் 'ரை' என்னுமிடத்தில் ஜனித்தான். அவன் நல்ல விதமாய்ப் போஷிக்கப்பட்டான். ஹி. 164-ல் மஹ்தி இவனுக்கு அம்பார் தொடுத்து ஆப்ரிகா வரைக்குமுள்ள பிரதேசங்களின் அதிகாரத்தைக் கொடுத்திருந்தான். ஹி. 165-ல் 95,793-பேர்களைக்கொண்டதொரு பெரிய சேனையை யவனுக்குக் கொடுத்து, குஸ்துன் துனிய்யாவின்புறம் அனுப்பினான். ஹி. 166-ல் ஹாதீயுக்குப்பிறகு இவனைப் பிரதிநிதியாக நியமித்தான். ஹி. 169-ல் இவனது தீரத்தையும், திறமையையுங்கண்டு ஹாதீயை விட இவனை முற்படுத்த வேண்டுமெனக் கருதினான். எனினும், இவ்வெண்ணத்தைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு முன்பே இறந்து விட்டான். ஹாதீ மரணமடைந்த பிறகு ஹி. 170, ரபீஉல் அவ்வல், 14-ந்தேதி தனது 25-ம் வயதில் இவன் கிலாபத்தின் பீடத்தமர்ந்தான்.

### உள் நிலைமை

அப்பாஸிய்யாக்களது கிலாபத்தின் காலத்தில் ஹாரூனின் காலமே சிறந்ததெனக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் செல்வம், கல்வி, பலம், கண்ணியம் இவைகள் ஒவ்வொன்றிலும் அப்பாஸிய்யாக்களின் கிலாபத் உச்சஸ்தானத்தையடைந்தது. ஒவ்வொரு விஷயத்திலும் திறமையடையப் பெற்றோர் வந்துகூடியதால் தேசத்தின் வனப்பு அதிகப்பட்டதுடன், ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் முன்னேற்

றம் ஏற்பட்டது. இத்துடன் ஹாரூனின் அரசியல் போஷிப்பும், அவனது நிகரற்ற குணாதிசயங்களும் இம்முன்னேற்றத்தை மிகவும் உச்சஸ்தானத்திற் கொணர்ந்து வைத்ததால் இஃது சரித்திரத்தில் தனிச்சிறப்புப் பெற்ற காலமாய்த் திகழ்ந்தது. இதனால் எதிர்காலத்திலும் முஸ்லிம்களுக்கு அநேக பலன்களேற்பட்டன.

**பக்தாத்**

ஹாரூனுர்ரஷீதின் காலத்தில் மகிமை, முன்னேற்றம் இவைகளில் உச்சஸ்தானத்தை பக்தாத் அடைந்திருந்தது. இளவரசர்கள், அதிபர்கள், தலைவர்கள் நிர்மாணித்திருந்த கட்டிடங்களைக் காணும் பூகோள ஆராய்ச்சியாளர்கள் திகைத்துப்போய்க் கொண்டிருந்தார்கள். கிலாபத்தின் மளிகை, மந்திரிகளின் வாசஸ்தலங்கள், இவைகளுள் குறிப்பாக பர்மகீகளின் கட்டிடங்கள் அக்காலத்தில் முழுவுலகிற்கே நிகரற்றவைகளாயிருந்தன. ஜஃபர் பின் யஹ்யா தனது மாளிகையைக் கட்டுவதற்கு 20,00,000-திர்ஹம் செலவழித்தான். திஜ்லாவின் கரையோரம் தோட்டங்களும், ஆரோக்கிய நந்தவனங்களும் இருந்தன. பெரிய வியாபாரிகளின் உயர்ந்த கட்டிடங்களும், பல பெரிய மஸ்ஜித்களும், அவைகளின் வானளாவிய ஸ்தூபிகளும் நகரத்தைச் சிறப்பித்துக் கொண்டிருந்தன. திஜ்லாவின் இருகரையோரமாயும் ஜனங்கள் அதிகமாகக் குடியேறத் தொடுத்ததால் பக்தாதின் ஜனத்தொகை 20,00,000-க்கதிக்மாகப் போயிருந்தது. கடல், தரை இருமார்க்கத்திலும் வியாபாரச் சரக்குகள் வந்துகொண்டிருந்தன. சீனம், இந்தியா, ஆப்ரிகா, ஷாம், ஜஸீரா முதலிய தேசங்களின் வியாபாரிகள் அங்கிருந்தார்கள். உதயகிரி தொடுத்து அஸ்தகிரி வரைக்குமுள்ள பிரதேசங்களின் சகல பொருட்களும் கடைத்தெருவில் கிடைத்து வந்தன. பக்தாத் உலகத்திற்கே மிகப்பெரி

யதும், வியாபாரத்திற்கு நடுநாயகமானதுமான நகரமாய்ப் பரிமளிக்க வேண்டுமென அதிகாரிகளும், தலைவர்களும் ஆவல் பூண்டிருந்தார்கள். பாட்டைகளைச் சுத்தமாகவும், அச்சமற்றதாகவும் செய்து, வியாபாரத்திற்கான சகல சௌகரியங்களு மேற்படுத்த முயற்சித்து வந்தார்கள்.

செல்வ நிலைமையைக் கவனிக்குமிடத்து இஸ்லாமிய நாடுகள் யாவற்றிலிருந்தும் செலவுபோக மீதப்படும் தொகை கிலாபத்தின் தலைநகரத்திற்குக் கொணரப்படுதல் வழக்கம். சரித்திராசிரியர்கள் அத்தொகையை வருடமொன்றிற்கு 40,00,00,000-திர்ஹமெனக் கணக்கிடுகிறார்கள். இஃது கலீபாவின் பொதுநிதியிற் சேர்க்கப்பட்டு வந்தது. கலீபா இதை மந்திரிகள், காரியஸ்தர்கள், சேனை, பணிமக்கள் இவர்களின் சம்பளத்திலும், வெகுமதியளிப்பதிலும் செலவழிப்பான். இதன் காரணமாய் அந்த நகரத்து நிலைமை க்ஷேமமானதா யிருந்தது. தாழ்ந்தோரும், உயர்ந்தோரும் சௌகரியமான வாழ்க்கையை நடாத்திவந்தார்கள். செல்வம் மிகுந்துள்ளபோது சிற்றின்ப சுகபோகங்கள் மிகுதியாய்ப்போவது கண்கூடு. இதைவிட்டும் அவர்களும் தப்பிவிடக்கூடவில்லை. கல்வி விஷயத்தில் மாணவர்கள் முன்னேக்கும் ஸ்தலமாக பக்தாத் இருந்தது. இஸ்லாமிய நாடுகளிலிருந்த மார்க்க நிபுணர்களும், அறிஞர்களும் அநேகமாய் அங்கேயே வந்துவிட்டார்கள். நாயகத்திருமொழியின் வியாக்கியான கர்த்தாக்கள், குர்ஆனைப் பிழையின்றியோதும் காரீக்கள், திருக்குர்ஆனின் வியாக்கியான கர்த்தாக்கள், நிபுணர்கள், இலக்கண வல்லுனர்கள், சரித்திராசிரியர்கள், தர்க்க சாஸ்திர நிபுணர்கள் போன்றோர் யாவரும் போதனை பீடத் தமர்ந்து கொண்டும், கிரந்தங்க ளியற்றிக்கொண்டு மிருந்தனர். அங்கிருந்த ஜாமிஃ மஸ்ஜித்கள் கல்விக்கு உறைவிடமாயிருந்தன. அக்காலத்தில் பக்தாதுக்குச்சென்று

கல்வி பயிலாதவன் எக்கலையிலும் பாண்டித்திய மடைந்தவனெனக் கொள்ளப்பட மாட்டான். இஸ்லாமிய மார்க்கக்கலைகளைத் தவிர மருத்துவம், தத்துவ சாஸ்திரம், வான சாஸ்திரம், க்ஷேத்திரக்கணிதம், நக்ஷத்திரக் கணிதம் இவைகளில் பாண்டித்திய மடைந்தோரும் அங்கு அதிகமாயிருந்தனர். இவர்கள் உலகத்தில் எந்த வர்க்கத்திடமும் எக்கல்வியைக் கண்டாலும் அதை அரபியில் மொழிபெயர்த்து, முஸ்லிம்களிடம் அதைப்பரவச் செய்வார்கள். தலைவர்கள், அதிபர்கள், இவர்களுள் குறிப்பாக பர்மகீகள் இவர்களின் நன்றியறிதலாலும், செல்வத்தாலும் இவ்வறிஞர்களின் வாழ்நாட்கள் நன்னிலைமையிற் கழிந்துவந்தன.

## அலவிய்யாக்கள்

ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகள் கிலாபத்தைத் தமக்குப் பாத்தியமானதெனக் கருதிவந்ததாலும், அவர்களிற் சில தனிப்பட்ட பெரியார்கள் எவ்விதத்தாலும் அதைத் தாமடையவேண்டுமென முயற்சித்துக்கொண்டிருந்ததாலும் பனீ அப்பாஸ்கள் எப்பொழுதும் அவர்களுக்குப் பயந்துகொண்டிருந்தார்கள். ஹாரூன் கலீபாவாயினதும் அவர்களுடன் கருணையாய் நடந்து, அவர்களை நிம்மதியாயிருக்கச்செய்யக் கருதினன். இதே முறையில் பக்தாதில் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டிருந்தவர்களில் அப்பாஸ் பின் ஹஸன் என்பாரைத் தவிர்த்து மற்ற யாவருக்கு மதீனு செல்ல அனுமதித்து விட்டான். எனினும் யஹ்யா பின் அப்துல்லாஹ் வென்பார் ஹாதீயின் காலத்திய 'பக்' உடைய சண்டையிலிருந்து எங்ஙனமோ தப்பி தேலம் பிரதேசத்திற்குச்சென்று, அங்கு விரோதக் கொடியை யுயர்த்தினர். அதைச்சுற்றியிருந்த மக்கள் அன்னருடன் சேர்ந்து கொண்டனர். இதனல் அவர்களின் தீரம் பின்னும் பலப்பட்டது. இதைச் செவியுற்ற ஹாரூனுக்குத் திடுக்கம்மேலிட்டு பலல்

பின் யஹ்யா பர்மகியை 50,000-பேர்கள்கொண்டதொருசேனையுடன் அனுப்பிவைத்தான். அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகள்மீது பலல் நட்புபூண்டவனு யிருந்ததால் அவன் அங்குசென்று சண்டையிடுவதற்குப் பதிலாய் தேலம் உடைய தலைவனுக்குப் பத்துலக்ஷம் திர்ஹம் கொடுத்து, "யஹ்யாவைத் தங்கள் கோட்டையிலிருந்து என்னிடம் அனுப்பிவிடுங்கள்!" எனக்கேட்டுக்கொண்டு, அவர் வந்தவுடன் அவருக்கு நன்கு போதித்துச் சமரஸத்திற்காகத் தூண்டினுன். கலீபாவே தனது கரத்தால் அபய அறிக்கை வரைந்தனுப்பினுல் தாம் வருவதாய் அவரும் ஒப்புக்கொண்டார். பலல் இதை ஹாரூனுக்கு வரையவும் அவன் இதைக்கேட்டு மிகவும் சந்தோஷித்தான். அறிஞர்கள், மார்க்கத் தலைவர்கள் இவர்களையழைத்து அவர்கள் முன்னுல் அபய அறிக்கை வரைந்து அவர்களுடையவும், பனீ ஹாஷிம் தலைவர்களுடையவும் சாக்ஷியத்தை யதில்பதிந்து, வெகுமதிகளுடன் அதையனுப்பினுன். பலல் பக்தாதுக்கு யஹ்யாவைக் கொணர்ந்தான். ஹாரூன் அன்னுரது ஜீவனோபாயத்திற்காகப் பெருந் தொகையையும் நியமித்து, இக்காரியாதியைச் சாதித்ததற்காக பலல் உடைய உத்தியோகப்பதவியையும் உயர்த்தி "யஹ்யாவை யும்மிடமே வைத்திரும்!" என அவனுக்கே கட்டளையிட்டான்.

## முந்திய இத்ரீஸ்

யஹ்யாவின் இரண்டாவது சகோதரரான இத்ரீஸ் என்பார் பக்யுத்தத்திலிருந்து ஓடி மிஸ்ருக்குச் சென்றுவிட்டார். பிறகு அங்கிருந்து மக்ரிப் பிரதேசத்திற்குச் சென்று, தலீலீ நகரத்தில் ஹி. 172-ல் தமது இமாமத்திற்காக பைஅத் வாங்கிக்கொண்டு 'அலவீ கிலாபத்' அல்லது 'இத்ரீஸீ அரசாங்கம்' எனக்குறிப்பிடத்தக்க தமது அரசி

யிலே நிறுவிக்கொண்டார். இதையறிந்த ஹாரூன் படையெடுக்கக் கருதினன். எனினும், அதைக் கஷ்டமெனக் கொண்டு தனது அடிமையான 'ஷம்மாக்' என்னும் சிறப்புப்பெயருடைய ஸுலைமான் பின் ஜரீரை யனுப்பி எவ்விதத்தாலும் இத்ரீஸைக் கொன்றுவிடும்படிக் கட்டளையிட்டான். அவன் இத்ரீஸிடம் சென்று பனீ அப்பாஸ்களின் பைஅத்தை முறித்து விட்டதாய் வெளியிட்டு அவருக்கு பைஅத் செய்தான். அவர் இதனல் மிகவும் சந்தோஷமடைந்து, அவனைத் தனது அந்தரங்க சகாக்களுடன் சேர்த்துக்கொணடார். அவன் சமயம் பார்த்து ஒருதினம் அவரது பற்பொடியில் விஷங்கலந்து விட்டான். இதே விஷத்தால் அவர் ஹி. 177-ல் மரணமடைந்தார். எனினும், அவரது மரணத்தால் அவ்வரசாங்கம் முற்றுப்பெறவில்லை. அவருடைய அடிமைப் பெண்ணொருத்தி கர்ப்பமா யிருந்தாள். சின்னுட்களுக்குப் பிறகு ஒரு புதல்வன் ஜனித்தான். மக்ரிப்வாசிகள் அவனுக்கும் 'இத்ரீஸ்' எனவே நாமஞ்சூட்டி, அவனது கிலாபத்திற்காக பைஅத் செய்தார்கள். உந்துலுஸுக்குப்பிறகு மக்ரிபெ அக்ஸாவைச்சேர்ந்த இந்த இரண்டாவது பிரதேசமும் 'தில்மிஸான்' உடன் பனீ அப்பாஸ்களின் கிலாபத்தை விட்டும் நீங்கிவிட்டது. இதே காரணங்களால் ஹாரூன் எப்பொழுதும் அலவிய்யாக்களைப்பற்றி பயந்துகொண்டே யிருந்தான். அதிபர்கள், மந்திரிகள் இவர்களில் எவரைப்பற்றியேனும் அவர் பெருமானாரின் குடும்பத்தவர்மீது அன்பு பூண்டிருப்பதாய்ச் செவியுற்றால் தக்கதண்டனை விதிப்பான். இதனாலேயே இமாம் மூஸா காலிம் என்பாரை பக்தாதில் தனது மேற்பார்வையில் வைத்திருந்ததுடன் அவர்களை எங்குசெல்லவும் அனுமதியாது போயினன். இறுதியாக அவர்கள் அங்கேயே இறந்துபோயினர்.

## ஆப்ரிகா

கைர்வானின் அதிகாரியாயிருந்த பலல் பின் ரௌஹ் தனது சகோதரியின் குமாரன் முகீராவை தூனிஸ் உடைய தலைவனாக நியமித்தனுப்பினான். அங்கிருந்த மக்கள் அவனது காரியாதிகளில் வெருப்புகொண்டு இவனுக்குப் பதிலாய் வேறு யாரையேனும் அதிகாரியாய் நியமித்தனுப்பும்படி வரைந்தார்கள். பலல் அவர்களின் விண்ணப்பத்தை யொப்புக்கொள்ளவில்லையாதலால் அவர்கள் வேறுவழியின்றி இப்னுல்ஜாரூத் என்னும் தலைவனைத் தமது அதிபனாகக்கொண்டு, முகீராவை நீக்கிவிட்டார்கள். பலல் தனது சிறியதகப்பன் குமாரனான அப்துல்லாஹ்வை அவ்விடத்துத் தலைவனாக்கியனுப்பினான். தூனிஸ்வாசிகள் 'அவன் தனது சகோதரனை அனுப்பியிருப்பதன் நோக்கம் தனது எதிரிகளுக்குத் தண்டனை யளிப்பதே' எனக்கருதிக்கொண்டு, ஒற்றுமையுடன் முன்வந்து அப்துல்லாஹ்வை எதிர்த்து அவனைக் கொன்றுவிட்டு, அவனது சகாக்களைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள். இப்னுல்ஜாரூத் இதன்பிறகு வெளிப்படையாகப் புரட்சியை யாரம்பித்து, கைர்வான்மீது படையெடுத்து, பலலை அங்கிருந்து துரத்திவிட்டான். ஹாரூன் இதன்மேல் ஹர்தமா பின் அஃயுன் என்பானைச் சேனையுடனனுப்பியதில் அவன் அங்குசென்று அமைதி நிலைவச் செய்து, இப்னுல்ஜாரூதைக் கைதுசெய்து பக்தாதுக் கனுப்பிவிட்டான். அவன் அங்கு சிறைவைக்கப்பட்டான். ஹி. 171-ல் ஹர்தமாவுக்குப்பதிலாக ஹாரூன் தனது பால்குடிச் சகோதரனான முஹம்மத் பின் முகாதில் என்பானை யவ்விடத்துத் தலைவனாய் நியமித்தனுப்பினான். தூனிஸ்வாசிகள் முஹம்மதையும் எதிர்த்து, கைர்வானைப் பிடித்துக்கொண்டு அவனைத் துரத்திவிட்டார்கள். பிறகு ஹாரூன் ஜாப் நகரத்தின் அதிபதியாக விருந்த இப்ராஹீம்

பின் அக்லப் என்பானை ஆப்ரிகாவின் தலைவனாய் நியமித் தனுப்பினான். அவன் அங்கு சென்று கைர்வானைக் கைப் பற்றிக்கொண்டு, அங்கு அமைதி நிலவச்செய்து அதைத் தனி அரசாங்கமாகச் செய்துகொண்டான். அப்பாஸீ கலீபா வுக்கு ஆண்டுதோறும் 40,000-தீனார் கப்பம் மட்டும் கட்டிக் கொண்டு, எஞ்சிய காரியங்களுக்குத் தானே சர்வாதிகாரி யாக விருந்தான்.

## கவாரிஜ்கள்

இக்கூட்டத்தவர் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் காலத்தில் உண்டாயினர். பனீஉமையாக்களின் காலத்தில் அநேகவிடங்களில் இவர்கள் வெளிக்கிளம்பிப் புரட்சியை யுண்டாக்கினார்கள். பனீஉமையாக்கள் இவர்களை யழிப்பதி லேயே எப்பொழுதும் கண்ணுங்கருத்துமா யிருந்தார்கள். அவர்களின் பிரசித்திபெற்ற சேனைத்தலைவனான முஹல்லப் பின் அபீஸுப்ரா இதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தியதுடன், அதற்கான முயற்சியில் எத்தகைய குறைவும் செய்தானல்லன். எனினும், கிலாபத் சென்ற நேர்மையற்ற போக்கும், கலீபாக்களின் சுயநலமும், அதிபர் களின் கொடுமையும் அதை முழுமையாக அழித்துவிடக் கூடவில்லை. ஹாரூனுர்ரஷீதின் காலத்தில் தீரம், கண்ணி யம் இவைகள் நிரம்பப்பெற்ற தலைவனான வலீத் பின் தரீப் ஷைபானீ என்பான் ஜஸீராவில் நஸீபைனுக்குச் சமீப மாக ஹி. 178-ம் ஆண்டில் காரிஜீக் கொள்கையைப் பிரகட னப் படுத்தினான். கலீபாவிடமிருந்து அவனை யொடுக்கு வதற்காக அடிக்கடி சேனைகள் அனுப்பப்பட்டு வந்தும் தோல்வியே யடைந்துவந்தன. இதனால் அவர்களின் வன்மை அதிகப்பட்டுவிட்டது. ஜஸீரா தொடுத்து ஆர் மீனிய்யா வரைக்குமிருந்த ஜனங்கள் அதிற் சேர்ந்து போனார்கள். ஹாரூன் ஒரு பெரிய சேனையை மஅன் பின்

ஜாயிதாவின் சகோதரி யுடைய புதல்வனான யஜீத் பின் ஷைபானீயுடைய தலைமையின் கீழ் அனுப்பினான். யஜீத் அங்கு சென்று அவனுடன் சமரஸத்திற்காக வார்த்தை யாடினான். இதில் சிலமாதங்கள் கழிந்தன. யஜீத் வலீ தின் வர்க்கத்தைச் சேர்ந்தவனாயிருப்பதால் சண்டையை யொத்திவைத்துக்கொண்டு வருவதாய் அரசசமுகத்திலிருப் போர் ஹாரூனிடம் முறையிட்டுக்கொண்டனர். ஹாரூன் இதன்பேரில் யஜீதுக்குப் பயமுறுத்தலான கட்டளை யனுப் பினான். தற்போது அவனுக்கு சண்டையிடுவதை தவிர்த்து வேறு வழியில்லாது போயினது. எனவே, "முஸ்லிம் களை யழிப்பதில் யாது பலன் ஏற்படக்கூடும்? நாமிரு வரும் சண்டையிடலாம் வாருங்கள்!" என வலீதுக்குச் சொல்லியனுப்பினான். அவன் போர்களத்திற்கு வந்தான். இருவரும் சண்டையிட்டார்கள். சேனைகள் தூரத்தில் நின்று, வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தன. இறுதி யாக வலீத் கொல்லப்பட்டான். அவனது சிரம் வெற்றிக் கடிதத்துடன் கலீபாவிடம் அனுப்பப்பட்டது.

**மஷ்ரிக்**

மக்ரிப் (மேற்கு) தேசத்தில் உந்துலுஸ், முராகிஷ் இவ்விரண்டும் அப்பாஸீ கிலாபத்தைவிட்டும் நீங்கிவிட்டன. மஷ்ரிக் (கிழக்கு) பகுதியுடைய பயமும் அதைவிடக் குறைவாயிருக்கவில்லை. அலீ பின் ஈஸா பின் மாஹான் என்னும் குராஸானின் அதிகாரியின் கொடுமைகள் காரண மாக அங்கும் புரட்சி தலைதூக்கியது. ஹாரூன் அலீயை நியமிக்கக் கருதியகாலத்து மந்திரி யஹ்யா பின் காலித் இடம் யோசனைகலந்ததில் அவனை நியமிப்பதை யிவன் உசிதமெனக் கொள்ளவில்லை. எனினும், மந்திரியின் யோசனைக்குப் புறம்பாய் அவனை அதிகாரியாய் நியமித்து விட்டான். அவன் அங்குசென்று கொடுமைகள் புரியத்

தொடுத்தான். தலைவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து தனக்காகப் பொருட்சேர்த்தான். அவைகளி லிருந்து ஹாரூனுக்காகவும் விதம்விதமான ஆடைகள், அசுவங்கள் போன்றவைகளைக் காணிக்கையாக வனுப் பினான். அவன் ஒரு திண்ணையில் உட்கார்ந்துகொண்டு அவைகளைப்பெற்று யஹ்யாவிடம் "நீர் அலீயை நியமிப்ப தற்கு மாற்றம் உரைத்தீரே! அஃது எவ்வளவு நன்மை யாய்ப் போய்விட்டது பார்த்தீரா?" வென்றான். அதற்கு யஹ்யா "எனக்கு என் அபிப்பிராயமே நேர்மையானதாய் முடியவேண்டுமென்னும் ஆவலிருப்பினும், அதைவிட அதிகமாக கலீபாவின் அபிப்பிராயமே சரியானதாயும், நல்லதாயும் முடியவேண்டுமெனவே விரும்புகிறேன். அலீ யின் அதிகாரம் நன்மையாய் முடியும்படி அல்லாஹ் கிருபை செய்வானாக! எனினும், 'அவன் அவ்விடத்துத் தலைவர் களிடம் இப்பொருட்களைக் கொடுமையா யபகரித்திருப் பானோ?' வென்றஞ்சுகிறேன். இவ்வாறாயின் இதன் விளைவு தீமையானதாகவே முடியும். அனுமதிக்கப்படாத துறைகளில் இவ்விதமான சன்மானங்களைச் சேகரிக்க வேண்டுமாயின், நான் இன்றே கர்க் உடைய வியாபாரிகளி டம் இப்பொருட்களைவிடப் பத்து இருபது மடங்கு அதி கப் பெறுமானமுள்ள இரத்தினங்களைப் பார்ப்பதற்கென வாங்கி, அப்படியே எடுத்துக்கொண்டு உங்கள் முன்பு சன் மானமாய்க் கொடுப்பேன். இதிலோ அலீயின் காரியாதி களிலேற்படுவதைக் காட்டினும் குறைவான பயமேயுள்ளது. இம்முறையால் நான் மூன்று மணி நேரத்திற்குள் அலீ மூன்று வருடங்களிற் சேர்த்ததைவிட அதிகமான பொருட் சேர்ப்பேன். எனினும், இஃது நியாயத்திற் குட்பட்ட தாமா?" வென்றான்.

சின்னுட்களுக்குள்ளாகவே அலீ பின் ஈஸா மிகவும் கொடுமைபுரிவதாகவும், அவனைநீக்கிவிட்டு வேறு தலைவனை யனுப்பவேண்டுமெனவும் செய்துகொண்ட குராஸான் தலைவர்களின் விண்ணப்பம் கலீபாவிடம் வந்தது. ஹாரூன் யஹ்யாவிடம் கலந்தாலோசித்ததில் அவன் "நான் ஏற்கனவே அவனை நியமிப்பதை யுசிதமெனக் கொள்ளவில்லை. அவனைத் திருப்பியழைத்துக்கொண்டு, யஜீத் ஷைபானியை யனுப்பவேண்டுமென்பதே எனதபிப்பிராயம்'' என்ருன். ஹாரூன் இத்தடவையும் அவனது ஆலோசனையைக் கேட்கவில்லை. பிறகு அலீ கலீபாவுக்கெதிராய்ப் புரட்சிசெய்து, தானே குராஸானுக்குத் தனிப்பட்ட தலைவனுய்விடத் தீர்மானித்துக் கொண்டதாய்ச் செய்திகள் கிடைத்தன. இதைச் செவியுற்ற ஹாரூன் ஹி. 189-ல் தானே சேனைகளைக் கொண்டு சென்ருன். இவன் 'ரை' போய்ச்சேர்ந்ததும் அங்கு அலீ பின் ஈஸா சந்தித்தான். அவன் பின்பும் கலீபாவுக்கும், அவனுடனிருந்த தலைவர்களுக்கும் சன்மானங்களைச் சமர்ப்பித்தான். ஹாரூன் இதனுல் சந்தோஷமடைந்தான். புரட்சியின் சின்னங்களைக் காணுததால் அவனை குராஸானின் தலைமைத்துவத்திலேயே நிலைபெறச் செய்துவிட்டுத் திரும்பினுன். அலீ திரும்பிச் சென்று கலீபாவிடம் தனக்கு விரோதமாய் விண்ணப்பித்துக் கொண்டோருக்கெல்லாம் தண்டனை விதித்து, அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். பனீஉமையாக்களின் காலத்தில் குராஸானின் அதிகாரியாக விருந்த நஸ்ர் பின் ஸையாரின் பௌத்திரனுன ராபிஃ பின் லைத் என்பான் அலீயுக்கு விரோதமாகக் கிளம்பினுன். ஸமர்கந்த் வாசிகளைச் சேர்ந்தவொரு கூட்டம் அவனை யாதரித்தது. அலீ தனது புதல்வனுன ஈஸாவின் தலைமையின்கீழ் ஒரு சேனையை யனுப்பினுன். ராபிஃ இதையும் வெற்றி

கொண்டுவிடவே ஈஸா பல்குக்கு ஓடிவிட்டான். பல்குக்கு ஷாஸ், பர்காஞ் இவ்விடங்களைச்சேர்ந்த துர்க்கியர்களின் ஒரு கூட்டத்தை ராபிஃ அனுப்பியதில் அவர்கள் அங்கு சென்று ஈஸாவைக் கொன்று விட்டார்கள். அவனது மாளிகையைச் சுற்றியிருந்த தோட்டத்தில் ஒரு நிதியைப் புதைத்து வைத்திருந்தான். அஃது அடிமைப் பெண்ணொருத்திக்கு மட்டுமே தெரியும். அவள் அதைத் துர்க்கியர்களுக்குத் தெரிவிக்கவும் அவர்கள் அதை எடுத்துக் கொண்டார்கள். இச்செய்தியை யறிந்த ஹாரூன் ஹர்தமா பின் அஃயுன் என்பானை குராஸானின் அதிகாரியாய் நியமித்தனுப்பினான். அவன் அங்கு சென்று அலீ பின் ஈஸாவையும், அவனது சகாக்களையும் கைது செய்து, அவர்களின் சொத்துக்கள் யாவையும் பறிமுதல் செய்துவிட்டுப் பிரஜைகளின் நன்மைகளைக் கவனித்து, மீண்டும் அமைதி நிலவச் செய்தான். ராபிஃ மிகவும் வன்மையடைந்து விட்டதால் அவன் ஹர்தமாவின் கையிலும் கிடைக்காது போனான். இறுதியாக அவனை எதிர்ப்பதற்காக ஹி. 193-ல் ஹாரூனே சென்றான். இதே பிரயாணத்தில் 'தூஸ்' என்னுமிடத்தில் போய்ச் சேர்ந்ததும் இறந்து விட்டான். இவனது நோக்கம் ஈடேறவில்லை. மாமூனின் காலத்தில் எத்தகைய சண்டையுமின்றியே ராபிஃ வழிபட்டுப் போயினன்.

### மந்திரிப் பதவி

ஹாரூன் காலத்து முதலாவது மந்திரி யஹ்யா பின் காலித் பர்மகீ யாவான். பர்மகீ வர்க்கம் பிரசித்திபெற்றதாகவும், அதன் சரித்திரம் அநேகமாய் ஹாரூனின் காலத்துடனேயே சம்பந்தப்படுவதாயு மிருப்பதால், அதன் நிலைமையையும் ஈண்டு சற்றே விவரிப்பது உசிதமானதேயாம்.

## பர்மகீகள்

இவர்களின் மூலபிதா பர்மக் என்பான் பல்கின் அக்கினிகுண்டத்தை யணையாது பாதுகாத்து வந்தோனும், மஜூஸீ(நெருப்பைப் பூஜிப்பவர்)களின் மாபெருந்தலைவனுமாவன். குராஸானில் அப்பாஸிய்யாக்களது கிலாபத்தைப் பற்றிய பிரசாரம் நடைபெற்றபோது இஸ்லாமைத் தழுவியிருந்த அவனது புத்திரன் காலித் அதிற் கலந்துகொண்டு, அதில் முக்கிய அங்கத்தவனாய் விட்டான். அப்பாஸிய்யா கிலாபத் நிறுவப் பெற்றபிறகு அபூஸல்மா கிலால் கொல்லப்படவும் ஸப்பாஃ இவனை இவனது உண்மைப் பணி, திறமை இவைகள் காரணமாக மந்திரியாக்கினான். மன்ஸூர் தனது காலத்திலும் சின்னாட்கள் இவனை யதேபதவியில் வைத்திருந்தான். பிறகு பாரஸீகத்தின் தலைவனாய் நியமித்தனுப்பினான். ஹி. 158-ல் அவன் கிஸ்தியை யனுப்பமுடியாது போகவே அவன் கணக்கில் மன்ஸூர் 30,00,000-திர்ஹம் பாக்கிக்கட்டி, அவனை பக்தாதுக் கழைத்து, அதைச் செலுத்துவதற்கு மூன்று நாட்கள் மட்டும் தவணை கொடுத்தான். அவன் இருதினங்களில் தனது நண்பர்களிடமிருந்து அத்தொகையைச் சேர்த்து கஜானாவில் கட்டிவிடவே மன்ஸூர் அவனை மூஸிலுக்குத் தலைவனாய் நியமித்து விட்டான். காலித் புத்திநுட்பம், ஆழ்ந்தயோசனை நிரம்பப் பெற்றவனாயிருந்தான். அவன் கடுமையாய் நடந்துகொள்ளாவிடினும் அவனிடம் யாவருக்கும் பயபக்தி யிருந்தது. அவன் ஹி. 163-ல் காலகதியடைந்தான்.

## யஹ்யா பின் காலித்

காலிதின் புதல்வனான யஹ்யா ஹி. 120-ல் ஜனித்தான். மன்ஸூர் அவனை ஹி. 158-ல் ஆதர்பீஜான் எல்லைப்புறத்

துத் தலைவனாய் நியமித்தனுப்பினான். அவன் அங்கு சென்று அரசியலை நடாத்திச்சென்ற நேர்மையின் காரண மாக அரசசமுகத்தில் அவனது மதிப்பு அதிகமாயது. மஹ்தீ ஹி. 163-ல் அவனை யழைத்து, தனது புதல்வன் ஹாரூனுக்கு ஆசானாயும், போஷகனாயும் நியமித்தான். ஹாரூன் அவனைத் தந்தையென்றழைத்து வந்ததுடன், அவனது புதல்வன் பலல் என்பானைச் சகோதரனெனவே யழைத்துவந்தான். இவ்விருவரும் ஒரேகாலத்தில் ஜனித் தார்கள். யஹ்யாவின் மனைவி ஹாரூனுக்கும், கேஜ்ரான் பலனுக்கும் பால் கொடுத்து வந்தனர். ஹி. 163-ல் ஹாரூன் ரூமியர்களை எதிர்ப்பதற்காக வனுப்பப்பட்டபோது யஹ்யா அவனுட னிருந்தான். அச்சண்டைக்கான ஒழுங்கு முறை கள் யாவும் இவன் கைவசமே ஒப்புவிக்கப்பட்டிருந்தன. ஹி. 164-ல் மஹ்தீ ஹாரூனை அம்பார் தொடுத்து மக்ரிப் வரைக்கு முள்ள பிரதேசத்திற்குத் தலைவனாக்கினான். இதற்கான சகல ஏற்பாடுகளும் யஹ்யாவின் கைவசம் ஒப்புவிக்கப்பட் டிருந்தன. ஹாதீ தனது காலத்திலும் ஹாரூனுடனேயே யஹ்யாவை இருக்கும்படி விட்டுவைத்தான். பிறகு அவன் ஹாரூனை நீக்கிவிட்டுத் தனது புதல்வன் ஜஃபர் என்பானைப் பிரதிநிதியாக்கக் கருதினாதலால் ஹாரூனை இதற்காக இம் சிக்கத் தொடுத்தான். அவன் இதை யொப்புக்கொண்டு "எனது சந்தோஷத்திற்கு ஜுபைதா ஒருவளே போதும். அவளுடன் நான் சுகவாழ்வு நடாத்திச்செல்வேன். அரசிற் போர்கள் எனக்கு வேண்டாம்" எனக் கூறிக்கொண் டிருந்தான். எனினும் யஹ்யா "நீர் நீங்கிக் கொண்டபிறகு உமதிஷ்டம்போல் வழக்கை நடாத்த ஜனங்கள் சம்மதிப் பார்களென்பதை நீரறிவீரோ?" வெனக் கூறி நீங்காது தடுத்து வைத்தான்.

ஹாரூன் நீங்கிக்கொள்ளச் சம்மதிப்பதாயும், யஹ்யாவே அவனை நீங்கவொட்டாது தடுப்பதாயும் ஹாதீயுக்குச் செய்திகிடைத்தது. எனவே, அவன் யஹ்யாவை யழைத்து "நீர் எதற்காக எனக்கு விரோதமாய் ஹாரூனைக் கிளப்பிவிடு கிறீர்?" எனக்கேட்கவும் அவன் "தங்களுக்கும், தங்களது சகோதரருக்கு மிடையே நான் பிரவேசிப்பதற் கென்ன விருக்கின்றது? எனினும் காலஞ்சென்ற கலீபா அவர்களும், தாங்களும் ஹாரூனை என் வசம் ஒப்புவித்துள்ளீர்கள். எனவே நான் அவருக்குச் சாதகமானவைகளை மேற்கொள் கிறேன். அவர் கலீபா மஹ்தீயின் கட்டளைப் பிரகாரம் பிரதிநிதியாவார். தாங்களே அவ்வுறுதிமொழியை முறித்து விட்டால் உறுதிமொழியின் மதிப்பே எடுபட்டுப்போம். தங்களுக்குப்பிறகு மற்றையோரும் தங்களின் உறுதி மொழியை மதியார்கள். ஜஃபர் இன்னும் சிறுபிராயத்தவ ராகவே யிருக்கின்றார். ஹாரூன் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டிராவிடினும் தாங்களேனும் அவரைப் பிரதிநிதியாக நியமித்து, அவருக்குப் பிறகு ஜஃபரை நியமிப்பது தங் களுக்கு அழகானதாகும். இதற்கு மாற்றமாய் பிரதிநிதி யாக நியமிக்கப்பட்டவரை நீக்கிவிட்டு, ஜஃபரைநியமிப்பது நன்றாமோ?" என்றான். யஹ்யாவின் இச்சாதுர்யமான மறு மொழியைக்கேட்ட ஹாதீ மௌனமாயிருந்துவிட்டான். எனினும், சுயநலமிகளின் தூண்டுதலுக்குட்பட்டு மீண்டும் ஹாரூனை இம்சித்தான். அப்பொழுது யஹ்யாவின் ஆலோ சனைப் பிரகாரம் அவன் வேட்டைக்குச் செல்ல அனுமதி கோரவே ஹாதீ சின்னாட்களுக்குச் சென்றுவர அனு மதித்து, குறித்தகாலத்தில் வந்து சேர்ந்துவிட வேண்டு மெனக் கண்டித்தான். எனினும், அவன் யஹ்யாவுடன் முகாத்தில் உடைய கோட்டையின் புறம்சென்று நாற்பது தினங்களை யங்கு கழித்துவிட்டான். ஹாதீயுக்கு இஃது

கஷ்டமானதாய்த் தோற்றியது. அவன் திரும்பிவிடும்படி அடிக்கடி கட்டளைகள் பிறப்பித்துக்கொண்டே யிருந்தான். ஹாரூன் ஒன்றுக்குமே அசையவில்லை. அரச சமுகத்தில் அவனைப்பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டன. சிலர் அவன் புரட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்வதாக வெளிப்படையாய்க் கூறினர். அரச சமுகத்திலிருந்த பலல்பின் யஹ்யா இங்கு நடக்கும் செய்திகளை இரகசியமாய் ஹாரூனுக்குத் தெரிவித்துக்கொண்டே யிருந்தான்.

ஹாதீ யஹ்யாமீது சந்தேகங்கொண்டு "நீர் இங்ஙனம் குழப்பம் புரிவதை விட்டொழிக்காவிடின் கொல்லப்படுவீர்" என்றெழுதினன். எனினும், இதற்கிடையே ஹாதீ வியாதியடைந்து, மூன்று தினங்களுள் இறந்துவிட்டான். அச்சமயம் யஹ்யா மிகவும் ஜாக்கிரதையாய் ஹாரூனின் பைஅத், கிலாபத் இவ்விஷயங்களைப் பூர்த்திசெய்தான். ஹாரூன் கலீபாவானதும் மந்திரிப் பதவியை யஹ்யாவின் கைவசம் ஒப்புவித்துவிட்டு "தேசத்தின் சகல பாரங்களையும் எனது தோளிலிருந்து உமது தோளுக்கு மாற்றுகிறேன். நீர் சர்வாதிகாரியாவீர். உமக்கிஷ்டமானவர்களை வைத்திருக்கலாம்; உமக்கிஷ்டமில்லாதவர்களை நீக்கிவிடலாம்" எனக்கூறிவிட்டான். ஹாதீயின் காலத்தில் அரசியல் விஷயங்களுடன் சம்பந்தமில்லாது செய்யப்பட்ட கேஜ்ரான் மீண்டும் அரசியல் விஷயத்தில் கலந்துகொண்டனள். யஹ்யா அன்னவளின் ஆலோசனைப் பிரகாரம் காரியங்களைப் பூர்த்திசெய்து வந்தான். யஹ்யா புத்திநுட்பம், கல்வி இவைகள் மிகுந்தோனும், கல்விக் குதவியாளனுமாயிருந்தான். அவனது கொடையைக் கேட்குங்காலத்துத் திகைப்புண்டாகின்றது. வெகு தூரத்திலிருந்து கல்விமான்கள் அவனிடம் வரத்தொடுத்தார்கள். அவனது சமுகம் பலருக்கும் பொதுவானதாகவும், தேவைப்பட்டதாகவுமிருந்

தது. ஹி. 171-ல் ஹாரூன் கிலாபத் காரியாலயத்தை (Secretariate) யவனிடமே யொப்புவித்து விட்டான். யஹ்யாவுக்கு பலல், ஜஃபர், முஹம்மத், மூஸா என நான்கு புதல்வ ரிருந்தனர். ஒவ்வொருவனும் கல்வி, கொடை இவைகளில் நிகரற்றோனாகவே யிருந்தனன்.

## பலல் பின் யஹ்யா

இவன் தனது சோதரர்கள் யாவரினும் மூத்தவன். இவன் ஹி. 148-ல் ஜனித்தான். இவன் ஹாரூனுர்ரஷீதுடன் போஷிக்கப்பட்டான். வாலிபப்பருவ மடைந்ததும் அரசியல் விஷயங்களில் தனது தகப்பனுக்கு உதவியாயிருந்தான். பெரிய விஷயங்களில் அநேகமாக அவனது பிரதிநிதியாகவுமிருந்தான். ஹாரூனுர்ரஷீதின் மூத்தபுதல்வனான அமீன் பிறந்ததும் அவனை பலலிடமே போஷிப்பதற்காக விட்டுவிடவே இவனே அவனது போஷகனாகவுமிருந்தான். ஹி. 176-ல் யஹ்யா பின் அப்துல்லாஹ் தேலம் பிரதேசத்திற் சென்று விரோதம் புரிந்தபோது இவனே அதையடக்குதற்காகவும் அனுப்பப்பட்டான். இவன் மிகவும் திறமையுடன் உதிரஞ் சிந்தாமலேயே அவ்விஷயத்தை முடித்தான். அது தொடுத்து ஹாரூனின் உள்ளத்தில் இவனது கண்ணியம் அதிகப்பட்டு விட்டது. எனவே ஹி. 178-ல் இவனை குராஸானின் தலைவனாய் நியமித்தனுப்பினான். அவன் அங்கு சென்று அமைதிநிலவச் செய்தான். விரோதியாயிருந்த அஷ்ரூஸனாவின் அரசனுடன் சண்டைதொடுத்து, அவனை வசப்படுத்தினான். அத்தேசத்தில் பலவிடங்களில் தங்குமிடங்களையும், மஸ்ஜிதுகளையும் கட்டினான். 5,00,000-குராஸான்வாசிகளைக் கொண்டதொரு சேனையைத் தயாரித்து அதற்கு 'அப்பாஸிய்யா' வெனப் பெயர்தந்தான். ஹி. 179-ல் குராஸானிலிருந்து திரும்பிவந்தபோது அவர்களில் 20,000-பேரைத் தன்னுடன் பக்தாதுக்கு அழைத்து வந்

தான். ஹாரூன் அதிபர்களுடனும், இளவரசர்களுடனும் இவனை வரவேற்பதற்காக நகரத்திற்கு வெளியே சென்றான். பிறகு கிலாபத்தின் முத்திரையை யஹ்யாவிடமிருந்து வாங்கி, இவனிடம் ஒப்புவித்தான். சைனியம், தேசம் இவைகள் சம்பந்தமாக வொப்புவிக்கப்பட்ட காரியங்கள் யாவையும் இவன் நல்லவிதமாய் நடாத்திவந்தான். பர்மகீ வர்க்கத்தில் கொடை, திறமை இவைகள் சம்பந்தப்பட்டமட்டில் இவனே மேம்பட்டோனா யிருந்தான். ஜனங்கள் பிரதம மந்திரி யஹ்யாவுடன் இவனையும் 'சிறிய மந்திரி' யென்றழைத்து வந்தார்கள்.

## ஜஃபர் பின் யஹ்யா

யஹ்யாவின் இரண்டாவது புதல்வனான ஜஃபர் என்பான் ஹாரூனின் தோழனும், சற்குணம், கொடை, இலக்கண இலக்கியம் இவைகளில் நிகரற்றவனுமிருந்தான். ஹாரூன் இவனைப்போன்று பிறிதெவரையும் பிரியமாய்ப் பாவிப்பதில்லை. பலலைவிடவும் இவனையே அதிகமாய் நேசித்து வந்தான். பலலின் குணத்தில் சற்று கண்டிப்பு காணப்பட்டதும், இவன் மிருதுபாஷகனாக விருந்ததுமே இதற்குக் காரணமாம். ஒருதடவை ஹாரூன் யஹ்யாவிடம் "ஜனங்கள் பலலை 'சிறிய மந்திரி' என்றழைப்பதற்கும், ஜஃபரை அங்ஙனமழைக்கா திருப்பதற்குங்காரணமென்ன?" வெனக் கேட்டதற்கு அவன் "பலல் அரசியல் விஷயங்களில் எனது பிரதிநிதி ஸ்தானத்தை வகிக்கிறான். பெரிபெரிய இலாக்காக்கள் அவன் கைவசம் ஒப்புவிக்கப்பட்டுள. இதனால் அவனுக்கு இச்சிறப்புப்பெயர் ஏற்பட்டுவிட்டது. ஜஃபர் தங்களுடன் கலந்திருப்பதால் அரசியல் விஷயங்களில் அதிகமாகக் கலந்துகொள்வதில்லை" எனப் பதிலளித்தான். அவ்வமயமே ஹாரூன் ஜஃபரிடம் அரசாங்க மாளிகையின் அலுவல்கள் யாவையும் ஒப்புவித்துவிட்டு, பிறகு யஹ்யா

விடம் "நான் நாணமடைகிறேனாதலால் நீரே பலலுக்கெழுதி, கிலாபத்தின் முத்திரையை ஜஃபரிடம் ஒப்புவிக்கும்படிச் செய்வீராக!" என்றான். அவன் பலலுக்கு "கலீபா அவர்கள் கிலாபத்தின் முத்திரையை யுமது வலது கரத்திலிருந்து இடதுகரத்திற்கு மாற்றிக்கொடுத்து விடும்படிக் கூறுகின்றார்கள்" என்றெழுதினான். இதன் கருத்தை யறிந்துகொண்ட அவன் கிலாபத்தின் முத்திரையை ஜஃபரிடம் ஒப்புவித்துவிட்டான். இதற்குப்பிறகு ஜஃபரும் 'சிறிய மந்திரி' எனப்பிரசித்தி யடைந்தான். ஹி. 176-ல் அரசாங்கமாளிகையின் பாதுகாப்புடன் மிஸ்ரின் தலைமைத்துவமும் இவனுக்குக் கிடைத்தது. இவன் தனது புறத்தால் இம்ரான் பின் மிஹ்ரான் என்பானை அக்காரியத்திற்காக நியமித்தனுப்பினான்.

ஹி. 180-ல் ஷாமில் வம்சத்துவேஷங் காரணமாக பெரியதொரு குழப்பம் ஏற்பட்டது. இதையடக்குதற்காக ஹாரூன் ஜஃபரை யனுப்பினான். இவன் அங்கு சென்று சமரஸம் செய்து வைத்ததுடன் குழப்பமுண்டாக்கித் திரிந்த விஷமிகளுக்குத் தண்டனையு மளித்தான். அங்கு அமைதிநிலவச் செய்தபிறகு பக்தாதுக்குத் திரும்பி வந்தான். ஹாரூன் அவ்வமயம் ஒரு தர்பார் நடாத்தினான். கவிஞர்கள் ஜஃபரைத் துதிசெய்து கவிகள் கூறினார்கள். பிறகு இவன் அக்கூட்டத்தில் அரியதொரு சொற்பொழி வாற்றினான். அதன் கருத்து ஹாரூன் ஷாம்வாசிகள்மீது கருணைகூர்ந்து அவர்களின் பிழைகளை க்ஷமித்துவிடவேண்டுமென்பதே. இதற்குப்பிறகு இவனை ஹாரூன் குராஸானின் அதிபனாக நியமித்தான். எனினும், சின்னாட்களுக்குப் பிறகு குராஸானின் தலைமைத்துவத்திற்குப் பதிலாய் பக்தாதின் கொத்துவாலாய் நியமித்தான். இவன் அக்காலத்திய பிரசித்திபெற்ற சேனாதிபதியான ஹர்தமா பின்

அஸீயுன் என்பானைத் தனக்குப் பிரதிநிதியாய் நியமித்து அப்பணியை நிறைவேற்றி வந்தான். பலல் பின் யஹ்யா இளவரசன் அமீனுடைய போஷகனு யிருந்ததுபோல் ஜஃபர் மாமூனுடைய போஷகனு யிருந்துகொண்டு, ஹாரூன் அவனைப்பிரதிநிதியாய் நியமிக்கவேண்டுமென முயற்சித்துக் கொண்டிருந்தான். ஹி. 183-ல் ஹாரூன் மாமூனைப் பிரதிநிதியாய் நியமித்து, கீழ்த்தேச அரசியல் விஷயங்கள் யாவையும் அவன் வசம் ஒப்புவித்துவிட்டான்.

## மூஸா பின் யஹ்யா

மூஸா தனது சகோதரர்கள் யாவரினும் வீரனுயிருந்தான். அவன் சேனையில் பெரிய உத்தியோகத்தை வகித்து வந்தான். குராஸானின் நீக்கப்பட்ட தலைவனுன அலீ பின் ஈஸா ஹாரூனிடம் இவனே அவ்விடத்துத் தலைவர்களைத் தனக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டதாய் முறையிடவே ஹாரூன் இவன்மீது ஐயங்கொண்டான். சின்னுட்களுக்குப்பிறகு இவன் கடன்காரர்களின் தொல்லைகளைச் சகியாமல் மறைமுகமாய் ஓடிவிட்டான். இதைக்காரணமாகக் கொண்டு இவன் குராஸானுக்கே சென்றிருக்க வேண்டுமெனவும், அங்குபோய் ஏதேனும் குழப்பம் புரிவானெனவும் ஜனங்கள் ஹாரூனிடம் முறையிட்டார்கள். ஹாரூன் இவனைத்தேடிக்கொண்டே யிருந்தான். ஹி. 187-ல் அவன் ஹஜ்ஜுக்குச் சென்றபோது ஹிப்ராவென்னுமிடத்தில் மூஸா நேரில் ஆஜரானுன். ஹாரூன் இவனைக் கைதுசெய்தான். பிரதம மந்திரியின் மனைவியான இவனது அன்னை இவனுக்குப் பரிந்துபேச வந்தார். அப்பெண்ணின் விண்ணப்பத்தைத் தட்டாத ஹாரூன் மூஸாவை விட்டுவிட்டானெனினும் "யஹ்யாவே இவனுக்கு ஜாமீனு யிருக்க இசையவேண்டும்" எனக் கட்டளையிட்டான். இதன் பிர

காரம் யஹ்யா இவனைத் தனது கண்காணிப்பில் வைத்திருப்பதாய் வாக்குறுதி செய்துகொடுத்தான்.

### முஹம்மத் பின் யஹ்யா

இவனும் பட்டாளத்து உத்தியோகத்திலிருந்து வந்தான். இவனது சகோதரர்களுக்கிருந்ததே போன்ற பிரபல்யம் இவனுக்குக் கிடைக்கவில்லை. இந்த பர்மகி வர்க்கம் செல்வம், கண்ணியம், கொடை, கல்வி, கல்விமான்களை யாதரித்தல் இவைகளில் அக்காலத்தில் தனிச்சிறப்புப் பெற்று, புலவர்கள் போன்றோர் முன்னேறும் ஸ்தலமாயிருந்தது. இவ்வர்க்கத்தவரின் கொடை, நீதி இவைகளுக்கு முன்பு பழைய சரிதைகள் மறைந்துபோயின. இவர்களின் காரியாதிகள் ஹாரூனுர்ரஷீதின் காலத்துச் சரிதைக்குச் சிறப்பளிப்பதாய் மிளிர்கின்றன.

### பர்மகீயர்களின் முடிவு

வம்சபரம்பரையான அரசாங்கங்களில் ஒரு தலைவனோ, மந்திரியோ அதிகப்படியான மதிப்புப் பெற்றுவிடின் அவன் தான் ஸ்திரம் பெற்றிருப்பதன் காரணமாக வரம்மை மீறிவிடுவதும், இதனால் அரசன் அவனது சக்தியைத் தனதுரிமைக்கு மாற்றமானதெனக்கொண்டு அவனை யழித்துவிடுவதும், அல்லது அவன்மீது பொறாமைகொண்ட விரோதிகள் அரசனிடம் அவனைப்பற்றி முறையீடுகள் செய்துகொண்டு, சிறுகச்சிறுக அவனை விரோதியாகப் பாவிக்கும்படி செய்து அவனை யழித்துவிடக் கங்கணங் கட்டுவதும் சகஜம். அபூமுஸ்லிம் உடைய முன்னேற்றத்தைக் கண்ணுற்று அபூஜஃபர் மன்ஸூர் அவனைக் கொன்றுவிட்டான். பிறகு தனது மந்திரி அபூஅப்துல்லாஹ்வைக் கைது செய்து, அவனது சொத்துக்களைக் கைப்பற்றினான். இங்ஙனமே மஹ்தீ தனது மந்திரிகளான அபூஅப்துல்லாஹ்,

யஃகூப் பின் தாவூத் இவ்விருவருக்கும் தண்டனை விதித்தான். இச்சம்பவங்கள் யாவும் ஹாரூனுக்கு முன்னால் அவனது வர்க்கத்திலேயே நடைபெற்றிருந்தன.

பர்மகீயர்களுக்கிருந்த உன்னத மதிப்பைக் கண்ணுற்ற சில தலைவர்க ளுள்ளங்களில் பொறாமை குடிகொண்டது. அவர்கள் ஹாரூனை பர்மகீயர்களுக்கு விரோதமாய்த் தூண்டத் தலைப்பட்டார்கள். அரசியல் விஷயங்களில் ஹாரூன் சந்தேகங் குடிகொண்டவனாவான். அப்பொறாமையாளர்கள் இதே முறையில் அவனுள்ளத்தில் பகைமையென்னும் தீயைமூட்டத் தலைப்பட்டு மந்திரிகளுக் கிருக்க வேண்டிய நேர்மை அவர்களுள்ளங்களிற்கிடையாதெனவும், அப்பாஸிய்யாக்களின் கிலாபத்தைப் பார்க்கினும் அலவிய்யாக்களின் கிலாபத்தையே அவர்கள் அதிகமாய் விரும்புவதாயும் கோள்மூட்டினார்கள். இவ்விரோதிகள் யாவருக்கும் முதல்வனாய் பலல் பின் ரபீஃ என்பானாயிருந்தான். இவன் மன்ஸூரின் பிரசித்திபெற்ற வாயில்காப்போனான ரபீஃ பின் யூனுஸ் என்பானின் புதல்வனாவான். யஹ்யா பர்மகி இவனை விரும்புவதில்லை. ஹாரூனின் கிலாபத்துடைய துவக்கநாட்களில் அவனது அன்னை கேஜ்ரான் என்னும் பெண்மணியும், யஹ்யாவுமே சகல அரசியல் விஷயங்களிலும் பங்கெடுத்துக் கொண்டதால் பலல் பின் ரபீஉக்கு எவ்வுத்தியோகமும் கிடையாது போயிற்று. ஹாரூன் அவனுக்கு ஒரு உத்தியோகத்தைக் கொடுக்கக் கருதினானாயினும் கேஜ்ரான் அங்ஙனம் செய்ய இடங்கொடுக்கவில்லை. ஹி. 174-ல் கேஜ்ரான் மரணமடைந்த தினமே ஹாரூன் அவனையழைத்து, ஜஃபர் பின் யஹ்யாவிடமிருந்த கிலாபத்தின் முத்திரையைவாங்கி, அவனுக்குக்கொடுத்துவிட்டான். தவிர, பெரிய பெரிய உத்தியோகங்களையும் அவனுக்களித்து சர்வாதிகாரியாயும் நியமித்து விட்டான். அரசசமுகத்தில்

ஒரு பதவியையடைந்ததும் இவன் பர்மகீயர்களுக்கு விரோதமாய் வேலைசெய்யத் தலைப்பட்டான். எனினும், அவர்களது பதவி மிகப்பெரிதாயிருந்தமையாலும், கிலாபத் மாளிகையின் அநேக உத்தியோகங்களும், தேசிய சைனிய உத்தியோகங்களும் அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்ததாலும் அவர்களுக்கு எதிர்ப்பில் வேலைசெய்யத் தன்னைச் சக்தியற்றவனுய்க் கண்டான்.

ஹி. 176-ல் இமாம் யஹ்யா பின் அப்துல்லாஹ் தேலம் பிரதேசத்தில் தமது இமாமத்திற்கான கொடியையுயர்த்தினார்கள். அங்கனுப்பப்பட்ட பலல் பின் யஹ்யா பர்மகீ 10,00,000-திர்ஹம்கள் செலவிட்டு, அங்கிருந்த கோட்டையிலிருந்து பக்தாதிற்கு அவர்களைக் கொணர்ந்தான். ஹாரூன் இதனுல் சந்தோஷமடைந்து அடைக்கலப்பத்திரம் வரைந்து அன்னுரை பலல் பர்மகீயிடமே ஒப்புவித்துவிட்டான். அவர்கள் அவனிடமே சௌக்கியமாயிருந்து வந்தார்கள். இதைக் காரணமாகக்கொண்டு யஹ்யா பின் அப்துல்லாஹ் புரட்சிக்கான ஏற்பாடுகள் செய்வதாகவும், அவர்கள் மீது பக்திபூண்ட பர்மகீயர்கள் அவர்களுக்குதவியாயிருப்பதாகவும் ஹாரூனிடம் பலல் பின் ரபீஃ கோள்மூட்டத் தொடுத்தான். இத்துடன் அலீ (ரலி.) அவர்களது சந்ததியின் பரமவிரோதியான பிகார் பின் அப்துல்லாஹ் ஜுபைரீ என்பானும் இமாமவர்கள் விஷயமாய் முறையீடு செய்யத் தொடுத்து அவர்கள் எதிர்ப்பதற்காக ஆயத்தமாய் விட்டதாயும், பர்மகீயர்கள் அவர்களுக்கான சௌகரியங்களைச் செய்து கொடுப்பதாயும் கூறினுன். அரசியல் விஷயங்களில் பயமிகுந்த ஹாரூன் இமாம் யஹ்யாவை பர்மகீயர்களிடமிருந்தழைத்துக் கடுங்காவலில் வைத்துவிட்டான். பிறகு கொன்றுவிடவுங் கருதினுன். எனினும் அடைக்கலப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டதால் சற்றே பின் தயங்கினுன்.

மார்க்கநிபுணர்களை யழைத்து, அடைக்கலப் பத்திரத்தை நிராகரித்துவிடும் விஷயத்தில் மார்க்கத்தீர்ப்பைக் கேட்டான். அபுல்பக்தரீ என்னும் நீதிபதி அபயப்பத்திரம் மாற்றப் படலாமெனக் கூறிவிட்டனர். எனவே, ஹாரூன் அன்னாரைப் பிரதம நீதிபதியாக நியமித்தான். எனினும், இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களின் சீஷரான இமாம் முஹம்மத் (ரஹ்.) அங்ஙனம் மார்க்கத்தீர்ப் பளிக்காததால் இவர்களைப்பற்றி மனதில் விரோதங் கொண்டான்.

பர்மகீயர்கள் இமாம் யஹ்யாவை விடுவிக்கக் கங்கணங் கட்டினார்கள். ஜஃபரின் வேண்டுகோள்மீது அன்னவரை ஹாரூன் அவனிடமே ஒப்புவித்துவிட்டான். அரசசமுகத்தில் தனக்கிருக்கும் மதிப்பை நம்பி ஜஃபர் அன்னாரை விட்டுவிட்டான். பலல் பின் ரபீஃ தனது ஒற்றனொருவனை ஜஃபரிடம் நியமித்திருந்தான். அவன் மூலமாய் இச்செய்தி பலலுக்குத் தெரிந்துவிடவே உடனே இதை ஹாரூனுக்குத் தெரிவித்தான். வெளிப்பார்வைக்கு ஹாரூன் அவனிடம் "உமக்கு அதைப்பற்றிய கவலை எதற்கு? எனது விருப்பப்படியும் அவன் அவரை விடுவித்திருக்கலாமன்றோ?" எனக்கூறிவிடினும் அவனுள்ளத்தில் கலக்கமேற்பட்டு விட்டது. போஜன நேரத்தில் ஜஃபர் வந்தான். ஹாரூன் அவனிடம் பல்வேறு விஷயங்களைப்பற்றி வார்த்தையாடிவிட்டுக் கடைசியாக இமாம் யஹ்யாவைப்பற்றிக் கேட்டான். தன்னிடமே அன்னாரிருப்பதாய் ஜஃபர் மறுமொழி கொடுக்கவும் "அங்ஙனம் சத்தியம் செய்வீரோ?" வென ஹாரூன் கேட்டபோது அவன் முகம் மாறுபட்டு விட்டது. தன் செய்கைகளைப்பற்றிய விஷயம் இவனுக்குத் தெரிந்து விட்டதென்றறிந்துகொண்டு "அவர்களைப் பற்றி எத்தகைய பயமுமில்லா திருப்பதை முன்னிட்டே நான் அவர்களை விடுவித்துவிட்டேன்" எனப்பதிலளித்

தான். ஹாரூன் "நீர் செய்தது நல்ல காரியமே. நானும் இங்ஙனம் செய்யவேயிருந்தேன்" என வெளிப்பார்வைக்குக் கூறிவிட்டான். ஜஃபர் அங்கிருந்து செல்லவும் அவன் கண் பார்வையைவிட்டும் மறையும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவன் மறைந்த பிறகு பல்லை நறநறவெனக் கடித்து "நான் உன்னைக் கொல்லாவிடின் ஒன்றுமே செய்யாதவனுவேன்" என்ருன். ஹாரூனின் மனைவி ஜுபைதாவும் ஜஃபருக்குப் பரமவிரோதியாக விருந்தார். அவன் தனது சக்களத்தியின் குமாரனுன மாமூனுக்குப் போஷகனுகவிருந்துகொண்டு தனது கருத்துக்கு மாற்றமாய் அமீனுக்குப் பிறகு அவனைப் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளச் செய்ததோடு நில்லாமல், அமீனைப் பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டு மாமூனையே நியமிக்கும்படியும் ஹாரூனை வற்புறுத்திவந்ததே இதற்குக் காரணமாம். இதனுல் ஜுபைதாவும் ஜஃபருக்கு விரோதமாய் மாமூனைத் தூண்டி விட்டுக்கொண்டிருந்தார்.

குராஸானின் மாஜி தலைவனுன அலீ பின் ஈஸா வென்பானும் பர்மகியர்களுக்குப் பரமவிரோதியாக விருந்தான். தனக்கு விரோதமாய் குராஸானில் வெளிக்கிளம்பிய குழப்பங்கள் யாவும் இவர்களின் தூண்டுதலாலேயே ஏற்பட்டன வென்பதே அவனது நம்பிக்கை. அலீயைத்தவிர வேறு சில தலைவர்களும் இவர்களுக்கு விரோதிகளாயிருந்தனர். அவர்கள் யாவரின் முறையீடுகளாலும் ஜஃபர்பால் மட்டல்லாது பர்மகீ வம்சத்தவர் யாவர்பாலும் ஹாரூனின் உள்ளத்தில் சந்தேகம் குடிகொண்டுவிட்டது. பர்மகியர்களும் தங்கள்மீது கலீபாவுக்குக்கெட்டபிப்பிராயம் ஏற்பட்டு விட்டதென்பதையும், தமது விரோதிகள் தமக்கு விரோதமாய் கலீபாவைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிருர்களென்பதையும் தெரிந்துகொண்டார்கள். பிரதம மந்திரி யஹ்யா

அரச சமுகத்திற்கு வரும்போது பணிமக்கள் எழுந்து நிற்பதுங் கிடையாது. அவன் குடிப்பதற்கு ஜலம் கேட்டால், எத்தனையோ தடவைகள் கத்தியபிறகே கஷ்டத்துடன் கிடைத்து வந்தது. இறுதியாக ஹி. 187, முஹர்ரம் மாதத்தில் ஹாரூன் ஜஃபரைக் கொன்றுவிட்டான். மற்றும், தனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த முஹம்மத் பின் காலித் பர்மகி என்பானைத் தவிர்த்து யஹ்யா, அவனது புதல்வன் பலல் முதலிய ஏனைய பர்மகியர்களையும் 'தேர்காயிம்' என்னுமிடத்தில் கைதுசெய்துவிட்டு, அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிட்டான். அவர்களால் நியமிக்கப்பட்ட அதிபர்களையும் நீக்கிவிட்டான்.

## அப்துல்மலிக்

இதே காலத்தில் வம்சப்பெருமையில் மன்ஸூர், ஸப்பாஹ் இவர்களின் சகோதரனாக விளங்கிய அப்துல்மலிக் பின் ஸாலிஹ் பின் அலீ பின் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் என்பான் தனது கிலாபத்திற்கான கிளர்ச்சியை யாரம்பித்தான். எனினும் அவன் புதல்வன் அப்துர் ரஹ்மான், அடிமை குமாமா இவ்விருவரும் அவன் கருத்தை ஹாரூனுக்குத்தெரிவிக்கவே ஹாரூன் அவனைக் கைதுசெய்துவிட்டான். இச்சம்பவமும் பர்மகியர்களின் தூண்டுதலாலேயே நடைபெற்றதென ஹாரூனுக்குக் கூறப்பட்டது. அவன் யஹ்யா பர்மகியை யழைத்து "அப்துல்மலிக்கின் கருத்தைப்பற்றிய உண்மையை நீர் எனக்குத் தெரிவித்துவிட்டால் நான் உமது பதவியை மீண்டும் உமக்களிக்கிறேன்" எனக்கூறவே இவன் "அப்துல்மலிக்கின் தீயகருத்தை யான் அறியவே மாட்டேன். அங்ஙனம் அறிந்திருப்பின் யான் முன்னடியே தங்களுக்குத் தெரிவித்திருப்பேன். நான் தங்களுடன் அரசியல் விஷயங்களிற் கலந்திருந்தேன். அவனுக்கு எப்பொழுதுமே உடன்பட்டிருந்ததில்லை. அவன் கிலாபத்தை

யடைந்துகொண்ட பிறகு என்னை யாங்ஙனம் நடாத்துவா னென்பதை நான் நிர்ணயிக்க முடியாதன்றோ?'' வென் ருன். ஹாரூன் அவனது வார்த்தைகளை நம்பவில்லையாத லால் பார்மகியர்களும் அதிற் கலந்திருந்ததாய்க் கொண் டிருந்த அவனது சந்தேகம் நீங்கவில்லை. அதுவரை சிறை யில் அவர்களை அவர்களின் பணிமக்களுடனும், மற்றும் பல சௌகரியங்களுடனும் வைத்திருந்ததற்கு மாருக அதற்குப் பிறகு அவர்களைப் பணிமக்களைவிட்டும் பிரித்துக் கடுங்காவலில் வைத்துவிட்டான். இறுதியாக திறமை, ஈகை இவைகள் காரணமாக ஹாரூனின் காலத்திற்கொரு அணி யாய் விளங்கிய அவ்வர்க்கம் அழிந்துபட்டது. ஹி. 190-ல் யஹ்யாவும், ஹி. 193-ம் பலலும் சிறையிலேயே இறந்து விட்டார்கள்.

உண்மையைக் கவனியாத சரித்திராசிரியர்களிற் சிலர் இச்சம்பவத்தைத் திடீரென்றேற்பட்ட சுயநல ஆவேச மெனக் குறிக்கின்றனர். மற்றுஞ் சிலர் கவைக்குதவாத 'ஜஃபர்—அப்பாஸா'வெனக் குறிக்கப்படும் கட்டுக்கதையைச் சிருஷ்டித்து இதற்குக் காரணங்கண்டுபிடிக்க முயற்சிக் கின்றனர். ஹாரூனின் இயற்கைக் குணம் அரசியல் விஷ யங்களில் சந்தேகத்திற்கும், கலவரத்திற்கும் இடங்கொடுக் கக்கூடியதென்பதும், இயற்கையிலேயே குழப்பமூட்டித் திரியுங்குணமே குடிகொண்ட பலல் பின் ரபீஃ பார்மகியர் களின் முன்னேற்றத்தைக் காணச்சகியாமல் புழுக்கங் கொண்டு அவர்களுக்கு விரோதமாய் வலைவிரித்து, கிலாபத் தின் மேன்மையை நிலைநிறுத்தச்செய்த அம்மந்திரிகளை யழித்துவிட்டானென்பதுமே யுண்மை. மேலே சென்ருல் "இவனது குழப்பத்தாலேயே அமீன், மாமூன் இவ்விரு வருக்குமிடையே சண்டையேற்பட்ட'' தென்பதும் தெரிய வரும். ஹாரூன் பார்மகியர்களுக்குப் பிறகு பிரதம மந்திரி

ஸ்தானத்தை முற்குறிக்கப்பெற்ற பலல் இடமே ஒப்புவித்து விட்டான். எனினும், அவனிடம் அத்தகைய மூளை ஏது?

## வெளி நிலைமை

ஹாரூன் ரூம் எல்லைப்புறத்திற்கு 'மன்பஹ்' என்பதைத் தலை நகரமாகவும், ஹி. 173-ல் அப்துல்மலிக் பின் ஸாலிஹ் என்பானை எல்லைப்புறச் சேனைகள் யாவற்றிற்கும் தலைவனாகவும் நியமித்து அங்கிருக்கக் கட்டளையிட்டான். தலூக், அஃயான், கூரிஸ், இந்தாகிய்யா, தேஜீன் இவ்விடங்களில் சேனைகள் தங்குமிடங்களைக் கட்டி, இஸ்லாமிய சேனைகள் ரூமியர்களுடன் சண்டையிட்டுத் திரும்பி வந்ததும் அங்கு தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்தான். அவைகளுக்கிடையே பெரியபெரிய கோட்டைகளைக் கட்டினான். அவைகளைச் சேர்ந்தார்போல் ஹாரூனின் பணிமகனான அபூஸலீம் துர்க்கி என்பான் தர்ஸூஸ் நகரத்தை நிர்மாணித்தான். ஹாரூனின் முயற்சியால் அஃது மிகவும் செழிப்புற்ற நகரமாய் விளங்கியது. கோடைகாலச் சேனையின் தலைவன் அப்துர் ரஹ்மான் பின் ஸாலிஹ் என்பானாயிருந்தான். ஹி. 175-ல் அவன் அக்ரீதிய்யா வரை போய்ச்சேர்ந்து விட்டான். ஹி. 181-ல் ஹாரூனே கோடைப் படையைக் கொண்டுசென்று ரூமியர்களை எதிர்த்து, ஸப்ஸாப் என்னும் கோட்டையைக் கைப்பற்றினான். அப்துல் மலிக் பின் ஸாலிஹ் என்பான் ரூமியர்களைப் பின்றொடர்ந்து அங்கோரா வரைக்கும் சென்றிருந்தான். அவன் தனது கடமைகளை நல்லவிதத்தில் பூர்த்திசெய்தான். ஹி. 187-ல் பர்மகியர்களின் முடிவுக்குப்பிறகு ஹாரூன் இவனைக் கைதுசெய்ததும் இவனுக்குப் பதிலாய்த் தனது புதல்வன் காஸிமை யனுப்பினான். காஸிம் ஒருபுறம் தானே ரூமியர்கள் புறம் முன்னேறிச் சென்றான். மற்றொரு புறம் அப்பாஸ் பின் ஜஃபருக்கு முன்னேறிச் செல்லும்படிக் கட்டளையிட்டான்.

கிரா, ஸினுன் என்னும் கோட்டைகள் போய்ச் சேர்ந்து அதை முற்றுகையிட்டான். அவ்விடத்து மக்கள் சமரஸம் செய்துகொண்டு, அவர்களிடமிருந்த 320-முஸ்லிம் கைதிகளை விடுவித்துவிட்டனர்.

அக்காலத்தில் குஸ்துன்துனிய்யாவில் ஈரேனி என்னும் அரசி அரசு செலுத்தி வந்தனள். ரூமை வெற்றி கொண்ட ஷார்லமேன் என்னும் பிரான்ஸ் தேசத்தரசன் ரூம் தேசத்தில் கிழக்குப் பகுதியையும், மேற்குப் பகுதியையும் ஒன்றாகச் சேர்த்துப் பெரியதொரு தேசமாகச் செய்து விடக் கருதினான். மேற்குறிக்கப்பட்ட ரூம் தேசத்தரசி இஸ்லாமிய சேனைகளையும், பிரான்ஸ் தேசத்தரசனையும் எதிர்க்கத் தனக்குச் சக்தியிராததுகண்டு ஹாரூனை சமரஸத்திற் கழைத்து, வருடமொன்றுக்குக் குறிப்பிட்டதொகையை ஜிஸ்யாவாகக் கட்டச் சம்மதித்தனள். ஹி. 186-ல் அரசாங்க அங்கத்தினர்கள் ஈரேனியை நீக்கிவிட்டு நக்பூர் என்பானை அரசனாக நியமித்தார்கள். அவன் ஷார்லமேனுடன் சமரஸம் செய்துகொண்டு தனது அரசாங்கத்தின் எல்லையைப் பெருக்கிக்கொண்டு ஹாரூனுக்கு "ஸ்திரீயின் பலங் குன்றிய அரசியலில் நீங்கள் எங்களிடமிருந்து வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுத்து விடுவதுடன் இங்ஙனம் அதிக்கிரமமாய் நடந்துகொண்டதற்காக அபராதமும் செலுத்துங்கள்! இன்றேல், நாங்கள் கத்தியின் பலத்தால் வாங்கிக்கொள்வோம்" என்றெழுதினான். இதை வாசித்ததும் ஹாரூனின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. அவனை ஏறெடுத்துப்பார்க்கவும் யாவரும் அஞ்சினர். அவ்விடமிருந்த மந்திரிப் பிரதானிகள் உட்பட யாவரும் நாலுபக்கங்களிலும் சென்றுவிட்டனர். பிறகு அவன் தன் கைப்பட "இதன் பிரதியை நீ கண்ணால் காண்பாய்; அதைக் காதால் கேட்க முடியாது" என்றெழுதினான். பிறகு அத்தினமே சேனை

யைக் கொண்டுசென்று ஹிர்கலாவைச் சுற்றி கூடாரமடித்தான். எதிர்த்து நிற்கச் சக்தியற்று ரூமியர்கள் தோல்வியடைந்தார்கள். நக்பூர் வேறுவழியின்றி மீண்டும் ஜிஸ்யா கொடுப்பதாய்ச் சமரஸம் செய்துகொண்டான். இஸ்லாமிய சேனைகள் அங்கிருந்து திரும்பி ரிக்கா போய்ச் சேர்ந்ததும் நக்பூர் உடன்படிக்கையைத் தகர்த்துவிட்டதாய்த் தெரிய வந்தது. ஹாரூனின் கோபத்தை யனுசரித்து அங்கிருந்தோரில் யாருக்கும் இச்செய்தியைத் தெரிவிக்கத் துணிவேற்படவில்லை. எனவே அபூமுஹம்மத் அப்துல்லாஹ் பின் யூஸுப் என்னும் கவிஞனை யனுப்பினார்கள். அவன் ஒருகவியில் நக்பூர் உடன்படிக்கையை மீறிவிட்டதாய் அழகிய முறையில் எடுத்துக் காண்பித்தான். “அவன் இங்ஙனம் செய்ததுண்மையா?” வென ஹாரூன் கேட்டதற்கு அவன் “ஆமாம்” என்றான். அஃது கடுமையான பனிக்காலமாயிருந்தும் ஹாரூன் சேனையுடன் திரும்பிச்சென்று நக்பூரை வெற்றிகொண்டு, அவனிடம் ஜிஸ்யா வசூலித்தான்.

இரு தரப்பிலும் இங்ஙனமே சண்டை நடைபெற்று வந்தது. ஹி. 189-ல் கைதிகள் மாற்றப் பட்டார்கள். ஹி. 190-ல் கௌரவ சிப்பாய்(Volunteers)களைத் தவிர்த்து ஊதியம்பெறும் 1,35,000-சிப்பாய்களைக்கொண்டதொரு சேனையுடன் ஹாரூன் ரூமியர்களை எதிர்த்து, ஹிர்கலாவைக் கைப்பற்றினான். அங்கு உக்பா பின் ஜஃபரைத் தலைவனாய் நியமித்துவிட்டு துவானா போய்ச்சேர்ந்தான். ஷாம் தேசத்திய கடற்படைத் தலைவனான ஹுமீத் பின் மஃயூப் என்பானை கப்ரஸ் புறமனுப்பினான். அவன் அதைக் கைப்பற்றினான். துவானாவில் ரூமியர்கள் தோல்வியடைந்தார்கள். நக்பூர் ஜிஸ்யா கொடுப்பதாய் சமரஸம் செய்துகொண்டு 50,000-தீனார்களை யனுப்பினான். அதில் தனக்காக

4-தீனரும், தனது புதல்வன் இஸ்தீராக் என்பானுக்காக 2-தீனரும் சேர்த்திருந்தான். இத்துடன் இரு சேவகர்களிடம் ஒரு நிரூபமும் கொடுத்தனுப்பினன். அதில் "இன்னன் புத்திரியும், எனது புதல்வனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தவளுமான பெண்ணொருவள் இஸ்லாமிய சேனையின் கொள்ளைப் பொருட்களிற் சேர்ந்து வந்துவிட்டனள். தாங்கள் தயைகூர்ந்து அவளை எனது புதல்வனுக்காக வனுப்பிவிட்டால் தங்கள் நன்றியை என்றென்றும் மறவேன்" என் என்றெழுதி யிருந்தான். ஹாரூன் அப்பெண்ணை யழைத்தான். அவள் தன்முன் வந்ததும் மணமகளை யலங்கரிப்பது போல் அவளை யலங்கரித்து, அச்சேவகர்களுடன் அவளை யனுப்பிவிட்டுத் தனது நீரூபனிடம் வாசனைத் திரவியங்களையும், மற்றும் பல சன்மானங்களையும் கொடுத்தனுப்பினன். நக்பூர் அந்நிரூபனுக்கு 50,000-திர்ஹம் கொடுத்ததுடன் ஹாரூனுக்காக பல குதிரைகள், வேட்டை நாய்கள், வேட்டை இராஜாளிகள் முதலிய பல சன்மானங்களை அனுப்பியிருந்தான். முஸ்லிம்கள் ஸஹ்லா, ஸினன் இக்கோட்டைகளைத் தகர்க்கக் கூடாதெனவும், ரூமியர்கள் ஹிர்கலாவில் குடியேறக்கூடாதெனவும், ஆண்டுதோறும் 3,00,000—தீனர் ஜிஸ்யா கொடுக்கவேண்டுமெனவும் இருதரப்பாலும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. ஹாரூன் தானே யுத்தங்களிற் கலந்துகொண்டு வந்ததாலும், ஹர்தமா பின் அஃயுன், அப்துல்லாஹ் பின் மாலிக், ஸஈத் பின் முஸ்லிம் பின் குதைபா, முஹம்மத் பின் யஜீத் போன்ற பிரசித்தி பெற்ற தீரர்களான போர்வீரர்கள் அவன் சேனையிலிருந்ததாலும் இஸ்லாமிய வன்மை பக்கத்து அரசாங்கங்களில் மிகுந்து காணப்பெற்றது.

## மேற்கு ரூம்

பிரான்ஸ் தேசத் தரசனான ஷார்லமேன் லம்பாருயாவைக் கைப்பற்றிக்கொண்டு விக்கிரகாராதனையாளர்களும், ஜர்மன்வாசிகளுமான ஸேக்ஸன் என்னும் வர்க்கத்தவரைக் கிறிஸ்துவர்களாக்கிவிட்டான். பிறகு அவன் அல்மானியா, இத்தாலியா இவைகளையும் கைப்பற்றிக்கொண்டான். கிழக்கு ரூமையும் தனது கைவசத்திற் கொணர்ந்து ஒருபெரிய அரசாங்கமாகச் செய்து, இஸ்லாமிய கிலாபத்தில் அதையே கிறுஸ்துமதத்தின் கொடியை யுயர்த்துவதும், ஜெரூஸல யாத்திரீகர்களுக்குப் பாதுகாப்பளிப்பதுமான அரசாங்கமாகச் செய்துவிடக் கங்கணங்கட்டினான். இத்துடன் ஐரோப்பாவில் முன்னேறிக்கொண்டு செல்லும் பனீ உமையாக்களின் வன்மையைத் தகர்த்துவிட வேண்டுமென்பதும் அவனது கருத்து. இக்கருத்தினால் பக்தாதின் அரசசமுகத்துடன் தனக்குச் சம்பந்த முண்டாக்கிக் கொள்ள முன்வந்து, ஹாரூனிடம் தூதுவர்களை யனுப்பினான். பனீஅப்பாஸ்கள் பனீஉமையாக்களின் எதிரிகளாயிருந்ததால் ஹாரூன் அத்தூதுவர்களை மிகவும் ஆடம்பரமாய் வரவேற்றுப் பிறகு தனது தூதுவர்களையும் சன்மானங்களுடன் பிரான்ஸுக் கனுப்பிவைத்தான். ஷார்லமேனும் அவர்களைக் கண்ணியப்படுத்தினான். இங்ஙனம் இரண்டு அரசாங்கங்களுடனும் நேசபாவம் ஏற்பட்டது. இதனால் ஷார்லமேன் இரு நன்மைகளை யடைந்தான். முதலாவது, ஹாரூனின் நட்பினால் உந்துலுஸிலிருக்கும் முஸ்லிம்களுடன் சண்டையிடவும், அவர்களுக்கு விரோதமாய் அவர்களின் எதிரிகளுக்கு சர்வ சுதந்தரத்துடன் உதவி செய்யவும் சந்தர்ப்பங்கிடைத்தது. இரண்டாவது, இஸ்லாமிய கிலாபத்தில் நக்பூர் அரசனைவிட அதிகமான மதிப்பு இவனுக்குக்கிடைத்தது.

இத்துடன் அக்காலத்தில் ஐரோப்பாவில் ரூமியர்களைக் காட்டுமிராண்டிகள் அரசாண்டு வந்ததால் கல்வி யென்னும் தீபம் அணைந்துபோயிருந்தது; ஒவ்வொரு புறத்திலும் அறியாமை தாண்டவமாடியது. பக்தாதிலும், குர்துபாவிலும் முஸ்லிம்களின் நிலைமை இதற்கு மாற்றமாயிருந்தது. எனவே ஷார்லமேன் முஸ்லிம்களின் நேசபாவத்தால் கல்வியை யடையவும், தனது அரசாங்கத்தின் சட்டதிட்டங்களை பக்தாத் அரசியலின் சட்ட திட்டங்களைப்போற் செய்யவும் விரும்பினான். அவன் குர்துபாவில் கல்வி பயின்ற இஸ்ஹாக் என்னும் பெயருடைய ஒரு யூத வைத்தியனை ஹாரூனின் சமுகத்திற் கனுப்பினான். அவன் நான்கு வருடங்கள் அங்கிருந்து திரும்பினான். ஹாரூன் அவனுடன் இன்னும் மூவரையும் அனுப்பினான். இத்துடன் ஷார்லமேனுக்குச் சன்மானமாக ஒரு கடிகாரம், ஒரு யானை, சில விலையுயர்ந்த துணிகள் முதலியவைகளை யனுப்பினான். பிரான்ஸின் அரசசமுகத்திலிருந்த அநேகர் அக்கடிகாரத்தை மந்திரத்தாற் கட்டப்பட்ட சக்கரமெனக் கருதினார்கள். மற்றுஞ் சிலர் மணியடிப்பதற்கு அதற்குள் ஒரு ஜின் இருப்பதாய்க் கருதி, அதை யுடைத்துவிட விரும்பினார்கள். எனினும், ஷார்லமேன் அங்ஙனம் செய்யாது தடுத்துவிட்டான்.

## குர்துபா

பக்தாத், குர்துபா இவ்விரண்டின் சம்பந்தம் மிகவும் வருந்தத்தக்கதாயும், தீங்கானதாயுமிருந்தது. ஹாரூன் பனீஉமையாக்களைப் புரட்சியாளர்களாகவும், எதிரிகளாகவும் பாவித்திருந்ததால் அவர்களை யழிப்பதற்கே ஆவல் கொண்டிருந்தான். ஷார்லமேனுடன் அவன் நட்புக்கொள்வதற்குக் காரணம் பனீஉமையாக்கள்மீது கொண்ட பகைமையேயாம். எனினும் அவர்களின் வன்மை எவராலும்

அசைக்கமுடியாத அளவிற்குப் பெருகியிருந்தது. ஷார்ல மேனும் தலைகிளப்பிப் பார்த்துவிட்டான்; அவனால் ஒன்றுமே செய்யக்கூடவில்லை.

## ஹாரூனின் குணாதிசயங்கள்

ஹாரூன் மார்க்கபக்திபூண்டு, மார்க்கவிதிகளை யனுசரித்து நடப்போனாயிருந்தான். கடமைப்பட்ட (பரல்) தொழுகைகளைத் தவிர்த்து தினமொன்றுக்கு 100-ரகஅத் (தொழுகையில் நிலைநிற்றல், தலைகுனிதல், நெற்றியைப் பூமியின்மீதுவைத்துச் சாஷ்டாங்கஞ்செய்தல் போன்றவைகள் சேர்ந்த ஒரு அங்கம்) தொழுதுவந்தான். தனது சொந்த சொத்திலிருந்து 1,000-திர்ஹம் தருமம் செய்து வந்தான். பொதுநிதியிலிருந்து செய்யும் தருமத்திற்குக் கணக்கில்லாதிருந்தது. அப்பாஸிய்யா கலீபாக்களுள் மாமூனைத்தவிர்த்து இவ்வளவு பெரிய கொடையாளி வேறு யாருமிருக்கவில்லை. யுத்தத்திலீடுபட்டிருக்குங்காலந் தவிர்த்து ஹஜ்ஜுக்குச் செல்லாதிருப்பது கிடையாது. தனது கிலாபத்தின் காலத்தில் 9-ஹஜ்ஜுச் செய்துள்ளான். தான் போகும்போதெல்லாம் நூறு மார்க்க நிபுணர்களையும், அவர்களின் குடும்பத்தவர்களையும் அழைத்துச்செல்வான். ஹஜ்ஜுக்குச் செல்லமுடியாத காலங்களில் தனக்குப் பதிலாய் முன்னூறு பேரை யனுப்பிவைப்பான். மார்க்கப் பிரசங்கங்களைக்கேட்பதில் அவனுக்கு ஆர்வமதிகம். அநேக அறிஞர்களின் பிரசங்கங்களைக் கேட்பான். பிரசங்கி இப்னுஸம்மாக் தனது சமுகத்திற்கு வருங்கால் அவர்களைப் பிரசங்கிக்கும்படி வேண்டிக்கொண்டு அப்பிரசங்கத்தைக் கேட்பான். அக்காலங்களில் அவன் நேத்திரங்களிலிருந்து கண்ணீர் வடியும். சில சமயங்களில் அழுதழுது மயங்கி வீழ்ந்துவிட்டதுமுண்டு. ஒரு தடவை இப்னுஸம்மாக் அவன் சமுகத்திலுட்கார்ந்திருந்தனர். ஹாரூன் குடிப்பதற்காக ஜலம் தரு

வித்தான். பாத்திரம் கையில் கொடுக்கப்பட்டபோது இப்னு ஸம்மாக் "கொஞ்சம் பொறுங்கள்! இந்த ஜலம் கொடுக்கப்படாது தடைசெய்யப்படுமாயின் என்ன விலைக்கு அதை வாங்குவீர்களென்பதைத் தெரிவியுங்கள்" எனக் கேட்டனர். அவன் "அரசாங்கம் யாவையுங் கொடுத்து வாங்குவேன்" என்றான். ஜலத்தைக் குடித்த பிறகு அன்னார் "இந்த ஜலம் உங்கள் திரேகத்தில் உறைந்து விட்டால் அதை வெளியே எடுப்பதற்காக எவ்வளவு செலவழிப்பீர்கள்?" எனக் கேட்டதற்கு "அரசாங்கம் முழுமைக்குமே" என்றான். அன்னார் "ஒரு முடர் ஜலத்தின் மதிப்பையும் பெற்றிராத இத்தகைய அரசாங்கத்தை முன்னிட்டு அனுவசியமாக ஒருசொட்டு உதிரத்தையுஞ்சிந்துவது நன்றன்று" எனக் கூறவும் ஹாரூன் அதிகமாக அழுதான்.

மார்க்க யுத்தத்தில் இவனுக்குப் பிரீதியதிகம். சேனைகளுடன் இவனும் செல்வான். அநேக சமயங்களில் சேனைக்கு முன்னணியிலேயே நிற்பான். அவனது குணதிசயங்களில் வீரம் தனிப்பட்டது. நாணம், மானுஷீகம் இவைகளும் நிரம்பப் பெற்றிருந்தான். அவனுக்குக் கோபாவேசமும் அதிகம். இத்தகைய நேரத்தில் அவன் முன்பு செல்வதற்கு யாருக்குமே தைரியம் ஏற்படுவதில்லை. இவனது கைவசம் எதிரி யகப்பட்டு விட்டால் உடனே அவனுக்குக் கடினதண்டனை விதித்துவிடுவான். மன்னிப்பது மிகக் குறைவு. இக்குணத்தில் இவனது புதல்வன் மாமூன் இவனைவிட மேம்பட்டுக் காணப்பெற்றான். மாமூன் இவனைவிட அதிகமாக மன்னிக்குந்தன்மை மிகுந்தவன். ஹாரூன் தனது பாட்டன் மன்ஸூரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தான். எனினும், கொடையில் அவனைப் பின்பற்றவில்லை. மிகச் சிறிய விஷயங்களுக்கெல்லாம் பெரிய

பெரிய வெகுமதிகளை யளித்து வந்தான். குறிப்பாக மிகப் பெரிய தொகைக்கே கவிஞர்களிடமிருந்து தனது ஸ்துதியைப் பெறுவான். சங்கீதத்திலும் மிகப்பிரியங்கொண்டிருந்தான். அவன் காலத்தில் சங்கீத உலகம் மிகவும் கியாதியடைந்தது. இஸ்ஹாக் முஸிலீ போன்ற பிரசித்தி பெற்ற பாடகர்கள் அவனது சமூகத்திலிருந்து வந்தார்கள். இராக் தேச மார்க்க நிபுணர்கள் ஆமோதித்த நபீத் என்னும் பானம் அருந்தி வந்தான். இத்தகைய குணாதிசயங்கள் காரணமாக ஹாரூன் மிகச்சிறப்புப்பெற்ற பிரபல இஸ்லாமிய கலீபாக்களைச் சேர்ந்துள்ளான். என்றாலும் அவனிடம் சில குறைகளும் காணப்பெற்றன. அவன் ஒரே நிலையில் நிலைத்திராதவனும், சந்தேகத்திற் கிடங்கொடுப்போனுமாவான். ஒவ்வொரு முறையீட்டையும் கேட்பான். இதனால் சுயநலம் மிகுந்த தந்திரிகளுக்கு இடங்கிடைத்து வந்தது. அவர்கள் கோள்மூட்டித்திரியத் தலைப்பட்டு தலைவர்கள், மந்திரிகள், அரங்க அங்கத்தினர்கள் இவர்களில் அநேகரைத் தங்கள் வேட்டைக் கிலக்காக்கிக்கொண்டார்கள்.

**மரணம்**

குராஸானில் ராபிஃ பின் லைதின் புரட்சியைச் செவியுற்று ஹி. 192-ல் ஹாரூன் தனது புதல்வன் முஹம்மத் அமீன் என்பானைத் தனது பிரதிநிதியாக நியமித்து விட்டு, மாமூனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு பெரியதொரு சேனையுடன் கிழக்குமுகம் சென்றான். தூஸ் போய்ச் சேர்ந்ததும் வியாதியடைந்து அங்கேயே கி. பி. 808, மார்ச், 24-ந்தேதிக்குச் சரியான ஹி. 193, ஜாமாதில் ஆகிர் 3-ந்தேதி இராக்காலத்தில் ஆவிதுறந்தான். அவன் புதல்வன் ஸாலிஹ் ஜனாஸாத்தொழுகையை நடாத்தினான். கல்லறை தூஸில் இருக்கின்றது. கிலாபத்தை நிர்வகித்தது 23-ஆண்டுகள், 2-மாதங்கள், 18-தினங்களாம்.

**சந்ததிகள்**

நான்கு புதல்விகளையும், 12-புதல்வர்களையும் விட்டுச் சென்றான். புதல்வர்களின் விவரம் வருமாறு:- முஹம்மத் அமீன் ஜுபைதாவின் வயிற்றிலிருந்தும், அலீ என்பான் மூஸாஹாதீயின் அடிமைப்பெண்ணான அமத்துல் அஜீஜ் வயிற்றிலிருந்தும், அப்துல்லாஹ் மாமூன், காஸிம் மூதமின், முஹம்மத் முஃதஸிம், ஸாலிஹ், முஹம்மத் அபூஈஸா, முஹம்மத் அபூயஃகூப், முஹம்மத் அபுல்அப்பாஸ், முஹம்மத் அபூஸுலைமான், முஹம்மத் அபூஅலீ, முஹம்மத் அபூஅஹ்மத் இவர்கள் பல அடிமைப் பெண்களுக்கும் ஜனித்தவர்களாவார்கள்.

## 6. அமீன்

முஹம்மத் அமீன் பின் ஹாரூனுர்ரஷீத் என்பாருடைய அன்னை ஜுபைதா பின்துஜஃபர் பின் மன்ஸூர் என்பாராவார். அமீன் தாய் தந்தையரிருவர் புறத்தாலும் ஹாஷிம் வர்க்கத்தைச் சேர்ந்தோனாவன். இஃது ஹஸ்ரத் அலீ, இமாம் ஹஸன் (ரலி....) இவர்களைத் தவிர்த்து வேறெந்த கலீபாவுக்கும் கிடைக்காத வம்சப்பெருமையாம். இவன் ஹி. 170-ல் ஜனித்தான். ஹி. 175-ல் ஹாரூன் இவனைப் பிரதிநிதியாக நியமித்தான். ஹி. 192-ல் குராஸான்புறம் சென்றபோது இவனைத் தனது ஸ்தானத்தில் நியமித்துச் சென்றான். தூஸில் அவன் காலகதியடைந்து போகவும் சேனைத்தலைவர்கள் இவனது கிலாபத்திற்காக பைஅத் வாங்கினார்கள். பக்தாதுக்கு இச்செய்தி கிடைக்கவும் அங்கு பொதுவான பைஅத் வாங்கப்பட்டது.

### உள் நிலைமை

ஹாரூன் தனது புதல்வர்களான முஹம்மத் அமீன், அப்துல்லாஹ் மாமூன், காஸிம் முதமின் இம்மூவரையும் ஒருவருக்குப்பின் மற்றொருவராகத் தனக்குப் பிரதிநிதிகளாய் நியமித்து, அரசாங்கம் முழுமைக்கும் இம்மூவருக்கிடையே பங்கிட்டுக்கொடுத்திருந்தான். அவன் மரண வியாதியிலிருக்குங்கால் மாமூன் முர்ருதுக்குச் சென்றிருந்தான். அவ்வமயம் ஹாரூன் சேனைத்தலைவர்கள், மந்திரிகள், பிரதமமந்திரி பலல் பின் ரபீஃ இவர்களையழைத்து பிரதிநிதியை நியமித்ததான அறிக்கையைப் புதுப்பித்து "இச்சேனை மாமூனுடையது. சகல தளவாடங்களுடன் இஃது அவனிடமே மர்ருத் போய்ச்சேரவேண்டும்" என வாக்

குறுதி வாங்கினன். எனினும், ஜஃபர் பர்மகீயின் போஷிப்பில் மாமூன் இருந்ததாலும், அவனது முயற்சியாலேயே பிரதிநிதியாய் நியமிக்கப்பட்டிருந்ததாலும் பர்மகீ வர்க்கத்தையே யழித்துவிட்ட பலல் பின் ரபீஉப்பற்றி இவனுள்ளத்தில் ஐயங்குடிகொண்டிருந்தது. ஹாரூன் ஆவிதுறந்ததும் அமீனின் ஆதரணைகர்த்தாவான பலல் சேனைத்தலைவர்களை யழைத்து "யாம் மாமூனிடம்போய் என்ன செய்வோம்? கலீபா அமீனிடமே யாம் சென்று, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்றான். சிப்பாய்களுக்கு இல்லங்களின் ஞாபகமேலீட்டால் இந்த யோசனை நல்லதெனப் பட்டது. ஹாரூனின் மரண வாக்குமூலத்தையும், அவனிடம் செய்துகொடுத்திருந்த உறுதிமொழியையும் புறக்கணித்துவிட்டு பக்தாதுக்குத் திரும்பினர்கள்.

மாமூன் மார்ருதிலிருந்துகொண்டு இச்செய்தியையறிந்ததும் தலைவர்களையழைத்து இவ்விஷயமாய் ஆலோசனை கேட்டான். "தாங்களே இரண்டாயிரம் சிப்பாய்களுடன் சென்று அச்சேனையைத் திருப்பியழைத்து வாருங்கள்!" என அவர்கள் அபிப்பிராயங்கொடுத்தார்கள். எனினும் அவனது சமுகத்தில் மிகவும் மதிப்புவாய்ந்தவனை பலல் பின் ஸஹல் "இஃது சரியான யோசனையன்று. தாங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான வாக்சாதுர்யம் நிரம்பியோனொருவனிடம் கடிதங்கொடுத்தனுப்புங்கள்! அவன் அங்கு சென்று சென்றுபோன கலீபாவின் வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி, அவர்களைத்திருப்பியழைத்து வரட்டும்" என்றான். மாமூன் இதன் பிரகாரம் நிருபனையனுப்பினன். அவன் நைஸாபூர் சென்று அச்சேனையைச் சந்தித்தான். எனினும், எத்தகைய பலனுமேற்படவில்லை; பலல் பின் ரபீஃ தனது சேனையுடன் பக்தாத் சென்றுவிட்டான். தனக்குப் பக்கபலமாயிருக்கவேண்டிய இச்சேனை

சென்றுவிட்டதாலும், பலலின் விரோதத்தாலும் மாமூன் மிகவும் மனங்கலங்கினுன். எனினும் பலல் பின் ஸஹல் அவனுக்கு ஊக்கமளித்து "நாம் இங்கேயே எல்லா ஏற்பாடு களையும் செய்துகொள்வோம்" என்ருன். மாமூன் சகல காரியாதிகளையும் அவன் வசமே ஒப்புவித்துவிட்டான். அவன் அபிப்பிராயத்திற்கிணங்க மாமூன் துவக்கமாக மர்ருதிலுள்ள மார்க்க நிபுணர்கள், நீதிபதிகள் இவர்களை யழைத்து "எவரது தாக்ஷிண்ணியத்திற்குங் கட்டுப்படாது பிரஜைகளின் விஷயங்களைக் கவனியுங்கள்! அவர்களுடன் கலந்துறவாடுங்கள்! யாவரின் உரிமைகளையும் கவனத்தில் வையுங்கள்! பெருமானுரின் முன்மாதிரியைப் பின்பற்றுங் கள்" எனக்கட்டளையிட்டான். இதனுல் பொதுமக்களின் ஆதரவை யடையவேண்டுமென்பதே இவன் கருத்து. அரசசேனைகள் சென்றுவிட்டபிறகும் மாமூன் அமீனுடன் கடிதப்போக்கு வரவு வைத்துக்கொண்டும், சன்மானங்களை யனுப்பிக்கொண்டு மிருக்கத்தொடுத்தான். எத்தகைய மனத்தாங்கலையும் வெளியிடவில்லை. அவனுள்ளத்தில் எத்தகைய சந்தேகமேற்படவும் இடங்கொடுக்கக்கூடா தென்பதே இவனது நோக்கம். அதற்கேற்ப அமீனும் இவனுடன் மனவருத்தங்கொள்ளவில்லை.

பலல் பின் ரபீஃ தனது இச்செய்கையின் காரணமாய் எப்பொழுதேனும் கிலாபத் மாமூனின் கைவசம் வருமாயின் அஃது தனக்குத் தீம்பாய் முடியுமெனப் பயந்தான். எனவே மாமூன், மூதமின் இவ்விருவரையும் அமீன் பிரதி நிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டுத் தனது புதல்வன் மூஸாவைப் பிரதிநிதியாக நியமிக்கவேண்டுமென முயற்சித் தான். அமீனுக்கு இஃது கிஞ்சிற்றும் விருப்பமில்லையா யினும்—அவன் தனது பிதாவின் வாக்குறுதியைப் பூர்த்தி செய்வதற்கே விரும்பினுனெனினும்—, பலலுடையவும்,

ஜுபைதாவுட்பட அவனைச்சேர்ந்த அவனது சகாக்க ளுடையவும் தூண்டுதலுக்குட்பட்டு இதற்கியைந்தான். முத லில் அவன் மூதமினை ஹாரூன் நியமித்திருந்த பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டு அவனை பக்தாதுக் கழைத் தான். பிறகு அப்பாஸ் பின் மூஸா பின் ஈஸா என்பானுடன் ஒரு தூதுக்கோஷ்டியை குராஸானுக்கு மாமூனிடம் அனுப்பி, தனது புதல்வனான மூஸா பின் அமீனுக்கு முதற் பிரதிநிதிஸ்தானம் கொடுப்பதற்கிசையும்படிக்கூறி யனுப் பினன். மாமூன் அதை மறுத்து, இந்த அப்பாஸுக்குப் பல ஆசைவார்த்தைகள்காட்டி, அவனைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டான். இவன் பக்தாதுக்கு வந்துவிட்ட பிறகு இங்கு நடக்கும் சகல காரியாதிகளையும் மாமூனுக்கு இரகசியமாய்ச் சொல்லியனுப்பிக் கொண்டிருந்ததுடன் அவ னுக்கு ஆலோசனை கூறிக்கொண்டுமிருந்தான். மாமூன் மறுத்துவிட்டபிறகும் அமீன் தனது புதல்வன் மூஸாவைப் பிரதிநிதியாக நியமித்து, எல்லா மாகாணங்களுக்கும் குத் பாக்களில் கலீபாவின் பெயருக்குப்பிறகு அவன் பெயரே குறிக்கப்படவேண்டுமெனவும், மாமூன், மூதமின் இவர் களின் பெயர்கள் நீக்கிவிடப்படவேண்டுமெனவும் கட்டளை பிறப்பித்தான். ஹஜ்ஜுக்காலத்தில் ஒரு தலைவனை மக்கா வுக்கனுப்பி, ஹரம்வாசிகளிடம் மூஸாவின் பிரதிநிதி ஸ்தானத்திற்காக பைஅத் வாங்கிக்கொண்டான். ஹாரூனால் வரையப்பெற்று கஃபாவில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக் கைப்பத்திரத்தைத் தருவித்துக் கிழித்தெறிந்தும் விட் டான்.

இச்செய்திகளையறிந்த மாமூன் சண்டைக்குத் தயாரா னன். மேற்றிசையிலிருந்து குராஸானுக்கு வரும் பாட்டை களிலெல்லாம் காவலாளிகளை நியமித்து, எப்பிரயாணியை யும் சோதனை செய்யாமல் விடக்கூடாதெனக் கட்டளையிட்

டான். இதனல் இங்குள்ள எச்செய்தியும் கிலாபத்தின் தலைநகரத்திற்குத் தெரியக்கூடாதென்பதும், அங்குள்ள தலைவர்களின் விஷமம் இங்கு பரவக்கூடாதென்பதும் இவனது கருத்து. எனவே பலல் பின் ரபீஃ அனுப்பிய நிரூபர்களும், நிரூபங்களும் திரும்பிச்சென்று பட்டன; அவனது எத்தகைய முயற்சியும் மாமூனுக்கு விரோதமாய் நடைபெறக்கூடாதுபோயிற்று. மாமூன் தன் அடிமை தாஹிர் பின் ஹுஸைன் உடைய தலைமையின்கீழ் ஒரு பெரிய சேனையை மர்ருதிலிருந்து ரையின்புறம் அனுப்பியதில் அவன் அங்கிருந்துகொண்டு ஒவ்வொரு புறத்திலும் ஒற்றர்களை யனுப்பினன். பலல் பின் ரபீஃ பக்தாதில் மாமூனை எதிர்ப்பதற்காக 40,000-பேர்கள் கொண்டதொரு சேனையைத் தயாரித்து, அலீ பின் ஈஸா பின் மாஹானை ஜபல், நுஹாவந்த், ஹமதான், கும், இஸ்பஹான் இவைகளின் தலைவனுய் நியமித்து அச்சேனைக்குத் தளகர்த்தனுக்கி ஹி. 195, ஜமாதில்ஆகிர் மாதநடுவில் அனுப்பினன். ஜுபைதா காத்தூன் உடைய முயற்சியால் மாமூனைப் பிணித்துக் கொணர்வதற்காக ஒரு வெள்ளிச் சங்கிலியையும் அனுப்பினன். அலீ பின் ஈஸா முந்தி குராஸானுக்குத் தலைவனுகவிருந்தவன். இவனது கொடுமைகள் அங்கு பிரசித்திபெற்றிருந்தன. தாஹிருடனிருந்த குராஸான் வாசிகள் அவன் தங்களுக்கே தலைவனுகத் தங்களுடன் சண்டையிட வருவதைக்கேட்கவும் மிகவும் ஆவேசத்துடன் அவனை எதிர்ப்பதற்காகத் தயாராயிருந்துகொண்டும், "மாமூனைப்போன்ற நீதிமானுன தலைவரிருக்கையில் அக்கொடுங்கோலனை இங்கு வரவிடமாட்டோம்" எனக் கூறிக் கொண்டுமிருந்தார்கள்.

கர்வம்படைத்த அலீ பின் ஈஸா மாமூனின் சேனையை தாஹிர் கொண்டுவந்திருப்பதாய்க் கேள்விப்பட்டதும் மிக

வும் சிரித்து "தாஹிருக்கும் சண்டையிடத்தெரியுமோ? 'சண்டை என்பதென்ன?' வென்பதையும் அவன் அறியாதவனன்ளுே? அடிமையும் சேனுதிபதியாக முடியுமா? ஹமதானைவிட்டு முன்னேறிச் செல்லுங்கால் நாம் வருவதைச் செவியுற்றதும் சிங்கத்தைக்கண்டு வெருண்டோடும் நரியைப்போல் அவன் ஓடுவதைப் பார்க்கலாம்! அங்ஙனம் ஓடாது நின்றுவிட்டாலோ முதல் வாள் அவன்மீதே விழும்" என்ருன். ரையுக்குச் சமீபமாகச் சென்றதும் சேனையிலிருந்தோர் "நாம் தற்போது எதிரிக்குச் சமீபத்திலிருக்கிருேம். எனவே, ஒற்றர்களை நாலுபக்கங்களிலுமனுப்பி, சேனை தங்குதற்குத் தக்கதொருவிடத்தைத் தேர்ந்தெடுப்போம். பிறகு அதைச்சுற்றி அகழ்தோண்டிப் பாதுகாப்பானவிடமாகச் செய்துகொள்வோம்" என்ருர்கள். அதற்கு அலீ "இவையாவும் சேனுதிபதிகளை எதிர்ப்பதற்காகச் செய்யப்படும் காரியாதிகள். தாஹிரை எதிர்ப்பதற்கு இதொன்றும் வேண்டாம். அவன் நமக்குப் பயந்து ஓடிவிடுவான்; அல்லது கோட்டைக்குட் பதுங்கிவிடுவான். பிறகு நாம் அதைக் கடுமையாக முற்றுகையிடுவோம். அதனுல் அங்கிருக்கும் ஜனங்களே அவனை வேலைதீர்த்துவிடுவார்கள். நாம் கஷ்டப்படவேண்டிய அவசியமுமிராது" என்ருன். அச்சேனையிலிருந்த தலைவர்களிலொருவனுன யஹ்யா பின் அலீயென்பான் "எதிரியை இழிவாய்க் கருதக்கூடாது. சேனை யொழுங்குமுறைக்கிணங்க தற்காப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படாவிடின், இராவேளையில் திடீரெனத் தாக்கப்படுவோமென்றஞ்சுகிறேன். ஒரு பொறி நெருப்பினுல் நகரமே அழிந்துவிடுவதும், ஒரு சிறிய துவாரத்தினுல் பெரும் வெள்ளம் ஏற்படுவதும் அநேகமாக நிகழ்ந்திருக்கின்றன. தாஹிர் நமக்குப் பயந்து ஓடிவிடுவோனுயிருப்பின் இதுவரை இங்கிருக்க மாட்டான்" என்றதற்கு

அலீ "தாஹிர் போன்றவன் நம்மை யாதுசெய்யக்கூடும்? இத்தகைய அடிமைகளுக்கு நாம் பயப்படமாட்டோம்" என்ருன்.

அந்தப்புறம் தாஹிர் தனது சேனையிலுள்ள தலைவர்களின் ஏகோபித்த ஆலோசனைப் பிரகாரம் தனது சேனையுடன் ரையிலிருந்து புறப்பட்டு ஐந்து மைல்கள் தூரத்தில் கூடாரமடித்துத் தங்கினன். அங்கு அவைகளைப் பல பகுதிகளாய்ப் பிரித்து ஒவ்வொரு பகுதியின் தளவாடங்களையும் ஒழுங்கு படுத்தினன். இருதரப்பாரும் சண்டையிடத் தொடுத்ததும் துவக்கத்தில் தாஹிர் உடைய வலது பகுதிச் சேனை தோல்வியுற்றது. அவன் அதை நடுப்பகுதிக்குக் கொணர்ந்து விட்டான். பிறகு இடது பகுதியும் தோல்வியுற்றது. இதைக்கண்டதும் அவன் எதிரிகளின் நடுப்பகுதியில் வீராவேசத்துடன் பாய்ந்து, அதை முறியடித்துவிட்டுக் கொடிகள் யாவையும் பிடுங்கிக்கொண்டான். அலீ பின் ஈஸா அம்பினல் கொல்லப்பட்டான். அவன் சேனையும் தோல்வியடைந்தது. "தனது ஆயுதத்தைக் கீழே வைத்துவிடுவோன் அடைக்கலம் பெற்றவனுவான்" என தாஹிர் பிரகடனப்படுத்தவும் பக்தாத்வாசிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுக் குதிரைகளிலிருந்து கீழிறங்கினர்கள். தாஹிர் ரையுக்குத் திரும்பி "பக்தாதின் சேனை எனக்குக் கீழ் இருக்கின்றது. அலீ பின் ஈஸாவின் சிரம் என் முன்னலிருக்கின்றது" என மர்ருதுக்கு மங்களச் செய்தி யறிவித்தான். இந்நிருபத்தை பலல் பின் ஸஹல் பார்த்ததும் உடனே மாமூனிடம் சென்று சுபச்செய்தி யறிவித்து கிலாபத்தின் முகமன் கூறினன். பிறகு தாஹிரின் உதவிக்காக பின்னும் சேனைகளை யனுப்பினன். கலீபாவின் சமுகத்தில் எதிர்பார்த்ததற்கு மாருக இத் தோல்விச்செய்தி கிடைக்கவும் அங்கு திடுக்கம் ஏற்பட்டு

விட்டது. பலல் பின் ரபீஃ 20,000-பேர்கள் கொண்ட தொரு சேனையை அப்துர்ரஹ்மான் பின் ஜபலா அம்பாதீ யின் தலைமையின்கீழ் தாஹிரை எதிர்ப்பதற் கனுப்பினான். ஹமதானுக்குச் சமீபமாக யுத்தம் நடைபெற்றது. அப்துர் ரஹ்மான் தோல்வியுற்றுக் கோட்டைக்குட் பதுங்கி விட் டான். சேனையின் பலம் கிஞ்சிற்றே சரிப்பட்டதும் மீண் டும் வெளிக்கிளம்பிச் சண்டையிட்டான். இரண்டாந் தடவையும் தோல்வி யடையவே வேறு வழியின்றி தாஹி ரிடம் அடைக்கலங்கோரினான். அவனும் அதையொப்புக் கொண்டான்.

தற்போது பலல் பின் ரபீஃ பயந்துவிட்டான். எனி னும், மீண்டும் 20,000-சிப்பாய்களை அஹ்மத் பின் மஜீத் உடைய தலைமையின் கீழ் அனுப்பினான். பிறகு அப்துல்லாஹ் பின் ஹமீத் பின் கஹ்தபாவின் தலைமையின் கீழ் 20,000 உதவிச் சிப்பாய்களை யனுப்பினான். இவ்விரு சேனை களும் ஹலவானுக்குச் சமீபமாய் கானிகைனுக்குச் சற்று தூரத்தில் கூடாரமடித்தன. தாஹிரின் ஒற்றர்களும் அதிற்கலந்து கொண்டார்கள். அவர்கள் கையாண்டதொரு தந்திரத்தால் அவ்விருசேனைகளும் தமக்குள் சண்டையிட் டுக்கொண்டு, தாஹிரை எதிர்க்காமலேயே பக்தாதுக்குத் திரும்பின. மாமூன் ஹலவானில் தாஹிரின் ஸ்தானத்தில் ஹர்தமா பின் அஃயுனை நியமித்துவிட்டு தாஹிருக்கு "நீர் சேனைகளுடன் அஹ்வாஜ்புறம் சென்றுவிடும்! அங்கிருந்து கொண்டால் இருபுறத்தாலும் பக்தாதை எதிர்க்கக்கூடும்" என்றெழுதினான். இதற்கேற்ப தாஹிர் அஹ்வாஜ்புறம் சென்றான். அங்கிருந்த அதிபதி முஹம்மத் பின் யஜீத் முஹல்லபீ வெளிவந்து அணிவகுத்தான். எனினும் தோல்வியுற்று ஓடிவிட்டான். தாஹிர் அதைக் கைப்பற்றிக் கொண்டு பாரஸீகம் தொடுத்து யமாமா, பஹ்ரைன் வரை

யிலும் தன் புறத்தால் அதிபர்களை நியமித்தான். தாஹிர் மிகவும் பலம் பொருந்தியனாய் விட்டான். அவன்கொண்ட வெற்றிகளால் கிலாபத்தின் அதிபர்கள் அவன் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே ஓடத்தலைப்பட்டார்கள். அவன் அஹ்வாஜிலிருந்து வாஸித்புறம் சென்றபோது அங்கிருந்த தலைவன் ஓடத்தலைப்பட்டான். ஒருவன் "தாங்கள் ஓடக் கூடாது" எனக்கூறியதற்கு அவன் "வருவது யாரென் பதை யறிவீரோ? தாஹிர்! அவனுக்குப் பயந்தோடுவது குற்றமன்று!!" என்றான். தாஹிர் வாஸித்திலிருந்து ஒரு சேனையைக் கூபாவுக்கனுப்பினான். அங்கிருந்த தலைவனான அப்பாஸ் பின் மூஸா ஹாதீ என்பான் அமீனின் பைஅத்தை முறித்துவிட்டு, மாமூனின் கிலாபத்தை ஏற்றுக்கொண் டான். பஸராவின் தலைவனான மன்ஸூர் பின் மஹ்தீயும் இங்ஙனமே செய்தான். இச்சம்பவங்கள் யாவும் ஹி. 196-ல் நடைபெற்றன.

ஹிஜாஸில் அமீன் புறத்தால் தாவூத் பின் ஈஸா தலை வனாய் நியமிக்கப்பெற்றிருந்தான். அமீன் அங்கிருந்த மாமூன், மூதமின் உடைய பிரதிநிதிப் பத்திரத்தைத் தரு வித்துக் கிழித்துவிடவும் தாவூத் ஹி. 196, ரஜப், 27-ல் குரைஷ்கள், மார்க்க நிபுணர்கள், கஃபாவின் வாயில் காப் போர்கள் இவர்களைத் தருவித்து "ஹாரூனுர்ரஷீத் பிரதி நிதிப் பத்திரத்தை இப்புனித வீட்டில் தற்காப்பிற்காக அமானத்தாய் வைத்தான். இதில் நம்மையும் சாக்ஷிகளாய் நியமித்து "இதற்கு மாற்றமாய் நடைபெற்றால் அதிக்கிரமத் திற்காளானவனுக் குதவிபுரிய வேண்டும்" என வாக்குறுதி யும் வாங்கினான். அமீன் தற்போது வாக்குத்தத்தத்தைப் புறக்கணித்துக் கொடுமை புரிகிறான். எனவே நாம் மாமூ னுக்கே யுதவிபுரிய வேண்டும்" என்றான். யாவரும் அதை யாமோதித்து, அமீனை நீக்கிவிட்டு மாமூனுக்காக கிலாபத்

தின் பைஅத் செய்தார்கள். மதீனாவாசிகளும் இங்ஙனமே செய்தார்கள். பிறகு தாவூத் ஹிஜாஸிலிருந்து மர்ருதுக்குச் சென்று மாமூனைச் சந்தித்தான். அவனிடம் இச்செய்திகள் யாவையும் கூறியதும் அவன் இப்புனித ஸ்தலங்களின் பைஅத்தைத் தனக்கொரு நற்குறியாகக் கொண்டுச் சந்தோஷித்தான். தாவூதை ஏற்கனவே யிருந்ததுபோல் அவ்விடத்துத் தலைவனாய் நியமித்தனுப்பியதுடன் ஹரமைன் வாசிகளுக்கொரு நிரூபம் வரைந்தான். அதில் அவர்களுக்கு நன்மைகள்பல செய்வதாய் வாக்களித்தான். இடைவழியில் தாஹிரை தாவூத் சந்தித்தான். அவன் யஜீத் பின் ஜரீர் குஸ்ரீயை யமனின் தலைவனாய் நியமித்து அவனுடனனுப்பினான். இவன் யமன் போய்ச் சேர்ந்ததும் அங்குள்ளோரிடமும் மாமூனின் கிலாபத்திற்காக பைஅத் வாங்கினான். பக்தாதில் இதற்கிடையே யொரு சம்பவம் நடைபெற்றது: ஹாரூனால் சிறைவைக்கப்பட்டிருந்த அப்துல்மலிக் பின் ஸாலிஹ் என்பானை அமீன் விடுதலை செய்து, அவன் தலைமைத்துவம் வகித்த சேனைகளைக் கொண்டு சென்று தனக்குதவிபுரிய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். அவனிடம் சேனைகள் ஒருங்கு சேர்ந்தபோது அதிற்கலந்திருந்த ஷாம்வாசிகள், குராஸான் வாசிகள் இவர்களுள் வம்சப்பெருமை காரணமாய்ச் சண்டையேற்பட்டுவிட்டது. இதனால் ஷாம் வாசிகள் அவனை விட்டுவிட்டுத் தங்கள் தேசத்திற்குச் சென்றுவிட்டார்கள். அரபியல்லாத சேனையின் தலைவன் ஹுஸைன் பின் அலீ பின் ஈஸாவாயிருந்தான். அவன் அவர்களை பக்தாதுக்குக் கொண்டு வந்து ஹி. 196, ரஜப், 11-ந் தேதி அங்கு அமீனை நீக்கிவிட்டதாயும், மாமூனை கலீபாவாய் நியமித்திருப்பதாயும் பகிரங்கப்படுத்திவிட்டு, கிலாபத் மாளிகைக்குச் சென்று அவனைக் கைது செய்தான்.

முஹம்மத் பின் அபீகாலித் பாக்தாத்வாசிகளிடம் “ஹுஸைன் எங்ஙனம் நமக்குத் தலைவனாய்விட்டான்? கலீபாவை நீக்கும் உரிமையையவனுக்குக் கொடுத்தது யார்?” எனக்கேட்டான். பிறகு தலைவர்கள் யாவரும், குறிப்பாக அஸத் ஹர்பீயும் அமீனைச் சிறையிலிருந்து விடுவித்து ஆஸனத்திலமர்த்தினார்கள். பிறகு ஹுஸைனைக் கைது செய்து அவன்முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். கலீபா அவனை நிந்தித்து “நான் உமது தந்தைமீதும், உம்மீதும் செய்துள்ள நன்றிகளுக்குப் பிரதி இதுதானோ?” வென்றான். பிறகு அவன் குற்றத்தை மன்னித்துவிட்டான். எனினும், இதனால் எத்தகையபலனுமேற்படவில்லை. ஹுஸைன் மீண்டும் பக்தாதிலிருந்து ஓடத்தலைப்பட்டான். ஜனங்கள் அவனைப் பிடித்துக் கொன்றுவிட்டார்கள். ஒருபுறம் இக் குழப்பங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மறுபுறம் மாமூனின் சேனை சகல தளவாடங்களுடனும் நிம்மதியடைந்திருந்தது. தாஹிர், ஹர்தமா இருவரும் இருபுறத்தாலும் முழுவன்மையுடனும் பக்தாதுக்குவந்து, அதை முற்றுகையிட்டார்கள். தாஹிர் ‘அம்பார்’ வாயிலுக்குமுன்னால் தோட்டத்திலிறங்கினான். ஹர்தமாவை நஹர்பைனில் நியமித்தான். அப்துல்லாஹ் பின் விலாஹை ஷிமாஸியா புறமும், முஸையப் பின் ஜுபைரை குல்வாதீ கோட்டையின் புறமும் அனுப்பிவைத்தான். ஒவ்வொரு பக்கத்திலும் பீரங்கிகள் போன்ற கோட்டையைத் தகர்த்தெறியும் ஆயுதங்கள் தயாராயிருந்தன. பிறகு நகரத்தின்மீது கற்கள் வீசப்பட்டன. இதனால் அநேக கட்டிடங்கள் பாழாயின; நகரவாசிகள் மிகவும் கஷ்டமடைந்தார்கள்.

அமீன் தனது அலங்காரப் பொருட்கள், தங்கம் வெள்ளிப்பாத்திரங்கள், நகைகள் இவைகளையெல்லாம் விற்றுச் சேனைகளைத் தயாரித்தான். தனக்குதவிக்காக நகரத்

தின் போக்கிரிகளை யொருங்கு சேர்த்தான். சிறைகளிலிருந்த கைதிகளை விடுவித்தான். எனினும், இதனால் பக்தாத்வாசிகள் மீது ஏற்பட்ட கஷ்டங்கள் முற்றுகையினால் ஏற்பட்டதைவிட அதிகமாகவே காணப்பெற்றன. இப்போக்கிரிகள் தமக்கு அரசனே ஆதரவாயிருப்பதை முன்னிட்டு பகிரங்கமாகக் கொள்ளையடிக்க வாரம்பித்துவிட்டார்கள். வேறு வழியின்றி அமீன் ஹர்தமாவிடம் அடைக்கலந் தேடினான். அவனும் இசைந்தான். எனினும், இதையறிந்த தாஹிர் அடைக்கலத்தைத் தடுத்துவிட்டான். அமீன் தனது சமுகத்தவரது ஆலோசனைப் பிரகாரம் இரகசியத்தில் ஹர்தமாவிடம் போய்ச்சேர்ந்து அவனது தற்காப்பிற்குள் வந்துவிடக் கருதினான். ஹர்தமாவும் இதற்குடன்பட்டான். இவன் அமீனைக் கொணர்வதற்காக இராக்காலத்தில் கப்பலிற் சென்றான். தாஹிர் இதையறியாதிருக்கவில்லை. அவனும் தனது சிப்பாய்களை யங்கனுப்பினான். அமீன் மாளிகையிலிருந்திறங்கிக் கப்பலில் ஏறியபோது அவர்கள் அதன்மீது கற்களையும், அம்புகளையும் எறிந்தார்கள். அதனால் அக்கப்பல் மூழ்கிவிட்டது. ஹர்தமாவை அவன் சகாக்கள் வெளியே எடுத்தார்கள். அமீன் ஜலத்தில் நீந்தினான். அவனைத் தாஹிரின் சிப்பாய்கள் பிடித்து, அவனுத்திரவுப் பிரகாரம் கொன்றுவிட்டார்கள். இஃது ஹி. 198, முஹர்ரம், 25-ந்தேதி நடைபெற்றது. தாஹிர் மாமூனுக்கு இம்மங்களச்செய்தியை யறிவித்தான். இத்துடன் பக்தாதின் முழுச்செய்தியையும், அமீனைக் கொல்வதற்கேற்பட்ட முக்கிய காரணங்களையும் தெரிவித்தான். வெள்ளிக்கிழமை தாஹிர் பக்தாதுக்குட் பிரவேசித்துத் தொழுகையை நடாத்தினான். குத்பாப் பிரசங்கத்தில் பக்தாத்வாசிகளுக்குப் பொதுவான அபயமளித்ததுடன் அவர்கள் குழப்பமுண்டு பண்ணித் திரியக் கூடாதெனவும் கண்டித்தான். இங்ஙனம்

இப்பெரிய குழப்பத்தின் முதற்பகுதி முடிவுபெற்றது. இதில் எத்தகைய பிரயோஜனமுமின்றியே பொதுமக்களி லநேகர் அழிந்துவிட்டனர்.

இப்பிளவு, யுத்தம் இவைகளுக்கு முதற்காரணகர்த்தா ஹாரூனுர்ரஷீத் கலீபாவும், அவனுக்குப்பிறகு அவன் மந்திரி பலல் பின் ரபீஉமாவார்கள். ஹாரூனின் முதற் பிழை மாமூனைவிட புத்தி, கல்வி, வயது இவைகளிற் குறைவுபட்ட அமீனைத் தனக்குப் பிறகேற்படும் பிரதிநிதி யாக நியமித்தான். இவனிடம் அரசியான ஜுபைதாவுக்கு ஜனித்ததொன்றைத் தவிர மாமூனுக்கிராத வேறு எத் தகைய தனிச்சிறப்பும் காணப்படவில்லை. இஃதொரு தனிப் பட்ட காரணமெனக் கொள்ளப்படுமாயின் அறிவிலிகள், சுயநலமிகள் ஒப்புக்கொள்வார்கள். அறிஞர்கள் ஆமோதி யார்கள். பிறகு தனது இக்குற்றத்தை யவன் அறிந்து கொண்டபோது அதற்குப் பிராயச்சித்தமாக மாமூனையும் பிரதிநிதியாக நியமித்தான். இத்துடனும் நின்றுவிடாது அவனுக்குச் சகல உரிமைகளையுமளித்து ரை, குராஸான் இவைகளுக்குத் தனிப்பட்ட தலைவனாய் நியமித்தான். எவ்வளவுக்கெவ்வளவு தனிப்பட்ட உரிமைகள் அதிகமா குமோ அவ்வளவுக்கவ்வளவு குழப்பமும் அதிகமாகுமென் பதை யுணரவில்லை. ஒவ்வொருவனிடமும் ஒரு தனிப்பட்ட சேனையும், கூட்டமும் இருந்துவந்தது. ஆலோசனையாளர் கள் ஹாரூனின் ஜீவியகாலத்திலேயே அவனது மரணத் திற்குப்பிறகு அவ்விரு சகோதரர்களுக்குள் ஒற்றுமையிரா தென்பதை நன்கறிந்திருந்தார்கள். ஹாரூனின் மூன்றுவது பிழை அவன் தனது மூன்றுவது புதல்வனுன மூதமினையும் மாமூனுக்குப்பிறகு பிரதிநிதியாக்கி, அவனுக்கு ஜஸீரா, ஆர்மீனிய்யா இவைகளில் மாமூனுக்கு குராஸானில் கொடுத் திருந்ததுபோன்ற தனிப்பட்ட உரிமைகளைக் கொடுத்ததாம்.

கலீபாவாயினதும் அமீன் தகப்பனின் ஒப்பந்தப்பத்திரத்தை முறிக்கக் காரணமாயினது தனது இரு இறக்கைகளும் துணிக்கப்பட்டுப் போயிருப்பதையும், சேனைகளின் பெருந்தலைநகரங்களைக்கொண்ட இரு இஸ்லாமிய நாடுகளில் தனது அதிகாரம் செல்வதற்கில்லாது போயிருப்பதையும் அவன் கண்டுகொண்டதேயாம்.

ஹாரூனின் நான்காவதுபிழை அவன் தனது மந்திரி பலல் பின் ரபீஐ யறிந்துகொள்ளாது இவனது வார்த்தைகளை நம்பினதேயாம். இவன் பொறாமை, கபடம், கோள் இவைகள் நிரம்பப்பெற்றவனாவான். இவனது வஞ்சகத்தாலேயே பர்மகியர்கள் அழிந்துபட்டார்கள்; அவர்களின் ஒப்பற்ற ஊழியத்தை கிலாபத் இழந்தது. பிறகு இவன் அமீனின் காலத்திலும் தனது இயற்கைக் குணத்தை விட்டொழிக்காது அவனை உடன்படிக்கைக்கு மாறுசெய்யும் படித் தூண்டி மாமூன், மூதமின் இவர்களைப் பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டான். குழப்பம் அதிகப்பட்டு, பக்தாத் முற்றுகையிடப் பெற்றதும் இறுதிகாலத்தில் அவன் எத்தகைய உதவியும் செய்யாது பதுங்கிவிட்டான். இக்காரணங்கள் தவிர அப்பாஸிய்யா கலீபாக்கள் உடன்படிக்கையை முறிப்பதில் பின்வாங்கியவர்களாயிருக்கவில்லை. அவர்களில் கலீபாவாயின ஒவ்வொருவனும் தனது சகோதரனைப் பிரதிநிதிஸ்தானத்தை விட்டும் நீக்கிவிட்டுத் தனது புதல்வனைப் பிரதிநிதியாக்கவே விரும்பினான். ஹாரூன் இதையனுபவத்திற் கண்டுகொண்டுமுள்ளான். ஹாதீ அவனை நீக்கிவிட்டுத் தனது புதல்வன் ஜஃபரைப் பிரதிநிதியாக நியமிக்க முயற்சித்தான். அவ்வமயம் ஹாரூனுக்கு எத்தகைய தனிப்பட்ட உரிமையுமிருக்கவில்லை. இதையெல்லாங்கண்ட பிறகும் உறுதியாக வாக்குறுதி வாங்குவதும், ஹரம்வாசிகள், அல்லாஹ், ரஸூலில் இவர்களைச் சாக்ஷிகளாய்

நியமிப்பதும், கஃபாவில் உடன்படிக்கையை அமானத்தாக வைப்பதும் இதெல்லாம் பிரயோசனம் கொடுக்காது. சென்றுபோன சரிதைகளைக் கொண்டு கிஞ்சிற்றே உணர்ச்சி யடைந்திருக்கவேண்டும்.

## அமீனின் குணாதிசயங்கள்

அமீன் கலீபாவானதும் சிற்றின்ப சுகபோகத்தில் மூழ்கிவிட்டான். விளையாட்டு, சங்கீதம், நபீத் இவைகளே யவனுக்குப் பிரியமான சாமான்களாய்த் திகழ்ந்தன. பல பகுதிகளிலிருந்தும் இத்தகைய குணமுடையவர்களை யொருங்குதிரட்டித் தனது தோழர்களாக்கிக் கொண்டான். அவர்களுக்குப் பெருந்தொகையைச் சம்பளமாகக் கொடுத்தும் வந்தான். கஜானாவின் பொருட்களையெல்லாம் பணிப் பெண்களுக்கும், பணிமக்களுக்குமே பங்கிட்டுக்கொடுத்தான். தனக்காகப் புதிதுபுதிதான மாளிகைகளையும், மஹல்களையும் கட்டினான். பலவிடங்களிலிருந்தும் பலவகையான மிருகங்களையும், பறவைகளையும் தருவித்தான். யானை, சிங்கம், குதிரை, சர்ப்பம் போன்ற ஐந்து ஜீவன்களின் கோலத்தில் ஐந்து கப்பல்களைத் தயாரித்து, அதிலமர்ந்து கொண்டு திஜ்லாவில் சுகமாய்க் காற்றுவாங்கி வந்தான். இவ் விளையாட்டுகளில் மூழ்கி கிலாபத்தின் காரியாதிகளை முழுமையாக விட்டுவிட்டான். அரசாங்கக் காரியாலயத்திற்கு வருவதையும் நிறுத்திவிட்டான். பிறகு பலல் பின் ரபீஃ போன்றோரின் தூண்டுதலால் பிரதிநிதிகளின் உடன்படிக்கைப் பத்திரத்தைக் கஃபாவிலிருந்து தருவித்துக் கிழித்தெறிந்து விட்டுத் தனது புதல்வன் மூஸாவைப் பிரதிநிதியாக நியமித்தான். கஃபா, உடன்படிக்கை இவைகளை இவன் அவமதிப்பது கண்டு பொதுமக்கள் இவன்மீது கோபங்கொண்டனர்; அநேகர் மாமூனை யாதரித்தனர். அமீனும், பலல் பின் ரபீஉம் தமக்குத்தாமே இவ்வின்னல்களைத் தேடிக்கொண்ட

பிறகும் புத்திசாலித்தனத்தை மேற்கொள்ளாது மாமூனை எதிர்ப்பதற்காக அலீ பின் ஈஸாவை யனுப்பினர். இவனது கொடுமைகள் காரணமாக குராஸான்வாசிகள் ஏற்கனவே இவனுக்குப் பகைஞர்களாக விருந்தார்கள். எனவே அவர்கள் வீராவேசத்துடன் எதிர்த்து இவனை வெற்றிகொண்டார்கள். பிறகு பக்தாத் முற்றுகை யிடப்பெற்றபோது கைதிகள், போக்கிரிகள் இவர்களை யுதவிக்கழைத்துத் தனது மடமையை நன்கு நிரூபித்துவிட்டான். இத்தகைய குழப்பக் காலத்திலும் தனது விளையாட்டை விட்டொழித்தானல்லன். இதற்கு மாற்றமாய் மர்ருதில் மாமூனின் சமுகத்தைச் சற்றே கவனித்தால் அங்கு அறிஞர்கள், புத்திமான்கள் இவர்களுடன் அவன் மார்க்க, அரசியல் விஷயங்களில் ஆலோசனை கலந்து வந்ததைக் காணலாம். இதன் காரணமாய் அமீன்மீது கொண்டிருந்த வெறுப்பே போன்று இவன் மீது பொதுமக்களுக்கு விருப்பு பெருகிவந்தது. தாய், தந்தை இருவர் மூலமாகவும் ஹாஷிம் குலத்தைச் சேர்ந்திருந்த பெருமை அப்பாஸிய்யா கலீபாக்களுள் அமீனொருவனுக்கே யிருந்துவந்தது. எனினும் கண்ணியமும், பொதுமக்களின் ஆதரவும் கிரியைகள் காரணமாகவே கிடைக்கின்றனவென்பதும், வம்சம் காரணமாகக் கிடைப்பதில்லை யென்பதும் உண்மையே யன்றோ? அமீன் கிலாபத்தை நிர்வகித்தது 3-வருடங்கள், 8-மாதங்களாம்.

## 7. மாமூன்

அப்துல்லாஹ் அல்-மாமூன் பின் ஹாரூனுர்ரஷீத் என்னும் இவனது அன்னை அடிமைப்பெண்ணான மராஜில் என்பாராம். ஹி. 170-ல் ஹாரூன் கலீபாவாயின அதே தினத்தில் இவன் ஜனித்தான். இவன் பதின்மூன்று வயதடைந்த போது அமீனுக்குப் பிறகு இவனைப் பிரதிநிதியாக ஹாரூன் நியமித்து, குராஸானுக்குத் தனிப்பட்ட தலைவனாய் நியமித்தான். ஜஃபர் பின் யஹ்யா பர்மகீ இவனது போஷகனாயிருந்தான். ஹாரூனின் மரணத்திற்குப் பிறகு அமீன் கலீபாவாயினதும் தனது குமாரன் மூஸாவை இவனுக்கு முந்தி பிரதிநிதியாக நியமிக்கக் கருதினான். மாமூன் இதற்கு மாறுசெய்யவே அமீனின் சரிதையில் நாம் விவரித்துவந்தபடி பெரிய யுத்தங்கள் நிகழ்ந்தன. இதன் முடிவாக கி. பி. 813, செப்டம்பர், 5-தேதிக்குச் சரியான ஹி. 198, முஹர்ரம், 25-ந்தேதி அமீன் பக்தாதில் கொல்லப்பட்டான். மாமூனுக்காக பைஅத்தும் வாங்கப்பட்டது. மாமூன் மர்ருதிலிருந்தான். அவனது மந்திரி பலல் பின் ஸஹல் என்னும் அரபியல்லாதான் தனது காரியாதிகளால் அவன் நம்பிக்கையைக் கவர்ந்துகொண்டான். பக்தாதுக்குப் பதிலாய் மர்ருதை கிலாபத்தின் தலைநகரமாய் நியமித்து மாமூனை அங்கேயே தனது கைவசம் வைத்திருக்கவேண்டுமெனவும், கிலாபத்தின் காரியாதிகளைத் தனது கையினின்றும் விட்டுவிடக்கூடாதெனவும் அவன் கருதினான். எனினும், மாமூனின் நலனையே விரும்பி நிற்கும் சேனாதிபதிகளான தாஹிர், ஹர்தமா இவர்கள் இராக்கிலிருக்கும்போது பலலின் இவ்வாவல் பூர்த்திபெறுவதற்கு

வழியில்லாதிருந்தது. இதனால் மாமூன்புறத்தால் அவன் இருகட்டளைகளைப் பிறப்பித்தான். முதற்கட்டளையில் தாஹிருக்கு மூஸில், ஜஸீரா இவைகளின் அதிகாரம் கொடுக்கப்படுவதாகவும், அவன் ரிக்காபோய்ச்சேர்ந்து நஸ்ர் பின் ஷபத்தை எதிர்த்து, அப்பிரதேசங்களைத் தன் கைவசம் வைத்திருக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தான். தாஹிர் இதற்குக் கட்டுப்படவேண்டியதைத் தவிர்த்து வேறுவழியிருக்கவில்லை. எனவே, அவன் பக்தாதைவிட்டு ரிக்கா சென்று விட்டான். அவனுக்குப் பதிலாய் பலல் பின் ஸஹல் தனது சொந்த சகோதரன் ஹஸன் பின் ஸஹலை ஜிபால், பாரஸீகம், அஹ்வாஜ், பஸரா, கூபா, ஹிஜாஸ், யமன் இவைகளின் தலைவனாய் நியமித்துவிட்டான். இரண்டாவது கட்டளையில் ஹர்தமாவை குராஸானுக்குச் செல்லும்படிக் குறிப்பிட்டிருந்தான். அவன் இக்கட்டளைப்பிரகாரம் பக்தாதை விடுத்துக்கிழக்குப்பக்கமாய்ப் பயணப்பட்டுவிட்டான்.

## இராக்கின் குழப்பம்

இராக்வாசிகள் எப்பொழுதும் வன்மையின் அடிமைகளாயிருந்து வந்திருக்கிறார்கள். அமீன்—மாமூன் யுத்தத்தில் அங்கு நிலவியிருந்த குழப்பங்கள் காரணமாக அங்கு அமைதி நிலவவேண்டி தாஹிர், ஹர்தமா இவ்விருவரும் சின்னாட்கள் அங்கிருந்திருக்கவேண்டும். எனினும், அவ்விருவரும் திடீரெனப் பயணப்பட்டுவிட்டதால் அங்கு மீண்டும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. பலல் கலீபாவைத் தனது கைவசம் வைத்துக்கொண்டு விட்டானெனவும், கலீபாவை அரசகுடும்பத்தவருட்பட யாரையும் சந்திக்கவும் விடுவதில்லை எனவும், கிலாபத்தின் காரியாதிகளைத் தன்னிஷ்டம் போல் பூர்த்திசெய்கிறானெனவும் செய்திகள் பாவியிருந்ததே இதற்குக் காரணம். இதன் பேரில் பனீ

அப்பாஸ் தலைவர்களும், இராக்கின் தலைவர்களும் பலனுக்கு விரோதிகளாய்ப் போய்விட்டார்கள். அங்கு தலைவனா யிருந்த அவனது சகோதரன் ஹஸன் பின் ஸஹலுக்கும் அவர்கள் மாறுசெய்யத் தொடுத்தார்கள்.

## அலவிய்யாக்கள்

ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகள் இச்சம் பவத்தைக்கண்ணுற்றுக் குழப்பம் புரியத்தலைப்பட்டார்கள். கூபாவில் 'இப்னு தபாதபா' வென வழங்கிவந்த முஹம்மத் பின் இப்ராஹீம் பின் இஸ்மாஈல் பின் இப்ராஹீம் பின் ஹஸன் பின் ஹஸன் பின் அலீ பின் அபீதாலிப் என்பார் தனது கிலாபத்தைப் பிரகடனப்படுத்தியதே முதற் குழப் பமாம். இவர்களுக்குப் பக்கபலமாக ஹர்தமா பின் அஃ யுனுடைய சகாக்களி னின்றிருந்த அபுஸ்ஸராயா பின் மன் ஸூர் ஷைபானீ என்னும் பிரபலமடைந்தவனொருவன் முன் வந்தான். முஹம்மத் கூபாவின் அதிபனான ஸுலைமான் பின் அபீஜஃபர் மன்ஸூர் என்பானை நீக்கிவிட்டுத் தனது அர சியலை ஸ்தாபித்துக் கொண்டனர். ஹஸன் பின் ஸஹல் 10,000-பேர்கள் கொண்டதொரு சேனையை ஜுஹைர் பின் முஸையபுடன் அனுப்பினான். அபுஸ்ஸராயா அதை வெற்றிகொண்டு அதன் சகல தளவாடங்களையும் கொள்ளை யிட்டான். இவ்வெற்றிக்கு மறுதினம் ஹி. 199, ரஜப், முதற்றெய்தி இப்னுதபாதபா திடீரென மரணமடைந்து விட்டனர். அபுஸ்ஸராயா அவர்கள் ஸ்தானத்தில் மூஹம் மத் பின் முஹம்மத் பின் ஜைத் பின் அலீ பின் ஹுஸைன் என்னும் சிறு பிராயத்தவரொருவரை இமாமாக நியமித்துச் சகல காரியங்களையும் தானே செய்யத்தொடுத்தான். ஹஸன் பின் ஸஹல் மீண்டும் 4,000-பேர்கள் கொண்டதொரு சேனையை அப்தூஸ் பின் முஹம்மத் பின் காலித் மர்ருத் ரூதீயின் தலைமையின் கீழ் அனுப்பினான். ரஜப், 17-ந்

தேதி அபுஸ்ஸராயாவுடன் யுத்தம் நடைபெற்றது. அவன் மேற்கண்டசேனையில் ஒருவனையும் உயிருடன் விடவில்லை. இதனால் அவன் மிகவும் பலம்பெற்றுவிட்டான்; அலவிய்யாக்கள் பலவிடங்களிலும் பரவிவிட்டார்கள். அவர்கள் வெற்றியடைந்தும் வந்தார்கள். தற்போது அபுஸ்ஸராயா தனிப்பட்ட அரசியலுக்காக ஏற்பாடுகள் செய்தான். அவன் கூபாவில் நாணயச்சாலையையும் ஏற்படுத்திவிட்டான்.

தன்னால் நியமிக்கப்படும் தலைவர்கள் யாவரும் தோல்வியடைந்து திரும்புவதைக்கண்ட ஹஸன் பின் ஸஹல் வேறு வழியின்றி குராஸான்புறம் சென்றுவிட்ட ஹர்தமாவுக்குத் திரும்பிவரும்படியும், அவனன்றி இவ்வேலைமுடியாதெனவும் நிருபம் வரைந்தான். அவன் பலல், ஹஸன் இருசகோதரர்கள் மீதும் மனவருத்தங் கொண்டிருந்ததாலும், அவர்கள் கிலாபத்தின் காரியாதிகளைக் கைப்பற்றிக்கொண்டதே இக்குழப்பங்களுக்கெல்லாம் மூலக்காரணமென்பதை மாமூனுக்குத் தெரிவிப்பதற்காகவே சென்றுகொண்டிருந்தானாதலாலும் திரும்பிவர மறுத்துவிட்டான். ஹஸன் மறுபடியும் நிருபம் விடுத்து எங்ஙனமாயினும் திரும்பிவரும்படியும், இன்றேல் கிலாபத் பனீ அப்பாஸ்கள் கையைவிட்டும் நீங்கிப்போமென்ற பயமிருப்பதாயும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே ஹர்தமா திரும்பினான். முதலில் மதாயின்புறம் சேனையைக்கொண்டு சென்றான். அங்கிருந்த அபுஸ்ஸராயாவின் அதிகாரியைத் துரத்திவிட்டு அதைக் கைப்பற்றினான். பிறகு கூபாவின்புறம் முன்னேறிச் சென்றான். இப்னு ஹபீராவின் கோட்டைக்குச் சமீபமாக அபுஸ்ஸராயா தோல்வியடைந்து, அலவிய்யாக்களுடன் காதிஸிய்யாபுறம் சென்றுவிட்டான். ஹர்தமா கூபாசென்று அங்குள்ளோருக்கு அபயமளித்தான்; அவர்களை யொன்றுமே செய்ய

வில்லை. பிறகு அன்றே புறப்பட்டு அபுஸ்ஸராயாவைப் பின்றொடர்ந்து சென்றான். அவன் காதிஸிய்யாவை விட்டு ஸூஸ் புறம் ஓடினான். பாரஸீகத்தின் அக்காலத்திய தலைவனான ஹஸன் பின் அலீ பாத்கைஸீ என்பான் அவனை வழிமறித்தான். அபுஸ்ஸராயா அவனுடன் சண்டை யிட்டுக் காயமடைந்து, அங்கிருந்து ஜஸீராவிலுள்ள ராஸுல்ஐன் என்னுமிடத்திற்கு ஓடினான். எனினும் இடை வழியில் பிடிக்கப்பட்டான். நஹர்வானில் தங்கியிருந்த ஹஸன் பின் ஸஹல் அவனைக் கொன்றுவிட்டு, அவனது சவத்தை பக்தாதுக்கனுப்பினான். அங்கு அஃது தூக்கில் தொங்கவிடப்பட்டது. இக்குழப்பம் பத்துமாதங்கள் நடைபெற்றது. ஹஸன் பின் ஸஹல் மீண்டும் பஸராவிற் குச் சேனைகளை யனுப்பினான். அங்கு அபுஸ்ஸராயாவின் புறத்தால் இமாம் மூஸா காஸிம் உடைய திருப்புதல்வர் ஜைத் அதிகாரியா யிருந்தனர். அன்னார் அநேகரைத் தீயி லெரித்ததால் அன்னாரின் சிறப்புப்பெயர் "ஜைதுன்னார் =தீயின் ஜைத்" என வழங்கிவந்தது. அன்னார் கைது செய் யப்பட்டனர். எனினும் உயிருடன் விடப்பட்டனர். இக் குழப்பத்தில் அலவிய்யாக்கள் செய்த குழப்பங்கள் அவர் களது கொடுமைக்கு ஞாபகார்த்தங்களாக யிருக்கின்றன.

## மக்காவின் குழப்பம்

அபுஸ்ஸராயா ஹுஸைன் பின் ஹஸன் பின் அலீ பின் ஹுஸைன் என்பாரைத் தலைவராய் நியமித்திருந் தான். கிலாபத்தின் புறத்தால் தாவூத் பின் ஈஸா பின் மூஸா அப்பாஸீ என்பான் அதிகாரியாக விருந்தான். ஹுஸைன் வருவதைச் செவியுற்ற இவன் சண்டையிடு வதை ஹரமின் கண்ணியத்திற்கு மாற்றமானதெனக் கொண்டு மக்காவைவிடுத்துச் சென்றுவிட்டான். அரபா

வின் தினம் (துல்ஹஜ், 10-ந் தேதி) ஹுஸைன் மேற்றிசையிலிருந்து மக்காவிற் பிரவேசித்தனர். அபுஸ்ஸராயா கஃபாவுக்காக மெல்லிய பட்டுப்போர்வையை யவர்கள் வசம் கொடுத்தனுப்பியிருந்தான். அன்னார் மகாமே இப்ராஹீம் என்னும் ஸ்தலத்தில் உட்கார்ந்துகொண்டு "கொடுங்கோலர்களான அப்பாஸிய்யாக்களின் போர்வையை நீக்கிவிட்டுப் பெருமானாரின் சந்ததிகளது பிரசாரகனான அபுஸ்ஸராயாவின் திருப்போர்வையைப் போர்த்துங்கள்!" எனக் கட்டளையிட்டனர். அன்னார் பேராசையின் காரணமாக கஃபாவின் பொக்கிஷத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன் அதன் தூண்கள்மீது ஒட்டப்பெற்றிருந்த தங்கம், வெள்ளியையும் பெயர்த்தெடுத்தனர். அஃது அதிகவிலை பெறுமெனவும், அதற்காக அத்தூண்களை வீணாக்கக் கூடாதெனவும் ஜனங்கள் கூறியதையும் பொருட்படுத்தவில்லை. இத்துடன் நிற்கவில்லை. ஜம்ஜம் கிணற்றைச் சுற்றிப் போடப்பட்டிருந்த இரும்புக் கிராதிகளையும் பெயர்த்து விற்றுவிட்டனர். யாரிடத்திலேனும் அப்பாஸிய்யாக்களின் அமானிதப்பொருள் ஏதேனுமிருப்பதாய்க் கேள்விப்பட்டால் அவனது சொத்துக்கள் யாவையும் பறிமுதல் செய்துவிடுவர்; கடினதண்டனை கொடுத்து அபராதம் விதிப்பர். "தாருல் அதாப் = வேதனையின் இல்லம்" என்னும் பெயரால் தண்டனை விதிப்பதற்காக ஒரு வீட்டைச் சொந்தமாய் வைத்திருந்தனர். அதில் பலவித தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்ததுடன் கொடுமைகள் பல புரிந்து சொத்துகளைப் பறிமுதல் செய்யப்பட்டும் வந்தது இப்பயத்தினால் மக்காவிலுள்ளோரில் அநேகர் தமதில்லங்களை விடுத்து ஓடிவிட்டனர்.

அலவிய்யாக்களின் இக்கொடுமைகள் மக்காவில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அபுஸ்ஸராயா கொல்லப்பட்டதையும், தங்கள் வர்க்கத்தவர் யாவரும் பஸரா,

கூபா இவ்விடங்களை விட்டுத் துரத்தப்பட்டதையும் கேள்விப்பட்ட அவர்கள் ஒருங்கு சேர்ந்து இமாம் ஜஃபர் ஸாதிக் உடைய புதல்வரான முஹமத் கரத்தில் பைஅத் செய்து, அன்னாருக்கு "அமீருல் மூமினீன் = முஸ்லிம்களின் தலைவர்" என்னும் பட்டத்தை யளித்தார்கள். இன்னாரும் பெயரளவில் தலைவராக்கப் பட்டனரே யல்லாது சகல உரிமைகளும் இன்னார் புதல்வர் அலீயின் கைவசமும், முற் குறிக்கப்பெற்ற ஹுஸைன் கைவசமுமே யிருந்து வந்தது. இவ்விருவரும் மக்காவாசிகள் மீது பல கொடுமைகளைப் புரிந்தனர். பொருட்களை யபகரிப்பது போக மரியாதை யையும் பங்கப்படுத்தத் தொடுத்தனர். ஹரம்வாசிகளை இக்கொடுமைகளை விட்டும் காப்பதற்காக இஸ்ஹாக் பின் மூஸா பின் ஈஸா யமன் தேசத்திலிருந்து சேனையைக் கொண்டுவந்தான். அலவிய்யாக்கள் அவனை எதிர்த்தார்கள். பல நாட்கள் யுத்தம் நடைபெற்றது. இஸ்ஹாக் தன்னால் எதிர்க்க முடியாதெனக்கண்டு அங்கிருந்து திரும்பினான். இடைவழியில் ஹர்தமாவால் மக்காவாசிகளைத் தற்காப்பதற்கென்றனுப்பப்பட்ட சேனை வந்துசேரவும் அவர்களுடன் இஸ்ஹாக் திரும்பினான். தற்போது அலவிய்யாக்கள் தோல்வியடைந்தார்கள். முஹம்மத் பின் ஜஃபர் ஸாதிக் தமக்காகவும், தமது வர்க்கத்தவருக்காகவும் அபயங்கோரினர். அவர்கள் அங்கிருந்து சென்றுவிடுவதற்காக மூன்று நாட்கள் தவணையளிக்கப்பட்டார்கள்.

### யமன் குழப்பம்

யமனின் அதிகாரி இஸ்ஹாக் பின் மூஸா அங்கிருந்து புறப்படவும் இமாம் மூஸா காலிம் உடைய புதல்வரான இப்ராஹீம் அங்கு தமது அரசியலை நிறுவிக்கொண்டார். அவர் அநேகரைக் கொன்றதால் அவருக்கு "கஸ்ஸாப் = கசாப்புக்கடைக்காரர்" என்னும் சிறப்புப்பெயர் கிடைத்

தது. ஹி. 200-ல் இவர் தமது புறத்தால் அகீல் வர்க்கத்தைச்சேர்ந்தவனொருவனை ஹாஜிகளின் தலைவனாய் நியமித்து, அவனுக்கொரு சேனையையுமீந்து மக்காவுக்கனுப்பி வைத்தார். மறுபுறம் கிலாபத்தின் புறத்தால் அவ்வாண்டு அபூஇஸ்ஹாக் பின் ரஷீத் ஹாஜிகளின் தலைவனாய் நியமிக்கப்பட்டு சில அனுபவம் மிகுந்த சேனைத்தலைவர்களுடனும், ஒரு சேனையுடனும் மக்கா போய்ச்சேர்ந்தான். இதையறிந்த அந்த அகீல் வம்சத்தவன் இடைவழியிலுள்ள பனீ ஆமிர் வர்க்கத்துத் தோட்டத்தில் தங்கிவிட்டான்; மேற்செல்ல அவனுக்குத் தைரியமேற்படவில்லை. அவ்வழியே மக்காவின் யாத்திரீகர்களைக் கொண்டதொரு கூட்டம் கஃபாவின் மேற்போர்வையுடன் சென்றது. அகீல் வர்க்கத்தவனும், அவனது சகாக்களும் அக்கூட்டத்தைக் கொள்ளையிட்டுப் போர்வையையும் பிடுங்கிக்கொண்டார்கள். அக்கூட்டத்திற் சிலர் மக்காபோய்ச் சேர்ந்தனர். அபூஇஸ்ஹாக் உடனே அவ்விடத்திற்குச் சிப்பாய்களை யனுப்பினான். அவர்கள் யாவரும் சூழ்ந்துகொள்ளப் படவே சிலர் ஓடிவிட்டனர். எஞ்சியோர் கைது செய்யப்பட்டனர். ஹாஜிகளின் சகல பொருட்களும், கஃபாவின் மேற்போர்வையும் அவர்களிடமிருந்து திருப்பிப் பிடுங்கிக்கொள்ளப் பட்டன. மக்காவுக்குச் சென்று ஒவ்வொருவரும் பத்துப்பத்து கசையடிகள் கொடுக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் அங்கிருந்து ஹாஜிகளிடம் பிச்சையெடுத்துக்கொண்டே தமதில்லங்களுக்குத் திரும்பினார்கள். அநேகர் பசியால் இடைவழியிலேயே இறந்துபோயினர். இவ்வாறாக அலவியாக்களின் குழப்பம் ஒவ்வோரிடத்திலும் முற்றுப்பெற்றது. இவையாவும் அனுபவமும், தீரமும் மிகுந்த சேனாதிபதியான ஹர்தமாவின் ஒப்பற்ற முயற்சியால் நிறைவேறின.

அவன் இக்காரியாதிகளை முடித்துக்கொண்டு குராஸான்புறம் திரும்பினுன். அவனது நோக்கம் கலீபாவிடம் சென்று, கலீபாவிடம் இச்செய்திகள் யாவையும் தெரிவிக்க வேண்டுமென்பதேயாம். பலல் பின் ஸஹல் மாமூனுக்கு இவனைப்பற்றிக் கெட்டபிப்பிராயத்தை ஏற்கனவே யுண்டு செய்து, " இராக்கில் ஏற்பட்ட இக்குழப்பங்களுக்கெல்லாம் ஹர்தமாவே மூலக்காரணஸ்தன். அபுஸ்ஸராயா இவனைச் சேர்ந்தவனே " என நம்பும்படிச் செய்திருந்தான். மாமூன் ஹர்தமாவை ஷாம், ஹிஜாஸ் இவைகளின் அதிகாரியாய் நியமித்திருப்பதாயும், இடைவழியிலிருந்தே அங்கு செல்லும்படியும், தன்னிடம் வரவேண்டிய அவசியமில்லையெனவும் எழுதினுன். எனினும், ஹர்தமா உண்மைச்செய்திகளையவனுக்கறிவித்துவிட வேண்டுமெனவே கருதினுன். கலீபா தனது வாக்கியங்களை யொப்புக்கொள்வானென்னும் நம்பிக்கை யவனுக்கிருந்தது. எனவே அவனது உத்திரவையும் புறக்கணித்து மர்ருத் போய்ச்சேர்ந்தான். தான் அங்கு செல்லும் நேரத்தில் பறையும், நகாரும் அடிக்கும்படிச்செய்தான். இதனுல் தான் வந்திருப்பதை மறைக்க பலலால் முடியாதென்பதும், கலீபா தான் வந்திருப்பதை யறிந்து கொள்வானென்பதுமே இவனது கருத்து. ஹர்தமா மாமூனின் சமுகத்திற்குச் சென்று குழப்பத்திற்குக் காரணமான சகல விஷயங்களையும் விவரித்தான். எனினும், ஏற்கனவே பலல் இவன்மீது கெட்டபிப்பிராயத்தை யுண்டு செய்து வைத்திருந்ததால் கலீபா இவன் வார்த்தைகளைச் செவிமடுக்கவேயில்லை. மேலும் இவனைக் கடிந்துகொண்டு, இவனுக்குக் கசையடிகொடுத்துக் கைதுசெய்தான். சிப்பாய்கள் இவனை இழுத்துக்கொண்டே சிறைக்குக் கொண்டுசென்றார்கள். பலல் சிறைச்சாலையின் அதிகாரிகளைக்கொண்டு

இவனைக் கொன்றுவிட்டு, இவன் தானே இறந்துவிட்டதாய்ப் பகிரங்கப் படுத்திவிட்டான்.

பக்தாதில் இச்செய்தி தெரியவரவே அங்குள்ள சேனைகள் புரட்சி செய்யத் தொடுத்து ஹஸன் பின் ஸஹலால் நியமிக்கப்பெற்ற அதிபர்களை நீக்கிவிட்டு, அவன் கட்டளைகளுக்கு மாறுசெய்தார்கள். இக் குழப்பத்தை யடக்கத்தக்க புத்தியும், வன்மையும் ஹஸனுக்குக் கிடையாது. பக்தாத்வாசிகள் ஒருங்கு சேர்ந்து மன்ஸூர் பின் மஹ்தீயிடம் தனது கிலாபத்திற்காக பைஅத் வாங்கிக் கொள்ளும்படி விண்ணப்பித்துக் கொண்டார்கள். அவன் மறுத்துவிடவே "உங்களுக்கு கலீபாவாக விருப்பமில்லையாயின் மாமூனே கலீபாவா யிருக்கட்டும்; குத்பாப் பிரசங்கங்களிலும் அவன் பெயரே குறிப்பிடப்படட்டும். எனினும், எமது தலைமைத்துவத்தையாகினும் உங்கள் கைவசம் வைத்துக்கொள்ளுங்கள்! மஜூஸீ(நெருப்பை பூஜிப்போன்)யின் புதல்வன் மஜூஸீயான ஹஸன் பின் ஸஹல் உடைய அதிகாரத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம்" என்றார்கள். இதை யவனும் ஒப்புக்கொண்டான். எனினும், அங்கு எத்தகைய பக்கபலமு மிருக்கவில்லை யாதலின் போக்கிரிகள் குழப்பம் புரியத் தொடுத்தார்கள். கொள்ளை யடிப்பதும், பொதுப்பாட்டைகளில் பகிரங்கமாகக் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் தூக்கிச்செல்வதும், கிராமவாசிகளிடம் வற்புறுத்திப் பணம் வசூலிப்பதும் எங்கும் காணப்பெற்றன. இதைப் பார்த்த காலித் தர்யோஷ் என்னும் பெயருடையோ னொருவன் இக்குழப்பத்தை யொடுக்க முன்வந்தான். இவன் அமைதியை விரும்புவோரில் ஒரு கூட்டத்தைத் தன்னுடனழைத்துக்கொண்டு போக்கிரிகளை யொடுக்கத் தொடுத்தான். அவர்கள் எதிர்த்தார்கள். தர்யோஷ் அவர்களைத் தோற்கடித்து, தான் கைது செய்யும்

ஒவ்வொருவனையும் அதிபனிடம் கொண்டுசென்று தண்டனை விதித்துவந்தான். ஸஹல் பின் ஸலாமா வென்னும் மற்றொருவனும் இதற்குக் கங்கணங் கட்டினான். இவனும் குழப்பக்காரர்களை யொடுக்கினான். எனினும், இவன் கருத்து தர்யோஷின் கருத்துக்கு மாறுபட்டிருந்தது. அமைதி நிலவச் செய்வதில் அரசாங்கத்திற் குதவிபுரிய வேண்டுமென்பது தர்யோஷின் கருத்து. ஸஹல் ஜனங்களிடம் தன்னை யாதரிப்பதற்காக பைஅத் வாங்கிக்கொண்டிருந்தான்; எவரின் அதிகாரத்தையும் ஒப்புக்கொள்ளவில்லை. இப்புறம் கிலாபத்தின் தலைநகரத்தில் இச்சம்பவங்கள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருக்குங்கால் மர்வில் மாமூன் நிம்மதியுடனிருந்தான். கிலாபத்தின் தலைநகரத்தில் நடப்பதொன்றையுமவனறியான். பலல் இத்தகைய செய்திகள் ஒன்றுமே அவனுக் கறிவிக்கப்படாது தடை செய்து வந்தான்.

இதற்கிடையில் மாமூன் செய்த மற்றொரு காரியத்தால் பக்தாதில் பின்னும் அதிகமான பரபரப்பேற்பட்டது: அவன் 'இத்னஅஷ்ரிய்யா' கூட்டத்தவரின் எட்டாம் இமாமான அலீரிலா என்பாருக்குத் தனது புதல்வியை மணமுடித்துக் கொடுத்து, அவரைத் தனது பிரதிநிதியாக நியமித்தும் விட்டான். இத்துடன் அப்பாஸிய்யாக்களின் அறிகுறியான கருப்பாடையை நீக்கிவிட்டு, அலவிய்யாக்களின் அடையாளமான பச்சையாடையை யணியும்படியும் சகல மாகாணங்களுக்கும் கட்டளை பிறப்பித்து விட்டான். அப்பாஸிய்யாக்கள் ஒருமிக்க "கிலாபத்தை பனீஅப்பாஸ்களிடமிருந்து அலீ (ரலி.) அவர்களின் சந்ததிகளுக்குக் கொடுத்துவிடவே பலல் பின் ஸஹல் கருதுகிறான். நாம் ஒருபோதும் இக்கட்டளைக்குக் கீழ்ப்படியக்கூடாது" எனக்கூறிக் கொண்டு ஒற்றுமையாய் ஹி. 202, முஹர்ரம் மாதத்தில்

மாமூனின் கிலாபத்துடைய பைஅத்தை மாற்றிவிட்டு, அவனது சிறிய தந்தை இப்ராஹீம் பின் மஹ்தீயை கலீபாவாக ஏற்றுக்கொண்டார்கள். இவன் ஹஸன் பின் ஸஹலை எதிர்ப்பதற்காகச் சேனைகளைத் தயாரித்ததுடன் பலவிடங்களுக்கும் அதிபர்களை நியமித்துமனுப்பினான். மர்வில் மாமூனுக்கு இமாம் அலீரிலாவே இச்செய்தியைத் தெரிவித்தார். மாமூன் அவரிடம் "இப்ராஹீமை பக்தாத்வாசிகள் தமது தலைவனாய் நியமித்துக் கொண்டதாய் பலல் எனக்கறிவித்துள்ளான்" எனவும் அவர் மறுத்து "இல்லை! இல்லை!! கலீபாவாகவே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அவனுக்கும் ஹஸனுக்குமிடையே யுத்தமும் நடைபெறுகின்றது. பலல் கூறியது பொய்யே" எனக் கூறிவிட்டு, பக்தாதின் நிலைமைகள் யாவையும் விவரித்துவிட்டு "தங்களுடன் பொதுமக்கள் விரோதங் கொள்வதற்குக் காரணம் பலல், ஹஸன் இவ்விருவரும் கிலாபத்தின் காரியாதிகளில் தலையிட்டதே. பொதுமக்கள் இதை விரும்பவில்லை. இவ்விஷயத்தில் உண்மையைக் கண்டறியவேண்டுமாயின், இங்குள்ள இன்னின்ன சேனாதிபதிகளைக் கேளுங்கள்" என்றார். மாமூன் அவர்களை யழைத்து, அவர்களைக் கொல்வதில்லையென அபயமளித்து உண்மைச் செய்தியை விசாரித்தான். அவர்கள் கொஞ்சமும் ஒளியாமல் உண்மையைக் கூறிவிட்டு, "ஹர்தமாவைப்பற்றியும் பலல் தங்களுக்குப் பொய்யான செய்தியையே யறிவித்திருந்தான். அவன் நற்கருத்துடன் தங்களுக்கு உண்மையை யறிவிக்கவே வந்தான். இதனாலேயே பலல் இரகசியமாய்ச் சிறையில் அவனைக் கொன்றுவிட்டான். தாஹிர் பின் ஹுஸைன் என்பானைப்பற்றியும் இவனே கெட்டெண்ண மூட்டிவிட்டு, அவனது ஒப்பற்ற பணிகளுக்குப் பிறகு பக்தாதிலிருந்து ரிக்காவுக் கனுப்பிவிட்டான் அங்கு அவன் ஒரு மூலையில் வெறுமனே யுட்கார்ந்திருக்கி

ருன். அவன் இராக்கிலிருந்தால் எத்தகைய குழப்பமும் ஏற்படாது. தற்போது தாங்களே அப்புறம் செல்வது உசிதம். பனீஅப்பாஸ்கள், பனீஹாஷிம்கள், சேனுதிபதிகள் இவர்கள் தங்களைக்கண்டு நிம்மதியடைந்து, தங்களுக்குக் கீழ்ப்படிவார்கள்" என்ருர்கள். மாமூன் இதைச் செவியுற்று உண்மையையறிந்துகொண்டு, பக்தாதின்புறம் செல்லப் புறப்பட்டான். இத்தலைவர்களுக்கு மாமூன் அபயமளித்திருந்தும் இவர்கள் பலலின் தண்டனையை யனுபவிக்கும்படியே நேர்ந்தது. அவன் இவர்களிற் சிலரைக் கைதுசெய்தான்; சிலரை உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டான். இமாம் அலீரிலா இதை மாமூனுக்கறிவிக்கவே தான் சீக்கிரம் இதற்குத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதாய் வாக்களித்தான்.

அரசசேனை மர்ருதிலிருந்து புறப்பட்டு ஸரக்ஸ் போய்ச் சேர்ந்தது. அங்கு ஹி. 202, ஷஃபான், 2-ந்தேதி பலல் பின் ஸஹல் குளித்துக் கொண்டிருக்கும்போது கலீபாவின் நான்கு வேலைக்காரர்கள் திடீரெனப் பிரவேசித்து, அவனைக் கொன்றுவிட்டார்கள். அவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது கலீபாவே அவனைக் கொல்வதற்குக் கட்டளையிட்டதாய்க் கூறினுர்கள். சந்தர்ப்ப சாக்ஷியங்களைக்கொண்டு இக்கொலை மாமூனின் விருப்பத்தினுலே நிகழ்ந்ததாய்க் கொள்வது பிழையாகாது. அவன் பலலின் சுயநலத்தை நன்கறிந்திருந்தான். அவனிருக்கும்வரை பக்தாத்வாசிகள் தனக்குக் கீழ்ப்படியமாட்டார்களென்பதை யவன் நன்கறிவான். எனினும் அவன் அரபிகளல்லாதாரைத் திருப்தி செய்வதற்காக அந்நால்வரின் சிரங்களையும் துணித்து, மரணச் செய்தியுடன் ஹஸன் பின் ஸஹலிடம் அனுப்பிவைத்து, மந்திரிப் பதவியை யவனுக்களித்தான். பிறகு அவனது புதல்வி போரான் என்பாளை

மணந்துகொண்டான். ஈதுல்பித்ர் (ரமலான் பெருநாள்) தொழுகையை முடித்துக்கொண்டு ஸரக்ஸிலிருந்து புறப்பட்டான். இவன் வருவதையும், பலல் கொல்லப்பட்டதையும் கேள்விப்படவே பக்தாதில் இப்ராஹீமின் கிலாபத் பலங்குன்றி வந்தது. சேனைத்தலைவர்கள் அவனைப் புறக்கணிக்கத் தொடுத்தார்கள். அவர்கள் மாமூனை கிலாபத்திலிருந்து நீக்கிவிட்ட மூலக்காரணம் தற்போது எஞ்சியிருக்கவில்லை யன்றோ? மாமூன் தூஸ் போய்ச் சேர்ந்ததும் அங்கு மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது: இமாம் அலீரிலா திடீரென ஆவிதுறந்துவிட்டார். மாமூனின் சமிக்கையாலேயே இவர் விஷமூட்டப்பட்டதாய்ச் சிலர் குறிக்கின்றனர். இஃது சரியானதாய்க் கொள்வதற்கில்லை. மாமூன் இவரை மிகவும் பிரியமாய் நடாத்தி வந்தான். மருகராகமட்டும் கொள்ளாது, பிரதிநிதியாகவும் கொண்டிருந்தான். இவர் விஷத்தினால் இறந்திருப்பினும் அரசசமூகத்திலிருந்து பனீ அப்பாஸ்களைச் சார்ந்தோரில் யாரேனும் அலீ (ரலி.) அவர்களின் சந்ததியாருக்கு கிலாபத் திரும்பிவிடாதிருக்க வேண்டுமென்னும் ஆவேசத்தால் இதைச்செய்திருக்கலாம்.

மாமூன் தூஸிலிருந்து புறப்பட்டுரை போய்ச்சேர்ந்து, அங்குள்ளோரைச் சந்தோஷிப்பதற்காக 20,00,000-திர்ஹம் வரிவஜா செய்திருப்பதாயறிவித்தான். இவன் பக்தாதை யண்மித்துக்கொண்டு செல்வதற்கேற்ப இப்ராஹீமின் சகாக்கள் விலகிக்கொண்டே சென்றார்கள். அவனது சேனைத்தலைவனொருவன் ஹஸன் பின் ஸஹலின் சேனாதிபதிகளிலொருவனுக்கு "நீங்கள் பக்தாதுக்குவந்தால் நான் அதை யுங்களிடம் ஒப்புவித்துவிடுகிறேன்" என்றெழுதினான். அவன் உடனே அங்கு வந்துசேர்ந்தான். அச்சேனை பக்தாதை யவன்வசம் ஒப்புவித்துவிட்டு, இப்ராஹீமை கிலாபத்திலிருந்து நீக்கிவிட்டதா யறிவித்தது. இச்சம்ப

வம் ஹி. 203, துல்ஹஜ், 17-ந்தேதி நடைபெற்றது. இதைக் கண்ட இப்ராஹீம் அவ்விரவே ஓடிவிட்டான். அவன் கிலாபத்தை நிர்வகித்தது ஒரு வருடம், பதினொரு மாதங்கள், பன்னிரண்டு தினங்களாம். நஹர்வானில் பக்தாதின் தலைவர்களும், அதிபர்களும், பனீஅப்பாஸ்கள் யாவரும் மாமூனை வரவேற்பதற்காக ஒன்று சேர்ந்தார்கள். மாமூன் சந்தோஷமாய் அவர்களைச் சந்தித்தான். தாஹிர் பின் ஹுஸைனும் அவன் கட்டளைப்பிரகாரம் அங்குவந்து சேர்ந்தான். மாமூன் அவனுக்கு ஜஸீராவின் தலைமைத்துவத்தையும், பக்தாதின் கொத்வால் பதவியையுமளித்துவிட்டு, அங்கிருந்து பக்தாதுக்குச் சென்றான். ஹி. 204, ஸபர், 16-ந்தேதி அந்நகரத்திற் பிரவேசித்தான். அவன் அவ்வமயம் அலவிய்யாக்களின் அறிகுறியான பச்சை யாடையை யணிந்திருந்ததால் சேனாதிபதிகளும், பனீஅப்பாஸ்களும் வேறுவழியின்றி அவ்வாடைகளையே யணிந்திருந்தார்கள். ஒருவாரத்திற்குப்பிறகு கிலாபத்தின் பிரமுகர்கள் "தாங்கள் நமது மூதாதைகளின் கருப்பாடையை விட்டுவிட்டு, அலவிய்யாக்களின் பச்சையாடையை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?" எனக்கேட்டார்கள். இதனால் யாவரும் தனக்குக் கீழ்ப்படிந்துவிட்டாலும் தனது ஆடையை விரும்பவில்லை யென்பதைக் கண்டுகொண்ட மாமூன் யாவர் முன்பும் கருப்பாடையைத் தருவித்து, அதைத்தானணிந்ததுடன் தாஹிருக்கும் ஒன்று கொடுத்தான். அப்பொழுது யாவரும் சந்தோஷத்துடன் பச்சையாடையை நீக்கிவிட்டு, அப்பாஸிய்யாக்களின் ஆடையை யணிந்துகொண்டனர். அது தொடுத்தே உண்மையில் மாமூனின் கிலாபத் துவங்கியது.

## மந்திரிப்பதவி

மாமூனின் முதன்மந்திரி பலல் என்பானுயிருந்தான். இவன் தந்தை ஸஹல் நெருப்பைப் பூஜிக்கும் மஜூஸீ யாகவிருந்து, ஹாரூனின் காலத்தில் இஸ்லாமைத் தழுவி ஞன். பலல் சகலகலைகளிலும், சிறப்பாக நக்ஷத்திரக் கலையிலும் பாண்டித்தியமடைந்திருந்தான். ஜஃபர் பர்மகீ யின் வேண்டுகோளின்மீது ஹாரூன் அவனை இளவரசன் மாமூனின் இலிபியாக நியமித்திருந்தான். இவனது ஆலோ சனைப்பிரகாரமே மாமூன் அமீனை வெற்றிகொண்டு, கிலாபத் தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. மாமூன் இவனைப் பிரதம மந்திரியாக நியமித்துச்சேனை, தேசம் இவைகள் சம் பந்தப்பட்ட காரியாதிகளை இவன்வசம் ஒப்புவித்துவிட் டான். இவனது வாளில் ஒருபுறம் 'அரசியல் நிர்வாகம்' எனவும், மற்றொருபுறம் 'சேனை நிர்வாகம்' எனவும் சித் தரித்து இவனுக்கு "இரு அரசியலை யுடையோன் = துர்ரியா ஸதைன்" என்னும் சிறப்புப்பெயரளித்து, வருடமொன் றுக்கு 30,00,000-திர்ஹம் சம்பளம் ஏற்படுத்தினுன். எனினும் அவன் தனது சுயநலத்தினுல் மாமூனை மிகவும் ஆக்கிரமித்துக் கொண்டதினிமித்தம் ஸரக்ஸில் குளிக்கு மிடத்திற் சென்றுக் கொன்றுவிடச்செய்தான். அவன் நக்ஷத்திரக்கணக்கின் உதவியைக்கொண்டு தன்னைப்பற்றி எழுதிவைத்திருந்ததில் தனது மரணம் நெருப்பு, ஜலம் இதற்கிடையே ஏற்படுமென் றெழுதிவைத்திருந்ததாய்க் குறிக்கின்றனர்.

## அஹ்மத் பின் அபீகாலித்

துர்ரியாஸதைனுக்குப் பிறகு பனீஆமிர் வர்க்கத் தின் ஷாம் தேசத்து அடிமையும், இலக்கியத்திலும், எழுத் திலும் நிபுணத்துவம் படைத்தவனுமான அஹ்மத் பின் அபீகாலித் என்பான் மந்திரியானுன். இவன் சற்குணம்,

நேர்மை, புத்திநுட்பம் இவைகள் நிரம்பப் பெற்றவனு யிருந்தான். கலீபாவின் நன்மைகளை விழைந்து நின்றதே போன்று பிரஜைகளின் நலத்தையும் கோரி நின்றான். 'போஜனப்பிரியன்' என்னும் குற்றத்தைமட்டும் இவன் மாட்டு சரித்திரம் காண்பிக்கின்றது. போஜனத்தைப் பற்றிய கவலை இவனுக்கில்லாதிருக்க வேண்டுமெனவும், எவரின் காணிக்கையையும் விழைந்து நிற்கக்கூடாதெனவும் கருதி மாமூன் அவனது சமயலறைக்குமட்டும் தினந் தோறும் ஆயிரம் திர்ஹம் நியமித்திருந்தான். எனினும், பிறகும் அவன் சாப்பாட்டுப் பொருட்களையும், சன்மானங் களையும் எதிர்பார்த்திருந்தான். ஹி. 211-ல் அவன் இறந்துவிட்டான். மாமூனே அவனது ஜனஸாத்தொழு கையிற் கலந்திருந்து, அவனுக்காக நற்பிரார்த்தனையும் செய் தான். நல்லடக்கம் செய்யப்பட்டபிறகு அவனை மிகவும் ஸ்துதிசெய்தான்.

## இப்னுயூஸுப்

அஹ்மத் பின் அபீகாலிதுக்குப் பிறகு அஹ்மத் பின் யூஸுபுக்கு மந்திரிப்பதவி கிடைத்தது. ஆசிரியர் அம்ரு பின் முஸ்இதாவின் காரியாலயத்தில் இவன் இலிபியாக விருந்தான். மிகவும் சுத்தமாய் எழுதுவான். மாமூனுக்கு இவன்மீது மிகவும் நம்பிக்கையிருந்தது. இதனால் அவன் காலத்தில் இவன் முன்னேற்றமடைந்தான். மாமூனின் சமு கத்திலிருந்த முஹம்மத் பின் கலீல் பின் ஹிஷாம் என்பா னுக்கு இவன்மீது பொறாமை ஏற்பட்டது. எங்ஙனமாயினும் இவனை இவன் உத்தியோகத்தை விட்டும் நீக்குவதற்காகக் கங்கணங்கட்டி நின்றான். அவன் ஒரு அற்பமுறையைக் கைக்கொண்டு இவன்மீது மாமூனுக்கிருந்த மதிப்பைக் குறைத்துவிட்டான். அம்முறை வருமாறு:—அஹ்மத் பின் யூஸுப் தினந்தோறும் அதிகாலையில் மாமூனிடம்

ஆலோசனை கேட்பதற்காக அவசியம் வருவது வழக்கம். முஹம்மத் பின் கலீல் மாமூனின் வேலைக்காரர்களில் ஒருவ னிடம் அஹ்மதுக்கு கலீபா எதையேனும் சன்மானமாகக் கொடுத்தால் தன்னிடம் தெரிவிக்கும்படி இரகசியத்தில் சொல்லிவைத்திருந்தான். தனது வழக்கம்போல் அஹ்மத் ஒரு தினம் மாமூனிடம் சென்றான். குளிர்காலமாதலால் கலீபாவின் கட்டிலுக்குக்கீழ் அம்பர் கணைப்புச்சட்டி எரிந்து கொண்டிருந்தது. அஹ்மதை முன்னிட்டு அவன் அதை எடுத்து இவன் முன்னால் வைத்தான். இதை அவ்வேலைக் காரன் முஹம்மதுக்குச் சொன்னான். அவன் மாலை நேரத் தில் கலீபாவின் சமுகத்திற்குச் சென்றான். கலீபா அவ் வமயம் தனியே யிருந்தான். முஹம்மதிடம் அவன் "செய்தி என்ன?" வெனக் கேட்கவே இவன் "நான் தற் போது படகில் ஏறிவந்தேன். அதில் ஒரு படகோட்டி மற்றொருவனிடம் "ஜனங்கள் கலீபாவின் கொடையைத் துதிசெய்கிறார்கள். எனினும் இன்று காலை மந்திரி இப்னு யூஸுப் அரச சமுகத்திலிருந்து திரும்புகாலையில் தனது வேலையாளிடம் "கலீபா அற்பகுணம் படைத்திருக்கிறான். அவன் முன்பு கணைப்பிருந்தது. நான் போய்ச் சேர்ந்த தும் எனக்காக வேறொரு கணைப்பு தருவிப்பதற்குப் பதி லாய் அதை என்னிடம் நகர்த்தினான்" எனக் கூறினார்" என்று சொல்வதை நான் கண்டேன்" என்றான். இதைச் செவியுற்ற மாமூன் அந்நேரத்தில் அவனைத் தவிர்த்து வேறெவரு மிருக்கவில்லையாதலால் இதை நம்பிக்கொண் டான். எனவே இதே காரணத்தால் அவன்மீது கோபங் கொண்டு அவனை நீக்கிவிட்டான்.

## தாபித் பின் யஹ்யா

இவனுக்குப் பிறகு அபூஉப்பாத் தாபித் பின் யஹ்யா பின் யஸார் ராஜீ என்பானுக்கு மந்திரிப்பதவி யளித்தான்.

இவன் எழுத்து, இலக்கியம் இவைகளில் தேர்ச்சிபெற் றிருந்தா னெனினும், கணிதசாஸ்திரத்தை யறியான். கடுமையான குணமுடையவன். கோபத்தில் சிலசமயங் களில் இலிபிகளை வசைமொழி கூறுவான். அவர்களின் முகத்தில் மைக்கூட்டை வீசியெறிவான். இவன்மீது ஜனங்களுக்குப் பக்திகுறைவே யெனினும் பயம் அதிகமா யிருந்தது. ஒருதடவை ஒருவன் மாமூனிடம் "தஃபல் என்னும் கவிஞன் தங்களை நிந்தித்துள்ளான்" எனவும் அவன் "அபூஉப்பாதை நிந்தித்துவிட்டோனுக்கு என்னை நிந்திப்பதற்கு என்னதான் பயமேற்படப் போகின்றது?" எனக் கூறினுன்.

மாமூனின் இறுதிமந்திரி அபூஅப்துல்லாஹ் முஹம்மத் பின் யஜ்தாத் பின் ஸவீத் என்பானும். இவன் குராஸானி லுள்ள மஜூஸீ வர்க்கத்தைச் சேர்தவனுவான். இவனே இஸ்லாமைத் தழுவினுன். மாமூனின் காலத்தில் மந்திரி களுக்கு அதிகமான அதிகாரம் கிடையாது. பர்மகியர்கள், பலல் பின் ஸஹ்ல் இவர்களின் சுயநலத்தைக் கண்ணுற்று, தானே கிலாபத்தின் காரியாதிகளைக் கவனித்து வந்தான். மந்திரிகளிடம் ஆலோசனைமட்டும் கலந்துகொள்வான்.

## அலவிய்யாக்கள்

மாமூன் ஷீஆ வகுப்பைச்சேர்ந்த ஜஃபர் பர்மகியின் போஷணையிலிருந்தான். பிறகு அவனுக்கு கிலாபத்தைத் தேடிக்கொடுத்த இவனது முதன்மந்திரி பலல் பின் ஸஹ லும் அவ்வகுப்பையே சேர்ந்தோனுயிருந்தான். இவர்களின் சகவாசத்தால் அவனும் அக்குழாத்தினரின் கொள்கையைச் சற்றே ஆதரித்துவந்தான். குலபாயெராஷிதீன்களுள் ஹஸ்ரத் அலீ(ரலி.) அவர்களுக்கு கிலாபத் பாத்தியதை யுடையதென்பதையும் ஆதரித்தான். பலல் தான் மந்திரிப் பதவியை நிர்வகிக்கும் காலத்தில் மாமூனை வயப்படுத்தி

எத்தகைய யுத்தமுமின்றியே எளிதில் கிலாபத்தைத் தனது கொள்கைக்கிணங்க அலீ(ரலி.) அவர்களின் வம்சத்திற்குக் கொடுத்துவிடக் கருதினன். இவனது அபிப்பிராயப்படியே மாமூன் தனது புதல்வியை இமாம் அலீரிலாவுக்கு மண முடித்துக்கொடுத்து, அவரைத் தனது பிரதிநிதியாகவும் செய்திருந்தான். இதனல் ஏற்பட்ட சம்பவங்கள் ஏற்கனவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. பக்தாதுக்கு வந்து விட்ட பிறகும் அவன் அலவிய்யாக்களுடன் மிகவும் மிருதுவாகவும், தனது கொள்கைக்கேற்பவுமே யொழுகிவந்தான். அவர்கள் அநேகமான புரட்சிகளைக் கிளப்பிவிட்டுக்கொண்டு அநேக குடும்பங்களைக் கெடுத்திருந்தும் அவன் அவர்களுடன் கருணையாகவே நடந்து கொண்டான். அவன் இவ்வளவு கருணையுடன் நடந்துகொண்டும் அவர்கள் அவனை எதிர்ப்பதற்கே கங்கணங்கட்டி நின்றூர்கள். ஹி. 208-ல் அப்துர் ரஹ்மான் பின் அஹ்மத் பின் அப்துல்லாஹ் பின் முஹம்மத் பின் உமர் பின் அலீ பின் அபீதாலிப் என்பார் யமனில் தன்னுடன் ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு புரட்சிக்கொடியையுயர்த்தினர். மாமூன் தனது சேனுதிபதிகளிலொருவனுன தீனூர் பின் அப்துல்லாஹ் என்பானுக்கொரு சேனையைக்கொடுத்து அந்தப் புறமனுப்பி, அப்துர்ரஹ்மானுக்காக அபயப் பத்திரமொன்றையும் அவன்வசம் கொடுத்தனுப்பினன். தீனூர் அங்குபோய்ச் சேர்ந்து முதன் முதலில் அபயப்பத்திரத்தை அப்துர்ரஹ்மானிட மனுப்பினன். அன்னூர் இவனை எதிர்ப்பதற்குத் தம்மிடம் சக்தியில்லாததுகண்டு அவன் முன்பு பிரசன்னமாயினர். அவன் அன்னூரைத் தன்னுடன் பக்தாதுக் கழைத்துக்கொண்டு வந்தான். இதற்குப்பிறகு மாமூன் அலீ(ரலி.) அவர்களின் சந்ததிகளில் யாரும் தனது சமுகத்திற்கு வரக்கூடாதெனவும், அவர்கள் யாவரும் பச்சையாடைக்குப் பதிலாக அப்

பாஸிய்யாக்களின் அறிகுறியான கருப்பாடையை யணிந்து கொள்ள வேண்டுமெனவும் கட்டளையிட்டான். பிறகும் அவன் ஆவிதுறக்கும்போது தனது சகோதரன் முஃதஸிம் என்பானுக் கெழுதிய வாக்குமூலத்தில் அலீ (ரலி.) அவர்களின் சந்ததியாருடன் நல்லவிதமாயொழுகவேண்டுமெனவும், அவர்களின் குற்றங்களை மன்னித்துவிடவேண்டுமெனவும் எழுதினான்.

## ஜியாதிய்யாக்களின் அரசியல்

யமனில் ராபிலீக்கொள்கைகள் வேரூன்றிவிட்டதால் அப்பாஸீ அரசியலின் வன்மை குறைந்துவந்ததுடன் பிரதிதினமும் பல்வேறு குழப்பங்கள் தலைதூக்கியும் வந்தன. எனவே, அங்கு இக்குழப்பத்தை யொடுக்கவல்ல அதிபனை நியமிக்கவேண்டுமென மாமூன் கருதினான். எனவே, ஹஸன் பின் ஸஹலின் அபிப்பிராயத்திற்கிணங்க ஜியாத் பின் அபீ ஸுப்யானின் சந்ததிகளிலுதித்த முஹம்மத் பின் இப்ராஹீம் என்பானை யங்கனுப்பினான். இவன் அங்குசென்று ஜபீத் என்னும் நகரத்தை நிர்மாணித்து, அதைத் தனது வாசஸ்தலமாகக்கொண்டுத் தனது திறமையால் மாகாணமுழுமையும் கைவசப்படுத்தினான. கலீபாவுக்கு அவன் சன்மானங்களையும், தீர்வையையும் மட்டுமே யனுப்பிவந்தான். பின்னும் குத்பாப்பிரசங்கங்களில் கலீபாவின் பெயரைக் குறிப்பிட்டுவந்தான். எஞ்சிய விஷயங்கள் யாவற்றிற்கும் இவனே சர்வாதிகாரியாகவிருந்தான். அவன் ஹி. 245-ல் மரணமடைந்தான். அவனுக்குப்பிறகு யமனின் அரசியல் அவனது சந்ததிகள் கைவசமும், பிறகு அவனது அடிமைகள் கைவசமும் ஹி. 533 வரை இருந்துவந்தது.

## அக்லபிய்யாக்களின் அரசியல்

ஹாரூனூர்ரஷீத் தனது கிலாபத்திற்கும் முராக்கிஷ் உடைய இத்ரீஸீ அரசியலுக்குமிடையே எல்லைப்புற அர

சியலொன்றை நியமித்து ஹி. 184-ல் இப்ராஹீம் பின் அக்லப் என்பானை அவ்விடத்துத் தலைவனாய் நியமித்தனுப்பினான். தூனிஸ், ஜஸாயிர் இவைகளில் குழப்பங்கள் மிகுந்து காணப்பட்டதே இதற்குக் காரணமாம். இப்ராஹீம் அவைகளை யொடுக்கியபிறகு ஆப்ரிகா மாகாணத்தை 40,000-தீனார் கப்பங்கொடுப்பதாய் வாங்கி, அங்கு தனிப்பட்ட அரசியலை நிறுவிக்கொண்டான். குத்பாக்களில் மட்டும் பனீஅப்பாஸ்களின் நாமங்களை வைத்திருந்தான். இவ்வரசியல் ஹி. 296 வரை அவன் சந்ததிகள் கைவசமே யிருந்தது. மாமூனின் காலமான ஹி. 196 தொடுத்து அப்துல்லாஹ் பின் இப்ராஹீம் அரசுசெலுத்தி வந்தான். அவனுக்குப்பிறகு ஹி. 201 தொடுத்து 223 வரை அவன் சகோதரன் ஜியாதத்துல்லாஹ் பின் இப்ராஹீம் அரசனானான். அவன் ஸக்லிய்யா தீவை ரூமியர்களிடமிருந்து கைப்பற்றினான். உந்துலுஸ், முராக்கிஷ் இவைகள் எடுபட்டுவிட்டபிறகு அலவிய்யாக்களின் பயத்தினால் கிலாபத்தைக் காப்பதற்காக நியமிக்கப்பட்ட யமன், ஆப்ரிகா இவ்விரண்டு அரசாங்கங்களும் தனிப்பட்டவையாய்ப் போய் விட்டன.

## இப்ராஹீம் பின் மஹ்தீ

மாமூன் மர்ருதிலிருந்தபோது பக்தாத் வாசிகள் இப்ராஹீம் பின் மஹ்தீயை கலீபாவாக்கினார்களென்பதையும், அவன் பக்தாத்புறம் திரும்பியபோது சேனைகள் இப்ராஹீமைக் கைவிட்டுவிட்டதால் அவன் பயந்துபோய்ப் பதுங்கி விட்டானென்பதையும் நாம் ஏற்கனவே விவரித்துள்ளோம். அவன் பக்தாதிலேயே ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவிற்கும், ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குமாக ஒளிந்து திரிந்தான். ஹி. 210-ல் இப்னுஆயிஷா, மாலிக் இவர்கள் போன்ற சில சேனாதிபதிகள் இப்ரா

ஹீமை யாதரிப்பதாயும், அவனைப் புரட்சி செய்யும்படித் தூண்டுவதாயும் மாமூன் செவியுற்று, அவர்களைக் கைது செய்தான். பல கொடுமைகளுக்குப் பிறகு அவர்கள் தங்கள் குற்றங்களை யொப்புக்கொண்டு, தம்முடன் சேர்ந்திருப்பதாய் மற்றுஞ் சில தலைவர்களைக் குறிப்பிட்டார்கள். இவர்கள் குற்றமற்றோர் மீது அபாண்டமாகப் பொய்சொல்லவுங் கூடுமென்னும் எண்ணத்தினால் அவர்களது வார்த்தைகளை மாமூன் கவனியாது, அக்குழப்பத்திற்குத் தலைவர்களாயிருந்த நால்வருக்குமட்டுமே தண்டனை விதித்தான். இப்னுஆயிஷாவை மூன்று தினங்கள் வெய்யிலில் நிற்கச் செய்து, பிறகு கசையடி கொடுத்துப் பிறகு தூக்கிலிட்டான். அப்பாஸிய்யாக்களில் முதன்முதல் தூக்கிலிடப்பட்டவன் இவனே. ஹி. 210, ரபீஉல் அவ்வல், 13-ந்தேதி இப்ராஹீம் பின் மஹ்தீ பெண்ணுடைதரித்து, இரு பணிப் பெண்களுடன் ஒருவீதியிற் சென்றுகொண்டிருக்கும்போது ஒரு அபிஸீனிய வாயில்காப்போன் அவனையறிந்து கைது செய்து, மாமூனின் சமுகத்திற்குக் கொண்டுசென்றான். மாமூன் அவன்மீது கடுங்கோபங் கொண்டிருந்தான். அவன் தனது சமுகத்திலிருந்தவர்களை "இவனை யாதுசெய்ய வேண்டும்?" எனக் கேட்டதற்கு யாவரும் "கொன்றுவிடவேண்டும்" என்றபிப்பிராயங் கொடுத்தனர். எனினும் அஹ்மத் பின் அபீகாலித் என்னும் மந்திரிமட்டும் உயிருடன் விட்டுவிடும்படி மன்றாடினான். இப்ராஹீம் தனது குற்றத்தை யொப்புக்கொண்டு அதற்காக மிகவும் வருந்தினதல்லாது ஒரு கவியும் கூறினான். அதனால் மாமூன் உள்ளமுருகிப் போய் அவனை விடுதலை செய்துவிட்டான்.

## ஜத் உடைய புரட்சி

'ஜத்' என்பது 'ஜாட்' என்னும் பதத்தை மருவி வந்த சொல்லாம். இஃது இந்து தேசத்துக் கீழ்ப்பகுதியைச்

சேர்ந்த ஹிந்துக்களில் 'நூர்' என்னும் பெயரால் வழங்கி வந்ததும், இஸ்லாமைத் தழுவியபிறகு பாரஸீகக் குடாக் கடலின் கரையில் குடியேறியதுமானதொரு கோஷ்டியாம். அமீன்—மாமூன் யுத்தகாலத்தில் இக்கோஷ்டி பஸராவின் பாட்டையைக் கைப்பற்றிக்கொண்டு, ஒன்றுசேர்ந்து கொள்ளையடிக்கத் தொடுத்தது. பத்தாதுக்கு வந்தபிறகு ஹி. 205-ல் மாமூன் ஒருசேனையை ஈஸா பின் யஜீத் ஜலூதீ என்பானின் தலைமையின்கீழ் இவர்களை யொடுக்குதற்காக வனுப்பினான். இச்சேனை யங்குசென்றதும் ஜத் பிரிந்து போய்ப் பலவிடங்களுக்கும் ஓடிவிட்டதால் இஃது ஒன்றுஞ் செய்யக்கூடாது போயிற்று. மாமூன் பிறகு தாவூத் பின் மாஸ்ஜூர் என்பானின் தலைமையின்கீழ் ஒரு சேனையை யனுப்பியதில் இதன் கைவசமும் வராதுபோய் பிரயாணிகளையும், கார்வான்களையும் கொள்ளையடித்துக்கொண்டே வந்தது.

மாமூன் இறந்தபிறகு முஃதஸிம் என்பான் அஜீப் பின் அனீஸாவுக்கொரு சேனையைக் கொடுத்தனுப்பியதில் அவன் அங்குசென்று அன்னாரை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டான். ஒரு எதிர்ப்பில் 300-ஜத்கள் கொல்லப் பட்டும், 500-பேர் கைது செய்யப்பட்டும் போனார்கள். அவன் அவர்கள் யாவரின் சிரங்களையுந் துணித்து, முஃதஸீம் உடைய சமூகத்திற் கனுப்பிவிட்டான். இதற்குப் பிறகு பின்னுங் கடுமையாக அவர்களை முற்றுகையிட்டான். அவர்கள் தங்கியிருந்த மலைகளின் கணவாய்களைக் கைப்பற்றிக்கொண்டு, அவர்கள் ஜலமெடுக்க உபயோகித்துவந்த கிணறுகளையும் மூடிவிட்டான். இறுதியாக அவர்களின் தலைவர்களான முஹம்மத் பின் உத்மான், ஸம்லக் இவர்கள் மிகவும் இன்னற்பட்டு ஹி. 219, துல்ஹஜ் மாதத்தில் அபயங்கோரினார்கள். அஃது ஒப்புக்கொள்ளப்பட்டது. அவர்

களின் ஜனத்தொகை 27,000. அஜீப் இவர்களைக் கப்பலி லேற்றி பக்தாதுக்குக் கொணர்ந்தான். அங்கு முஃதஸிம் முன்னால் காண்பிக்கப்பெற்று கானிகைன் புறம் அனுப்பப் பெற்றார்கள். ரூமீ எல்லைப்புறத்தைச்சேர்ந்த ஐனெஜரீயா என்னுமிடத்தில் அவர்கள் குடியேறுவதற்காக நிலமும் கொடுக்கப்பெற்றது. முதவக்கில் உடைய காலத்தில் ஹி. 241-ம் ஆண்டு ரூமியர்கள் அப்பிரதேசத்தைத் தாக்கியபோது இவர்கள் யாவரையும் இவர்கள் குடும்பத்துடன் கைதுசெய்து கொண்டுசென்றார்கள்.

## நஸ்ர் பின் ஷபத்

பனீஅகீல் வர்க்கத்தில் நஸ்ர் பின் ஷபத் என்னும் பிரசித்திபெற்ற தலைவனொருவன் ஹலப் தேசத்திற்கு வடப்புறத்தில் யக்ஸூம் என்னுமிடத்தில் குடியிருந்துவந்தான். கலீபா அமீன் இடம் அவன் அதிகமான நட்புபூண்டிருந்ததால் அவனது நலனைக் கோரிவந்தான். ஹி. 198-ல் அமீன் கொல்லப்பட்டதும் அரபிகள் பலங்குன்றியிருப்பதையும், அரபிகளல்லாதார் கிலாபத்தைக் கைப்பற்றிக்கொண்டதையுங்கண்ட அவன் தன்னுடன் ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு புரட்சிசெய்யக் கிளம்பி, அருகிலிருந்த விடங்களைக் கைப்பற்றிக்கொண்டு, புராத் நதியைக்கடந்து முன்னேறிச் சென்றான். அவனது வன்மையைக்கண்ட அநேக அரபி வர்க்கத்தவர் அவனுடன் சேர்ந்துகொண்டனர். தாஹிர் பின் ஹுஸைன் பக்தாதின் காரியாதிகளை முடித்து விட்டதும் மந்திரியான பலல் பின் ஸஹல் என்பான் அவன் ஸ்தானத்தில் தனது சகோதரன் ஹஸன் என்பானை நியமித்து விட்டு அவனுக்கு நஸ்ரை எதிர்க்கும்படிக் கட்டளைபிறப்பித்தான். தாஹிர் சென்றானெனினும் தோல்வியுற்று ஆப்ரிகாவுக்குச் சென்று, அதைத் தற்காத்துக்கொண்டு மட்டுமிருந்துவிட்டான்; மறுதடவை எதிர்ப்பதற்காகச்

செல்லவில்லை. அவன் தனது முந்திய காரியாதிகளுக்கு நற்பயன் பெறாதுபோயினதும், பெரிய வெற்றிகளுக்குப் பிறகு அதன் விளைவையனுபவியாது மீண்டும் சண்டைக் கனுப்பப்பட்டு வந்ததுமே அநேகமாக இதற்குக் காரணமாயிருக்கலாம். இதனால் அவனுள்ளமுடைந்து போயிருந்தான். தீரத்துடன் சண்டையிட முடியாது போய்விட்டான். தாஹிரைத் தோற்கடித்த பிறகு நஸ்ரின் வன்மையதிகப்பட்டுவிட்டது. அவன் ஜஸீராவில் ஹர்ரானை முற்றுகையிட்டான். அங்கு அலவிய்யாக்களிலிருந்தும் ஒரு கூட்டம் அவனுடன் சேர்ந்துகொண்டு "நாம் ஒருவனுக்கு பைஅத் செய்து அவனை கலீபாவாக்கிக்கொண்டால் நமது தொகையும், பலமும் பெருகும்" என்றதற்கு அவன் "யாருக்கு பைஅத்செய்வது?" எனக் கேட்டான். அவர்கள் "அலவிய்யாக்களில் ஒருவனுக்கு" எனவும் அவன் "ஸுப்ஹானல்லாஹ்! அவர்களில் யார் கரத்தையேனும் இன்று நான் பிடித்துக்கொண்டேனாயின் நாளைக்கே அவன் "நானே உன்னைச் சிருஷ்டித்தேன். நானே யுனக்குப் படியளக்கிறேன்" எனக் கூறிவிடுவானன்றோ?" வென்றான். அவர்கள் "அங்ஙனமாயின் பனீஉமையாக்களில் எவரையேனும் தேர்ந்தெடுங்கள்!" என்றதற்கு "அவர்களைத் தரித்திரம் பிடித்துவிட்டது. நான் பனீஅப்பாஸ்களின் கிலாபத்திற்கு விரோதியல்லேன். எனினும் அரபிகளைப் பார்க்கினும் அரபிகளல்லாதாரை யவர்கள் மதித்துவருவதாலேயே நான் சண்டையிடுகிறேன். நான் இதை வெறுக்கிறேன்" என்றான்.

மாமூன் ஹி. 204-ல் தாஹிரை குராஸானின் அதிகாரியாய் நியமித்துவிட்டு, நஸ்ரை எதிர்ப்பதற்காக ரிக்காவில் தாஹிருக்குப் பிரதிநிதியாகவிருந்த தாஹிரின் புதல்வன் அப்துல்லாஹ்வை யனுப்பினான். தாஹிர் அதே சமயத்தில்,

தனது புதல்வன் அப்துல்லாஹ்வுக் கொருநிரூபம் விடுத்தான். அஃது நாளிதுவரை இலக்கிய நிபுணர்களிடம் ஒப்புக் கொள்ளப்பட் டிருக்கின்றது. அதில் அரசியல் ஒழுங்கு முறைகள், சற்குண வொழுக்கங்கள் இவைகளைப்பற்றி சீரியமுறையில் போதித்திருந்தான். மாமூன் அப்பிரசித்தி பெற்ற நிரூபத்தை மிகவும் போற்றிப் புகழ்ந்து, அதிற் பல பிரதிகளை வரைந்து சகல தலைவர்களுக்கும், அதிபர்களுக் கும் ஒவ்வொரு பிரதியை யனுப்பியதுடன் "தாஹிரின் இந்நிரூபம் தீர்க்காலோசனை, புத்திநுட்பம், அரசுரிமை இவைகளுக்கு ஒப்பற்றதா யுளது. இஃது ஒவ்வொரு அதிபனுக்கும் முக்கியமாய் வேண்டற்பாலதாம்" எனவுங் கூறினன். நஸ்ருக்கு எதிர்ப்பில் அப்துல்லாஹ் ஒப்பற்ற தியாகங்களைப்புரிந்து இறுதியாக அவனை முற்றுகையிட்டும் விட்டான். இதேகாலத்தில் மாமூன் சண்டையை நிறுத்தி விட்டு சமரஸம் செய்துகொள்ளும்படி ஜஃபர் பின் முஹம்மத் ஆமிர் வசம் நஸ்ருக்கு ஒரு நிரூபம் விடுத்தான். அவனும் சமரஸம் செய்துகொள்ள விசைந்தானெனினும் பல கடுமையான நிபந்தனைகளை விதித்தான். தான் மாமூன் இருக்குமிடத்தில் காலெடுத்துவைக்கவும் முடியாதென்பது அந்நிபந்தனைகளி லொன்றும். "அவனை எதிர்ப்பதற்காக எனது மேற்சட்டையை விற்றுவிடும்படி எற்பட்டாலும் அவன் என் முன்பு வரமாட்டானென்னும் நிபந்தனையை மட்டும் ஒப்புக்கொள்ளமாட்டேன்" என மாமூன் கூறிவிட்டான். இதைச் செவியுற்ற நஸ்ர் தனது சகாக்களான அரபிகளை முன்னோக்கி "ஜத்வர்க்கத்தாரில் நானூறு தவளைகளை வெற்றிகொள்ளமுடியாதவனு அரபிகளை வெற்றிகொண்டு விடப் போகின்றான்?" எனக் கூறிவிட்டு அப்துல்லாஹ்வின் சேனையை மீண்டும் எதிர்க்கத் தொடுத்தான். ஐந்தாண்டுகள்

வரை தொடர்படியாக நடைபெற்றுவந்த யுத்தங்களுக்குப் பிறகு இறுதியாக வேறுவழியின்றி சமரஸம் செய்து கொண்டு ஹி. 210, ஸபர் மாதத்தில் கலீபாவின் முன்பு பிரசன்னமானன். மாமூன் அவனை 'மதீனயெ அபீஜஃபர்' என்னும் நகரத்தில் சிறைவைத்துவிட்டான்.

## பாபகே குர்ரமீ

புராதான காலந்தொடுத்து ஈரானில் பல நூதனமான மதங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இஸ்லாமுக்கு முன்பு கபாத் உடைய காலத்தில் முஜ்தக் என்பான் தனது 'இபாஹிய்யா' வென்னும் மதத்தை நிறுவினன். அதன் பிரகாரம் எவ்விஷயமாயினும் ஒவ்வொருவனுக்கும் சமபாத்தியதை யுடையதெனக்கொள்ளப்படும். ஸ்திரீகள்மீதும் எவனுக்கும் எத்தகைய சொந்த உரிமையுங் கிடையாது. அதைப் பின் ருெடர்ந்தோரை நௌஷேரவான் தனது காலத்தில் அழித்துவிட்டான். ஏறக்குறைய இதே கொள்கைகளை யுடைய மற்ருெரு மதத்தை ஸஹ்ரக் உடைய புதல்வனன ஜாவீதான் என்னும் பெயருடைய மஜூஸீ யொருவன் ஹாரூனின் காலத்தில் நிறுவினன். இவன் ஆதர்பீஜான், அரான் இவ்விரண்டிற்குமிடையேயுள்ள பத் என்னும் நகரத்தின் தலைவனயிருந்தான். அந்தப் பகுயிதிலுள்ள அநேகர் அவனைப் பின்ருெடர்ந்தனர். அவர்கள் ஒரு பெருங் கூட்டமாகச் சேர்ந்துவிட்டார்கள். பாபகேகுர்ரமீ என்பான் ருஸ்தாகெமைமந்துக்குச் சமீபமாகவுள்ள பிலால் ஆபாத் என்னுமூரில் ஜனித்தவன். ஜாவீதானின் பிரபல்யத்தைச் செவியுற்ற இவன் அவனிடஞ் சென்று, அவனது சீஷனக விருக்கவிசைந்தான். இவன் புத்திநுட்பமிகுந்திருப்பதைக் கண்ட அவன் இவன்மீது மிகவும் நட்புகொண்டான். அவன் இறந்துபோயினதும் அவன் மனைவி அவனது சீஷர்கள் யாவரையும் ஒருங்கு திரட்டி "நேற்றிரவு ஜாவீதான்

தன் உயிர் தன் திரேகத்திலிருந்து வெளிப்பட்டு பாபக் உடைய திரேகத்திற்குட் சென்றுவிடுமெனக் கூறியுள்ளான். எனவே, நீங்கள் இவரையே தலைவராகக் கொள்ளுங்கள்'' என்றனள். இதன் பிரகாரம் அக்குழாத்தினர் பாபக்கைத் தமது தலைவனாய்க் கொண்டனர். ஜாவீதானின் மனைவியும் இவனை மணந்துகொண்டாள். இவன் தனது குழாத்தினருக்கு கொள்ளையடித்தல் முதலிய ஒவ்வொரு காரியத்தையும் அனுமதிக்கவே அன்னார் கொள்ளையிடத் தொடுத்துவிட்டனர். இன்னாருக்குப் பயந்து ஜனங்கள் பொதுப் பாட்டைகளிற் செல்வதில்லை.

ஹி. 201-ல் மாமூனுக்கு மர்ருதில் இக்குழாத்தவரைப் பற்றிய அறிக்கை கிடைத்தது. அவன் யஹ்யா பின் முஆத் என்பானை இவ்விஷயத்திற்காக நியமித்தும் இவனால் ஒன்றுமே செய்யக்கூடவில்லை. பிறகு மாமூன் பக்தாதுக்கு வந்துவிட்டபிறகு ஹி. 206-ல் ஈஸா பின் முஹம்மத் பின் அபீகாலித் என்பானை ஆர்மீனிய்யா, ஆதர்பீஜான் இவைகளின் தலைவனாய் நியமித்து அக்குழாத்தவரை யொடுக்குதற்காக வனுப்பினான். இவனும் தோல்வியடைந்து போயினன். ஹி. 209-ல் அஹ்மத் பின் ஜுனைத் அஸ்காபீ சேனைகளைக் கொண்டுசெல்லவும் பாபக் அவனைக் கைதுசெய்துவிட்டான். இதற்குப் பிறகு முஹம்மத் பின் ஹமீத் தூஸீ என்பானின் தலைமையின்கீழ் ஒருசேனையை மாமூன் அனுப்பினான். பாபக் மலைப்பிரதேசத்தி லிருந்ததாலும், தனது இருப்பிடத்தை மிகவும் ஸ்திரமானதாகச் செய்துகொண்டிருந்ததாலும் முஹம்மத் பின் ஹமீதாலும் ஒன்றுமே செய்யக்கூடாது போயிற்று; ஹஷ்தாத்ஸர் என்னுமிடத்தில் தோல்வியடைந்து கொல்லப்பட்டு விட்டான். இவ்வெற்றியால் பாபக் மிகவும் பலம்பெற்று விட்டான். ஹமதான், இஸ்பஹான், மாஸுப்தான்,

மிஹ்ர்ஜான் முதலிய பிரதேசங்களின் மக்கள் அவனது மதத்தைத்தழுவி அக்கூட்டத்தைச் சேர்ந்துபோயினர். மாமூன் பிறகு எத்தளகர்த்தனையும் அனுப்பவில்லை யெனினும், ஆவிபிரியும் நேரத்தில் அக்குழாத்தவரைப் பற்றி பராமுகமாயிருக்கக் கூடாதெனவும், சகலவித முயற்சிகளுடனும் அவர்களை யொடுக்க வேண்டுமெனவும், இன்றேல் இத்தீப்பொறி ஈரான் முழுமைக்குமே பரவிவிடுமென வும் முஃதஸிமிடம் கூறிச்சென்றான். இதற்கேற்ப முஃதஸிம் கலீபாயினதும் தனது பெரிய துர்க்கிய சேனாதிபதியான அப்ஷீன் என்பானைத் தேர்ந்தெடுத்து, பாபக்கை எதிர்ப்பதற்காக வனுப்பினான். அவன் புறப்படுவதற்கு முன்பு அபூஸஈத் முஹம்மத் பின் யூஸுப் என்பானை பாபக்கினால் பாழாக்கப்பெற்ற கோட்டைகளை யொழுங்கு படுத்துதற்காக வனுப்பினான். இவன் அங்கு சென்று ஜஞ்சான் தொடுத்து உர்த்பேல் வரைக்குமுள்ள சகல கோட்டைகளையும் ஒழுங்குசெய்து, அவைகளில் சகல சௌகரியங்களையும் ஏற்படுத்தினான். இதற்கிடையே பாபகெகுர்ரமீயின் குழாத்தினர் இவனைப் பலதடவை எதிர்த்தார்கள். எனினும் இவன் அவர்களை வெற்றிகொண்டே வந்தான். இதற்குப்பிறகு தபால் இலாகாவை நிறுவினான். ஒவ்வொரு தங்குமிடத்திலும் ஒவ்வொரு சாவடி கட்டப்பெற்றது. அதில் ஒரு குதிரைவீரன் தயாராய் நின்றிருப்பான். கடிதப்பைகள் கிடைக்கப்பெற்றதும் உடனே அவன் தனக்கடுத்த சாவடிக்கு அவைகளைக் கொண்டுசெல்வான். இவ்விதமான ஏற்பாட்டினால் உர்த்பேலிலிருந்து கிலாபத்தின் தலைநகரத்திற்கு நான்கு தினங்களுக்குள்ளாகவே கடிதங்கள் கிடைத்துவந்தன.

அப்ஷீன் சேனையைக் கொண்டுசென்று பர்ஜந்தில் தங்கினான். அங்கிருந்து உர்த்பேல் வரைக்குமுள்ள

கோட்டைகளில் சேனைகளை வைத்துவிட்டு ஒவ்வொரு புறத்திலும் தனது ஒற்றர்களை யனுப்பிவைத்தான். அப்ஷீன் பாபக் இவ்விருவருக்குமிடையே ஒருகாலம்வரை யுத்தம் நடைபெற்று வந்து, குளிர்காலத்தில் பனியின் கொடுமையால் முற்றுப்பெற்றிருந்தது. ஒருதடவை கிலாபத்தின் தலைநகரத்திலிருந்து சேனைக்காகப் பணம் வந்தது. இதையறிந்த பாபக் வழிமறித்துக் கொள்ளையிடுவதற்காக ஒரு கூட்டத்துடன் புறப்பட்டான். அப்ஷீனுக்கு ஒற்றர்கள் இதையறிவிக்கவும் இவன் சென்று அவர்கள் வரும்வழியை மறித்துட்கார்ந்து கொண்டான். பாபக்கின் குழாத்தினர் வரவும் அவர்கள்மீது பாய்ந்தான். பாபக் மட்டும் தனது சகாக்களிற் சிலருடன் ஓடிவிட்டான். ஏனைய யாவரும் கொல்லப்பட்டனர். ஹி. 221, ரபீஃ மாதத்தில் அப்ஷீன் பாபக்கின் இருப்பிடத்தைத் தாக்கவே இருதறத்தாருக்கும் யுத்தம் மூண்டதில் துர்க்கிய சேனைகள் வெற்றிகொண்டு பத் நகரத்திற் பிரவேசித்துவிட்டது. பாபக் ரூம் தேச எல்லைப்புறத்துக்கு ஓடிவிடக் கருதினன். அப்ஷீன் ஒவ்வொரு புறத்திற்கும் சேனைகளையனுப்பி வழிமறித்துவிட்டான். எனவே அவன் தப்பமுடியாது சிறைசெய்யப்பட்டான். அவனுடன் அவனில்லத்து 17-ஆண்களும், 21 பெண்களும் கைதுசெய்யப்பட்டார்கள். கிலாபத்தின் தலைநகரத்திற்கு இவர்கள் கொண்டுசெல்லப்பட்ட தினம் நகரத்தில் ஒரே அமளியாயிருந்தது. பாபக் ஸாமிராவிலும், அவன் சோதரன் பக்தாதிலும் தூக்கிலிடப்பட்டார்கள். இருபது வருடங்களுள் பாபக்கினுல் கொல்லப்பட்டவர்கள் 2,55,500-பேர்களாவார்கள். அப்ஷீன் அவனைக் கைது செய்தபோதும் அவனிடம் 7,600-கைதிகள் இருந்தார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

## சேனை

அப்பாஸிய்யா கிலாபத்தின் அஸ்திவாரம் குராஸான் வாசிகளின் கரங்களால் நாட்டப்பெற்றதாதலின் அவர்கள் காலத்தில் குராஸான்வாசிகள் தேச, சைனிய உத்தியோகங் களை யடையப்பெற்றிருந்தார்கள். அரபிகளைப் பார்க்கினும் அவர்களின் மகிமை குறைவுபட்டிருக்கவில்லை. பிறகு மாமூனின் கிலாபத்தும் குராஸான்வாசிகளாலேயே ஏற்பட்டதாதலின் இவனது காலத்திலும் அவர்கள் பலம்பெற்றே யிருந்தார்கள். அரபிகள் பலங்குன்றிப் போனார்கள். அரபிகளல்லாதாரே சகல பதவிகளையும் அடைய வளைந்து கொண்டனர். சேனையிலும் இவர்களே நிரம்பிப் போனார்கள். இக்காரணத்தாலேயே மாமூனின் காலத்தில் எந்த அரபிச் சேனாதிபதியும் கியாதியடையக் கூடாதுபோயிற்று. மேலும் துர்க்கியர்களும், குராஸான்வாசிகளுமே பிரசித்தி யடைந்தார்கள். ஷாம் தேசத்திய தலைவனொருவன் ஒரு தடவை மாமூனிடம் "ஷாம் இஸ்லாமிய அரசியலின் தலைநகரமா யிருக்கின்றது. அவ்விடத்து மக்கள்மீதும் தங்களுக்கு குராஸான்வாசிகள் மீதிருக்கும் பார்வையே யிருக்க வேண்டும்" எனக் கூறிக்கொண்டிருந்தான். ஒருதடவை மாமூன் இதற்கு மறுமொழியாக "எனது கஜானாவில் ஒரு திர்ஹமும் இல்லாதுபோயினகாலத்தே ஷாம்வாசிகளைச் சேனையிலிருந்து நான் நீக்கினேன். யமன்வாசிகள் எப்பொழுதும் என்னைவிரும்பியது கிடையாது. நான் அவர்களை விரும்பவுமில்லை. எஞ்சியிருக்கும் குலாஆக்கள் ஸுப்யானீ வெளிக்கிளம்பும் காலத்தை எதிர்நோக்கி, அவனை யாதரிக்கத் தயாரா யிருக்கின்றனர். பனீஅப்பாஸ்களை யன்னார் ஆதரிப்பது கிடையாது. ரபீஆ வர்க்கத்தவர் அல்லாஹு தஆலா தனது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முலர் வர்க்கத்தில் நியமித்தது பற்றி

அவன் மீதே கோபமாயிருக்கின்றனர். அவர்கள் யாங்ஙனம் எம்மை யாதரிக்கப் போகின்றார்கள் ?'' என்றான். இஸ்லாமிய உலகம் வீழ்த்திவிட முயற்சித்துக் கொண்டிருந்த அரபிய வம்சப்பெருமையை பனீஅப்பாஸ்கள் எங்ஙனம் கருதிவந்தார்க ளென்பதும், அரபிகளைப்பற்றி அவர்களின் நடத்தை எங்ஙனமிருந்ததென்பதும் இப்பதிலினால் தெற்றென விளங்கும். இக்காரணத்தாலேயே அந்த கலீபாக்கள் அரபிகளைவிட்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டு, அரபிகளல்லாத சேனைகள்மீது நம்பிக்கை கொண்டார்கள். இதனால் அவர்களின் கிலாபத் அரபிபாஷையைக் கொண்டுள்ள (பெயரளவில்மட்டும்) அரபிகிலாபத்தா யிருந்ததென்பதும், இன்றேல் அரபிவன்மையும், அரபி வம்சப் பெருமையும் இல்லையென்பதும் கண்கூடு.

## தாஹிர் பின் ஹுஸைன்

மாமூனின் சேனாதிபதிகள் யாவரினும் தனிச்சிறப்புப்பெற்றவன் தாஹிர் பின் ஹுஸைன் பின் முஸ்அப் பின் ஜுரைக் பின் ஹாமான் என்பானாவான். ஜுரைக் என்பான் "தல்ஹத்துத்தல்ஹாத்" என்னும் சிறப்புப்பெயர் பெற்ற ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களின் அடிமையாவான். முஸ்லிம் பின் ஜியாத் பின் ரபீஆ தனது அதிகாரத்தின் காலத்தில் இவனை ஸீஸ்தானின் அதிபனாக நியமித்திருந்தான். இவனது புதல்வன் முஸ்அப் என்பான் பனீஅப்பாஸ்களின் பிரசாரகர்களுடைய தலைவனான ஸுலைமான் பின் கதீரின் இலிபியாகவிருந்தான். இறுதியாக ஹராத் உடைய தலைவனானான். பிறகு மர்வுக்குச் சமீபமாகவுள்ள போஷஞ்ச் என்னுமிடத்தில் குடியேறினான். அங்கேயே ஹி. 159-ல் அவனது பௌத்திரன் தாஹிர் ஜனித்தான். இவன் கல்வி கேள்வியில் பாண்டித்தியமடைந்து, வீரனாகவும் விளங்கினான். மாமூன் மர்வுதிலி

ருக்கும்போது அவனது சமூகத்திற் போய்ச்சேர்ந்தான். அமீனை எதிர்ப்பதற்காக மாமூன் இவனையே நிய மித்தான். அச்சண்டைகளில் தொடர்படியாக இவன் கொண்ட வெற்றிகளால் இவன் பெயர் பிரபலமானது. இறுதியாக இவன் பக்தாதை முற்றுகையிட்டு, அமீனைக் கொன்றுவிட்டு மாமூனுக்காக பைஅத் வாங்கினான். இதற் குப்பிறகு பலல் பின் ஸஹல் என்னும் பெயருடைய மந்திரி ரிக்காவுக்கு நஸ்ர் பின் ஷபதை எதிர்ப்பதற்காக இவனையனுப் பினான். என்றாலும் இவனுள்ளத்தில் மனத்தாங்கல் ஏற் பட்டுவிட்டதால் ஒன்றுமே செய்யக்கூடாது போயினன். மாமூன் பக்தாத் போய்ச்சேர்ந்ததும் தாஹிர் பிரசன்னமா னான். இவனது பழைய நன்றிகளுக்குப் பிரதியாக மாமூன் இவனுக்கு பக்தாதின் கொத்வால் பதவியையும், அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களுடையவும், ஜஸீராவுடையவும் தலைமைத்துவத்தையு மளித்தான். இதற்கிடையே அப்துர் ரஹ்மான் முதௌவிஈ நைஸாபூரில் காரீஜீக்களுடன் சண்டை யிடுவதற்காக ஒரு கூட்டத்தைத் திரட்டியிருப்பதாய்ச் செய்திகிடைத்தது. 'அக்கூட்டத்தின் நோக்கம் வேறு எது வாயுமிருக்குமோ?' வென்னும் ஐயங்கொண்ட மாமூன் தாஹிரை குராஸானின் தலைவனாய் நியமித்து, எத்தகைய குழப்பமுமேற்பட்டக்கால் அதைத் தடுப்பதற்காக வனுப் பினான்.

இவன் அங்குசென்று மிகத்திறமையுடன் காரியாதி களைச் சாதித்ததில் பலவிதகுழப்பங்களும் ஒழிந்துபட்டன. மாமூன் எப்பொழுதும் இவனது ஆழ்ந்தயோசனை, தீரம், நல்லெண்ணம் இவைகளைப் புகழ்ந்துகொண்டிருப்பான். கலீபா அமீனைக்கொன்ற குற்றத்தை இவன் செய்யாதிருப் பின் அநேகமாக அவனையே பிரதமமந்திரியாக நியமித்திருப் பான். ஆப்ரிகாவில் இப்ராஹீம் பின் அக்லப், யமனில்

முஹம்மத் பின் இப்ராஹீம் இவர்களைப்போன்று தாஹிரும் குராஸானின் தனிப்பட்ட தலைவனாய்விட்டான். வருடந் தோறும் கிஸ்தியைமட்டும் கிலாபத்தின் தலைநகரத்திற் கனுப்பிவந்தான். எஞ்சியிருந்த விஷயங்களில் தானே சர்வாதிகாரியாகவிருந்தான். ஹி. 207-ல் மர்ருதில் இறந்து போனான். ஹி. 259-வரை குராஸானின் அரசியல் இவன் சந்ததிகளின் கைவசமே யிருந்துவந்தது. அதற்குப்பிறகு யஃகூப் பின் லைத் ஸிபார் என்பான் அதைக் கைப்பற்றவே அவ்வர்க்கத்தின் அரசாங்கமாக மாறிவிட்டது. தனிப்பட்ட அரசியலை ஏற்றுக்கொண்டபிறகும் தாஹிரின் வர்க்கம் கிலா பத்தின் தலைநகரத்துடன் எப்பொழுதும் சம்பந்தபட்டிருந் தது. இதற்குக் காரணம் பக்தாதின் கொத்வால் பதவியும் வம்சபரம்பரையாய் அவ்வர்க்கத்திலேயே யிருந்துவந்ததே யாம்.

## அப்துல்லாஹ் பின் தாஹிர்

தாஹிரின் புதல்வனான அப்துல்லாஹ்வும் மாமூனின் காலத்தில் பிரசித்திபெற்ற சேனாதிபதியாவான். அவன் ஹி. 182-ல் ஜனித்தான். தாஹிரின் வெற்றிகளுக்குப் பிறகு ஹி. 199-ல் மாமூன் அவனைத் தன்னிடமழைத்துக் கொண்டு தானே போஷித்தும் வந்து, ஹி. 204-ல் நஸ்ர்பின் ஷபதை எதிர்ப்பதற்காக நியமித்தான். ஐந்துவருடயுத்தத் திற்குப்பிறகு வெற்றியுடன் அக்காரியத்தை முடித்துவிட வும் மிஸ்ரின்புறம் அனுப்பினான். அவ்விடத்துத்தலைவனான உபைதுல்லாஹ் பின் ஸரா சதிசெய்துவிட்டான். அப்துல் லாஹ் அங்குசென்று அவனை முற்றுகையிட்டான். வேறு வழியின்றி அவன் அபயங்கோரினான். இக்குழப்பத்தை யொடுக்கிவிட்டு அவன் இஸ்கந்தரிய்யாவின்புறம் சென்றான். உந்துலுஸின் சேனைகள் அங்குசென்று குழப்பம் புரிந்து வந்ததை நீக்கி அங்கு அமைதிநிலவச் செய்தான். மிஸ்ரின்

பிரசித்திபெற்ற முஹத்தித் (நாயகத்திருமொழியின் வியாக்கியானகர்த்தா) யூனுஸ் பின் அப்துல் அஃலா என்பார் "ஒவ்வொரு புறத்திலிருந்தும் எதிர்ப்பாளர்கள் மிஸ்ரில் தலை கிளப்பிக்கொண்டேயிருந்தார்கள். ஒவ்வொரு நேரத்திலும், ஒவ்வோரிடத்திலும் குழப்பங்கள் கிளம்பிக்கொண்டேயிருந்தன. ஒரு பக்கம் உந்துலுஸின் சேனைகள் கஷ்டங்களை விளைவித்துக்கொண்டிருந்ததால் மிஸ்ர்வாசிகள் கஷ்டத்திலகப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இக்காலத்தில் கீழ்ப்பகுதியிலிருந்து ஒரு வாலிபன் (அப்துல்லாஹ் பின் தாஹிர்) வந்தான். அவன் சின்னாட்களுள் தேசமுழுமைக்கும் அமைதியளித்து, யாவரையும் வெற்றிகொண்டான்" என வரைந்துள்ளனர். ஹி. 212-ல் அவன் மிஸ்ரிலிருந்து திரும்பி வந்ததும் ஜிபால், ஆர்மீனிய்யா, ஆதர்பீஜான் இவைகளின் தலைமைத்துவத்தை யவனுக்களித்து பாபக்கை எதிர்ப்பதற்காக மாமூன் அனுப்பினான். இதற்கிடையே குராஸானின் அதிபதியான தல்ஹா பின் தாஹிர் இறந்துவிட்டதாய்ச் செய்தி கிடைக்கவும் அவனை குராஸானுக்குச் செல்லும்படி யாக்ஞாபித்தான். அங்கு அவன் 18-வருடங்கள் அதிபனாகவிருந்து ஹி. 230-ல் வாதிக்பில்லாஹ்வுடைய காலத்தில் காலகதியடைந்தான்.

**கல்வி**

இஸ்லாமின் துவக்கநாட்களில் யுத்தங்கள் காரணமாக முஸ்லிம்கள் கல்வியின்புறம் கவனஞ்செலுத்துதற்கு அவகாசங்கிடைக்காது போயினர். கிலாபத்தெராஷிதாவில் குர்ஆன், பெருமானாரின் அமுதமொழி இவைகளைக் கற்பதே முஸ்லிம்களின் கல்வியாகவிருந்தது. பனீஉமையாக்களின் காலத்தில் புத்தகங்கள் இயற்றப்பெற்றன. திருக்குர்ஆனின் வியாக்கியானம், நாயகத்திருமொழி இவைகளிலும் பலகிரந்தங்கள் இயற்றப்பெற்றன. யாவருக்கு முன்பு மார்க்

கக்கலையல்லாத இதரகல்வியின்பால் கவனத்தைச் செலுத்தியோன் காலித் பின் யஜீதெஅவ்வல் ஆவான். அவன் கீமியா (Alchemy = ரஸவாதம்) மீது அதிக ஆவல் கொண்டு மிஸ்ரிலில் குடியிருந்த சில யூனானியர்களை ஷாமுக் கழைத்து, அவர்கள் மூலமாக யூனானீ, கிப்தீ இப்பாஷைகளிலுள்ள ரஸவாத கிரந்தங்களை அரபியில் மொழிபெயர்த்தான். பிறகு தானும் சில கிரந்தங்களியற்றினன். பனீஉமையாக்களின் காலத்திலேயே கிப்தீ, ஸுர்யானீ, பாரஸீகம் முதலிய பாஷைகளிலிருந்து அரசாங்கப்பதிவுகள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டன. அக்காலந்தொடுத்து அரபிகளல்லாதாரும் அரபிகற்கத் தொடுத்தனர். குறிப்பாக ஈரானியர்களில் ஒரு பெருங்கூட்டம் அரபி கற்றுக்கொண்டது. அப்பாஸீ கிலாபத்தில் அரபிகளல்லாதாருடன் சம்பந்தங்கள் அதிகப்படவும் அவர்களின் கலைகளை அரபியில் மொழிபெயர்க்கவேண்டுமென்னும் ஆவல் கலீபாக்களுக்கேற்பட்டது. முதன்முதலாக கலீபா அபூஜஃபர் மன்ஸூர் புராதன நூற்களை மொழிபெயர்ப்பதன் புறம் கவனஞ்செலுத்தினன். எனவே, ஜந்தீஸாபூரின் வைத்தியசாலையில் வைத்தியனகவிருந்த ஜோர்ஜஸ் பின் ஜிப்ராயீல் என்பான் வைத்தியக் கிரந்தங்களை மொழிபெயர்த்தான். ஹி. 148-ல் மன்ஸூர் அவனைத் தனது சமுகத்திற்கழைத்து, அவனுக்கு நன்றிசெலுத்தி, அவனது உத்தியோகப்பதவியை யுயர்த்தினன். அவன் பக்ராத், ஜாலீனூஸ் இவர்களின் பலகிரந்தங்களை மொழிபெயர்த்தான். ஜோர்ஜஸைத்தவிர்த்து ஏனையோரும் இக்காரியத்திலீடுபட்டனர். இப்னுல் முகப்பஃ 'கலீலாதம்னு'வை பாரஸீகத்திலிருந்து அரபியில் மொழிபெயர்த்தார். சமஸ்கிருத கிரந்தமான ஸனதெஹிந்த், பித்லீமூஸ் உடைய கிரந்த

மான முஹ்பிதீ, உக்லீதஸ் உடைய க்ஷேத்திரக்கணித உரைகள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டன.

ஹாரூனுர்ரஷீதின் காலத்தில் இவ்வாவல் பின்னும் அதிகமாயது. அவன் "பைத்துல் ஹிக்மத் = அறிவுமன்றம்" என்னும் பெயருடன் ஒரு கலாபீடத்தை நிறுவினான். அதில் நூற்கள் மொழிபெயர்க்கப்பட்டுவந்தன. அதில் அவன் பலசமுகங்களுடையவும், பல மதங்களுடையவும் அறிஞர்களை இதற்கெனவே நியமித்தான். ரூம்யுத்தத்தில் அவன் அங்கோரா, அமூரியா முதலியவைகளை வெற்றி கொண்டதும் அங்கிருந்து அநேககலைகளிலுள்ள யூனனிகிரந் தங்களைக் கொணர்ந்து, அவைகளை மொழிபெயர்க்கச் செய் தான். பர்மகியர்களும் தமது கொடையால் மொழிபெயர்ப் பாளர்களை யாதரித்துவந்து அநேக அறிஞர்களை இவ்வேலையில் நியமித்தார்கள். அப்பாஸிய்யா கலீபாக்களுள் மாமூன் யாவரினும் கல்விமேலீட்டவனுயிருந்தான். அவன் யஜீதீ, கலீல் பஸரீ, கிஸாயீ (ரஹ்....) போன்ற நிபுணர்களிடம் இலக்கண இலக்கியத்தைக் கற்றுக்கொண்டான். இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களிடம் ஹதீத் (நாயகத்திருமொழி) கற்றுக் கொண்டான். அவன் பல்ஸபா (Philosophy = தத்துவ சாஸ்திரம்) கற்றுக்கொள்ள அதிகப்பிரியங் கொண்டதால் ரூம்தேசத்தரசனுக்கு புராதனக் கிரந்தங்கள் எவ்வளவிருந் தாலும் அனுப்பிவைக்கும்படி எழுதினுன். அவன் துவக்கத்தில் மறுத்துவிட்டானெனினும் அக்கிரந்தங்கள் வழி கெட்டுப்போவதற்கு காரணங்களாயிருக்கின்றனவென்றும், முஸ்லிம்களிடம் அனுப்பி அவர்களை வழிகெட்டுவிடுதல் நன்றென்றும், தமது வர்க்கம் அங்ஙனம் ஆகக்கூடாதென்றும் மதத்தலைவர்கள் அவனிடம் எடுத்துக்கூறவே பிறகு இசைந்தான். ஹஜ்ஜாஜ் பின் மதர், யஹ்யா பின் பித்ரீக், யூஹன்ன பின் மாஸவியா, பைத்துல் ஹிக்மத்

உடைய முக்கியஸ்தர் ஸல்மா போன்றவர்களை மாமூன் அனுப்பவே அவர்கள் அங்குசென்று அக்கிரந்தங்களை எடுத்துவந்தார்கள். பிறகு அவைகளை மொழிபெயர்ப்பதற் காக மொழிபெயர்ப்பாளர்களும் நியமிக்கப்பட்டார்கள். அக் காலத்தில் இத்தகைய ஆவல்கள் அபரிமிதமாக ஏற்பட்டி ருந்ததன் காரணமாக கலீபாக்களைத் தவிர்த்து ஏனையதலை வர்களும் மொழிபெயர்ப்பாலயங்களை நிறுவியிருந்தார்கள்.

'பனீஷாகிர்' என வழங்கிவந்த முஹம்மத், அஹ்மத், ஹஸன் இம்மூவரும் தத்துவம், மருத்துவம், க்ஷேத்திரக் கணிதம், கணக்கு, சங்கீதம் போன்ற கிரந்தங்களைத் தரு வித்து அவைகளை மொழிபெயர்த்தார்கள். அளவிறந்த திரவியங்கள் இதற்காகச் செலவிடப்பெற்றன. ஹுனைன் பின் இஸ்ஹாக், தாபித் பின் கிரா, ஹுபைஷ் பின் ஹஸன் போன்ற நிபுணர்கள் மொழிபெயர்ப்பதற்காக நியமிக்கப் பெற்றார்கள். இவர்களின் சம்பளத்திற்காக மாதாமாதம் 500-தீனார்கள் செலவிடப் பெற்றன. மாமூனின் வைத்திய னான ஜிப்ரீல் பின் பக்தீஷுஃ என்பானும் அநேக கிரந் தங்களை மொழிபெயர்த்தான். பஃலபக்கைச்சேர்ந்த கிறிஸ் துவனான குஸ்தா பின் லூகா வென்பான் பல பாஷைகளை யறிந்திருந்தான். அவனுக்கு மருத்துவம், தத்துவம், கணிதம், சங்கீதம் இவைகளில் ஆர்வமதிகம். அவனும் யூனானி பாஷையிலிருந்து பலநூற்களை அரபியில் மொழி பெயர்த்தான். மாமூன் காலத்து மொழிபெயர்ப்பாளர்கள் யாவரினும் யஃகூப் பின் இஸ்ஹாக் கிந்தீ என்பான் பிர சித்திபெற்றவனாவான். இவனது வம்சாவழி கஹ்தானீ வம்சத்துப் பிரசித்திபெற்ற தலைவனான அஷ்அத் பின் கைஸ் வரை போய்ச் சேருகின்றது. இவன் வைத்தியம், தத்துவம், தர்க்கசாஸ்திரம், க்ஷேத்திரக்கணிதம், நக்ஷத்திரக் கணிதம் போன்றவைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தான்.

இஸ்லாமில் 'தத்துவசாஸ்திரி', 'அறிஞன்' என்னும் சிறப்புப் பெயர் கிடைக்கப்பெற்ற முதல்வன் இவனே. இவன் அரஸ்து(Aristotle)வின் தத்துவசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம் இவைகளை அரபியில் மொழிபெயர்த்ததுடன், அவைகளிலிருந்த கஷ்டங்களையும் நீக்கினான். ஹுனைன் பின் இஸ்ஹாக் வைத்தியக்கலையில் பாண்டித்திய மடைந்திருந்தான். இவன் யூனானி, பாரஸீகம், ஸுர்யானி, அரபி இவைகளை நன்கறிவான். அத்தேசங்களில் இவன் சுற்றுப் பிரயாணமும் செய்திருக்கிறான். ஹி. 760-ல் இறந்து போனான். இவன் மொழிபெயர்ப்புகள் மிகவும் நல்லவைகளாயிருக்கின்றன. உமர் பின் பர்கான் பஹ்ரீ, தாபித் பின் கிரா ஹுர்ரானீ இவர்களும் நல்ல மொழிபெயர்ப்பாளர்களாயிருந்தார்கள். இவர்களைத் தவிர்த்து கணிதம், எண், சங்கீதம், சுரம் போன்றவைகளின் கிரந்தங்களை மொழிபெயர்த்த பல மொழிபெயர்ப்பாளர்கள் இருந்தார்கள். இவர்களால் இஸ்லாமிய கிரந்தங்களைத் தவிர்த்து யூனானீ, ரூமீ, கிப்தீ, பாரஸீகம், இந்தியா இத்தேசமக்களின் கலைகள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டு, முஸ்லிம்களிடம் பரவியிருந்தன.

## பூமியின் சுற்றளவு

வானசாஸ்திரக் கிரந்தங்களில் பூமியின் சுற்றளவு 24,000-மைல்களெனக் குறிப்பிட்டிருப்பதைக் கண்ணுற்ற மாமூன் அதைக் கண்டறிவதற்காக வானசாஸ்திரிகளைக் கொண்டதொரு கூட்டத்தை நியமித்தான். அதில் முற் குறிக்கப்பெற்ற பனீஷாகிர்களும் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் இதற்காக விஸ்தீரணமானதான ஸஞ்சார் மைதானத்தைக் குறித்தார்கள். அங்கு அவர்கள் துருவநக்ஷத்திரத்தின் உயரத்தைக் குறித்துக்கொண்டு ஒரு கம்பத்தை நாட்டினார்கள். பிறகு நேராக கயிறுகட்டிக்கொண்டும்,

கம்பம் நாட்டிக்கொண்டும் வடக்குப்புறமாகச் சென்றுர்கள். $66\frac{2}{3}$-மைல்தூரத்திற் சென்றதும் துருவ நக்ஷத்திம் ஒரு தரஜா (வானமண்டலத்தை 360-பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு பகுதியையும் தரஜா வெனக் குறிப்பர்.) உயர்ந்துவிட்டதைக் கண்டார்கள். இதனுல் துருவநக்ஷத்திரத்தின் ஒரு தரஜாவின் உயரத்திற்குப் பூமியின் அளவில் $66\frac{2}{3}$-மைல்கள் ஏற்படுகின்றதென்பதைக் கண்டுபிடித்தார்கள். மீண்டும் அவர்கள் துவக்கத்தில் கம்பம் நாட்டிய விடத்திலிருந்து தென்புறத்தில் இங்ஙனமே சென்றுர்கள். $66\frac{2}{3}$-மைல்கள் சென்றதும் துருவநக்ஷத்திரம் ஒரு தரஜா தாழ்ந்துவிட்டதைக் கண்டார்கள். இதனுல் அவர்களின் அபிப்பிராயம் ஊர்ஜிதப்பட்டது. இக்கணக்குப் பிரகாரம் வானத்தின் 360-தரஜாக்களை $66\frac{2}{3}$-ஆல் பெருக்க 24,000 மைல்கள் ஏற்பட்டன. இதனுல் திருப்தியடையாத மாமூன் வேறிடத்திலும் இங்ஙனம் செய்யப்படவேண்டுமென விரும்பினுன். கூபாவின் மைதானத்திலும் இங்ஙனம் ஆராயப்படவே முன் கண்டுபிடித்த விடையே கிடைக்கப் பெற்றுர்கள். எனவே பூமியின் சுற்றளவு 24,000-மைல்களென்னும் அபிப்பிராயம் ஊர்ஜிதப்பட்டுவிட்டது.

### நக்ஷத்திர விடுதி

ஹி. 214-ல் மாமூன் பலவிடங்களிலிருந்தும் காலித் பின் அப்துல்மலிக் மர்ருத்ரூதி, ஸனத் பின் அலீ, ஆஸ் பின் ஸஈத் ஜௌஹரீ போன்ற பிரசித்திபெற்ற வானசாஸ்திரிகளைத் தருவித்து, ஷிமாஸிய்யாவில் ஒரு நக்ஷத்திர விடுதியை நிர்மாணித்தான். யஹ்யா பின் அபீமன்ஸூர் அவ்விடுதியின் முக்கியஸ்தனு யிருந்தான். மாமூனின் சொந்த நக்ஷத்திரக் கணக்காளனும், யாவருக்கு முன்பு 'கிதாபுல்ஜபர் வல்முகாபலா' வென்னும் கிரந்தத்தை வரைந்தவனுமான அபூஜஃபர் முஹம்மத் பின் மூஸா வென்பான்

அதேகாரியாலயத்தில் இப்னுபஜாரீயின் கருவியைவிட மேம்பட்டதான நக்ஷத்திரத்தை யளக்குங்கருவியை நிறுவினான்.

கைத்தொழில், கல்வி இவைகளை மாமூன் இங்ஙனம் கண்காணித்து வந்ததன் பயனாக அக்காலம்வரை உலகத்தில் பரவியிருந்த கலைகள் யாவையும் முஸ்லிம்கள் அடையப்பெற்றிருந்ததுடன் அவைகளில் ஏனைய வர்க்கத்தவரைவிட மேம்பட்டும் இருந்தார்கள். ஆயினும், உண்மையைக் கூறுமிடத்து கலீபாவின் காரியாதிகள் கலைகளைப் பரத்துதல் மட்டல்லவெனவும், மேலும் இஸ்லாமிய சட்டதிட்டங்கள் பிரகாரம் பொதுமக்களுக்கு இன்றியமையாத காரியங்களை நடாத்திச்செல்ல வேண்டுமெனவும், இஸ்லாமிய மூலக் கொள்கைகளைத் தற்காப்பதுடன் அவைகளைக் கண்ணியப் படுத்த வேண்டுமெனவும் கூறவேண்டும். இங்ஙனம் கவனிக்குமிடத்து மாமூனும் ஏனைய அப்பாஸீ கலீபாக்களைப் போன்று சுயநலம் மிகுந்தும், ஜனநாயகத்துவத்திற்கு முரண்பட்டவனாகவும், பொதுமக்களின் சுதந்தரத்தைமட்டல்லாது அவர்களின் மார்க்க உரிமையையும் பிடுங்கிக்கொள்வோனாகவுமே காணப்படுகின்றான். இதை அடுத்த பக்கங்களிற் காணலாம்.

## கல்விக் கூட்டங்கள்

சென்றுபோன கலீபாக்களைவிட மாமூனுக்குக் கல்வியின் மீது ஆர்வம்மிகுந்திருந்ததால் அவன் எப்பொழுதும் கல்விமான்களில் ஒருகூட்டத்தைத் தன்னுடன் வைத்திருந்ததுடன், அவர்களுடன் கல்வி விஷயமாய்த் தர்க்கங்களும் புரிந்து வந்தான். பக்தாதில் அக்காலத்தில் மார்க்கக்கல்வியே மிகுந்து காணப்படினும் இஸ்லாமிய மூலக்கொள்கை (Dogmas)களில் சுருதிப் பிரகாரம் தர்க்கம் புரியும் கூட்டமொன்றேற்பட்டு, இஸ்லாமிய மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த கொள்கைகளுக்கு முரண்பட்ட கொள்கையை

நிறுவிவிட்டது. இதனால் இக்கூட்டத்திற்கும், முஸ்லிம் பொதுமக்களுக்கு மிடையே அபிப்பிராயபேத மேற்பட்டு விட்டது. முதன்முதலாக இவ்வபிப்பிராயபேதம் பஸராவில் ஏற்பட்டது. பிறகு அங்கிருந்து பக்தாதிலும் பரவி வந்தது. இக்கூட்டத்தின் தலைவர்கள் வாஸில் பின் அதா கஸால், கலீபா மன்ஸூரின் சமுகத்தில் மிகவும் கண்ணிய மடைந்திருந்த அம்ரு பின் உபைத் இவர்களாவார்கள். பிறகு அபூஹுதைல் அல்லாப், இப்ராஹீம் பின் ஸையார் நிஜாம், பிஷ்ர் பின் கியாத் முரைஸீ, அம்ரு பின் பஹ்ர் ஜாஹிஸ், தமாமா பின் அஷ்ரஸ் இவர்கள் இதன் தலைவர்களானார்கள். இவர்களே அக்குதர்க்கவாதிகளின் தலைவர்களாய்க் கொள்ளப்பட்டு வந்தார்கள். பொதுமக்களுடன் இவர்கள் அபிப்பிராயபேதம் பூண்ட கொள்கைகளில் கீழ்க்காணும் இரண்டும் முக்கியமானவையாம்:—

1. இக்குழாத்தினர் மனிதர்களின் செய்கைகளுக்கு மனிதர்களே சிருஷ்டிகர்த்தாக்களெனவும், இங்ஙனமிருப்பதால் நன்மையும், தீமையும் அடையப்பெறுகின்றார்களெனவுங் கொள்கின்றனர். முஸ்லிம் பொதுமக்கள் "மனிதர்களின் செய்கைகள் மனிதர்கள் மூலமாய் வெளியாயினும் அவைகளைச் சிருஷ்டித்தோன் இறைவனேயாவா" னெனக்கொள்கின்றனர்.

2. இக்குழாத்தினர் இறைவனது கேள்வி, பார்வை, வசனம் முதலிய வருணனைகள் தாமே நிலைத்திருப்பவையல்லவெனவும், இன்றேல் பல அநாதிகள் ஏற்படுமெனவும், இறைவன் தானாகவே கேள்வியாளன், பார்வையுடையோன், வசனிப்போனா யிருக்கிறானெனவுங் கொள்கின்றனர். பொதுமக்கள் இவ்வருணனைகளை இறைவனெனக் கொள்வதில்லை. மேலும் அவைகளைத் தனிப்பட்டவைகளாய்க் கொள்கின்றனர். இதனால் "இறைவனது திருவசனமான

குர்ஆன் அனாதியா; அன்றி துவக்கமுடையதா ?" வென்னும் அபிப்பிராயபேதம் ஏற்படுகின்றது. பொதுமக்கள் "வசனம் இறைவனது வருணனை" யென்பதைக்கொண்டு அஃது அனாதியெனவும், சிருஷ்டியிற் சேராததெனவுங் குறித்தனர். எனினும் இப்புதிய குழாத்தினர் "இவ்வக்ஷரங்களையும், சப்தத்தையும் 'நபி'யெனக் குறிப்பிடப்படும் ஒரு புதிய சரீரத்தில் இறைவன் ஏற்படுத்திவிடுகிறான்" எனக்கொள்கின்றனர். இதுவே அவர்கள் வஹீ (Revelation)யுக்குக் கற்பிக்கும் பொருளாம்.

'அஹ்லெஸுன்னத்' எனக் குறிப்பிடப்படும் முஸ்லிம் பொதுமக்களிடை தோன்றிய இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ (ரஹ்......) போன்ற அறிஞர்களுள்ளும் அபிப்பிராய பேதங்கள் காணப்பட்டனவென்றாலும், அவைகள் இஸ்லாமிய கொள்கைகளின் உட்பிரிவுகளில் ஏற்பட்டனவாதலின் அவைகள் பிளவுக்குக்காரணங்களாய்த் திகழ்ந்தனவன்று. மேலும் அவர்களுள் ஒருவர் மற்றொருவரின் அபிப்பிராயத்தைக் கண்ணியப்படுத்தி வந்தனர். எனினும், 'முஃதஜிலா' வென்னும் இக்குழாத்தினரின் அபிப்பிராய பேதங்கள் இஸ்லாமிய மூலக்கொள்கைகளிலேயே காணப்பெற்றனவாதலின் முஸ்லிம் பொதுமக்கள் அன்னாரை 'நவீனக்கோஷ்டி'யெனக் குறிப்பிட்டு அவர்களின் விசுவாசத்தி(ஈமானி)ல் குறைவிருப்பதாய்க் கொண்டனர். இங்ஙனமே முஃதஜிலாக்களும் முஸ்லிம் பொதுமக்களை அறிவிலிகளெனக் கொண்டுவந்தார்கள்.

இரண்டாவது அபிப்பிராயபேதம் ஷீஆக்களுடன் ஏற்பட்டதாம். இஸ்லாமில் ஏற்பட்ட அரசியல் பிரிவுகளான ஷீஆ, காரிஜீ இவ்விரண்டிலும் காரிஜீக்கள் ஏறக்குறைய அழிந்துபோனார்கள். ஷீஆக்கள் எஞ்சியிருந்தார்கள். அஹ்லெஸுன்னத்கள் குலபாயெராஷிதீன்களான நான்கு கலீ

பாக்கள் கிலாபத்தையடைந்த வரிசைக்கிரமம் அவர்களின் மகிமை, கிலாபத்தில் அவர்களுக்கிருந்த உரிமை இவைகளுக் கொத்ததாகவே யிருந்ததெனக் கொள்கிறார்கள். பெருமானாருக்குப்பிறகு கிலாபத்திற்குப் பாத்தியதையுடையோர் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களென்றும், அவர்களுக்குப்பிறகு அவர்களின் சந்ததிகளென்றும் ஷீஆக்கள் கொண்டார்கள். இவர்களுள்ளும் இருபிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. இமாமிய்யா வென்னும் பிரிவு மூன்று கலீபாக்களையும் அதிக்கிரமக்காரர்களெனக் கொண்டது. இரண்டாவது பிரிவான ஜைதிய்யா ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களையே கிலாபத்திற்குப் பாத்தியதையுடையோர்களெனக் கொண்டிருந்தும் ஏனைய மூன்று கலீபாக்களும் நீதிவான்களாயிருந்தமையான் அவர்கள் விஷயத்தில் அவமரியாதையான பதங்களைப் பிரயோகிப்பதற்கு அனுமதிப்பதில்லை. பிறகு இன்னாருள்ளும் பல்வேறு பிரிவுகள் ஏற்பட்டன. அவைகளுள்ளும் பற்பல அபிப்பிராயபேதங்கள் காணப்பெற்றன.

மாமூன் மர்வுதிலிருந்து பக்தாதுக்கு வந்ததும் கல்வியின்மீது தனக்குள்ள ஆவலினால் பிரதம நீதிபதியான யஹ்யா பின் அக்தம் என்பாரை யழைத்து அரசாங்க அறிஞர்கள் யாவரையும் ஒருங்கு சேர்க்கும்படிக் கட்டளையிட்டான். அன்னார் பலபிரிவுகளைச் சேர்ந்த அறிஞர்களில் நாற்பதுபேரைக் கொணர்ந்தனர். மாமூன் தர்க்க சங்கத்தை ஏற்படுத்தினான். செவ்வாய்க்கிழமைகளில் அச்சங்கம் கூடி வந்தது. கலீபாவும் அதிற்கலந்துகொள்வதுண்டு. ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த அறிஞர்களும் எவ்வித தட்டுத் தடையுமின்றி தர்க்கம் புரிந்து வந்தார்கள். இமாமிய்யாக்களும், ஜைதிய்யாக்களும் கூட எத்தகைய அச்சமுமின்றியே கிலாபத்தைப்பற்றிய தங்களது கொள்கைகளைப்பற்றி விவாதித்து வந்தார்கள். முஃதஜிலாக்களும் தங்கள்

கொள்கைகளை நிரூபிப்பதற்குப் பிரமாணங்களைக் கொணர்ந் தார்கள். இதுவரை நாயகத்திருமொழியின் வியாக்கியானக் கர்த்தாக்களது வன்மையின் காரணமாக யாரும் பகிரங்க மாக அவர்களுக்கு விரோதங்காண்பித்தது கிடையாது. இத்தர்க்க மண்டபம் அதற்கும் வழிகாண்பித்துவிட்டது. இம்மண்டபத்தை நிறுவுதலால் விவாதங்கள்மூலம் அபிப் பிராயபேதம் ஒழிந்துவிடலாமென்பதும், எல்லா பிரிவுகளும் ஒற்றுமைப்பட்டுவிடுமென்பதுமே அநேகமாய் மாமூனின் நோக்கமாக விருந்திருக்கலாம். என்றாலும் இதனால் ஏற் பட்ட பிரதிபலன் இதற்கு மாற்றமாகவே காணப்பட்டது. அவனே இத்தர்க்கங்களில் முஃதஜிலாக்களின் கொள்கை யை யாதரித்தான். "குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்டதா?" வென்னும் விஷயத்தில் இவன் முஃதஜிலாக்களின் கொள்கை யை யாதரித்ததால் முஸ்லிம் பொதுமக்கள் யாவரும், மார்க்க நிபுணர்களும் மாமூனுக்கு விரோதமாய் மாறிவிட் டார்கள்.

## குர்ஆன் சிருஷ்டியின் குழப்பம்

ஹி. 212-ல் மாமூன் "குர்ஆன் ஏனைய சிருஷ்டிகளைப் போன்று சிருஷ்டிக்கப்பெற்றதே" யென்னும் கொள்கை யைப்பிரகடனப் படுத்தினான். அதுதொடுத்து மார்க்க நிபுணர்கள் அவனை 'நவீனக் கொள்கைக்காரன்', 'மார்க்கத் தைப் புறக்கணிப்போன்', 'பிறமதஸ்தன்' எனக்குறிக்கத் தொடுத்தார்கள். இவ்விரோத மனப்பான்மை அதிகப்பட்டுக் கொண்டேவந்தது. ஹி. 218-ல் அவன் தனது அபிப்பிராயத் தின் பக்கபலத்திற்காக பலாத்காரத்தைப் பிரயோகிக்கக் கருதினான். அக்காலத்தில் அவன் யுத்தத்திற்காக ஷாமுக் குச் சென்றிருந்தான். அங்கிருந்து ஹி. 218, ரபீஉல் அவ்வல் மாதத்தில் பக்தாதின் தலைவனான இஸ்ஹாக் பின்

இப்ராஹீம் பின் முஸ்அபுக்கு மிகவும் கண்டிப்பாய் ஒரு கட்டளை வரைந்தனுப்பினான். அதன் சாரமாவது :—

"இஸ்லாமின் கலிபாவாயிருப்பதை முன்னிட்டு இம்மார்க்கத்தைத் தற்காப்பது எனது கடமையாகும். அறிவிலிகளும், சதாரண முஸ்லிம்களும் அல்லாஹ், அவனது திருவசனம் இரண்டையுமே அனாதிகளென நம்புவதைக் காண்கிறேன். இத்துடன் தாங்களே ஏகநாயகக் கொள்கையாளர்களெனவும், சத்தியசீலர்களெனவும், ஏனையோர் மதம்மாறிப்போயினோரெனவும் கூறுகின்றார்கள். திருக்குர்ஆனின் அநேக வசனங்கள் இக்கொள்கையை மறுக்கின்றன. முகஸ்துதி, தற்பெருமை இவைகள் நிரம்பப்பெற்ற மார்க்கநிபுணர்கள் அவ்வறிவிலிகளை யாதரித்து, அவர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களை யொருங்குசேர்த்து நீதிபதிகள் முன்பு எனது இவ்வாக்குறுதியை எடுத்துக் கூறுங்கள்! குர்ஆனைச் சிருஷ்டியெனக் கூறாதவர் நாமத்தைப் பதிவைவிட்டு நீக்கிவிடுங்கள்! அவரது சாக்ஷியம் ஒப்புக்கொள்ளப்படக்கூடாது"

என்பதே. இத்துடன் அங்குள்ள மார்க்கத்தலைவர்களைத் தன்னிடம் அனுப்பிவைக்கும்படியும் எழுதினான். இஸ்ஹாக் இதன் பிரகாரம் இமாம் யஹ்யா பின் மஈன், முஹம்மத் பின் ஸஅத் ஸாஹிபெ தபகாத், அபூகதீமா ஜுஹைர் பின் ஹரப், அஹ்மத் பின் இப்ராஹீம் தௌரகீ (ரஹ்........) போன்ற குறிப்பிட்ட அறிஞர்களை யனுப்பினான். இவர்கள் அவனிடம் சென்று பயத்தின் காரணமாக 'குர்ஆனும் சிருஷ்டியே' யென்பதை யொப்புக்கொண்டுத் திரும்பிவிட்டார்கள். பிறகு மாமூன் இவ்விஷயமாய் பக்தாதின் அறிஞர்களுடைய அபிப்பிராயங்களைத் தனக்கெழுதியனுப்பும்படி இஸ்ஹாக்குக் கெழுதினான். அவன் இருபது அறிஞர்களிடம் வாக்குமூலம் வாங்கினான். வினாவிடையின் போக்கைக் காண்பிப்பதற்காக ஒன்றிரண்டைக் கீழே குறிப்பிடுகிறோம் :—

இஸ்ஹாக் :—" குர்ஆன் சிருஷ்டி யென்னும் விஷயமாய் நீங்கள் யாது கூறுகின்றீர்கள் ?"

அலீ பின் முகாதில் :—" நான் ஏற்கனவே இதைப் பற்றி கலீபாவிடமே என் அபிப்பிராயத்தைக் கூறியுள்ளேன்."

இஸ்ஹாக் :—" குர்ஆன் சிருஷ்டியன்று ?"

அலீ :—" குர்ஆன் இறைவனது திருவசனம்."

இஸ்ஹாக் :—" எனது கேள்வி இதன்று."

அலீ :—" இதைத்தவிர வேறெத்தகைய பதிலும் என்னிடங் கிடையாது. கலீபா என்னிடம் ஏதேனும் சொல்லும்படிக் கட்டளையிட்டால் அதற்குக் கீழ்ப்படிகிறேன்."

இஸ்ஹாக் :—(அல்லாமா பஷீர் பின் வலீத் என்பாரிடம்) "குர்ஆனைப்பற்றி யுங்கள் அபிப்பிராயம் யாது ?"

பஷீர் :—" எனது அபிப்பிராயத்தை நான் ஏற்கனவே வெளியிட்டுள்ளேன்."

இஸ்ஹாக் :—" எனினும், தற்போது மீண்டும் கலீபா கட்டளையிட்டுள்ளனர்."

பஷீர் :—" குர்ஆன் இறைவனின் திருவசனமென்பதைமட்டுமே நான் குறிப்பிடுகிறேன்."

இஸ்ஹாக் :—" நான் அதைக்கேட்கவில்லை. "குர்ஆன் சிருஷ்டியா ; அல்லவா ?" வென்பதே எனது கேள்வி."

பஷீர் :—" அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் சிருஷ்டித்தான்."

இஸ்ஹாக் :—" குர்ஆனும் ஒருபொருள்தானே ?"

பஷீர் :—" சந்தேகமன்றியே."

இஸ்ஹாக்:— "அங்ஙனமாயின் அஃது சிருஷ்டியேயானது."

பஷீர் :—“ அஃது சிருஷ்டிகர்த்தா வன்று.”

இஸ்ஹாக் :—“ இது என் கேள்விக்குப் பதிலன்று.”

பஷீர்:—“இதைவிட அதிகமாக வேறொன்றும் சொல்ல முடியாதவனா யிருக்கிறேன். இதைப்பற்றிப் பேச எனக்கு விருப்பமில்லை என்பதை கலீபாவிடமே கூறிவந்துள்ளேன்.”

இங்ஙனமாக இஸ்ஹாக் யாவரின் வாக்குமூலத்தையும் வரைந்தனுப்பிவிட்டான். மாமூன் மிகவும் கோபத்துடன் ஒரு நீண்ட கடிதம் எழுதி, அதைத் தனிப்பட்ட நிருபன் வசம் கொடுத்தனுப்பினான். அதில் பக்தாதின் மார்க்க நிபுணர்கள் ஒவ்வொருவர்மீதும் லஞ்சம், பொய், புரட்சி, அறியாமை, முகஸ்துதி போன்ற குற்றங்களைக் கற்பித்துவிட்டு இறுதியாக அவர்கள் குர்ஆனைச் சிருஷ்டி யென்றொப்புக் கொள்ளாவிட்டால் சங்கிலியிற் பிணித்துத் தனதுசேனைக் கனுப்பும்படிக் குறிப்பிட்டிருந்தான். பஷீர் பின் வலீத், இப்ராஹீம் பின் மஹ்தீ இவ்விருவரைப்பற்றியும் அவர்களிடம் தௌபா (செய்த பாவத்திற்கு மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டல) செய்யச் செய்யும்படியும், இவர்கள் தமது கொள்கையை மாற்றிக்கொள்ளாவிட்டால் கொன்றுவிடும்படியும் எழுதினான். இஸ்ஹாக் மீண்டும் மார்க்க அறிஞர்களை அழைத்து, அக்கடிதத்தை வாசித்துக் காண்பித்தான். இவ்வதிக்கிரமமான கட்டளையைச் செவியுற்றதும் நால்வரைத் தவிர்த்து ஏனையோர் யாவரும் ‘குர்ஆன் சிருஷ்டி’ யென்பதை யொப்புக்கொண்டு விட்டனர். அந்நால்வரும் கைது செய்யப்பட்டனர். அவர்களுள்ளும் ஒருவர் மறுதினமும், மற்றொருவர் மூன்றாவது தினமும் சிருஷ்டியென் றொப்புக்கொண்டு விடுதலையடைந்தனர். எஞ்சியிருந்த இமாம் அஹ்மத் பின் ஹம்பல், முஹம்மத் பின் நூஹ் (ரஹ்...) இவ்விருவரும் எவ்விதமேனும் குர்ஆனைச் சிருஷ்டியென் றொப்புக்கொள்ளத் தயாராயிருக்கவில்லை.

இதற்கிடையே "சிலர் பயத்தின் காரணமாக வொப்புக் கொண்டதா யறிகிறேன். இத்தகைய நயவஞ்சகர்களைக் கைதுசெய்து என்னிடம் அனுப்பிவையும்" என மாமூனால் வரையப்பெற்ற இலிகிதம் கிடைத்தது. இஸ்ஹாக் மார்க்க நிபுணர்களில் ஒரு கூட்டத்திற்கு விலங்கிட்டு, சிப்பாய் களின் பாதுகாவலில் தர்ஸுஸ்புறம் அனுப்பினான். இவர் கள் ரிக்கா போய்ச் சேர்ந்ததும் மாமூன் இறந்துபோன செய்தி கிடைத்தது. எனவே பக்தாதுக்குத் திருப்பி யனுப்பப் பெற்றார்கள். மாமூன் பிடிவாதங்காரணமாகவே இச்சிறிய விஷயத்தைக்கொண்டு முஸ்லிம்களுள் பிளவுண் டாக்கிவிட்டதுடன் நாயகத்திருமொழியின் வியாக்கியான கர்த்தாக்கள், மார்க்க நிபுணர்கள் இவர்களையும் கஷ்டங்களுக் கிலக்காக்கிவிட்டான். இதனால் அவனது குறுகிய மனப் பான்மையும், பைத்தியக்காரத் தன்மையும், மந்தமதியும் வெளியாகின்றது. கல்வி சம்பந்தமானதொரு பிரசினையை மார்க்கக் கட்டளையெனக்கொண்டு, தனது வன்மையின் காரணமாக அதையொப்புக்கொள்ளும்படி பொதுவாக பொதுஜனங்களையும், குறிப்பாகத் தன்னை ஆரம்பப் பள் ளிப் பையனெனவுங் கூறக்கூடாத நிலைமையில் பெரிய பெரிய அறிஞர்களையும் வற்புறுத்துதற்கு அவனுக்கு எத் தகைய உரிமையுங் கிடையாது.

மாமூன் இத்துடன் நின்றுவிடவில்லை. மேலும் தனது சோதரனும், தனக்குப் பிரதிநிதியுமான முஃதஸிம் என் பானுக்கு தனக்குப்பின்பும் தன்னைப்போன்றே அவ்வறி ஞர்கள் மீது கொடுமைகள் புரியும்படிக் கூறிவிட்டு இறந்து போனான். முஃதஸிம் ஒரு சிப்பாயாக விருந்தும்—பொது வாக கல்வியின்மீதும், குறிப்பாக தத்துவ சாஸ்திரத்தின் மீதும் ஆவல் மிகுந்திராதவனாக விருந்தும்—தனது சகோதர னின் மரணவாக்குமூலத்திற்காகவும், அரச சமுகத்தில்

ஸ்திரம் பெற்றிருந்த முஃதஸிலாத் தலைவர்களின் காரண மாகவும் அவ்வறிஞர்கள்மீது கொடுமைகள் புரியத் தலைப் பட்டான். இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர் களைச் சிறையிலிருந்து தருவித்துக் கசையடி கொடுத்து, குர்ஆனைச் சிருஷ்டியென் றொப்புக்கொள்ளும்படி வற் புறுத்துவான். அவர்கள் ஏறக்குறைய இரண்டரை வருஷ காலம் இக்கொடுமைகளைச் சகித்துக்கொண்டு தமது கொள் கையின்மீது பொறுமையுடன் ஸ்திரமாயிருந்து வந்தார்கள். முஃதஸிமுக்குப்பிறகு வாதிக்கும் தனது சிறிய தந்தை, தந்தை இவர்களின் அடிச்சுவட்டையே தழுவிநின்றான். அஹ்மத் பின் நஸ்ர் என்பான் அக்காலத்திய பெரிய தலைவனாவான். அவனது பாட்டன் மாலிக் பின் ஹதீம் அப்பாஸிய்யா கிலாபத்தின் பிரசாரகர்களிலொருவனாயிருந் தமையால் கிலாபத்தின் சமுகத்தில் அவனுக்கு வம்சப் பெருமையும், மதிப்பும் இருந்துவந்தது. அவன் அநேக மாய் மார்க்கப்பெரியார்களின் சகவாசத்திலிருந்து வந்ததில் முஃதஜிலாக்களுக்குப் பரமவிரோதியாகவிருந்தான். என வே வாதிக்கின் கடுமையான முறைகளுக்கும், தனக்கு அரசசமுகத்திலிருக்கும் மதிப்புக்கும் விரோதமாக குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்டதென்னும் கொள்கையைப் பகிரங்கமாக எதிர்க்கப் புறப்பட்டு வாதிக்கையும், அவனது சகாக்களையும் இஸ்லாமைவிட்டும் புறம்பானவர்களெனக் கூறிவந்தான்.

முஸ்லிம் பொதுமக்கள் அவனுடன் சேர்ந்தனர். அவன் இரகசியமாக ஆயிரக்கணக்கானவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஓரிரவு பக்தாதின் இருபுறங்களிலும் அவர்களை நிறுத்திவைத்து, நகார் அடித்தவுடன் அவர்கள் இருபுறத் தாலும் கிலாபத்தின் மாளிகையைத் தாக்கவேண்டுமென ஒரு நேரத்தைக் குறிப்பிட்டுவைத்தான். எனினும், துர திர்ஷ்டவசமாக நகாரடிக்க நியமிக்கப்பட்டிருந்தவர்களிலொரு

வன் நபீத் என்னும் பானமருந்தியிருந்ததால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக அடிக்கத்தொடுத்தான். எதிர்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தோர் அதுவரை ஆயத்தமாக வில்லை யாதலால் நகாரின் சப்தத்தைக்கேட்டதும் முஹம்மத் பின் இப்ராஹீம் என்னும் சின்னகொத்வால் வந்துவிட்டான். அவனுக்குச் சகல ஏற்பாடுகளும் தெரிந்துவிடவே அவனால் கூடுமானபேர்வழிகளைக் கைது செய்து, காலையில் வாதிக் முன்பு கொண்டுசென்றான். அஹ்மத் பின் நஸ்ருடன் வாதிக் அதிகமாக வார்த்தையாடவில்லை. "குர்ஆன் விஷயமாய் நீரென்ன கூறுகிறீர்?" எனமட்டும் கேட்டான். "அஃது இறைவனது திருவசனம்" என அவன் பதிலளிக்கவே வாதிக் அங்கு பிரசன்னமாயிருந்தோரின் அபிப்பிராயத்திற்கிணங்க அவனைக் கொன்றுவிட்டான். பிறகு அவனது சவத்தை ஸாமிராவில் தூக்கிலிட்டுவிட்டு, சிரஸை பக்தாதிற்கு அனுப்பிவிட்டான். காதில் ஒரு துண்டுக்கடிதத்தைக் கட்டிவிட்டிருந்தான். அதில் "இஃது வழிகெட்டுப்போனவனும், விக்கிரகாராதனைக்காரனுமான அஹ்மத் பின் நஸ்ரின் தலையாம். இறைவனது அன்பையடைய வேண்டி கலீபா தமது கரத்தாலேயே அவனைக்கொன்றார்" என்றெழுதித் தொங்கவிட்டான். மிஸ்ரில் அக்காலத்தில் இமாம் ஷாபிஈ (ரஹ்.) அவர்களின் சீஷரும், பிரபல மார்க்கப்பெரியாருமான இமாம் அபூயஃகூப் யூஸுப் பின் யஹ்யா (ரஹ்.) என்பாரிருந்து வந்தனர். இவர்களும் "குர்ஆன் சிருஷ்டியன்று" எனக்கூறுவதாய்ச் செவியுற்று மிஸ்ரின் அதிபனுக்கு அவர்களிடம் குர்ஆனைச் சிருஷ்டியென்றொப்புக்கொண்டு வாக்குமூலம் வாங்கும்படி வாதிக் கூறியனுப்பினான். இவன் இமாமவர்கள்மீது பக்திபூண்டவனாதலின் அவர்களிடம் அக்கடிதத்தை வாசித்துக் காண்பித்து "தாங்கள் என் முன்புமட்டும் ஒப்புக்கொண்டுவிடுங்கள். நான் கலீ

பாவுக்கு எழுதிவிடுகிறேன். தங்களுக்கு அதனால் எத்தகைய இன்னலும் ஏற்படாது'' என்றெடுத்துக் காண்பித்தான். அவர்கள் "என்னைப் பின்பற்றுவோர் இலக்ஷக் கணக்கிலிருக்கின்றனர். அவர்களின் பொறுப்பும் என்னைச் சேர்ந்ததாகும்'' எனக்கூறிவிடவே இவன் வேறு வழியின்றி அவர்களை கலீபாவிடம் அனுப்பிவிட்டான். அவன் அவர்களைச் சிறைவைத்துவிட்டான். அதே சிறையில் ஹி. 231-ல் அவர்கள் காலஞ்சென்று விட்டார்கள்.

இத்தகைய கொடுமைகள் காரணமாக பொதுமக்கள் அக்கொள்கையில் பின்னும் ஸ்திரம் பெற்றுப்போய் முஃதஜிலாக்களைப்பரிகசிக்கவும் தொடுத்தார்கள். வாதிக்கின் சமுகத்திய விதூஷகனான உப்பாதா வென்பான் ஒருதடவை வாதிக் இடம் "குர்ஆன் இறந்து விட்டால் என்னாகும்?'' என்றான். "குர்ஆன் எங்ஙனம் இறந்துபோகும்?'' என வாதிக் கேட்டதற்கு அவன் "ஒவ்வொரு சிருஷ்டிக்கும் முடிவுண்டு. குர்ஆனும் சிருஷ்டியாதலின் அதுவும் ஒரு நாளைக்கு அவசியம் இறந்து போகும். பிறகு தராவீஹ் (ரமலான் மாதத்திய இராத்திரி) தொழுகையில் எங்ஙனம் ஓதப்படக்கூடும்? '' என்றதைக்கேட்டு வாதிக் சிரித்துக் கொண்டு "போதும்! போதும்!'' என்றான். வாதிக்கும் தனது கொடுமைகளைக் காணச்சகியாதுபோய், எவ்விதத்தாலும் இக்குழப்பத்தை விட்டும் விடுதலையடையவேண்டுமெனக் கருதினான். இப்பிரசினையின் காரணமாக பொதுமக்களின் விரோதம் அதிகப்பட்டு வந்ததேயல்லாது எவ்வித பலனுமேற்படவில்லையன்றோ? ஒரு தடவை ஒரு வயோதிகன் இவ்விஷயமாகவே கைதுசெய்துக் கொணரப்பட்டான். முஃதஜிலாக்களின் தலைவனும், இக்குழப்பத்தின் மூலக்காரணஸ்தனுமான இப்னுஅபீதாவூத் என்பான் "குர்ஆன் சிருஷ்டியன்றோ?'' வென அவனைக்கேட்டான்.

அக்கிழவன் "இதற்கு மறுமொழி யளிக்குமுன் 'பெருமானார் (ஸல்.), குலபாயெராஷிதீன்கள் (ரலி........) இவர்கள் இவ்விஷயத்தை யறிந்திருந்தார்களா; இல்லையா?" வெனக் கேட்கிறேன்" எனவே இப்னுஅபீதாவூத் "நிச்சயமாகவே அறிந்திருந்தார்கள்" என்றான். கிழவன் "அங்ஙனமாயின், அவர்கள் ஜனங்களிடம் இதைப்பற்றி வாக்குமூலம் வாங்கினார்களா; மௌனமாயிருந்தார்களா?" வெனவே இப்னு அபீதாவூத் "மௌனமாயிருந்தார்கள்" என்றான். கிழவன் "அவர்கள் மௌனமாயிருந்துவிட்ட இவ்விஷயத்தில் நீங்கள் மௌனமாயிருக்கச் சாத்தியப்படாதோ?" வெனவே இப்னுஅபீதாவூத் சும்மாயிருந்துவிட்டான். வாதிக்கும் இதனால் சந்தோஷமடைந்து கிழவனை விடுவித்துவிட்டு கிழவன்கூறிய" இவ்விஷயத்தில் நீங்கள் மௌனமாயிருக்கச் சாத்தியப்படாதோ?" வென்னும் வசனத்தைப் பலதடவை திருப்பிக்கூறினான். இக்காரணங்களால் கொடுமையென்னுந்தீ அடங்கிவிட்டது. ஹி. 232-ல் முதவக்கில் கலீபாவானதும் ஒரேதடவையில் இக்குழப்பத்தை யொடுக்கி, பொதுமக்களை அவரவர்களின் கொள்கையின்மீது விட்டுவிடவே, பொதுமக்கள் சந்தோஷமடைந்துவிட்டார்கள்.

## வருமானம்

மாமூன் காலத்தில் அவனது அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்த மாகாணங்களும், அவைகளின் வருமானங்களும் விவரமாய்ச் சரித்திர நூற்களிற் காணக்கிடைக்கின்றன. அல்லாமா இப்னுகல்லதூன் மாமூன்காலத்திய அரசாங்கப் பதிவுகளைப்பார்த்து, அக்காலத்திய வருமானங்களைத் தமது கிரந்தத்தின் முன்னுரையிற் குறிப்பிட்டுள்ளனர். அதை நாமும் ஈண்டுவரைகிறோம்:—

| மாகாணம் | தோகை | |
|---|---|---|
| ஸவாத் | 2,78,00,000 | திர்ஹம்கள் |
| கிஸ்கர் | 1,16,00,000 | ,, |
| கோரெதிஜ்லா | 2,08,00,000 | ,, |
| ஹலவான் | 48,00,000 | ,, |
| அஹ்வாஜ் | 2,50,00,000 | ,, |
| பாரஸீகம் | 2,70,00,000 | ,, |
| கிர்மான் | 42,00,000 | ,, |
| மக்ரான் | 4,00,000 | ,, |
| சிந்தும், அதைச்சேர்ந்ததும் | 1,15,00,000 | ,, |
| ஸஜிஸ்தான் | 40,00,000 | ,, |
| குராஸான் | 2,80,00,000 | ,, |
| ஜுர்ஜான் | 1,20,00,000 | ,, |
| கூமிஸ் | 15,00,000 | ,, |
| தபரிஸ்தான், தர்தியான் | 63,00,000 | ,, |
| ரை | 1,20,00,000 | ,, |
| ஹமதான் | 1,13,00,000 | ,, |
| பஸரா, கூபா | 1,07,00,000 | ,, |
| மாஸுப்தான், தர்யான் | 40,00,000 | ,, |
| ஷஹர்ஜூர் | 67,00,000 | ,, |
| மூஸிலும், அதைச்சேர்ந்ததும் | 2,40,00,000 | ,, |
| ஆதர்பீஜான் | 40,00,000 | ,, |
| ஜஸீராவும், சுற்றுப்புறமும் | 3,40,00,000 | ,, |
| ஆர்மீனியா | 1,30,00,000 | ,, |
| புர்கா | 10,00,000 | ,, |
| ஆப்ரிகா | 1,30,00,000 | ,, |
| ஆக | 31,86,00,000 | திர்ஹம்கள் |

| | | |
|---|---|---|
| கன்ஸரீன் | 4,00,000 | தீனார்கள் |
| திமஷ்க் | 4,20,000 | ,, |
| அர்தன் | 97,000 | ,, |
| பாலஸ்தீன் | 3,10,000 | ,, |
| மிஸ்ர் | 19,20,000 | ,, |
| யமன் | 3,70,000 | ,, |
| ஹிஜாஸ் | 3,00,000 | ,, |
| ஆக | 38,17,000 | தீனார்கள் |

இவ்வருமானத்தில் பெரும்பகுதி பக்தாதிலேயே மந்திரிகள், அதிபர்கள், சிப்பாய்கள் இவர்களின் சம்பளத்திலும், சன்மானங்கள் வழங்குவதிலும் கலீபாவால் செலவிடப்பட்டுவந்தது. இக்காரணத்தால் அங்கு நன்னிலைமை மிகுந்திருந்தது. மாமூன் ஷாம்தேசத்தி லிருக்குங்கால் முஃதஸிம் தனது மாகாணத்தின் தீர்வையான 30-கோடி திர்ஹம்களை அவன்முன்பு கொணர்ந்து வைத்ததாகவும், அவன் "நமது சமுகத்திலிருப்போரும், நமது உத்தியோகஸ்தரும் இதைப் பார்த்துவிட்டுத் தமதில்லங்களுக்கு வெறுங்கையாய்த் திரும்புங்கால் நாம் அதை யெடுத்துக் கொள்வது உசிதமானதன்று" எனக்கூறிவிட்டுத் தனதுமந்திரி முஹம்மத் பின் யஜ்தாதையழைத்துச் சிலருக்குப் பத்தாயிரம், சிலருக்கு இருபதாயிரம் கொடுக்கும்படியும், எஞ்சியிருப்பதைச் சேனைக்குப் பங்கிடும்படியும் கட்டளையிட்டதாகவும் தைபூரீ யென்பார் குறிப்பிடுகின்றனர். இஃதொரு பெரிய கொடை யென்பதிற் சந்தேகமிலது. எனினும், வருமானம் இதைவிட அதிகமானதாக விருந்ததென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாம்.

## வெளிநிலைமைகள்

மாமூனின் காலத்துவக்கத்தில் ரூமியர்களுடன் எத்தகைய யுத்தமும் ஏற்படவில்லை. அவர்கள் இஸ்லாமிய எல்லைப்புறங்கள்மீது படையெடுக்கத்தொடுக்கவும் கி. பி. 830, மார்ச்சுக்குச் சரியான ஹி. 215, முஹர்ரம் மாதத்தில் இஸ்ஹாக் பின் இப்ராஹீம் என்பானைத் தனக்குப் பிரதிநிதியாக நியமித்துவிட்டு, பக்தாதிலிருந்து சேனையைக்கொண்டு சென்று மன்பஜிலிருந்து வாபிக்குக்கும், அங்கிருந்து இந்தாகிய்யாவுக்கும் போய் இறுதியாக தர்ஸூஸ் போய்ச்சேர்ந்தான். இதுவே சேனைகள் தங்குமிடமான எல்லைப்புறமாகவிருந்தது. ஜூலை மாதத்தில் 'கிரா' வென்னுங் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு அங்கிருந்து ரூமியர்களைத் துரத்தினான். அங்கு சிறைசெய்யப்பட்ட ரூமியர்கள் யாவரையும் தனது சிப்பாய்களிடமிருந்து 56,000-தீனருக்கு வாங்கி விடுவித்துவிட்டதுடன் ஒவ்வொருவருக்கும் வழிச்செலவுக்காக ஒவ்வொரு தங்கக்காசும் கொடுத்தனுப்பினான். இங்கிருந்துகொண்டே தனது அடிமையான அஷ்னஸ் என்பானை 'ஸாந்துஸ்' என்னும் கோட்டையின்புறம் அனுப்பவும் அவன் அதைக் கைப்பற்றிக்கொண்டு அங்கிருந்த தலைவனைக்கொன்றுவிட்டான். அஜீப், ஜஃபர் இவர்களை 'ஸினன்' என்னும் கோட்டையை முற்றுகையிட அனுப்பவும் அவ்விடத்து மக்கள் சரண்புகுந்தனர். இவ்வெற்றிகளுக்குப் பிறகு அவன் ஷாமின்புறம் திரும்பிவந்தான். தர்ஸூஸ், மிஸ்ஸீஸா இவ்விடங்களிலுள்ள 6,600-முஸ்லிம்களை ரூம் தேசத்தரசன் கொன்றுவிட்டதாய் அங்கு செய்தி கிடைக்கவே பிறகு ரூமின்புறம் திரும்பினான். முந்தி அந்தீபூவென்னுமிடத்தைக் கைப்பற்றினான். பிறகு முஃதஸிமுக்குச்சேனையைக் கொடுத்தனுப்பவும் அவன் முப்பது கோட்டைகளைக் கைப்பற்றினான். மார்க்கநிபுணரான யஹ்யா

பின் அக்தம் என்னும் நீதிபதியும் ஒரு சேனையுடன் ‘துவானு’ புறம் சென்று அதைச் சின்னபின்னப்படுத்தி விட்டுத் திரும்பினர். இவ்வெற்றிகளுக்குப் பிறகு யக்ஸூம் வழியாக திமஷ்குக்குத் திரும்பினன். மிஸ்ரில் குழப்பங்கள் மிகுந்து காணப்பட்டதால் ஹி. 216-ல் அங்கு சென்றான். அங்கு பலவிடங்களிலும் சுற்றித்திரிந்து அவ்விடத்து ஒழுங்குமுறைகளைச் சீர்ப்படுத்தினன்.

புராதனக் கல்லறைகளில் சென்றுபோன பாரஇனு வம்சத்தவரின் புதையல்களிருப்பதாய்ச் சிலர் அபிப்பிராயப்பட்டனர். இதை முன்னிட்டு அவைகளிலொன்றைத் தோண்டினதில் ஒன்றுங்கிடைக்கவில்லை; செலவே அதிகமானது. இதனுல் அவ்வெண்ணத்தை விட்டுவிட்டானெனினும் அவ்வெண்ணம் வீணானதாயிருக்கவில்லை. இன்னும் மிஸ்ரில் பழைய கல்லறைகளிலிருந்து எண்ணிறந்த திரவியங்கள் எடுக்கப்படுகின்றன வன்றோ? மிஸ்ரிலிருந்து திமஷ்குக்குத் திரும்பிவந்து ஹி. 217-ல் மீண்டும் ரூம்மீது படையெடுத்து, ‘லூலுவா’ வென்னும் பிரசித்திபெற்ற கோட்டையை முற்றுகையிட்டு, அஜீப் என்பானை அங்கிருக்கச்செய்துவிட்டு முன்னேறிச் சென்றான். இவனை அக்கோட்டைவாசிகள் ஏமாற்றிப் பிடித்துக்கொண்டார்கள். எனினும் எட்டுதினங்களுக்குப்பிறகு விட்டுவிட்டார்கள். இதற்கிடையே ரூம் தேசத்தரசனான தௌபீல் என்பானே சேனையுடன் அங்கு வந்து சேர்ந்தான். மாமூன் அவன் வரும்செய்தியையறிந்ததும் அஜீபின் உதவிக்காகத் திரும்பவே ரூமின் அரசன் ஓடிவிட்டான். கோட்டைவாசிகள் அபயங்கோரினார்கள். அதுவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஹி. 218, ஜமாதில் ஆகிர் மாதத்தில் மாமூன் தனது புதல்வன் அப்பாஸ் என்பானை துவானுவை நிர்மாணிப்பதற்காக நியமித்தான். அவன் ஒரு மைல் நீளமும், ஒரு மைல் அகலமுமுள்ள நகரத்தை

நிர்மாணித்து யுத்தத்திற் பிரசித்திபடைந்த பலசமுகத்தவரை யதில் குடியேறச்செய்தான். நகர மதில்சுவர் மூன்று மைல் சுற்றளவில் வட்டமாயிருந்தது. மாமூன் ரிக்காவுக்குவந்து அங்கிருந்து மீண்டும் ரூமின்புறம் முன்னேறிச் சென்முன். எனினும், தர்ஸூஸ் போய்ச்சேர்ந்ததும் இறந்துவிட்டான்.

## குணாதிசயங்கள்

அப்பாஸிய்யா கலீபாக்களுள் மாமூன் சகிப்புத்தன்மை, மன்னிக்குங்குணம் இவைகளில் நிகரற்றவனுயிருந்தான். பிழைகளை க்ஷமித்துவிடுவதில் அவனுக்கிருந்த ஆர்வத்தால் பிழைகளை மன்னித்துவிட்டதும் இறைவனுக்கு நன்றி செலுத்துதற்காக சாஷ்டாங்கமாய் (சஜ்தாவில்) வீழ்வான். அவனது விரோதிகளும் அவனுக்கு முன்பு வந்துவிட்டால் அவர்களை மன்னித்துவிடுவான். அமீனுடன் ஏற்பட்ட சகல யுத்தங்களுக்கும் மூலக்காரணஸ்தனுன பலல் பின் ரபீஇன் குற்றங்களையும் மன்னித்துவிட்டான். ஜைத் பின் அலீ என்பான் கூறுவதாவது:— "ஒரு தினம் மாமூன் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். பணிமக்கள், சமுகத்திலிருப்போர் யாவரும் பிரசன்னமாயிருந்தனர். பிரசங்கியான ஸாஅத் என்பான் அவனுக்குப் பின்புறமாக நின்றுகொண்டு அவனை ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்தான். திடீரென மாமூன் கண்ணீர்வடித்தார். அதற்குக் காரணங் கேட்கப்படவும் அவர் "எனக்கு எத்தகைய துக்கமும் ஏற்படவில்லை. என்ருலும் திடீரென உள்ளத்தில் இறைவனது நன்றியைப்பற்றிய எண்ணம் உதயமானதால் கண்ணீர் வழிகின்றது. (கூடத்திலிருந்த பலல் பின் ரபீஐச் சுட்டிக்காட்டி) இவன் ஹாரூனின் காலத்தில் தங்கநாற்காலியின்மீது அமர்ந்திருப்பான். அக்காலத்திலும் இவன்என்மீது கெட்டபிப்பிராயங் கொண்டிருந்ததாகவே தெரியவந்தது.

இவனது கோள், நிந்தனை இவைகளுக்குப் பயந்து நான் அவனை யனுசரித்து நடந்துவந்தேன். இவன் எனது முகமனுக்குப் பதில் கூறிவிட்டால் நான் சந்தோஷமடைந்து விடுவேன். ஹாரூனுக்குப் பிறகு அமீனை எனக்கு விரோதமாக இவனே தூண்டிவிட்டு, சகோதரத்துவத்தை யறுத்து விட்டுச் சண்டைமூட்டி, என்னைக்கைது செய்து அடைத்து வைக்கக் கங்கணங்கட்டினான். அலீ பின் ஈஸாவிடம் இவன் இரும்புச்சங்கிலிக்குப் பதிலாக வெள்ளிச் சங்கிலியைக் கொடுத்து, என்னைப் பிணித்துக்கொண்டுவரும்படி யனுப்பியதே இவன் எனக்குச் செய்த பெரியதொரு நன்றியாம். இன்று அல்லாஹுத ஆலா என்மீது செய்துள்ள நன்றிகள் காரணமாக இவன் இழிவுற்று எனது அடிமைகளுடன் கலந்துட்கார்ந்திருக்கிறான். பிறகு இந்த பிரசங்கி ஸாதையே பாருங்கள்! நேற்று பிரசங்கமேடையில் என்னைப் பற்றிய நிந்தனைகளை யடுக்கிக்கொண்டும், * "மாமூன்" என்பதற்குப்பதிலாக "மாயூன்" என எனது பெயரை மாற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு மிருந்தவன் இன்று ஹஸ்ரத ஈஸா (அலை.), பெருமானார் (ஸல்.) இவர்களைத் துதிப்பதே போன்று என்னை ஸ்தோத்திரம் செய்கிறான்" எனக் கூறினார்" என்பதே. "எனக்குக் குற்றங்களை மன்னித்துவிடுவதிலிருக்கும் பிரியத்தை ஜனங்களறிந்து கொண்டால் என்னிடம் குற்றங்களையே காணிக்கையாகக் கொணர்வார்கள்" என அடிக்கடி மாமூன் கூறுவான். என்றாலும் மிஸ்ரின் புரட்சியாளர்கள் இவனுக்கு வழிபட்டும் ஹி. 217-ல் அவர்களைக்கொன்றுவிட்டு, அவர்களின் பெண்டுபிள்ளைகளை

---

* "மாமூன்" என்னும் பதம் "நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்" எனவும், "மாயூன்" என்னும் பதம் "பலங்குன்றிய மூளைபடைத்தவன்" எனவும் பொருட்படும்.

விற்றுவிட்டதான குறையொன்றே அவனது இச்சத்குணத் திற்கொரு பெரிய கறையாயிருக்கின்றது.

கல்வியிலும் மாமூன் தனிச்சிறப்படைந் திருந்தான். கல்விமான்களை மிகவும் கண்ணியப்படுத்தி வந்தான். ஹி. 242-ல் காலஞ் சென்றோரும், அக்காலத்தில் இலக்கண இலக்கியத்திலும், இஸ்லாமிய கலைகளிலும் நிகரற்றோரு மான நீதிபதி யஹ்யா பின் அக்தம் என்னும் பெரியாரை இராப்பகலாய்த் தன்னிடம் வைத்திருந்ததுடன் மந்திரி களுக்குமிராத உரிமைகளை யவர்களுக் களித்திருந்தான். ஓரிரவு அன்னார் மாமூனுக்குச் சமீபமாக நித்திரைசெய்து கொண்டிருந்தனர். அர்த்தராத்திரியில் அன்னாருக்குத் தாகம் ஏற்பட்டுவிட்டது. அன்னார் எழுந்தனர். மாமூன் "யாது வேண்டும்?" எனக்கேட்கவும் அன்னார் "ஜலம்" எனவே மாமூனே எழுந்துசென்று கூஜாவைக் கொணர்ந் தான். "வேலைக்காரர்களில்லையா?" வென அன்னார் கேட்கவே "அவசியமிலது. ஒருவர்க்கத்தின் பணி யாளனே அவர்களின் தலைவனாவான்" என்றான். ஓரிரவு அவர்கள் தூங்கிக்கொண் டிருக்குங்கால் மாமூன் தண்ணீர் குடிப்பதற்காகவெழுந்தான். அவர்களது நித்திரைக்குப் பங் கமேற்படக்கூடா தென்பதற்காக மிகவும் மெதுவாக நடந்து சென்று தண்ணீர் குடித்தான். பிறகு அடிமேலடிவைத்து நடந்துவந்து கட்டிலில் படுத்தான். பெரியார் விழித்தே யிருந்தனர். காலையில் அன்னார் "கலீபாவே! இராத்திரி நான் தங்களின் நடத்தையைக் கண்ணுற்றேன். எனது நித்திரையைத் தாங்கள் எவ்வளவுதூரம் கருதினீர்களென் பதைக் கண்டேன். இச்சத்குணங்களே தங்களை யரசராக வும், எங்களை யடிமைகளாகவும் செய்துளது" என்றனர். கொடையில் இவன் ஹாரூனையும் மிஞ்சிவிட்டான். கவிஞர் களுக்கும், பண்டிதர்களுக்கும் மிகச்சிறிய விஷயங்களுக்காக

ஆயிரம், இலக்ஷம் திர்ஹம்களைக் கொடுத்துவிடுவான். இக்காரணத்தால் பக்தாத் ஒவ்வொரு கல்விக்கும் உரைவிடமாகத் திகழ்ந்து வந்தது.

ஆடம்பரத்திலும் அவன் தனது மூதாதையர்களை மிஞ்சிவிட்டான். தினமொன்றுக்கு 10,000-திர்ஹம் அவனது சமயலறையின் செலவாகவிருந்தது. அக்காலத்திய செல்வம், ஆடம்பரம் இவைகளை யறிந்துகொள்வதற்காக மாமூனின் ஒருவிவாகத்தை ஈண்டு குறிப்பிடுவதும் உசிதமாம்: துர்ரியாஸதைன் என்னும் மந்திரி கொல்லப்பட்ட பிறகு ஹி. 210-ல் மாமூன் அவனது சகோதரன் ஹஸன் பின் ஸஹலின் புதல்வி பூரான் என்பாளை மணந்துகொள்ள விரும்பினான். ஹஸன் புறத்தால் பமுஸ்ஸுல்ஹ் என்னுமிடத்தை சிங்காரிக்க ஏற்பாடுசெய்தான். மாமூன் தனது குடும்பத்தார், அரசாங்க அங்கத்தினர், பணிமக்கள் யாவருடனும் அங்குசென்றான். 19-தினங்கள் அங்கு விருந்து நடந்தது. ஹஸனே யாவருக்கும் விருந்தளித்து வந்தான். அவன் குதிரைகள், பசுக்கள், திர்ஹம்கள், தீனார்கள் இவைகளில் ஒருதொகையை காகிதத்துண்டுகளில் வரைந்து சுருட்டி பனீஹாஷிம்கள், சேனாதிபதிகள், அரசாங்க அங்கத்தினர்கள் இவர்கள்மீது சொரிந்து அவரவர் கரத்தில் கிடைக்கும் காகிதங்களில் குறிப்பிட்டிருப்பவைகளை கஜானாவில் வசூலித்துக்கொள்ளும்படிக் கூறிவிட்டான். பொதுமக்களுக்கு திர்ஹம், தீனார், பாத்திரங்கள் இவைகளை யீய்ந்தான். மாமூனுக்காக நவரத்தினங்கள் பதிந்து தங்கக்கம்பிகளால் நெய்யப்பட்ட கம்பளமொன்றைத் தயாரித்திருந்தான். அவன் அதன்மீதமர்ந்த நேரத்தில் முத்துக்கள் சொரியப்பெற்றன. இக்கேளிக்கையில் ஹஸன் பின் ஸஹல் 5,00,00,000-திர்ஹம் செலவிட்டான். மாமூன் அங்கிருந்து திரும்பும்போது பமுஸ்ஸுல்ஹை ஹஸனுக்கு

ஜாகீராகக் கொடுத்து, ஒருகோடி திர்ஹம் ரொக்கத்தையும், பாரஸீகம், அஹ்வாஜ் இப்பிரதேசங்களின் ஒருவருஷத்திய தீர்வையையும் சன்மானமாகக் கொடுத்தான்.

மாமூனின் குணாதிசயங்களுள் மிருதுத்தன்மையும், பரந்தநோக்கமும் குறிப்பிடத்தக்கவை. தர்க்கங்களில் பலர் கடினவார்த்தைகளைக் குறிப்பிட்டு விடுவர்; அவைகளையும் சகித்துக்கொள்வான். ஒருவிஷயத்தில் அவனது அபிப்பிராயம் பிழையானதா யிருந்து, அரசாங்க அங்கத்தினருள் யாரேனும் அதைத் தெரிவித்தால் தனது அபிப்பிராயத்தை விட்டுவிடுவான். ஒருதடவை முஆவியா பின் அபிஸுப்யான் (ரலி.) அவர்களைச் சபிக்குமாறு கட்டளை வரைந்தான். இதையறிந்த நீதிபதி யஹ்யா பின் அக்தம் என்பார் சென்று "பொதுமக்கள் இதைச்சகியார். இதனால் குழப்பம் மிகைப் பட்டுவிடவுங்கூடும். மதவிஷயங்களில் ஒவ்வொரு வர்க்கத் தையும் அதனதன் அபிப்பிராயப்படியே விட்டுவிடவேண் டும். கலீபா ஒரு குறிப்பிட்ட குழாத்தினரைச் சேர்ந்திருப் பதாய்க் காண்பித்துக்கொள்வது அரசியல் ஒழுங்குமுறைக் கிணங்க எவ்விதத்தாலும் உசிதமாகாது" என்றனர். மாமூன் இப்புத்தியைக் கேட்டு, அக்கட்டளையை நிறுத்திவிட் டான். அஃது முத்திரையுடன் பதிவகத்திலேயே வைக்கப் பட்டு விட்டது. இங்ஙனமே ஷீஆக்கொள்கையின் மீதுள்ள ஆவேசத்தால் முதஆ (ஒரு ஸ்திரீக்கு ஒரு பொருளைக் கொடுத்து அவளைச் சொந்தமாக்கிக் கொள்ளல்) செய்ய அனு மதித்துவிட்டான். நீதிபதி யஹ்யா "முதஆ விபசாரமே யாகும்" என்றனர். "எப்பிரமாணத்தாலோ?" வென மாமூன் கேட்க அவர்கள் "குர்ஆன் மாதர்களையும், அடிமைப் பெண்களையுமே அனுமதிக்கின்றது. முதஆவில் சொந்த மாக்கப்படும் ஸ்திரீ மனைவியாகாள். அவளுக்குச் சொத் துரிமை கிடையாதன்றோ?. அடிமைப்பெண்ணென விற்கவும்

முடியாது. இங்ஙனமிருக்க அவளை யாங்ஙனம் சொந்த மாக்கிக்கொள்வதை யனுமதிக்கக்கூடும்?'' என்றார்கள். மாமூன் பதிலளிக்க முடியாதுபோய் தனதெண்ணத்தை விட்டுவிட்டான். மாமூன் தன்னைச்சேர்ந்த ஒவ்வொரு வருடையவும் அந்தரங்க குடும்ப விஷயங்களையும், பிரஜை கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்திருந் தானாதலின் எவ்விஷயத்திலேனும் அவனை ஏமாற்றுதல் சாத்தியமற்றதாக விருந்தது. கவிகளின் உண்மைப் பொருட்களைப் பகுத்தறியும் சக்தியையுடைத்தாயிருந்தான். அவனும் கவிகூறுவதுண்டு. சங்கீதத்திலும் அவனுக்குப் பிரீதியதிகம். நபீத் அருந்திவந்தான்.

### மரணம்

ஹி. 218-ல் ரிக்காவிலிருந்து ரூம்மீது படையெடுத் துச்சென்றபோது பதந்தூன் என்னுமிடம் போய்ச்சேர்ந் ததும் அவனுக்கு ஜுரம் கண்டது. ரஜப், 18-ல் அங் கேயே ஆவிநீத்தான். அவனது சவம் தர்ஸூஸுக்குக் கொண்டுசென்று நல்லடக்கம் செய்யப்பட்டது. அவ்வமயம் அவனது வயது 48. கிலாபத்தை நிர்வகித்தது இருப தாண்டுகள், ஐந்துமாதங்கள், மூன்று தினங்களாம். இதில் துவக்கத்து ஆறுவருடங்களை மர்வில் கழித்தான்.

### பிரதிநிதியை நியமித்தல்

மாமூன் தனது சகோதரன் முஃதஸிமைமட்டும் பிரதி நிதியாக நியமித்தான். அவனது மூதாதைகள் புரிந்து வந்த பழைய பிழையை மேற்கொள்ளவில்லை. மரணநேரத் தில் அரசியல் சம்பந்தப்பட்ட முக்கிய விஷயங்களைப்பற்றி அவனுக்கு விவரமாக எழுதிவைத்தான்.

## 8. முஃதஸிம்

அபூஇஸ்ஹாக் முஹம்மத் பின் ஹாரூனுர்ரஷீத் என்னும் இவன் ஹி. 179-ல் பாரிதா வென்னும் அடிமைப்பெண்ணுக்கு ஜனித்தான். மாமூனின் காலத்தில் ஷாம், மிஸ்ர் இவைகளில் அதிபனாக விருந்தான். இவனது வீரத்தைக் காரணமாகக்கொண்டு மாமூன் இவனை மிகவும் மதித்து வந்தான். இதனாலேயே தனது புதல்வன் அப்பாஸ் என்பானையும் விடுத்து இவனைத் தனக்குப் பிரதிநிதியாக நியமித்தான். மாமூன் மரண மடைந்த மறுதினமான கி. பி. 833, ஆகஸ்ட், 10-க்குச் சரியான ஹி. 218, ரஜப், 19-ந்தேதி தர்ஸூஸில் இவனுக்காக பைஅத் வாங்கப்பெற்றது. இவன் செய்த முதற் காரியம் மாமூனால் நிர்மாணிக்கப்பெற்ற துவானாவை இடித்து விட்டு, அங்கு குடியேறியிருந்தவர்களை யவரவர்களில்லங்களுக்குத் திரும்பிவிடச் செய்ததுடன் அங்கிருந்த ஆயுதங்கள், சொத்துக்கள் இவைகளைத் தான் கைப்பற்றிக்கொண்டும், அங்ஙனம் கொண்டுவர முடியாதவைகளை எரித்துவிட்டும் ஷஃபான், 30-ந்தேதி பக்தாதுக்குத் திரும்பினதேயாம்.

### மந்திரிப்பதவி

முஃதஸிமின் முதன் மந்திரி பலல் பின் மர்வான் பின் மாஸரக்ஸ் என்பானவான். இவன் கிறிஸ்துமதத்தைச் சேர்ந்தவனாவான். முஃதஸிம் இளவரசனாக விருக்குங்காலத்தில் அவனது இலிபி யஹ்யா ஜுர்மகானீயின் காரியாலயத்தில் ஒரு உத்தியோகத்திலமர்ந்தான். இவன் கணிதத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்ததுடன் சுத்தமாக எழுதவுங் கற்றிருந்தானாதலின் யஹ்யாவுக்குப் பிறகு முஃதஸிம் இவனையே அக்காரியாலயத்தின் தலைவனாக நியமித்

தான். தர்ஸூஸில் முஃதஸிமின் கிலாபத்திற்காக பைஅத் வாங்கப்பட்டபோது அவனுக்குப் பிரதிநிதியாக பக்தாதி லிருந்த இந்த பலல் பக்தாதில் அவனுக்காக பைஅத் வாங்கிக்கொண்டு அரசியல் விஷயங்களைக் கவனித்து வந்தான். முஃதஸிம் கிலாபத்தின் தலை நகரத்துக்குச் சென்றதும் இவனையே மந்திரியாக்கிக்கொண்டு அரசியல் விஷயங்கள் யாவையும் இவன் வசமே ஒப்புவித்துவிட்டான். புராதன பேர்வழியாதலின் பலல் முஃதஸிமைக் கவர்ந்துகொண்டு சுயநலத்தை மேற்கொண்டு விட்டான்; அவனது கட்டளைகளையும் பொருட்படுத்துவதில்லை. சில சமயங்களில் முஃதஸிம் தனது செலவுக்கு இவனிடம் கேட்டும் இவன் மறுத்துவிட்டதுண்டு. சுயநலமிகள் முஃதஸிமை இவனுக்கு விரோதமாகத் தூண்டினார்கள். முஃதஸிம் இவனையொடுக்குதற்காக வேறு இருமந்திரிகளை நியமித்தான். அஹ்மத் பின் அம்மார் என்பானிடம் செலவுப்பதிவகத்தையும், நஸ்ர் பின் மன்ஸூர் என்பானிடம் தீர்வைப்பதிவகத்தையும் ஒப்புவித்தான். பலல் இவர்களுக்கும் விரோதமாகக் கங்கணங் கட்டினான். இச்சச்சரவு நீண்டகாலம் நடைபெற்று வந்தது. முஃதஸிம் கணக்குகளைப் பரிசோதித்தபோது பொருந்தொகை துண்டுவிழுந்தது. இதற்காக 10,00,000 தீனார்களை அவனிடம் வசூல் செய்ததுடன் இவ்வளவே பெறுமானமுள்ள அவனது சொத்துக்களையும் பறிமுதல் செய்து, மூஸிலின் பாதையிலுள்ள 'ஸின்' என்னும் ஓரூரில் அவனைச் சிறைசெய்துவிட்டான்.

## அஹ்மத் பின் அம்மார், இப்னு ஜையாத்

பலலுக்குப்பிறகு பிரதமமந்திரிப்பதவி அஹ்மத் பின் அம்மாருக்குக் கிடைத்தது. அவன் கல்வியில் கிஞ்சிற்றே பயின்றவனாதலின் முஃதஸிம் அவனை நீக்கிவிட்டு இப்னு ஜையாத் என்பானை நியமித்தான். இவன் பெயர் முஹம்மத்

பின் அப்துல்மலிக் பின் அபான் பின் ஹம்ஜா வென்பதாம். அபான் என்பான் வஸ்காரவில் குடியிருந்துவந்த ஒரு கிராம வாசியாவான். அங்கிருந்து பக்தாதிற்கு எண்ணெய் கொண்டுவந்து விற்றுக்கொண்டிருந்தானாதலின் "ஜையாத் = எண்ணெய்க்காரன்" என்னும் சிறப்புப்பெயரால் வழங்கி வந்தான். முஹம்மத் பக்தாதில் இலக்கிய நூற்களைக் கற்றுப் பிரசித்தியடைந்தான். இலக்கண நிபுணரான அபூஉத்மான் மாஜினீ என்னும் பெரியார் தமக்கேற்படும் சந்தேகங்களை இவனிடமே தீர்த்துக்கொள்வர். துவக்கத்தில் இவன் கிலாபத்தின் காரியாலயத்தில் இலிபியாகவிருந்தான். மந்திரியான அஹ்மத் பின் அம்மார் என்பான் ஒருதடவை முஃதஸிமிடம் ஒரு இலிகிதத்தைக் கொடுத்தான். இதில் 'கலா' (புல்) வென்னும் பதம் குறிக்கப்பட்டிருந்தது. முஃதஸிம் கலாவின் பொருளைக்கேட்கவே அஹ்மத் ஒன்றுந்தெரியாது விழித்தான். முஃதஸிம் "கலீபா கல்வியில்லாதவன்; மந்திரி அறிவிலி. இங்ஙனமிருந்தால் காரியம் எப்படி நடக்கும்? காரியாலயத்திலிருந்து ஒரு இலிபியைக் கூப்பிடும்!" என்றான். இப்னுஜையாத் கூப்பிடப்பட்டான். இவன் அதன் பொருளையும், அதன் வகைகளையும், ஒவ்வொன்றுக்குமுள்ள பெயர்களையும் விவரித்துக் கூறினான். இவனது திறமையைக்கண்டு முஃதஸிம் சந்தோஷமடைந்து மந்திரிப்பதவியை இவனுக்களித்துவிட்டான். இவன் முஃதஸிம், வாதிக், முதவக்கில் இவர்களது காலம்வரை அவ்வுத்தியோகத்திலேயே யிருந்தான்.

## இப்னு அபீதாவூத்

அஹ்மத் பின் அபீதாவூத் அயாதீ மந்திரியாயிராது போயினும் மந்திரிகளைவிட அதிகமான மதிப்புடையோனாக விருந்தான். மாமூனிடம் நீதிபதி யஹ்யா அவர்களுக்கிருந்த மதிப்பு முஃதஸிமிடம் இவனுக்கிருந்தது. இவன்

கன்ஸரீன் பிரதேசத்தைச்சேர்ந்த ஒரு கிராமவாசியாவான். இவனது குடும்பத்தொழில் வியாபாரம். இவன் பஸராவில் ஹி. 160-ல் ஜனித்தான். அங்கேயே போஷிக்கப்பட்டான். பிறகு பக்தாதுக்குவந்து நீதிபதி யஹ்யா பின் அக்தம் அவர்களின் கூட்டங்களிற் கலந்துகொள்ளத் தொடுத்தான். அவர்கள் மாமூனின் ஆக்ஞைப்பிரகாரம் தர்க்க மன்றத்திற்கு அறிஞர்களைப் பொறுக்கியெடுத்தபோது அதில் இவனையும் சேர்த்தார்கள். இவனது தர்க்கம் மாமூனுக்குப் பிரியமாய்த்தெரியவே இவனைக் கண்ணியப்படுத்தி வந்தான். இறந்துபோகுந்தருணத்தில் இவனை ஒவ்வொரு விஷயத்திலும் ஆலோசனை கலந்துகொள்ள வேண்டுமென முஃதஸிமிடம் கூறியுஞ்சென்றான். எனவே இவனது வார்த்தைகளில் ஒன்றையும் முஃதஸிம் தட்டிநடப்பது கிடையாது. இவன் சிபார்ஸு செய்யும் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொள்வான். ஒருதடவை முஃதஸிம் உடைய சேனாதிபதி அப்ஷீன் என்பான் அபூதல்ப் காஸிம் பின் ஈஸா இஜ்லீ என்னும் பெயருடைய அரபித்தலைவன்மீது கொலைக்குற்றஞ் சாட்டி, பழிக்குப்பழியாக அவனைக் கொன்றுவிடக் கருதினான். இதையறிந்த இப்னுஅபீதாவூத் கலீபாவிடம் போய்வருவதற்குள் தாமதமாய்விடுமென்பதையும், அதற்குள் காரியம் முடிந்துவிடுமென்பதையும் உன்னி, உடனே குதிரைமீதேறி அப்ஷீனிடம் சென்றான். அங்கு கொலையாளிகள் அபூதல்பைக் கொல்வதற்குத் தயாராயிருந்தார்கள். சீக்கிரமாக முன்னேறிச்சென்று “ அபூதல்பைக் கொல்லாமல் என்னிடம் ஒப்புவிக்கும்படி கலீபா கூறியிருக்கிறார்” எனக் கூறிவிட்டு, அங்கு பிரசன்னமாயிருந்தோரை முன்னோக்கி “ அபூதல்ப் கொல்லப்படாதிருக்கும்போதே நான் கலீபாவின் ஆக்ஞையைக் கூறிவிட்டேனென்பதற்கு நீங்கள் சாக்ஷிகளாயிருங்கள் !” எனவே

யாவரும் "நாங்கள் சாக்ஷிகளாயிருக்கிறோம்" என்றனர். இதற்குப்பிறகு முஃதஸிமிடம் சென்று "நேரமில்லாததால் தங்களைக் கலந்துகொள்வதற்கு முன்னமேயே தங்களது நல்லெண்ணத்தை நம்பியே நான் இங்ஙனம் செய்யத் துணிந்தேன்" எனக்கூறி, விஷயங்கள் யாவையும் விவரித்தான். இவனது செய்கையை முஃதஸிம் மெச்சிக்கொண்டு அபூதல்பைத் தருவித்து அவனை விடுவித்ததுடன் அவனுக்கு வெகுமதிகளையும் அளித்தான். பிறகு அப்ஷீனையுமழைத்து கலீபாவின் அனுமதியில்லாது பழிக்குப்பழி வாங்கத் துணிந்ததைப்பற்றிச் சினந்துகொண்டான்.

பின்னொருதடவை காலித் பின் யஜீத் ஷைபானீயென்பான் தனது மாகாணத்தின் கிஸ்தியை யனுப்பாததற்காக முஃதஸிம் கோபித்துக்கொண்டு அவனையழைத்துத் தண்டிக்கக் கருதினான். இப்னு அபீதாவூத் அவனுக்காக பரிந்து பேசினான். முஃதஸிம் அதையொப்புக்கொள்ளாது கோபத்தில் மௌனமாயிருந்தான். இதைக்கண்ட இப்னு அபீதாவூத் நாற்காலியை விட்டெழுந்து கீழேயுட்கார்ந்துகொண்டான். அதற்கு முஃதஸிம் காரணங்கேட்கவும் "தனது சிபார்ஸு ஒப்புக்கொள்ளப்படாதவன் அரசனையண்மித்திருக்கத் தக்கோனுகான்" எனவும் முஃதஸிம் "நீர் உமது ஆசனத்தில் உட்காரும். உமது சிபார்ஸு ஏற்றுக்கொள்ளப்படும்" என்றான். இதைச் செவியுற்றதும் இவன் சந்தோஷமடைந்து தனது ஆசனத்தில் அமர்ந்ததுடன் "அவரை கலீபா தமது மனச்சம்மதியுடன் விடுவித்துவிட்டதற்கான அறிகுறியும் வெளியிடப்படவேண்டும்" என்றான். காலிதுக்கு முஃதஸிம் அரசாங்க ஆடையொன்றையும், ஆறுமாதச் சம்பளத்தையுமளித்து விடுதலை செய்தான். அரபித்தலைவர்களுள் காலித் தனிச்சிறப்புப் பெற்றவனு யிருந்தமையான் அவன் கைதுசெய்யப்பட்

டதைச் செவியுற்றதும் அநேகர் கிலாபத்மாளிகையின் வாயிற்படியில் ஒன்றுசேர்ந்திருந்தனர். அன்னார் எண்ணியிருந்ததற்கு மாற்றமாய் அவன் அரசாங்க ஆடையுடன் வெளிவந்ததைக்காணவும் யாவரும் சந்தோஷங்கொண்டு "அரபித்தலைவனை விடுதலையடையச்செய்த அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துகிறோம்" என ஆரவாரித்தனர். காலித் இதைச் செவியுற்றதும் "வாய் மூடுங்கள்! அரபித்தலைவன் நானல்லேன். அஹ்மத் பின் அபீதாவூதேயாவான்" என்றான். முஃதஸிமின் காலத்தில் துர்க்கியர்கள் அதிகமாயிருந்ததால் பெயரளவிலிருந்த அரபித்தலைவர்களுக்கிருந்துவந்த சொற்ப மதிப்பும் இதே இப்னுஅபீதாவூதாலேயே நிலைத்திருந்தது. இவன் அரபிகளை மிகவும் கவனித்துவந்தான். மார்க்கசட்டங்களில் நிபுணனும், இல்முல்கலாம் (மார்க்க மூலக்கொள்கைகளை யுக்தியின்படி விவாதிக்கும்) கலையில் ஹையாஜ் பின் அலா ஸுல்லமீ, வாஸில் பின் அலா கஜாலெ கபீர் இவர்களின் சீஷனும் இருந்தான். இக்காரணத்தாலேயே மார்க்க விஷயங்களில் முஃதஜிலாக்களைச் சேர்ந்திருந்தான். பொதுமுஸ்லிம் அறிஞர்கள்மீது மாமூன், முஃதஸிம் இவர்களின் காலத்தில் புரியப்பட்டுவந்த கொடுமைகளுக்கெல்லாம் இவனே மூலக்காரணஸ்தனாயிருந்தான். 'குர்ஆன் சிருஷ்டி' என்னும் பிரசினையில் மிகவும் பிடிவாதமாயிருந்துவந்தான்.

## அலவிய்யாக்கள்

முஃதஸிம் உடைய கிலாபத்தின் துவக்கத்தில் இமாமிய்யா குழாத்தினரின் ஒன்பதாவது இமாமான முஹம்மத் ஜவாத் என்பார் தமது 25-ம் வயதில் ஹி. 220-ல் இறந்துபோயினர். மாமூனின் புதல்வியான உம்முல்பலல் அவருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருந்தார். விதவையான பின் அப்பெண்மணி தனது சிறிய தந்தை முஃதஸிமிடம்

வந்துவிட்டார். முஹம்மத் ஜவாதின் புதல்வரான அபுல் ஹஸன் அலீ ஹாதீயின் வயது அவ்வமயம் எழு. ஷீஆக்கள் அவரையே தங்கள் இமாமாக ஏற்றுக்கொண்டார்கள். ஜைதிய்யா குழாத்தினரின் இமாமான முஹம்மத் பின் காஸிம் பின் அலீ பின் உமர் பின் இமாம் ஜைனுல் ஆபிதீன் என்பார் கூபாவிலிருந்து தாலிகானுக்குச் சென்று குராஸான்வாசிகளிடம் தமது கிலாபத்திற்காக பைஅத் வாங்கத் தொடுத்தனர். ஒரு பெருங்கூட்டம் அப்பகுதியில் அன்னாருடன் சேர்ந்து கொண்டது. அன்னார் பகிரங்கமாக தமது கிலாபத்தின் கொடியை யுயர்த்தினர். குராஸானின் அதிபனான அப்துல்லாஹ் பின் தாஹிர் அன்னாரை எதிர்ப்பதற்காகச் சேனைகளை யனுப்பவே அன்னார் தோல்வி யடைந்து அங்கிருந்து வேறுபுறம் சென்று, இடைவழியில் நிஸாவென்னுமிடத்தில் தங்கினர். இதையறிந்த அந்த ஜில்லாவின் தலைவன் அன்னாரைக் கைதுசெய்து அப்துல்லாஹ் பின் தாஹிரிடம் அனுப்பிவைத்தான். அவன் முஃதஸிமிடம் அனுப்பிவைத்தான். முஃதஸிம் ஹி. 219-ல் ஸாமிராவில் அன்னாரைச் சிறை வைத்து விட்டான். பெருநாள் இராத்திரியில் ஜனங்கள் ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும்போது அன்னார் சிலருடைய உதவியினால் சிறையிலிருந்து வெளிப்பட்டுச் சென்றுவிட்டனர். பிறகு அன்னாரைப்பற்றி எத்தகைய தகவலுங் கிடைக்கவில்லை. ஜைதிய்யாக்களில் ஒருகூட்டம் அன்னார் இமாம் மஹ்தீயெனவும், உயிருடன் மறைந்து விட்டனரெனவும், உலகம் அதிக்கிரமத்தாலும், அநீதியாலும் நிரம்பிவிடுங்கால் வெளிப்பட்டு உலகத்தை நீதத்தால் நிரப்புவரெனவுங் கொள்கின்றனர். மஸ்ஊதீ யென்பார் விவரித்துள்ளதற்கிணங்க ஹி. 332 வரை அக்கொள்கை பூண்டவர்களிருந்ததாய்த் தெரியவருகின்றது.

## சேனை

முஃதஸிம் சிப்பாயாயிருந்ததால் அவனது கவனம் அதிகமாக சேனையின்புறமே திரும்பியது. அவன் துர்க்கியர்களின் வீரத்தையும், தைரியத்தையுங்கண்டு அவர்களில் ஒரு பெருந்தொகையை ஒன்றுசேர்த்தான். ஆயிரக்கணக்கில் துர்க்கிய அடிமைகளை வாங்கினான். இதற்குப்பிறகு ஈரானியர்கள், குராஸான்வாசிகள் இவர்களுடன் துர்க்கியர்களும் சேனையில் மிகுந்து காணப்பட்டார்கள். அரபிகள் நீக்கப்பட்டார்கள். மிஸ்ர், யமன் இத்தேசவாசிகளுடன் பனீகைஸ் வர்க்கத்தவரில் ஒரு கூட்டமும் சேர்ந்து "மகாரிபா = மேற்குத்தேசத்தவர்" என்னும் பெயரால் ஒரு அரபிய சேனை மட்டும் இருந்தது. பர்கானா, அஷ்ரூஸனா இவ்விடங்களின் துர்க்கியர்கள் காட்டுமிராண்டித்தன்மையும், அறியாமையும் மிகுந்தோராயிருந்தமையான் பக்தாதின் வீதிகளில் கிஞ்சிற்றும் அச்சமின்றியே குதிரைகளை விரட்டிவந்ததால் அநேக ஸ்திரீகளும், குழந்தைகளும் இடறிவீழ்ந்து காயமடைந்தும், சிலசமயங்களில் ஆவிதுறந்தும் வந்தார்கள். குராஸான்சிப்பாய்கள் அவர்களைப்பிடித்துத் தண்டனையளிப்பார்கள். இக்குழப்பம் மிகுந்து, முஃதஸிமிடம் முறையிடுகளும் வந்தனவாதலின் அவன் ஒரு புதியவிடத்தைத் தயாரித்து அவர்களை அதிலிருக்கச் செய்யக் கருதினான். இக்கருத்தினால் ஸாமிராவை நிர்மாணித்தான். முஃதஸிம் துர்க்கியர்களை மிகவும் மதித்துவந்தானாதலின் அவர்களின் ஆடைகளை ஏனையோரின் ஆடைகளைவிட மேம்பட்டவையாய் வைத்திருந்தான். அவ்வாடைகள் ஜரிகைவேலைப்பாடுகள் நிரம்பப்பெற்ற பட்டாடைகளாயும், பட்டிகள் தங்கநூலால் நெய்யப்பட்டவைகளாயுமிருந்தன. அவர்களிலேயே சிலதலைவர்களைச் சேனாதிபதிகளாக நியமித்து, இஸ்லாமிய கிலாபத்தின் வருங்காலத்தை

அவர்களின் கைவசமே ஒப்புவித்தான். அவர்களுள் சிலரது நிலைமைகளைக் கீழே குறிப்பிடுகிறோம் :—

1. **அப்ஷீன்.** இவனது பெயர் ஹைதர் பின் காவூஸ் என்பதாம். இவன் அஷ்ரூஸனாவின் அரசனது புதல்வனாவான். அப்ஷீன் என்பது அவனது குடும்பப்பட்டமாம். மாமூனின் காலத்தில் முஃதஸிமிடம் இவன் உத்தியோகத்திலமர்ந்தான். இவன் பராக்கிரமசாலியாகவிருந்ததால் மிஸ்ர், ஷாம் இப்பிரதேசங்களின் அதிபனாக முஃதஸிம் இருந்த காலத்தில் அவன்மூலமாய்ச் சேனைகளின் பணிகளை வாங்கினான். புர்காவில் ஒருதடவை புரட்சி தலைகிளம்பிய போது இவனே அங்குசென்று அதையொடுக்கினான். கலீபாவாயின பிறகு நாம் மேலே வரைந்துள்ளபடி பாபகேகுர்ரமீயை எதிர்ப்பதற்காக இவனையனுப்பினான். அங்கு இவன் வெளிப்படையான வெற்றியடைந்து பெண்டு பிள்ளைகளுடன் அவனைக் கைதுசெய்து கொண்டுவந்தான். முஃதஸிம் இதனாலடைந்த ஆனந்தத்தால் இவனைத் திரும்பிச்செல்லக் கட்டளையிட்டுவிட்டு ஒவ்வொரு தங்குமிடத்திலும் இவனுக்காகக் குதிரையையும், புதிய உடுப்பையும் அனுப்பிக்கொண்டிருந்தான். இவன் ஸாமிராவில் தனது இருப்பிடத்திற் பிரவேசிக்குங்கால் இரண்டு விலையுயர்ந்த முத்துமாலைகளை யவனுக்குச்சூட்டினதுடன் 10,00,000 திர்ஹம் இவனுக்கும், 10,00,000-திர்ஹம் இவனது சேனைக்கும் வெகுமதியாகக் கொடுத்தான். முஃதஸிம் ரூம்மீது படையெடுத்தபோது அவனது சேனைகள் மூன்றாக வகுக்கப்பட்டிருந்தன. அவைகளில் ரூம்தேசத் தரசனான தெளபீல் என்பானை வெற்றிகொண்ட பகுதியின் சேனாதிபதி அப்ஷீனே. இவ்வெற்றியால் இவனது மதிப்பு பின்னும் அதிகமாயது. தற்போது தான் அடைந்துள்ள மதிப்பைக் கண்ணுற்று தான் எவ்விதத்தாலும் தனது

தேசமான மாவராவுன்னஹர் பிரதேசத்திற்குத் தனிப் பட்ட அரசனாகவேண்டுமென்று எண்ணங்கொண்டான். தனது இக்கருத்தின் அறிகுறியாக இவன் பாபக்கின் யுத்தத்திலும், அதற்குப் பிறகும் ஏற்பட்ட சகல வெகு மதிகளையும் தனது சொந்த ஆட்கள் மூலமாகத் தன் தேசத் திற்கு அனுப்பிவந்தான். இடைவழியில் குராஸான் இருந் தது. அதன் அதிபன் அப்துல்லாஹ் பின் தாஹிர் என்னும் நிபுணனாகவிருந்தான். அவன் அவ்வாட்களைத் தணிக்கை செய்து கலீபாவுக்குச் சகல செய்திகளையும் தெரிவித்துக் கொண்டிருந்தான். அப்ஷீனும் இதையறிந்து கொண்டான். எனவே, அப்துல்லாஹ் குராஸானிலிருக்கும்வரை தனது கருத்து ஈடேறாதெனக்கண்டு, எவ்விதத்தாலும் முஃதஸிமை யவனுக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டு, அவனை நீக்கி விட்டு அவனது ஸ்தானத்தில் தான் அமர்ந்துவிடவேண்டு மென விரும்பினான்.

அக்காலத்தில் தப்ரிஸ்தானில் 'தாஹிரிய்யா' வர்க் கத்திற்கே பரம சத்துருவான மாஜ்யார் என்னும் பெய ருடைய தலைவனிருந்தான். அவன் குராஸான் அரசாங்கத் திற்குக் கீழ்ப்பட்டிருந்தும் தனது தீர்வையை குராஸானுக் கனுப்பாது நேரே பக்தாதிற்கு கலீபாவிடமே யனுப்பி வந் தான். கலீபாவிடமிருந்து அத்தொகை குராஸானுக் கனுப்பப்பட்டு ரசீது வாங்கப்பட்டு வந்தது. மாஜ்யாரை அப்துல்லாஹ்வுக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டால், அக் குழப்பத்தை யொடுக்குதற்காக குராஸானின் தலைமைப் பதவியை கலீபா தனக்களிப்பானென அப்ஷீன் கருதினான். எனவே, இவன் தனது சகோதரன் காஷ் என்பான் பெய ராலும், அவன் கைப்படவும் மாஜ்யாரின் சகோதரன் போஹ்யார் என்பானுக்குக் கடிதங்கள் எழுதத் தொடுத் தான். அவைகளில் அவனை அப்துல்லாஹ்வுக்கு விரோத

மாய்ப் புரட்சிசெய்யும்படித் தூண்டினுன். இவைகளைக் கண்டதும் அவ்விரு சகோதரர்களும் புரட்சிசெய்யத் தொடுத்துத் தீர்வையை நிறுத்திக்கொண்டு, தப்ரிஸ்தானில் ஒரு மலைப்பிரதேசத்தின் கோட்டைக்குட் பதுங்கிவிட்னர். அப்துல்லாஹ் தனது சிறியதந்தை ஹஸன் பின் ஹஸன் பின் முஸ்அப் என்பானிடம் ஒரு பெரிய சேனையைக் கொடுத்து, புரட்சிக்காரர்களின் தீமைகளைவிட்டும் காக்கும்படி ஜுர்ஜான்புறம் அனுப்பிவைத்தான். முஃதஸிமும் முஹமத் பின் இப்ராஹீம் பின் முஸ்அப் என்பானையனுப்பிவைத்துப் பிறகு ஹஸன் பின் காரின் தபரீ என்னும் சேனுதிபதியை அவனுக்குதவியாக அனுப்பி, மன்ஸூர் பின் ஹஸன் என்னும் பெயருடைய 'தும்பாவந்த்' என்னும் பிரதேசத்தின் தலைவனுக்கு ரையின் புறமாக தப்ரிஸ்தான்மீது படையெடுக்கும்படி வரைந்தான். அப்ஷீன் கருதியிருந்ததுபோல் இதற்காக அவன் அழைக்கப்படவில்லை. மாஜ்யாரை நான்குபக்கங்களிலும் சேனைகள் சூழ்ந்துகொள்ளவே அவன் அபயங்கோரி, ஹஸன் பின் ஹஸன் முன்பு பிரசன்னமானுன். இவன் அவனைத் தனது சிறிய தந்தையின் புதல்வனுன முஹம்மத் பின் இப்ராஹீம் வசம் ஒப்புவிக்கவே முஹம்மத் அவனை கலீபாவிடம் கொண்டு சென்றுன். அங்கு சென்று மாஜ்யார் உண்மையைக்கூறிவிட்டான். அவனது சகோதரன் போஹ்யார் என்பான் அப்ஷீனிடமிருந்து அனுப்பப்பெற்ற நிரூபங்கள் யாவையும் கலீபாவிடம் ஒப்புவித்துவிட்டான். அவைகளை வாசிக்கவும் இச்சம்பவங்கள் யாவற்றிற்கும் அப்ஷீனே காரணஸ்தனென்பதும், வெளிப்படையாக அவன் முஸ்லிமாகக்காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் தனது புராதன மதத்திலேயேயிருந்தானென்பதும், முஸ்லிம்களை யழிப்பதற்கான யோசனையிலேயே மூழ்கியிருந்தானென்பதும் தெளிவாகத்

தெரியவந்தது. அக்கடிதங்களில் ஒன்றிற் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:—

"நமது அரபியல்லாத சதமதத்தைத் தற்காப்பதற்காக என்னையும், உம்மையுந்தவிர்த்து பிறிதெவருமில்லை. பாபக் ஒருவனிருந்தானெனினும் தனது அறியாமையால் தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொண்டான். நான் அவனைத் தப்புவிப்பதற்காக எவ்வளவோ முயற்சித்தேன்; அவன் தனது மடமையின் காரணமாக எனது ஆலோசனைகளைக் கடைபிடித்தானல்லன். தற்போது நீர் புரட்சிசெய்யத் தொடுத்தால் யுத்தத்திற் பயின்றோரும், குதிரைவீரரும் என்னிடத்திலேயேயிருப்பதால் உம்மை எதிர்ப்பதற்காக இவர்கள் என்னையே யனுப்புவார்கள். அவ்வமயம் நம்மை எதிர்ப்பதற்கு யாராலும் முடியாது. அரபிகள் நாய்களைப் போன்றவர்களாவார்கள். அவர்கள் முன்பு ஒருதுண்டு மாமிசத்தைப் போட்டுவிட்டு அவர்கள் சிரங்களையுடைத்து விடலாம். மகாரிபாக்கள் மிகச்சிறிய தொகையினர்கள். ஷைத்தானின் (Satan) குழவிகளான இந்த குராஸான் வாசிகள் ஒருமணிநேரமே எதிர்ப்பார்கள். அவர்களது அம்புகள் தீர்ந்துபோனதும் அவர்களைக் கொன்றுவிடலாம். பிறகு நமது புராதனமதம் பழைய நிலைமையை யடைந்துவிடும்"

என்பதே. இக்கடிதத்தால் அப்ஷீனுடைய கெட்ட எண்ணமும், துன்மார்க்கமும் நன்கு வெளியாயினது. அஹ்மத் பின் அபீதாவூத் என்னும் நீதிபதி கலீபாவின் அடிமையான பகா என்பானுக்கு அப்ஷீனைச் சிறையில் வைக்கும்படிக் கட்டளையிட்டான். சின்னாட்களுக்குப்பிறகு அவன் அச்சிறையிலேயே இறந்துவிட்டான். அவன் சவம் தூக்கிவிடப்பெற்றது. பிறகு அதனுடனேயே கொளுத்தப்பட்டுவிட்டது.

2. ஈதாக். இவன் கஜர் பிரதேசவாசியும், ஸல்லாம் அப்ரஷ் என்பானின் அடிமையும், சமயற்காரனுமாவான். ஹி. 199-ல் முஃதஸிம் இவனை வாங்கி, இஸ்ஹாக் பின்

இப்ராஹீமுக்கு உதவியாளனாக நியமித்தான். முஃதஸி முக்கு இவன்மீது அதிக நம்பிக்கையிருந்தது. எவனை யேனும் கொல்லவோ, கைதுசெய்யவோ வேண்டுமாயின் இவன்வசமே ஒப்புவிப்பான். ரூம்தேச யுத்தத்தில் ஒரு பகுதிச் சேனைக்குத் தலைவனாய் இவனை நியமித்தான். முஃதஸிமின் காலத்தில் இவன் அவ்வுத்தியோகத்திலேயே யிருந்து, வாதிக்கின் கிலாபத்தில் சர்வாதிகாரியாய் விட்டான். கிலாபத்தின் தலைநகரத்துத் தலைமைத்துவம், சேனையின் தலைமைத்துவம், தபால், வாயிற்காப்பு இவ்வுத்தியோகங் கள்யாவும் இவன் கைவசமே யிருந்தன. ஹி. 235-ல் முதவக்கிலின் துவக்ககாலத்தில் கொல்லப்பட்டான்.

3. அஷ்னாஸ். இவனும் முஃதஸிமால் விலைக்கு வாங்கப்பெற்ற அடிமையேயாவான். இவனது தீரத்தைக் கண்ணுற்ற முஃதஸிம் அமூரியா யுத்தத்தின்போது சேனைக்கு முன்னணியில் இவனை நியமித்திருந்தான். முஃதஸிம் இவனை மிகவும் மதித்திருந்ததால் ஹி. 225-ல் தனக்கு முன்னால் தன் சமுகத்தில் உன்னத நாற்காலியில் உட்காரவைத்து கிரீடமணிவித்து, அவனது புதல்வி உத்ருஞ்சாவை அப்ஷீனின் புதல்வன் ஹஸன் என்பானுக்கு மணமுடித்துக் கொடுத்தான். வாதிக்கும் ஹி. 228-ல் இவனுக்கு வேலைப்பாடமைந்த கிரீடத்தையும், இரண்டு முத்துமாலைகளையும் அளித்தான். இவன் தனது உத்தியோகத்திலேயே நிலைத்திருந்து ஹி. 230-ல் மரணமடைந்தான்.

இவர்களைத்தவிர அஜீப் பின் அம்பஸா, வஸீப், பகா கபீர் அபூமூஸா முதலிய பிரசித்திபெற்ற சேனைத்தலைவர் களுமிருந்தார்கள். இவர்கள் யாவரும் துர்க்கியர்களாவார் கள். முஃதஸிம் அரபிகளைச் சேனையிலிருந்து நீக்கிவிட்டுத் தனது அரசுரிமையை இவ்வெளிநாட்டு மக்களிடம் ஒப்புவித்து விட்டான். சில சமயங்களில் அவன் அவர்களின்

நிலைமைகளைத் தானே கவனிக்குங்கால் அவர்களின் சுய நலத்தைக் கண்டுகொண்டு தனது பிழையை யறிந்து கொள்வதுமுண்டு. ஒரு தடவை அவன் இஸ்ஹாக் பின் இப்ராஹீமிடம் "நான் நான்கு பேர்வழிகளை போஷித்தேன். அவர்களுள் ஒருவனேனும் பயன்படக் கூடியவனாக வரவில்லை. அப்ஷீனின் நிலைமை தெரிந்ததே. அஷ்னுஸ் சோம்பேறி. ஈதாக் ஒன்றுக்குமுதவாதவன். வஸீப் எத்துவாரத்தையும் அடைக்கக்கூடாதவன்" எனக் கூறியுமிருக்கிறான். "இவர்கள் கண்ணியமிகுந்த வம்சத்தையோ, வர்க்கத்தையோ சேர்ந்தவர்களாயிருப்பின் தனது மூதாதையர்களின் நற்பெயரைச் சீர்குலைக்கக்கூடாதெனக் கருதுவார்கள். இன்னவகையைச் சேர்ந்ததென்றறியக்கூடாதவையும், பலன்தராதவையுமான கிளைகளையே இவர்களுக்கு ஒப்பிடலாம்" என இஸ்ஹாக் அதற்குப் பதிலளித்தான். இதற்குப்பிறகு பனீ அப்பாஸ்கள் கிலாபத்தை இழந்ததற்கும், பலங்குன்றிப் போனதற்கும் சகலவிதத்திலும் பொறுப்பாளி முஃதஸிமேயாவான். இவன் கிஞ்சிற்றும் யோசனையில்லாமல் இஸ்லாமிய கிலாபத்தின் வருங்காலத்தை அரபிகளின் கரங்களிலிருந்து இகலோக வாழ்வை மட்டும் நம்பியிருந்தோரும், வர்க்கத்துக் கண்ணியத்தைப் பற்றிக் கிஞ்சிற்றும் கருத்துக்கொள்ளாதோரும், கிலாபத் நிலைத்திருக்க வேண்டுமெனக் கவலைப்படாதோரும், இஸ்லாமிய மூலக்கொள்கைகளின் தத்துவங்களை அறியாதோரும், முஸ்லிம்களின் உரிமைகளைக் கண்ணியப்படுத்தாதோருமான அடிமைகளின் கரங்களில் ஒப்புவித்துவிட்டான். இதே காரணத்தால் பாலஸ்தீனில் அபூஹரப் முபர்கஃ யமானீ புரட்சி செய்யத் தொடுத்தான். அதன் விவரணம் வருமாறு :—

ஒரு துருக்கிய சிப்பாய் அவனில்லத்தில் தங்கி யிருக்கக் கருதினான். அவன் அவ்வமயம் வீட்டிலில்லாத தால் அவன் மனைவி சிப்பாயை வீட்டிற்குள் வராது தடுத் தார். சிப்பாய் அப்பெண்ணைச் சாட்டையாலடித்தான். அபூஹாரப் வீட்டிற்கு வந்ததும் அப்பெண் இதைக்கூறி விட்டுச் சாட்டையடியின் அடையாளங்களையும் காண்பித் தார். அவன் கோபத்தில் வாளையுருவிக்கொண்டு அச்சிப் பாயின்மீது பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டு முகமூடி யணிந்துகொண்டு அர்தன் பிரதேசத்தின் மலைகளுக்குச் சென்றுவிட்டான். அங்கு ஒருகாலம் வரை அவ்விடத்து மக்களுக்கு நற்புத்தி புகட்டிக்கொண்டிருந்தான். அப்பிர தேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் யாவரும் கொடுமைகள் காரணமாக அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களை யழைத்துக்கொண்டு அவன் யமன்புறம் சென் ஞன். அங்குள்ள சில தலைவர்களும், இப்னு பைஹஸ் என்னும் வர்க்கத்தலைவனும் அவனை யாதரித்தார்கள். ரஜா பின் ஐயூப் என்பானுக்கு முஃதஸிம் 1,000-பேர்கள் கொண்டதொரு சேனையைக் கொடுத்து அவனை எதிர்ப்பதற் காக வனுப்பினான். அபூஹாரபிடம் லக்ஷத்திற்கதிகமான கூட்டமிருப்பதைக் கண்ட ரஜா தடைபட்டுவிட்டான். அறுவடைகாலம் வந்து அபூஹாரபைச் சேர்ந்தோர் அறு வடைக்காகத் தமது நிலங்களுக்குச் சென்றுவிட்டு, அவ னிடம் 2,500-பேர்கள் மட்டுமே எஞ்சியிருந்தபோது ரஜா அக்கூட்டத்தை எதிர்த்து, அவர்கள் யாவரையும் கைது செய்துக் கொணர்ந்தான்.

## தீர்வைகள்

மாமூனின் காலத்து வருமானத்தை அக்காலத்திய பதிவுகளிலிருந்து அல்லாமா இப்னு கல்தூன் அவர்கள் தமது சரிதையின் முன்னுரையிற் குறிப்பிட்டிருப்பதே

போன்று முஃதஸிம் காலத்து வருமானத்தை குதாமா பின் ஜஃபர் என்னும் பெரியார் 'கிதாபுல் கிராஜ்' என்னுங் கிரந்தத்தில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளனர். இருகாலங்களும் நெருங்கியனவாதலால் பெரிய வித்தியாசமில்லாது, மாமூன் காலத்து மொத்தத்தொகையே ஏறக்குறைய இக் காலத்திலும் ஏற்படுகின்றது. எனவே இங்கும் அதைக் குறிப்பிடல் அவசியமென நாம் கருதவில்லை.

## வெளிநிலைமைகள்

முஃதஸிமின் காலத்தில் ரூம்தேசத்தில் தௌபீல் என்பான் அரசுரிமை செலுத்திவந்தான். இவன் மாமூனால் தோர்க்கடிக்கப்பட்டிருந்தானாதலின் அவ்வருத்தத்தை முன்னிட்டு இஸ்லாமிய எல்லைப்புறங்கள்மீது படையெடுக்கத்தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தான். முஃதஸிமின் சேனைகள் பாபக்கை எதிர்த்துக்கொண்டிருந்த சமயம் பாபக் "தற்போது இஸ்லாமிய சேனையில் பெரும்பாகம் என்னை எதிர்த்துக்கொண்டிருப்பதால் இச்சமயத்தில் நீங்கள் படையெடுத்தால் வெற்றியடையலாம்" என தௌபீலுக்கு எழுதினான். ரூமியர்கள் ஒருபுறம் எதிர்த்தால் தனதெதிர்ப்பு குறையுமென்பது இவனது கருத்து. தௌபீல் 1,00,000-சிப்பாய்களுடன் எதிர்க்க முன்வந்து ஜப்தராவைக் கொளுத்திவிட்டு, அங்கிருந்த முஸ்லிம்களைக் கொன்றுவிட்டான். பிறகு மல்திய்யாவின்புறம் முன்னேறிச்சென்றான். அங்கு 1,000-முஸ்லிம் பெண்மணிகளைக் கைதுசெய்தான். அப்பகுதியிலுள்ள கோட்டை கொத்தளங்களைச் சூரையாடினான். எதிர்ப்பட்ட முஸ்லிம்களின் நேத்திரங்களைக் குத்தி, அவர்களின் உறுப்புக்களைத் துணித்துக் கொன்றான். முஃதஸிமிடம் இச்செய்தி யறிவிக்கப்படவும் அவன் பதைபதைத்து அவ்வமயமே சேனையின் முற்பகுதியை யனுப்பிவிட்டுத் தான் புறப்படத் தயாராய்க்கொண்

டிருந்தான். அப்பகுதிச் சேனை ஜப்தரா போய்ச் சேர்ந்த போது ரூமியர்கள் அட்டூழியம் புரிந்துவிட்டுப் போய்விட்டனர். தற்போது அங்குள்ள முஸ்லிம்களுக்கு நிம்மதி கிடைத்துவிட்டதால் அவர்கள் மீண்டும் வந்து, தங்களில்லங்களிற் குடியேறினார்கள். பாபக்கின் விஷயத்தை முடித்துக்கொண்டதும் முஃதஸிம் தனது சமுகத்திலிருந்தோரிடம் "ரூமியர்களின் கெட்டியான கோட்டை எது?" வெனக் கேட்டான். "அமூரியாவே. தௌபீல் ஜனித்ததும் அங்கேயே" எனப் பதிலளிக்கப்படவும் முஃதஸிம் "ஜப்தரா நான் ஜனித்தவிடம். தௌபீல் அதைச் சூறையாடினான். நான் அமூரியாவை யழிக்கிறேன்" என்றான். அவன் சகல தளவாடங்களுடன் கூடிய தனது மாபெரும் சேனையுடன் ரூம்மீது படையெடுத்தான். சேனையின் ஒழுங்கு வருமாறு :—

சேனையின் முன்னணியில் அஷ்னாஸ், பிறகு முஹம்மத் பின் இப்ராஹீம் பின் முஸ்அப், வலது பாகத்தில் ஈதாக், இடது பாகத்தில் ஜஃபர் பின் அப்துல்லாஹ் கையாத், நடுவே முஃதஸிம். இங்ஙனம் சேனையை யொழுங்குபடுத்திவிட்டு, அப்ஷீன் இடம் ஒரு சேனையைக் கொடுத்து ஒரு தினத்தைக் குறிப்பிட்டு, அத்தினத்தில் 'அல்ஹதத்' வழியாய் அங்கோராவில் பிரவேசிக்கும்படியும், இங்ஙனமே அஷ்னாஸுக்கு தர்தூஸ் புறத்தால் ரூம் எல்லைப்புறத்தில் பிரவேசிக்கும்படியும் உத்தரவிட்டான். ஆனால் அஷ்னாஸ் மராஜுஸ்ஸகப் போய்ச் சேர்ந்தபோது அங்கேயே தங்கிவிடும்படியும், அவனுக்கு முன்னால் ரூம் தேசத்தரசனிருக்கிறானெனவும், லாமிஸ் நதியைக் கடந்துவந்து திடீரெனத் தாக்குதற்காகத் தயாராய்க் கொண்டிருக்கிறானெனவும் முஃதஸிம் கட்டளையிட்டான். அஷ்னாஸ் அங்கு மூன்று தினங்கள் தங்கிவிட்டான். பிறகு அவனது ஒற்றர்கள் ரூம் அர

சன் முன்னேறிச் சென்றுவிட்டதாயும், தற்போது அவன் அப்ஷீனுடைய சேனையைத் தாக்குவானெனவும் அறிவிக்கவே இதை உடனே முஃதஸிமுக்குத் தெரிவித்தான். முதஃஸிம் அப்ஷீனிடம் குதிரை வீரனொருவனையனுப்பி "கைஸர் உமதுபுறமே முன்னேறி வருகிறானாதால் நீர் நின்றுவிடும். எல்லாச்சேனைகளும் ஒருங்குசேரவே முன்னேறிச்செல்லுங்கள்" எனக் கட்டளையிட்டான். அப்ஷீனுக்கு இக்கட்டளை கிடைப்பதற்கு முன்பே அவன் முன்னேறிச் சென்றுவிட்டான். ரூம்தேசத்தரசனுடன் எதிர்ப்பும் ஏற்பட்டது; மிகவும் பயங்கரமான யுத்தம் நிகழ்ந்தது. மத்தியானம்வரை இஸ்லாமிய சேனைக்கு நஷ்டமேற்பட்டது. அதற்குப்பிறகு துர்க்கிய குதிரைவீரர்கள் எதிர்க்கவும் ரூமியர்கள் தோல்வியடைந்து ஓடினார்கள். இவ்வெற்றிக்குப்பிறகு அப்ஷீன் அங்கோராவின்புறம் சென்றான். அங்கு முஃதஸிம், அஷ்னாஸ் இவர்களுக்கு ஒருநாளைக்குப் பிறகு போய்ச்சேர்ந்தான். ரூம்தேசத்தரசன் தோல்வியடைந்துப் பிரிந்துபோன தனது சேனைகளை மீண்டும் ஒருங்குசேர்த்து யுத்தத்திற்கு முன்வந்தான். முஃதஸிம் தனது சேனைகளை மூன்று பிரிவுகளாக வகுத்து அமூரியாவின்புறம் கொண்டுசென்றான். அதன் வலது பகுதி அப்ஷீனின் தலைமையின்கீழும், இடது பகுதி அஷ்னாஸின் தலைமையின்கீழுமிருந்தன. முஃதஸிம் நடுவேயிருந்தான்.

அமூரியா அங்கோராவிலிருந்து ஏழு மன்ஜில் (ஒருநாள் பிரயாணத்திற்குப்பின் தங்குமிடம்) தூரத்திலிருந்தது. முந்தி அங்கு அஷ்னாஸ் போய்ச்சேர்ந்தான். அவன் தனது சேனையுடன் அதை நன்கு சுற்றிப்பார்த்து இரண்டுமைல்கள் தூரத்தில் கூடாரமடித்தான். ஹி. 223, ரமலான், 9-ந்தேதி முஃதஸிம் போய்ச்சேர்ந்தான். அவனும் சுற்றிப்பார்த்து மற்றொரு புறத்தில் அதேதூரத்தில்

தங்கினான். பிறகு அப்ஷீன் வந்தான். அவனும் இங்ஙனமே செய்தான். இஸ்லாமிய சேனையின் ஒவ்வொரு பகுதியிடமும் மரத்தினாலான பெரியபெரிய ஏணிகளிருந்தன. அவைகளை ஒவ்வொரு புறத்திலும் நகரத்தின் மதில் ஓரமாய் கொண்டுவந்து போட்டு, அவைகள்மீதிருந்துகொண்டு அம் பெய்யத் தொடுத்தார்கள். கோட்டையைத் தகர்த்தெறியும் ஆயுதங்களைப் பிரயோகித்துக்கொண்டும், பெரிய பெரிய கற்களையெறிந்துகொண்டுமிருந்ததால் மதிலின் ஒரு பகுதி தகர்ந்துபோயிற்று. அதைத்தாண்டிச்சென்று முஸ்லிம்கள் அந்தப்பக்கமாய் நகரத்திற்குட் புகுந்தார்கள். மிகவும் பயங்கரமான யுத்தத்திற்குப்பிறகு நகரத்திற் பிரவேசித்துவிட்டார்கள். ஐப்தரா, மல்திய்யா இப்பிரதேசங்களில் ரூமியர்களால் கொல்லப்பட்ட முஸ்லிம்களுக்குப் பழிக்குப் பழி இங்கு அவர்களுக்குக் கிடைத்தது. கொள்ளைப்பொருட்களைக் கணக்கிடுவதே கஷ்டமாயிருந்தது. இவ்வெற்றியிலும், யுத்தத்திலும் 55-தினங்கள் கழிந்துபோயின. இஸ்லாமியசேனை எதிரியின் தேசத்திலும், யுத்தத்திலுமிருக்கும் போதே இளவரசனான அப்பாஸ் பின் மாமூன் வருங் காலத்தை யோசியாமல் அஜீப் பின் அம்பஸாவுடன் சேர்ந்து கொண்டு முஃதஸிமைக் கொன்றுவிட்டுத் தன்னை கலீபாவாக்கிவிடவேண்டுமென்ற ஏற்பாட்டிற்குச் சில துர்க்கிய தலைவர்களை இசையச்செய்துகொண்டானென்னும் கவலைக்கிடமான சம்பவம் நடைபெற்றது. இச்சூழ்ச்சி வெளியாய் விடவே முஃதஸிம் இச்சூழ்ச்சியிற் கலந்துகொண்ட தலைவர்களையெல்லாம் கொன்றுவிட்டு, அப்பாஸைக் கைதுசெய்துவிட்டான். இவன் சிறையின் கொடுமையால் இறந்துவிட்டான். இம்மகத்தான வெற்றிக்குப் பிறகு முஃதஸிம் கிலாபத்தின் தலைநகரத்திற்குத் திரும்பினான். ஸாமிராவிற்குட் பிரவேசிக்குந்தினம்

அங்கு பெரியதொரு விழா நடைபெற்றது. தர்பாரில் கவிஞர்கள் அவனைத்துதிசெய்து கவிகள் கூறினர்கள்.

## முஃதஸிமின் குணாதிசயங்கள்

ஹாரூன், மாமூன் இவைகளைப்போன்று முஃதஸிமுக்குக் கல்வியின்மீது பிரியங்கிடையாது. அவனது வெளிப்படையான சத்குணம் வீரமே. நிலங்களைப் பண்படுத்துவதிலும் அதிக ஆர்வங்கொண்டிருந்தான். மந்திரி இப்னுஜையாத் இடம் "பாழ்பட்டிருக்கும் நிலங்களில் இவ்வாண்டு 10-ரூபாய் செலவழித்ததால் வரும் ஆண்டில் 11-ரூபாய் கிடைக்கும் நிலத்தைக்கண்டால் அத்தகைய செலவுக்காக என் சம்மதியைக் கோரவேண்டிய அவசியமில்லை" எனக் கட்டளையிட்டிருந்தான். ஸாமிரா நகரத்தை இவனே நிர்மாணித்தான். துர்க்கியர்கள் அதிகமாகப் பெருகிவிட்டதால் பக்தாதில் அவர்களுக்கிடங்கிடையாது போயிற்று. அவர்களின் அறியாமை, காட்டுமிருகாண்டித்தனம் இவைகளால் பக்தாத்வாசிகளுக்கு இன்னல்கள் விளைந்துவந்தன. இத்துடன் ஈரானியர், துர்க்கியர் இவ்விரண்டு சிப்பாய்களுள்ளும் பகைமை ஏற்பட்டுவிட்டது. 'இவர்களுள் சண்டை நிகழ்ந்துவிடுமோ?'வென முஃதஸிம் அஞ்சினன். எனவே பக்தாதிலிருந்து 90-மைல்கள் தூரத்தில் திஜ்லாவின் கரையோரமாய் 'காத்தூல்' நதியைத்தோண்டித் தனக்காக ஒரு மாளிகையை ஹாரூன் கட்டியிருந்தவிடத்தைப் பட்டாளங்கள் தங்குமிடத்திற்காகப் பொறுக்கி யெடுத்தான். ஹி. 220-ல் அங்குசென்று தனக்காக ஒரு மாளிகையையும், சேனைக்காகக் கட்டிடங்களையும் கட்டினன். நடுவே ஜாமிஃ மஸ்ஜிதையும், கடைத்தெருவையும் நிர்மாணித்தான். அஷ்னஸுக்காகவும், அவனுக்குக் கீழ்ப்பட்ட துர்க்கிய தலைவர்களுக்காகவும் 'கர்க்பைரோஜ்' என்னும் தெருவை நிர்மாணித்து, அதில் அவர்களைக் குடியேறச்செய்தான்.

பிறகு அதையே தனது கிலாபத்தின் தலைநகரமாக்கினான். இதனால் அஃது பக்தாதுக்குச் சமமான ஜனத்தொகையைக் கொண்டதாய் விளங்கியது.

**மரணம்**

ஹி. 227, முஹர்ரம் முதற்றெய்தி முஃதஸிம் பிணி வாய்ப்பட்டு, கி. பி. 842, ஜனவரி, 5-ந்தேதிக்குச் சரியான ஹி. 227, ரபீஉல் அவ்வல், 8-ந்தேதி ஸாமிராவில் இறந்து போனான். 8-வருடங்கள், 8-மாதங்கள் கிலாபத்தை நிர்வகித்தான்.

**பிரதிநிதியை நியமித்தல்**

முஃதஸிம் தனது புதல்வன் ஹாரூன் ஒருவனை மட்டுமே தனது பிரதிநிதியாக நியமித்தான்.

## 9. வாதிக்

அபூஜஃபர் ஹாரூன் பின் முஃதஸிம் பின் ஹாரூனுர்ரஷீத் என்னும் இவன் கராதீஸ் என்னும் பெயருடைய ஒரு அடிமைப் பெண்ணுக்கு ஹி. 186-ல் மக்காவின் பாட்டையில் ஜனித்தான். முஃதஸிம் இறந்ததினமான ஹி. 227, ரபீஉல் அவ்வல், 8-ந்தேதி வியாழக்கிழமை இவன் கரத்தில் கிலாபத்திற்காக பைஅத் செய்யப்பட்டது. இவனது சிறப்புப்பெயர் வாதிக் பில்லாஹ் என வைக்கப்பட்டது. இவன் பெரிய அறிஞனாகவும், கலாப்பிரியனாகவும், தத்துவசாஸ்தியாகவுமிருந்தான். அவன் மாமூனின் தர்க்கமண்டபத்தை மீண்டும் உயிர்ப்பித்தான். அதில் பற்பல கொள்கையையுடைய அறிஞர்களும் ஒருங்குசேர்ந்து விவாதம்புரிந்து வந்தார்கள். இவனும் முஃதஜிலாக்களின் கொள்கையை யாதரிப்போனாயிருந்தமையால் இவன் காலத்திலும் 'குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்ட' தென்னும் பிரசினை மீண்டும் கடுமையாக வெழுந்தது.

### மந்திரிப்பதவி

முஃதஸிமின் காலத்தில் மந்திரி இப்னுஜையாத்திற்கு வாதிக் பரமவிரோதியாக விருந்ததினிமித்தம் தான் கலீபாவானதும் அவனுக்குத் தண்டனையளிப்பதாய்ச் சத்தியம் செய்திருந்தான். ஆயினும் கிலாபத்தின் பைஅத்திற்குப் பிறகு மந்திரிப்பதவியை நல்லவிதமாய்க் கொண்டுசெலுத்தத்தக்க மந்திரியெவனு மிருக்கவில்லையாதலின் அவனையே இப்பதவியில் நியமித்துவிட்டுத் தான் தனது சத்தியத்தை முறித்ததற்காகப் பிராயச்சித்தமும் செய்தான். இப்னு

ஜையாத்தின் மகிமை முஃதஸிமின் காலத்தைவிட இவன் காலத்தில் அதிகமாய்விட்டது. இவனே இறுதிவரை மந்திரியாகவிருந்தான்.

## சேனை

முஃதஸிமின் காலத்திலிருந்த நிலைமையே சேனைகளுக்கு வாதிக்கின் காலத்திலும் இருந்தது. துர்க்கிய சேனாதிபதிகள் தங்கள் உத்தியோகங்களிலேயே நிலைத்திருந்தார்கள். குறிப்பாக அஷ்னாஸ் என்பானுக்குப் பெரியபதவி கிடைத்தது. வாதிக் தனது சமுகத்தில் அவனுக்குக் கிரீட மணிவித்து அவனைச் சேனாதிபதியாக நியமித்தான். முஃதஸிம் காலத்தில் அரபிகளையெதிர்க்க அரபிகளல்லாத சேனையனுப்பப்படுவதில்லை. இம்மதிப்புமட்டும் அரபிகளுக்கிருந்தது. ஆனால் வாதிக்கின் காலத்தில் இம்மதிப்பும் எடுபட்டுவிட்டது. துர்க்கியசேனைகளால் அரபிகள் அழிந்துபட்டார்கள்.

## வம்சக்குழப்பம்

அரபிகள் அரசாங்கத்துடையவும், சேனையுடையவும் உத்தியோகங்களைவிட்டும் நீக்கிவிடப்படவே அவர்கள் இஸ்லாமுக்கு முந்தியகாலத்து மௌட்டிய பழக்கவழக்கங்களை மேற்கொண்டு கொள்ளை, வழிப்பறி போன்ற காட்டு மிருகாண்டித்தனத்தைத் தொடுத்துவிட்டார்கள். கைஸ் ஐலான் வம்சத்தைச்சேர்ந்த பலம்பொருந்த பிரிவு மதீனாவுக்குச்சமீபமான 'ஹர்ரயெ பனீஸுலைம்' என்னுமிடத்திற் குடியேறியிருந்த பனீஸுலைம் வர்க்கத்தாராவர். இன்னார் மதீனாவைச்சுற்றி அதிக்கிரமம் புரியத்தலைப்பட்டுவிட்டனர். இவ்வர்க்கத்தவர் எச்சந்தைக்குச் சென்றாலும் அங்கு அட்டூழியங்கள் புரிந்து, தாம் குறிப்பிடும் விலைக்கே சாமான்களைக் கொடுக்கும்படிக் கட்டாயப்படுத்தி வந்தனர்.

ஹி. 230, ஜமாதில் ஆகிர் மாதத்தில் பனீஸுலைம்களின் தலைவனான அஜீஜா பின் கத்தாப் பனீகினானா, பாஹிலா இவ்வர்க்கங்கள்மீது படையெடுத்து, அவர்களிலநேகரைக் கொன்றுவிட்டான். ஹம்மாத் பின் ஜரீர் தபரீயை இருநூறு சிப்பாய்களுடன் மதீனாவைப் பாதுகாப்பதற்காக வாதிக் அனுப்பிவைத்தான். மதீனாவின் தலைவனான முஹம்மத் பின் ஸாலிஹ் என்பான் அஜீஜாவை எதிர்ப்பதற்காக ஹம்மாதை யனுப்பிவைத்தான். அங்கிருந்து மூன்றுமன்ஜில்கள் தூரத்திலுள்ள ரௌதிய்யாவென்னுமிடத்தில் யுத்தம் நடைபெற்றதில் ஹம்மாத் தோல்வியடைந்துக் கொல்லப் பட்டான். பனீஸுலைம்கள் அவன் சேனையுடைய சகல தளவாடங்களையும் கொள்ளைகொண்டு மதீனாவின்மீதும் படையெடுக்கத் தொடுத்துவிட்டார்கள். துர்க்கியர், ஈரானியர், மகாரிபாக்கள் இவர்களைக்கொண்டதொரு சேனையுடன் பகாகபீர் என்பானை இவர்களையொடுக்குதற்காக கலீபா அனுப்பினான். அச்சேனையின் துவக்கத்தில் தர்தூஷ் என்னும் துர்க்கியனிருந்தான். அவன் பனீஸுலைம்களில் ஐம்பதுபேரைக் கொன்றுவிட்டு, ஐம்பதுபேரைக் கைது செய்தான். அவன் ஹுர்ரயெபனீஸுலைம் போய்ச்சேர்ந்து அவ்வர்க்கத்தவரை யொருங்குசேர்த்து, அவர்களில் குழப்பத்திற் கலந்துகொண்ட ஆயிரம்பேரைக் கைதுசெய்து ஹி. 230, துல்கஅதா மாதத்தில் அவர்களை மதீனாவுக்குக் கொணர்ந்து யஜீத் பின் முஆவியாவின் இல்லத்திலடைத்து வைத்துவிட்டு ஹஜ்ஜுக்குச் சென்றுவிட்டான். திரும்பு காலையில் வழிப்பறிக்கொள்ளை நடாத்திவந்த பனீஹிலால் வர்க்கத்தவரைச்சேர்ந்த முன்னூறு பேரைக் கைதுசெய்துக் கொணர்ந்து, பனீஸுலைம்களுடன் அவர்களையும் அதே வீட்டிலடைத்து வைத்தான். இதற்கிடையே அவன் பனீமுர்ரா வர்க்கத்தவரின்புறம் செல்லவேண்டியதாயிற்று.

அவர்களும் குழப்பம் புரிந்துவந்தார்கள். அவன் அங்கு செல்லவும் இங்கு மேற்குறிக்கப்பட்ட கைதிகள் சுவற்றைக் குடைந்து வெளியேசெல்லத் தயாராயிருந்தார்கள். நகர வாசிகள் இதையறிந்து அவர்களைத் தடுக்கவே கைதிகள் சண்டையிட்டார்கள். 1,300-பேருக்கதிகமாயுள்ள அவர்களை மதீனாவாசிகள் கொன்றுவிட்டார்கள். பகா திரும்பி வந்து இவ்வளவு ஆவிகள் பழுதடைந்ததைப்பற்றி மிகவும் வியசனித்தான்.

பிதக்கைக் கைப்பற்றிக்கொண்டிருந்த பனீமுர்ரா, பனீபிஜாரா இவ்வர்க்கத்தவரிடம் பனீபிஜாரா வர்க்கத்தின் தலைவனொருவனை அன்னாருக்கு அபயமளித்துக் கூட்டிக் கொண்டுவரும்படி பகா அனுப்பினான். அவன் சென்று அரசாங்க சிப்பாயென்னுந் தோரணையில் அவர்களைப் பயமுறுத்தினான். அவர்கள் பயந்துபோய் மலைகளுக்குச் சென்றுவிட்டார்கள். சிலர்மட்டும் பிரசன்னமாயினர். பனீஅஷ்ஜஉ, கத்பான் இவ்வர்க்கத்தினருக்கும் பகா அபயமளித்து, அன்னார் அழைக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாகும்படி அன்னாரிடம் சத்தியம் வாங்கிக்கொண்டான். பிறகு பனீகிலாப் வர்க்கத்தவரை யொருங்குசேர்த்தான். அவன் முன்பு பிரசன்னமான ஏறக்குறைய மூவாயிரம் பேரில் குழப்பங்களுக்குக் காரணமாயிருந்த 1,300 பேரைக் கைதுசெய்து ஹி. 231, ரமலான் மாதத்தில் அவர்களை மதீனாவுக்குக் கொணர்ந்து சிறையிலடைத்துவிட்டு மீண்டும் ஹஜ்ஜுக்காக மக்காவுக்குச் சென்றான். திரும்பிவந்தபிறகு பனீஅஷ்ஜஉ, கத்பான் இவ்வர்க்கத்தவர் அதுவரை கொள்ளையடிக்குந்தொழிலை விட்டுவிடவில்லையென்றறியவரவே அவர்களையழைத்தான். அவர்களில் ஒன்றிரண்டு பேரைத்தவிர்த்து வேறெவரும் வரவில்லை. பனீநுமைர் வர்க்கத்தவர் யமாமா பிரதேசத்தில்

கொள்ளையிடுவதால் அங்கு செல்லும்படி ஹி. 232-ல் வாதிக்கிடமிருந்து ஆக்ஞை கிடைத்தது. பகா அப்பக்கம் செல்லவும் அவர்கள் எதிர்த்தார்கள். அதில் அவர்களில் ஐம்பதுபேர் கொல்லப்பட்டும், நாற்பதுபேர் கைது செய்யப் பட்டும் போயினர். அங்கிருந்து அவன் பனீதமீம் வர்க்கத் தவரின் கிராமமான மிர்அத்துக்கு வந்து அவ்வர்க்கத்தவருக்கு மூர்க்கத்தனத்தை விட்டொழிக்கும்படி பல நிரூபர்களை யனுப்பியும் அவர்கள் விடாது அவனது நிரூபர்களை ஏசிக்கொண்டிருந்தார்கள். பகா அவர்கள் புறம் முன்னேறிச்செல்லவும் அவர்கள் மலைகளுக்கு ஓடிவிட்டார்கள். அவன் ஒரு சேனையை யவர்களுக்குப் பின்னாலனுப்பியும் அவர்கள் கிடைக்காததால் தானே அவர்களைப் பின்றொடர்ந்து சென்றான். ஔலத்துல் அபான் என்னுமிடத்தில் யுத்தம் நடைபெற்றது. அவர்களுக்குப் போதிப்பதற்காக முஹம்மத் பின் யூஸுப் ஜஃபரீயை பகா அனுப்பவே அன்னார் முஹம்மதிடம் "நாங்கள் உங்களை யாதரித்து வந்தோம். ஆனால் அந்தோ! நீங்கள் எமது சொந்தத்தையும் கவனியாது இன்று இவ்வடிமைகளையும், அரபிகளல்லாத காட்டுமிருகாண்டிகளையும் எங்களை யழிப்பதற்காகக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இதன் பலன் உங்களுக்குக் கிடைக்கச்செய்கிறோம்" என்றார்கள்.

காலையில் பனீதமீம்கள் முன்னே காலாட்படையையும், பின்னே குதிரைவீரர்களையும் நிறுத்திவைத்து எதிர்த்தார்கள். துர்க்கிய சேனை தோல்வியடைந்துவிட்டது. பகாவும் ஒருபுறம் ஓடினான். அவன் கொல்லப்படும் நிலைமையிலிருக்குங்கால் பனீநுமைர் வர்க்கத்தவரை எதிர்ப்பதற்காகச் சென்றிருந்த இருநூறு துர்க்கிய சிப்பாய்கள் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் இந்நிலைமையைக்கண்டு நகாரடிக்கவே வேறு புதியசேனை உதவிக்கு

வந்திருப்பதாய் பனீதமீம்கள் எண்ணிப் பயந்துவிட்டார்கள். அவர்களில் குதிரைவீரர்கள் ஓடிவிட்டார்கள். காலாட்படையிலுள்ளோர் கொல்லப்பட்டனர். மூன்று தினங்கள் வரை பகா அங்கு தங்கினான். ஓடிவிட்டவர்கள் அவனிடம் அபயங்கோரினார்கள். பகா அதை யொப்புக்கொள்ளாது யாவரையும் கைதுசெய்து, தன்னுடன் கொணர்ந்தான். இடைவழியில் ஓரிடத்தில் அவர்கள் ஓடிவிட முயற்சித்தார்கள். பகா அவர்களைச் சாட்டையாலடித்து ஹி. 232, துல்கஅதா மாதத்தில் அவர்களுடன் பஸரா போய்ச்சேர்ந்தான். அங்கிருந்துகொண்டு பனீபிஜாரா, முர்ரா, தஃலபா முதலிய வர்க்கத்தவரிலுள்ள கைதிகள் யாவரையு மழைத்துக்கொண்டு பக்தாதுக்கு வரும்படி மதீனாவின் தலைவனை முஹம்மத் பின் ஸாலிஹூக் கெழுதினான். பகா அங்கிருந்து மொத்தம் 2,200-கைதிகளையு மழைத்துக்கொண்டு ஸாமிரா போய்ச்சேர்ந்தான்.

## பதிவகம்

அக்காலத்தில் பதிவாலயங்களிருந்ததாயினும் அவைகளைக் கவனிப்போரில்லாததால் இலிபிகளில் அநேகர் திருட்டுத்தனத்தை மேற்கொண்டுவிட்டனர். இலஞ்சம் மட்டுமன்றியே அரசாங்கத் தொகையை ஏப்பம் விட்டும் வந்தனர். எனவே இவ்வுத்தியோகத்திற்குக் கிராக்கி அதிகமாய்விட்டது. இதற்காகப் பெருந்தொகைகளும் செலவிடப்பட்டுவந்தன. எதோவொரு காரியாலயத்தின் இலிகிதப்பதவியை யேற்றுக்கொள்வோன் வெகுசீக்கிரம் பணக்காரவர்க்கத்தைச் சேர்ந்து போவான். கலீபாக்கள் இதையறிந்திருந்தும் இதற்காக எத்தகைய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள முடியாதிருந்தார்கள். துவக்கத்தில் வாதிக் இதைக்கவனியாதிருந்துவிட்டான். எனவே அக்காலத்தில் அதிபர்கள், இலிகிதர்கள் இவர்களின் புரட்டுகள்

அதிகமாய்விட்டன. எனவே, வேறு வழியின்றி எவனது செல்வம் அவனது உண்மையான வருமானத்திற்கு மேம்பட்டதாகக் காணப்படுகின்றதோ, அவன் மீது புரட்டுக்குற்றஞ்சாட்டி அபராதத்தில் ஒரு தொகையை வசூலிப்பதென்னும் ஏற்பாட்டை மேற்கொண்டான். இலிபிகளைத்தவிர்த்து காரியாலயங்களின் அதிபர்களிட மிருந்து அவன் இங்ஙனம் வசூலித்த தொகையின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| அஹ்மத் பின் இஸ்ராஈல் (இலிபி) | 80,000 | தீனார்கள் |
| ஸுலைமான் பின் வஹப் (ஏதாகின் இலிபி) | 4,00,000 | ,, |
| ஹஸன் பின் வஹப் | 14,000 | ,, |
| அஹ்மத் பின் குஸைப் (அவனுக்குக் கீழ்ப்பட்டோருட்பட) | 10,00,000 | ,, |
| இப்ராஹீம் பின் ரிபாஹ் (அவனுக் குக் கீழ்ப்பட்டோருட்பட) | 1,00,000 | ,, |
| நஜ்ஜாஹ் | 60,000 | ,, |
| அபுல்வஜீர் | 1,40,000 | ,, |
| ஆகமொத்தம் | 17,94,000 | ,, |

இதற்காக எத்தகைய சட்டதிட்டமோ, தொகை வசூலிப்பதற்காக எத்தகைய ஒழுங்குமுறையோ விருக்கவில்லையாதலின் சுயநலமிகளுக்கு எவர்மீதும் இத்தகைய குற்றங்களைக் கற்பிப்பதற்குத் தக்கதொரு சமயங்கிடைத்து விட்டது.

## வெளிநிலைமைகள்

வாதிக்கின் காலத்திலும் ரூமியர்களுடன் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இருதரப்பாரிடமும் எதிரியின் கைதிகளிருந்ததால் அவரவர்கள் தங்களிடமிருக்கும் கைதிகளை விடுவித்துவிடவேண்டுமென்னும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. ஏற்கனவே ஹாரூன் காலத்தில் லாமிஸ் நதிக்கரையில் இங்ஙனம் 3,700 கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். பிறகு இரண்டாந்தடவையாக அவன் காலத்திலேயே 2,500-கைதிகள் விடுதலையடைந்தார்கள். வாதிக்கின் காலத்திலேற்பட்ட இவ்வுடன்படிக்கை மூன்றாந்தடவையாம். இருதரப்பாரும் தத்தம்மிடமிருக்கும் கைதிகளை ஹி. 231, முஹர்ரம், 10-ந்தேதி லாமிஸ் நதிக்கரைக்குக்கொணர்ந்தார்கள். அங்கு இருபாலங்கள் கட்டப்பெற்றன. ஒரு பாலத்தில் முஸ்லிம் கைதிகள் வந்தார்கள். மறுபாலத்தில் ரூமியகைதிகள் சென்றார்கள். இஃது தொகையைப்பொருத்து அவர்களில் ஒரு கைதிக்குப்பதில் இவர்களில் ஒரு கைதியாக விடுவிக்கப்பட்டனர். இச்சமயம் 4,600-கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுள் 200 ஸ்திரீகளும், 500-(முஸ்லிம் ஆக்ஷிக்குட்பட்டிருக்கும்) பிறமதஸ்தருமிருந்தார்கள். 100-ரூமியர்கள் முஸ்லிம்களிடம் எஞ்சியிருந்துவிட்டார்கள். கலீபாவின் புறத்தால் வந்திருந்த காகான் என்பான் அவர்களையும் அதிகப்படியாய் விடுவித்துவிட்டு ரூமிய தலைவனிடம் "நாங்கள் இவர்களை அதிகப்படியாக விடுவித்ததற்குக் காரணம் இதிலும் எங்கள் மதிப்பும், நன்றியும் உங்களைவிட மேம்பட்டிருக்கவேண்டுமென்பதே" என்றான். அஹ்மத் பின் அபீதாவூத் என்னும் நீதிபதி தன்னைச்சேர்ந்தவனொருவனை யங்கனுப்பி முஸ்லிம் கைதிகளிடம் 'குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்டது' என்னும் வாக்குறுதி

வாங்கும்படியும், இதை யொப்புக்கொள்வோனை விட்டுவிடும்படியும், ஒப்புக்கொள்ளாதவன் முஸ்லிமல்லாதானாவானாதலின் அவனை விடுவிக்கவேண்டிய அவசியமில்லை யெனவும் கூறியனுப்பியது ஆச்சரியத்திற்கிடமான விஷயமே. இதனால் அவனது முரட்டுப்பிடிவாதம் தெற்றென அறியக் கிடக்கின்றது.

**மரணம்**

வாதிக் தனது 36-ம் வயதில் அதிதாக வியாதியால் பீடிக்கப்பட்டு கி. பி.847, ஆகஸ்ட், 11-ந் தேதிக்குச் சரியான ஹி. 232, துல்ஹஜ், 6-ந்தேதி இறந்துவிட்டான். அவன் யாரையும் பிரதிநிதியாக நியமிக்கவில்லை. கிலாபத்தை நிர்வகித்தது 5-வருஷங்கள், 9-மாதங்கள், 11-தினங்களாம்.

97437

—:o:—

நான்காம் பாகம் முற்றிற்று.

ஐந்தாம் பாகம் விரைவில் வெளிவரும்.

(இன்ஷா அல்லாஹ்)

# அரிய நூல்கள்

---

இஸ்லாமிய சரிதை :

| | | |
|---|---|---|
| முதற்பாகம் (நபிகள் திலகம்) | ரூ. | **0-10-0** |
| இரண்டாம் பாகம் (கிலாபதே ராஷிதா) | ,, | **0-12-0** |
| மூன்றும் பாகம் (பனீஉமையாக்களின் கிலாபத்) | | **0—8-0** |

வாசக புத்தகங்கள் :

| | | |
|---|---|---|
| ஹிலால் வாசகம் முதல் புத்தகம் | ,, | **0—3-0** |

2, 3, 4, 5 புத்தகங்கள் அச்சில்

---

கிடைக்குமிடம் :—

**ஹிலால் பப்ளிஷிங் ஹௌஸ்,**
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.